
# Treasured Memories of Blessings

## ஆசி நிறைந்த அனுபவப் புதையல்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Treasured Memories of Blessings

# ஆசி நிறைந்த அனுபவப் புதையல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Title | - Treasured Memories of Blessings |
| Language | - English & Tamil |
| First Edition | - 28.10.2017 |
| Number of copies | - 500 |
| Publisher | - Holy Family Sisters of Jaffna Unit First Year Journey towards Bicentenary Celebration |
| Print by | - JS Graphics & Printers, Jaffna |

| | |
|---|---|
| தலைப்பு | - ஆசி நிறைந்த அனுபவப் புதையல்கள் |
| மொழி | - ஆங்கிலம் + தமிழ் |
| முதற்பதிப்பு | - 28.10.2017 |
| பிரதிகள் | - 500 |
| வெளியீடு | - திருக்குடும்ப சகோதரிகள் யாழ் மாகாணம் இருநூறாவது ஆண்டு விழாவை நோக்கிய முதல் வருடப் பயணம் |
| அச்சுப்பதிப்பு | - JS Graphics & Printers, Jaffna |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dedication

**To all our sisters of the Holy Family who have journeyed before us and entered into Eternal Bliss**

"As Companions of their good angel, you follow in the valley of tears, and to bring them back or to keep them for Jesus Christ you share the dangers of the journey."

(constitution 1851 Preface)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிய பியன்வெனு நோஆய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Contents

Page

Editorial

**01. Message of Felicitation**

1. Bishop of Jaffna 01
2. General Councilor 03
3. Provincial Superior - H.F.Jaffna 05

**02. Appreciation**

4. Bishop - Emeritus - Jaffna 07
5. Vicar General - Jaffna 08
6. Provincial Superior - H.F- Colombo 10
7. Provincial Superior - O.M.I - Jaffna 12
8. National Leader - H.F.Priest Associates 13
9. Contemplatives H.F- Nagoda 15
10. National President -H.F.Lay Associates 17
11. Secular Member 18

**அத்தியாயம் I**

**போரின் நினைவுச்சுவடுகள்.**

12. வலிகள் சுமந்த வாழ்வின் பயணம் 21
13. இடரிலும் இறைவனின் உடனிருப்பு 27
14. துன்பத்தில் துணையிருந்த இறைவனின்... 32
15. நடந்து வந்த பாதையில் இறைவனின்... 35
16. உன்னை அன்று அழைத்ததும்... 39
17. முகாம் வாழ்வும் பணிகளும் 63
18. துரத்திய போரும் தேவனின் துணையிருப்பும் 65
19. ஆதித் திருச்சபையாய் வாழ்ந்த நினைவுகள் 67
20. இடப்பெயர்வில் துயர் சுமந்த நாட்கள் 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. உயிர்காவிப் பயணித்த வன்னிப் பயணம் 73
22. இறை அன்பைப் பகிர்ந்து கொள்ள... 76
23. இறைவனேஎன் அரண் 87
24. மூன்று தசாப்தகால யுத்தமும் இறுதிக்கால... 91
25. போர்க்காலப் பூவாய் 97
26. இடரிலும் இறைபராமரிப்பு 102
27. பணிசெய்யக் கிடைத்த போர்க்காலம் 106
28. மனதில் பதிந்த துன்பியல் நினைவுகள் 145

**அத்தியாயம் II**
**இயற்கை அனர்த்தம் தந்த அழியாத நினைவுகள்**

29. ஆழிப்பேரலையின் அவலச் சுவடுகள் 147
30. அதிசயமான அசம்பாவிதம் - சுனாமி 154
31. ஆழிப்பேரலையிலும் அபயமளித்த கரங்கள் 158
32. போரோடும் இயற்கைப் பேரழிவோடும்... 161

**அத்தியாயம் III**
**வாழ்வின் சேவைச்சுவடுகள்**

33. Speaking from depths 167
34. Counting the blessings of my life 170
35. Do you love me more than... 174
36. To serve with love 176
37. Healed through blessings 178
38. My Call to the Holy Family 180
39. Jesus went about doing good 183
40. God is my rock my salvation 185
41. Blessed are the poor in spirit 189
42. In Him I move and live 191
43. Let's count our blessings - Stories untold 197
44. நெஞ்சை விட்டகலாத நினைவுகள் 202
45. வாழ்வுப் பயணத்தில் இறைவனின்... 205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. பயணித்த பாதையின் பதிவுகள் 207
47. மறக்கமுடியாத மனப் பதிவுகள் (1990-2004) 209
48. பயங்கர யுத்தத்தில் இறைபராமரிப்பின்... 215
49. விளிம்புநிலை மக்களோடு மக்களாக 220
50. ஆபத்தில் அனுபவித்த ஆண்டவனின்... 222
51. இடம்பெயர்ந்த மக்களுடன் பணிவாழ்வு 224
52. வாழ்வைமாற்றிய அந்தநாள் 227
53. தீவகமக்களின் தீராத்துயரில் கலந்து.... 228
54. வாழ்வுப்பயணத்தில் உயிர்காத்த தெய்வம் 230
55. அடைக்கலம் தந்த ஆண்டவன் (1985-2000) 233
56. இறைவனின் அற்புதமான வழிகள் 235

**அத்தியாயம் IV**
**நினைவில் நிலைக்கும் உறவுகள்**

57. Healing ministry 237
58. Healing ministry as Holy Family 240
59. வனாந்தரப் பூக்கள் 242
60. அர்ப்பண வாழ்வின் பதிவுகள் 246
61. திருக்குடும்ப சகோதரியாக இறைபணியில்... 248

**அத்தியாயம் V**
**I. போருக்குப் பின் ஆற்றிவரும் வாழ்வாதாரப் பணிகள்**

62. I will sing of the mercies 251
63. Whatever you did to the least 257
64. மலரும் மங்கையர் மருதம் 263
65. பசுமை நோக்கி 265
66. பியன் உற்பத்தி 268
67. பியன் ஊற்று 270
68. Vocational Training for girls 274
69. மீளக்குடியமர்வின் பின் உள ஆற்றுப்படுத்தல் 276
70. கனவு மெய்ப்பட... 279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. Bienvenu - 2012 -A DREAM, 2015 - A REALITY 284
72. I.D.P Camps - Towards Restoration... 287
73. Little drops of water 290

## II. Educational Projects (Funded by P.B.N.Foundation)

74. Mulankavil - Slow Learners 291
75. Manthuvil - Slow Learners 293
76. Parappankandal - Slow Learners 295
77. Talawakelle - Slow Learners 297
78. Anaivilunthan - Slow Learners 299
(Funded by Jaffna Province)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL

It is an amazing and memorable journey as we approach the 155th year of the arrival of the Holy Family Sisters of Bordeaux, who stepped into Sri Lanka - Jaffna. We would like to express our profound appreciation to our pioneers who toiled hard, not only in the growth of educational field but also vigilant in following the foot prints of our Founder with the spirituality of God Alone and Charism of communion, to enkindle the faith and keep it alive in the hearts of the people.

In this book we focus on the history of our dear sisters, new foundations, the expansions of ministries old and new and the experiences they had in times of struggles, sufferings and crises during Tsunami when thousands of lives washed away and the life threatening civil war which killed people by shelling and bombing of the unseen attacks.

Though our pioneers were six, like roots under the ground, nourish the tree, make it produce foliage, flowers and fruits in an unassuming manner, their lives instilled in the hearts of the people the love for God Alone and the values of His Kingdom.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

These Sisters - our first missionaries have formed our sisters to shoulder responsibilities and to continue the ministry with the same spirit 'God Alonesuffices' and to follow in the footsteps of the Holy Family taking them as our model.

Though, together with the people we were also displaced taking nothing in our hands, we - the earthen vessels carry the spirit of the Holy Family and the Charism of our Founder in our hearts which are still alive in us. So our responsibility now and in the years to come, is to transmit this spirit of our Family,and in compassionate love- embrace our people who have been torn apart, separated from loved ones and those deprived of economic facilities. May their world be a better world because of their faith, trust and love for God. May the spirit of the Holy Family and the Kingdom values made visible in the lives of the Holy Family sisters, bring them close to the Divine presence in their lives.

We express our sincere thanks to our Bishop Rt. Rev.Dr. Justin Bernard Gnanapragasam, the Rt.Rev.Dr.Thomas Soundranayagam - our Bishop Emeritus, Rev.Sr.Jesmine Fernando-Provincial of Colombo Unit, Rev.Fr.Edwin Vasantharaja, O.M.I - Provincial, Rev Fr.J Jebaratnam- Vicar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

General, Rev Fr.J.Nicholas- Priest Associate, Mr.P. Devanayagam - National President of Lay Associates, Rev.Sr. Lorenza Ponnanvila-Contemplative of Contemplative sisters and Miss Padma -Consecrated Secular, for the messages and articles we received to Rev.Sr.Christa Mariathas - Provincial of Jaffna Unit, and the councillors who encouraged and empowered us to produce this issue. Production of a book like this is building a bee- hiveinvolving much efforts. It carries within itself the experiences and accomplishments of our sisters during these 155 years of our history here in our mother land.

Our thanks goes to the sisters who have contributed their knowledge, ideas and experiences, the team members, the printers and all those who have helped us in one way or another. Your co-operation has been a great help for us in our the adventure and launching of this souvenir - **'Treasured Memories of Blessings'**

As we commemorate this historical event, we give this book into your hands to study and taste, and as what the psalmist says to "taste and see that the Lord is sweet ". This is the time to awaken our hearts and minds to see where we are now, and where do we want to move in the future. Visioning our mission would lead us to **where the Lord wants us to go**.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We are happy and grateful to you all who have journeyed with us to realize our dream for this event to come true .We also remember the loving and encouraging words of our Founder;-

**"My daughters there is nothing now that can check your course. Go forward, increase in numbers and virtues, and may your hands scatter on all sides the Divine seed of good works and good examples. In so far as feeble creatures can approach such perfect models, be gentle, compassionate and obedient like Jesus ; humble, modest and pure like Mary; poor, industrious and faithful like St. Joseph".(Preface from the 1851 General Rules)**

***Editorial Board***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Message of Felicitation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Bishop of Jaffna*



I am delighted to send my warm wishes and appreciation for the Book, "Treasured Memories Of Blessings" to be published by the Holy Family Sisters in memory of their dedicated service in Sri Lanka for the last 155 years (1862-2017)

Ever since they landed in the country, they had been involved in the educational, social and pastoral development of the people. The many schools they manned in the parishes, the pastoral work they carried out in the difficult missions and the efforts they put in to raise the standard of living of the people cannot be forgotten. While they carried out their educational work in the country, the schools take over by the government of the day, where most of our primary and secondary schools were handed over to the government, yet they carried one of their task with great faith in God and the people whom they served.

The Holy Family Sisters' commitment to the pastoral work in our diocese is unparalleled. They travelled into the thick of jungles to preach the good news to the people and were a great help to the priests in carrying out their pastoral work. Be it a small parish in the Vanni or a big parish in the towns, their sense of dedication was the same, seeking out the lost sheep, all for the glory of God.

Like all of us, they too faced the civil war and the many displacements. Some of their houses were destroyed and they had to work temporary shelter in different places as the war



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

escalated. They also were available to help the Tsunami affected people and are still involved in the rehabilitation of people affected by the civil war and Tsunami.

While thanking for the Holy Family Sisters' service to our diocese for the last 155 years, I wish and pray that they continue their mission in the coming years with great sense of dedication for the greater glory of God. I wish them all.

+B Gnanapragasam

*Right Revd. Dr Justin B Gnanapragasam*
Bishop of Jaffna

Rt. Revd. Dr. Justin B Gnanapragasam
Bishop of Jaffna

***I have come that they may have life, and have it to the full. Jn. 10:10***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *General Councillor*

Dear Sisters,



As you mark 155 years of Holy Family presence in Sri Lanka, I am happy to join you in wanting to look back and see the blessings of this long journey – signs of God's loving presence, guidance and protection all along the way. We naturally remember the "pioneers", the first Holy Family Sisters who risked their lives, left everything, and made their home in Sri Lanka; but let us also remember all the Sisters who followed them, without whom you would not be there today, without whom you would not be able to look around and see the results, the achievements of Holy Family hard work and dedication – some well-known, many others hidden but not less precious a contribution for that. In 155 years, the lives that have been touched, enriched, and helped by you are beyond counting. You inherit a strong tradition of service and of love for the people, drawing strength from God present in all you lived.

Thinking of the agonizingly painful times that have touched Sri Lanka in recent years because of the Tsunami and the Civil War, and listening to the stories of so many Holy Family members, I imagine that there is not a family that has remained untouched by the pain of loss and separation, and I am at times mystified by the strength, resilience and sheer will to live that I have come to know. Just recently, I was given a book in which many people speak of gratitude as a way of life; two of the authors express more clearly than I could, the need to be grateful, and to count all as blessing:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"Nothing can console us ... [when our loss is great], and no-one should try. We have to simply bear and survive it. That sounds hard but it is in fact a great consolation... It is wrong to say God fills the gap , because God keeps it empty, and so helps us to sustain our old communion, even through pain..."* (Dietrich Bonhoeffer)

*"I am gradually learning that the call to gratitude asks us to say, "Everything is grace". When our gratitude for the past is only partial, our hope for a new future can never be full... if we are to be truly ready for a new task in the service of God... our entire past, gathered into the spaciousness of a converted heart, must become the source of energy that moves us toward the future"* (Henri Nouwen)

***Eithne Hughes***
*General Councillor HF*
*Rome*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Provincial HF Jaffna*



" I am who am" Jesus revealed Himself and blessed our Association on the 3rd February 1822. The day was filled with joy. It is our belief that the presence of the Risen Christ is with us always. His blessings are our strength to walk forward towards 'ONENESS'

One afternoon while I was travelling with some of our senior sisters, just passing the Sangupiddi bridge 24.9km away from Jaffna, one of our sisters began to share her past memories, how she had been working enthusiastically throughout her life. She spoke of the hard times she had gone through, the thorny path, the dark jungles she crossed and so on. At this juncture, while listening my memories began to flow. The treasured memories of our dear sisters and the unique journey of their life need to be cherished as these memories are priceless. Before the end of that journey the idea of a book called "Treasured Memories of blessings" came into existence.

The year 2017, is the year of preparation for the journey focused on the bicentenary. The family of Pierre Bienvenu Noailles is called to count all the blessings that have been showered upon us. In this light this book carries mostly the treasured memories counting our blessings during the peak of the civil war and also the turmoil experienced during the Tsunami. Though each and every member of Jaffna Unit experienced in some way or other the pain, loss and emptiness during the above mentioned special moment, very few experiences have been highlighted in this book.

The havoc of the civil war not only destroyed lives but it deleted the memories of lives. Therefore we wish this book



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

awakens each one of us, to write our memorable journey of our life, leaving it for future generation to cherish it.

This book will be combined with the book "BOUNTIFUL BLESSINGS" which was published in 2012 to mark the 150 years of the presence of the Holy Family Sisters in Sri Lanka. The "Celebration of the Harvest" which will be published in the year 2020 to mark our Bicentenary Celebration.

I congratulate and appreciate the team members for their tireless participation in bringing this book to our hands. I express my sincere thanks to all our sisters and brothers who have encouraged and worked hand in hand to make our dream a reality.

We are gifted with life. Our responsibility is to treasure lives and create a beautiful and meaningful future for today and tomorrow. It's our duty to safeguard our tradition and our past in order to count our blessings and praise God. Our vision is alive and active through the path we walked.


"The beauty of the pathway is discovered only by those who choose to travel it."

***Sr.Christa Mariathas HF***
*Provincial Superior - Jaffna Unit*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Appreciation




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஆயரின் இதயத்திலிருந்து

திருக்குடும்ப சபை அருட்கன்னியர்கள் இலங்கைக்கு வருகை தந்து 155 ஆண்டுகளை நிறைவு செய்திருக்கிறார்கள். இவர்கள் யாழ் மறைமாவட்டத்தில் நீண்டகாலம் கல்விப்பணியுடன் ஆன்மீக, சமூகப்பணிகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து வருகின்றார்கள்.

வடபகுதியில் நீண்டகாலமாக போர்ச்சூழல், சுனாமி அனர்த்தம் ஆகியவற்றிற்கு முகங்கொடுத்து சொல்லொண்ணாத் துயரத்தை அனுபவித்து, பல இடப்பெயர்வுகளில் மக்களோடு பயணித்து, அவர்களுக்கு சிறப்பான பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இவர்களின் சேவை மகத்தானது, பாராட்டுதற்குரியது.

இவர்கள் தங்கள் பணிவாழ்வின் அனுபவங்களைநூலாக வடித்து, பதிவுகளாகப் பேண முன்வந்துள்ளார்கள். இவர்களுக்கு எனது நிறைந்த இறை ஆசீர்வாதங்களை அளித்து வாழ்த்தி நிற்கின்றேன்.



**மேதகு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்.**
முன்னாள் ஓய்வுநிலை ஆயர்
யாழ் மறைமாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *True Meaning of "Our Blessings"*

Let me at the outset take pride for the opportunity which I received as a priest-associate to contribute something within the last 150 years of the admirable mission of the Holy Family of Bordeaux, and express my prayerful wishes and congratulations to all those who have been a part of this vocation of great deputation.

"Let's count our blessings" once again brings an occasion to make a journey back to our origins and forward to today. I would like to quote here Sr. Margaret Muldoon, the former Superior General: "A journey back to our origins and forward to today helps us to be more aware of where we came from and where we are going, guided by our tradition and the action of the Spirit in the lives of our members past and present." (*MuththanaSoththu*, p. x).

This is exactly why we count "Our Blessings." I would like to make clear in brief the meaning of "Our Blessings." "Our Blessings" doesn't mean the blessings we receive from the Lord, instead, it means that when through our mission someone somewhere receives or experiences the Blessings of God, - those become "Our Blessings." Thereby, if we have to count "Our Blessings" we have to count the number of those such as the poor, down-hearted, marginalised, oppressed, sinners, orphans, prodigal sons and daughters, uneducated, and those affected by war, Tsunami etc., who felt our gentle, kind, sympathetic




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and compassionate touch and experienced the love and mercy of God.

Let us remember with gratitude all those who participated in this mission with humility and loyalty and with genuine devotion to Jesus, Mary and Joseph. I also would like to assure that the quantity and the quality of "Our Blessings" increase, the Sainthood of our Founder, Ven. Pierre BienvenuNoailles becomes closer.

Whatever it may be, "Everything is for the Glory of God Alone."



***Revd. Fr. P. JosephdasJebaratnam***
*Priest-Associate of HFB*
*Vicar General*
*Diocese of Jaffna*
*Sri Lanka*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Blessings from the depths of my heart*

From the very conception of the universe the original blessing has been existed. God saw everything "good". When we realize the presence of God in everything, blessing is unavoidable. Today, we cherish the energy of those blessings which are still in the evolving universe.

More than 155 years ago the Holy Family was initiated in Sri Lanka by the six valiant founding sisters, who crossed the Atlantic Ocean. They were real blessings to the then society in particular and to the present society in general. They left a legacy by opening themselves to the Spirit. The responses to the needs of that time was and is a blessing to all. They shared and sacrificed their lives for the poor peasants of the land.

The history of the Association is filled with seen and unseen abundant blessings.

Presence of the five vocations in Holy Family in Sri Lanka, Apostolic and contemplative sisters, Lay associates, Priests and Secular members is a great blessing. Recognition given to consecrated people in the country is a blessing to work for a better course.

Sri Lanka is multicultural and rich in religious practices. God is so gracious to Holy Family members in Sri Lanka. We are living in a civil post war scenario where peace and relationship building is the need of the time. Presence of the Holy Family both in North and South and our joint efforts to work for a better world of peace, justice and reconciliation itself is a blessing too.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

At the moment country is prone to natural disaster which brings fear and insecurity among people. I am so glad and grateful to witness the way our Holy family members were encouraging and supporting our people both during the Tsunami devastation and the civil war.

It is by being with the people we share our giftedness as a blessing and their courageous efforts in the difficult situation as blessing to us all.

It's a challenge to recognize the blessing in the broken realities but they are there. We as Holy Family can continue to be a blessing by our real presence with them all.

May the Holy Family be with us all in this forward journey to bring the original blessing and to joyfully celebrate them by and through our lives!

***Sr.Jesmine Fernando***
*Provincial – Colombo Unit*
*Holy Family*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசீர் நிறைந்த வாழ்த்துக்கள்

திருக்குடும்ப கன்னியர் தமது இலங்கைக்கான வரவின் 155வது ஆண்டு நிறைவை நன்றியுடன் நினைவு கூர்ந்து வெளியிடும் "Treasured Memories of Blessings"என்ற மலருக்கு, எனது இறை ஆசீரையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

"மறைபணி ஆற்ற இலங்கைக்கு முதன் முதலாக வந்த பெண் துறவற சபையினர்" என்னும் பெருமையை கொண்ட திருக்குடும்ப சபைக் கன்னியர்கள் விதைத்த விதையானது, இன்று பெரிய விருட்சமாக வளர்ந்து, அதிலிருந்து பலரும் பயன் பெறக்கூடியவகையில் மாற்றம் கண்டுள்ளமை உண்மையிலேயே பாராட்டுதற்குரிய ஒன்றாகும். அத்துடன், அவர்களது கடந்த 155 ஆண்டுப் பிரசன்னம் இறையரசின் சக்திவாய்ந்த சாட்சியமாகவும் இருக்கிறது. குறிப்பாக போர்க்கால இடப் பெயர்வுகள், சுனாமி அனர்த்தங்கள் மத்தியில் மக்களோடு பயணித்து, தமது வாழ்க்கை அனுபவங்களை நூல் வடிவில் வெளியிட முன் வந்துள்ளமை பாராட்டுதற்குரியது.

இவர்களின் சாட்சிய வாழ்விற்கு சாதனமாக இருப்பது இவர்களின் தியாகம் நிறைந்த அர்ப்பணிப்பும், திருக்குடும்பத்தின் முன்மாதிரிகையை தம் வாழ்வில் கொண்டு வாழ்வதுமே என்றால் அது வெள்ளிடைமலை.

அத்தோடு அவர்களின் வாழ்வும் பணியும் அமலமரித்தியாகிகளுடன் இன்னமும் உறவுநிலையில் இருப்பதுடன், பணித்தளங்களில் அமலமரித் தியாகிகளுக்கு பக்கபலமாகவும் உந்துசக்தியாகவும் இருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

திருக்குடும்பத்தின் பாதுகாப்பும், பரிந்துரையும் அவர்களோடு தொடர்ந்தும் இருக்க வேண்டுகின்றேன். அத்தோடு, பணிகளில் அவர்கள் எதிர்கொள்ளும் புதிய சாவால்களுக்கு முகம் கொடுக்க திருக்குடும்பத்தின் ஆசீர் அவர்களுக்கு என்றும் கிடைக்க ஆசிக்கின்றேன்.

**அருட்பணி செ. எட்வின் வசந்தராஜா. அமதி**
முதல்வர் - அமலமரித் தியாகிகள் சபை
வடமாகாணம், இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Counting the Blessings*

The Association of the Holy Family of Bordeaux, founded by Pierre Bienvenu Noailles is a blessing not only for France but for many parts in the world. The arrival of the apostolic sisters in Sri Lanka in 1862 brought the spirit of the Holy Family in a special way through education. The missionary sisters formed many leaders in our society and promoted many vocations for the religious life. Their presence in the schools became a blessing for many of our children. The increase of vocations for the religious life enabled them to spread out to many places for missionary work. The mission of evangelization was carried out not only through education but also by involving in pastoral ministry. The catholic children were living their faith because of the services of the sisters. We need to thank God for the gift of these missionaries and for their dedicated services in our midst.

It is a blessing that we have all the five vocations in Sri Lanka. It is through the effort of the sisters we have Lay Associates, Seculars and the Priest associates. The Charism and the Spirituality of the Holy Family are alive today because of the members of the Association. The steady increase of the members in each vocation is God's grace. There are forty priest associates in Sri Lanka today. Certainly the spirit of the Founder is moving many to live the Charism and the Spirituality of the Holy Family. We need to praise and thank God for such a blessing.

The Inter-vocational meetings held at regional, national, and at international levels are a great source of sharing experiences and for the enrichment of each other. The participation in the formation sessions, in the Council of the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Family, and the Congress are inspiring and sources of renewal to go forward according to the true spirit of the Founder. Every time we meet as a Family is a blessing of God. From time to time God calls us to look back on his blessings. Each one of us is a blessing. Let us look at everyone as a blessing coming from God. The earth is a blessing. The nature is a blessing. The whole cosmic realities are blessings of God. Our Founder is a big blessing of God. Thank God for everything.

**Fr. Jacob Nicholas**
*The National Leader-Priest Associates HF*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Immense Blessings*

Dear Sisters, I very sincerely thank you for giving me this opportunity to write a short message in your Book **"Treasured Memories of Blessings"** and to join you in thanking God for his immense blessings showered on the whole Family specially in Sri Lanka – Jaffna. It is your energetic zeal that made the Family grow to its maturity with all the five vocations. I greatly appreciate your loyalty and commitment to the Founder's charism. Today each Group makes effort to share this gift which is so relevant to the present society. Working in solidarity and complementarity with all, let us aim at living our charism **"unity in diversity".**

As we recall the history of your province, we appreciate very much your missionary zeal and availability to the Family. In 1862 the Family got rooted with the generous "Yes" and radical living of the **Spirit ofGod Alone** of our pioneers in the soil of Jaffna. Today, this same 'Yes' is re-lived by many Sisters which is an encouragement for missionary vocations from our native soil. They are spread out in many parts of the world where the Family exists. I am happy to quote a few lines from the preface of 1851 which reflects and re- echoes in the mind of our present Holy Father, Pope Francis.

*In devoting yourselves to the work of the Association, you have not separated yourselves from those who live under the common law. As companions of their good Angel, you follow them in the valley of tears ....( Preface 1851)*

The ethnic crisis, civil war, tsunami and displacements strengthened you to live your ministries as women of deep faith and hope, by re- energizing the people with whom you live and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

move. May our heavenly models Jesus, Mary and Joseph and our Good Father accompany you in your Journey.

We the contemplative Sisters though physically not present in the North, are with you in prayer supporting you in all your apostolic endeavors. Let us "Live communion and build Family".

***Sr. Lorenza PONNANWILA***
*Contemplative Sisters*
*Nagoda*
*Sri Lanka*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் ஆழத்திலிருந்து...

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கைத்தீவுக்கு முதன் முதலாக வருகை தந்த பெண்துறவிகளான திருக்குடும்ப சகோதரிகள், இலங்கையின் வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் திருக்குடும்ப சபை இல்லங்களை நிறுவி, இன்றுவரை பல்வேறுபட்ட பணிகளுக்கும் தம்மைக் கையளித்து, திருச்சபையினதும் சமுதாயத்தினதும் இரு கரங்களாகத் திகழ்கின்றனர்.

18ம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் பிரான்சியப்புரட்சியைத் தூண்டக்கூடிய சமூகச் சூழல் போன்று, முப்பது வருட கால இலங்கையின் இனக்கெடுபிடிகளுக்கும், யுத்த நிறைவுக்குப் பின்பு இலங்கையின் வடபுல சமூகச் சூழல், பலரது விமர்சனத்திற்கும் உள்ளாகியிருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் திருக்குடும்ப சபையினர், பாரிய சவால்களுக்கு முகம்கொடுத்து, போரின் வடுக்களாலும், சுனாமியின் தாக்கத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அவர்களின் தேவைகளை இனம் கண்டு, பல திட்டங்களை முன்னெடுத்து பணி புரிந்து வருவதை நாம் அறிவோம்.

திருக்குடும்ப சபையின் சகோதரிகளில் காணப்பட்ட "எல்லோரும் ஒரு குடும்பம்" என்ற உன்னத உணர்வை, அக்குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் ஏற்படும் இன்ப, துன்ப நிகழ்வுகளையெல்லாம் தமக்கு ஏற்பட்டதாகக் கருதி செயற்படும் அவர்களின் தியாக மனப்பாங்கை என்னால் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

எனவே இப்படியான தியாகசீலர்களின் வாழ்வும், அனுபவமும், பணியும் நூல் வடிவமாக வெளிவர இருப்பது சிறப்பான அம்சமாகும். எனவே 155 வருட நிறைவில் மலர இருக்கும் மலருக்கு இறையாசீர் கூறி, திருக்குடும்பப் பொதுநிலையினர் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**திரு. போல் தேவநாயகம்**
யாழ்ப்பாண தேசிய செயற்குழுத்தலைவர்.
திருக்குடும்ப பொதுநிலையினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவகை பொங்க...

இந்து சமுத்திரத்தின் முத்து எனப் பெயர் பெற்ற எமது இலங்கை நாட்டினிலே காலங்காலமாக இருந்து வந்த இன, மொழி வேறுபாடு போன்ற அடிப்படைப் பிரச்சனைகளுடன் பேச்சு, கல்விச் சுதந்திரமின்மை போன்றவற்றால் அடக்கப்பட்டு சுதந் திரத்தின் வாசனையை நுகரமுடியாது இருந்த காலகட்டத்தில் மொழி, இன, பேதம் மறந்து பெண்களை வலுவூட்டவும், பிள்ளை களுக்கான கல்வியை வழங்கி, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றவும் தம்மை அர்ப்பணித்த எமது முதல் திருக்குடும்ப சகோதரிகளை, எம் வாழ்நாளில் எப்போதும் மறக்கமுடியாது.

தமது சொந்த நாட்டில் நிறைவான அடிப்படை வசதிகள் இருந்த போதிலும் அதனை ஒறுத்து வாழ்ந்தவர்கள். எமது மண்ணில் அடிப்படை வசதிகளே அற்ற நிலையில் ஓலைக் குடிசைகளில் வாழ்ந்தவர்கள், சாக்குக்கட்டிலில் ஓய்வெடுத்தும், மாட்டு வண்டி, குதிரை வண்டிகளில் பயணித்தவர்கள். பல இடர்கள் மத்தியிலும் தமது பணியைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த அவர்கள் இன்று எம்முடன் இல்லாது போனாலும், அவர்களது பணியினால் உருவான ஊற்று இன்றுவரை பெருகிக் கொண்டிருப்பதையிட்டு இறைவனுக்கு மகிமையுடன் கூடிய நன்றியைச் செலுத்துகின்றேன்.

**"இச்சபையில் அங்கம் வகிப்பவர்கள் யாவரும் இயேசு மரியாள், யோசேப்பின் மறைந்த வாழ்வின் புண்ணியத்தை மாதிரியாகக் கொண்டு வாழ்கின்றார்கள். உலகின் பல பாகங் களுக்கும் சென்று பரந்து ஏழைப் பணியாளராகிய எங்களால் அடியுண்ட பாதைகளிலே பயணித்துக் கொண்டிருக்கும் திருக் குடும்ப அங்கத்தவர்களை வனாந்தரத்தில் மலரும் மலருக்கு, அன்றேல் அழிவுகளின் விழிம்பிலோ அன்றேல் கல்லறைகளின் அடிவாரத்தில் ...** (1851- ஒழுங்குகளின் முன்னுரை)

எமது நாட்டின் கொடிய யுத்தகாலத்தில் மக்களின் அவல வாழ்வுக்குள் தங்களையும் இணைத்துக் கொண்டு தாமும் இடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்வுகளையும் பசி, பட்டினி, பற்றாக்குறை போன்றவற்றையும் அனுபவித்துப் பணியாற்றியவர்கள் எமது சகோதரிகள். சுனாமி என்னும் இயற்கையின் பாரிய அனர்த்தத்தின் போது மக்களுடன் மக்களாக சொந்த உடைமைகளை இழந்து அவர்களின் அவலத்தில் தங்களையும் இணைத்து வாழ்ந்தவர்கள் எம் சகோதரிகள்.

"இறைவன் மாத்திரமே" எமது வாழ்வு, என்ற எமது நல்ல பிதாவின் அழைப்பை நிறைவேற்ற அவ்வார்த்தையைத் தாரகமந்திரமாக ஏற்று, எல்லாவித அனர்த்தங்களிலும், அவலங்களிலும், துன்பங்களிலும், இறைவனின் சக்தியையும், பலத்தையும் பெற்று உறுதியுடன் வாழ்ந்தவர்கள் எமது சகோதரிகள்.

எனவே 155 வருடங்களாக எம் சகோதரிகளோடு பயணித்த இறைவன், அவர்தம் வாழ்வில் பெற்றுக்கொண்ட இறை அனுபவங்களையும், இறைமகிமையை வெளிப்படுத்தும், மகத்துவம் மிக்க செயற்பாடுகளையும் பதிவு செய்யும் நோக்கில், வெளியிட இருக்கும் நூல் சிறந்ததொரு ஆவணமாக அமையும் என்பதில் ஐயமில்லை. இச்சந்தர்ப்பத்தில் எனது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் உவகையடைகின்றேன்.

**திருமட சார்பற்ற சகோதரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Abandon yourself unreservedly into the hands of your God in order to accomplish in everything, everywhere and always his adorable will, never give up, never say it is enough, and if you are called to walk on the way of aridity and dryness don't complain, it is the surest path to go to God.*

***P.B.N***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தீயில் நடந்தாலும் சுட்டெரிக்கப்படமாட்டாய்
நெருப்பு உன்மேல் பற்றி எரியாது,
உன் கடவுளாகிய ஆண்டவர் நானே
நானே உன்னோடு இருக்கிறேன்."

(எசாயா 43:2)

## அத்தியாயம் I

# போரின் நினைவுச் சுவடுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகள் சுமந்த வாழ்வின் பயணம்

போரின் வடுக்கள் வாழ்வோடு கலந்த வலிசுமந்த பயணத்தின் விழிசொரிந்த அனுபவத்துள் பயணித்த ஒவ்வொரு உணர்வுகளும் உன்னதமானவை. வாழ்வையும் சாவையும் உன்முன் வைக்கின்றேன், வாழ்வைத் தெரிந்துகொள் எனும், அழைப்புக்கள் வாழ்விற்கு உந்துசக்தியாக அமையப்பெற்ற காலப்பகுதியிலே, இறுதி யுத்தத்தில் மக்களோடு மக்களாக வாழ்ந்து, இறைவனுக்காக மாத்திரம் என்னை நித்தியத்திற்கும் அர்ப்பணிக்க, உய்த்துணர்ந்த காலமது. மீண்டும் 2007ம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியிலேயே வேரவில் குழுவோடு அங்கத்துவம் பெற்று வாழ்ந்து பணியாற்றச் சென்ற காலப்பகுதியின் வாழ்வும் அர்ப்பணமும் இறுதி மூச்சுவரை மறந்துவிட முடியாதவை.

இறுதிப்போர் ஆரம்பமாகி மக்கள் மடுவில் இடம்பெயர்ந்து அலைந்து திரிந்த காலம். "வீட்டுக்கொரு இளைஞர் நாட்டுக்காக" என்னும் கட்டாயத்தில் இளைஞர்கள் போருக்கு ஆட்சேர்க்கப்பட்ட காலமதில் அழுகையும் பயமும், பிரிவும் ஆறாத சோகமும் காணப்பட்ட நேரத்தில், வீடு வீடாகச் சென்று ஆறுதல் கூறி அவர்களின் அழுகையில் பங்கெடுத்த அனுபவங்களும் வீட்டில் வாழமுடியாமல் காடுகளுக்குள் ஒழித்திருந்த இளையோரை சந்தித்து திடப்படுத்தியதும் மறக்கமுடியாத அனுபவங்கள்.

2008 ஆவணி மாதம் போரின் கட்டாயத் துரத்தலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மக்களோடு மக்களாக அருட்சகோதரி நிர்மலாவுடன் இடம்பெயர்ந்து ஆனைவிழுந்தான் சென்றோம். ஷெல் வீச்சுக்கள் அவ்விடத்தையும் தாக்கியபொழுது அங்கிருந்து உருத்திரபுரம் சென்றோம். எனது நித்திய அர்ப்பணத்திற்காக ஆயத்தம் செய்ய அனுமதி கிடைத்தது. "எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன் அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்" (வி.ப 3: 7) என்னும் இறைவாக் கின் உண்மைத்துவ அனுபவத்தை அனுபவிக்க முடிந்தது.

2008 புரட்டாதி 5ஆம் திகதி அன்று கற்பித்தல் நியமனம் பெற்ற முதல் நாள் மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து விஸ்வமடுப் பகுதிகளிலே வாழ்ந்தபோது, வலைப்பாடு றோ.க பாடசாலை, மயில்வாகனபுரத்தில் இடம்பெயர்ந்த பாடசாலையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கியது. அங்கே காணப்பட்ட மாமரத்தின் கீழ் மாணவர் பயின்று கொண்டிருந்த வேளையது. போரின் முழக்கங்கள் வான், தரைத் தாக்குதல்களின் அகோரங்கள் சாவின் நினைவை எழுப்பிக் கொண்டிருந்த காலம். இறந்த உடல்களை சந்திக்காமல் நாட்கள் நகரவில்லை. இறந்த வீரர்களின் இறுதி அஞ்சலி இசைகள் இதயத்தை கனக்க வைத்தன. அடுத்த நிமிடம் என்ன நடக்கப் போகிறது என்ற மக்களின் ஏக்கப் பெருமூச்சுக்களோடு இணைந்து பயணித்த உணர்வுகளோடு, மாணவரின் கல்வியையும், பாதுகாப் பையும் கருத்தில் கொண்டு மரத்தின் கீழ் நிழலில் இருந்து முதல் நியமன கடமைப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட நினைவுகள் இன்றும் என் பணியின் பொறுப்பின் காத்திரத் தன்மைக்கு உதவி புரிகின்றன.

வன்னிக்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையேயான போக்குவரத்துப் பயணங்கள் தடைப்பட்டு மிகவும் அரிதாக பயத்தோடு பயணித்த நேரத்தில், நித்திய ஆயத்தத்துக்காக மார்கழி மாத விடுமுறைக்குள் வவுனியா மட்டக்கலை மடத்தில் நின்றேன். இக்காலத்தில் எனது தியானம், எனது உள்ளுணர்வு, எனது ஆத்மீகக் குரல் அனுபவம் அனைத்தும் "யாரை நான் அனுப்புவேன் எனது பணிக்காக யார் போவார்" (எசா 6: 8) என் னும் இடைவிடாத குரலாக அமைந்தது. இதோ நானிருக்கிறேன் உமது பணிக்காக என்னை அனுப்பும் (எசா 6:8) என்னும் இறைவார்த்தையில் ஆழமாக ஈர்க்கப்பட்டு பதிலிறுக்க ஆயத் தமானேன்.

வவுனியாவில் இளம் சகோதரிகளுக்கான ஒன்றுகூடல் மார்கழி இறுதியில் நடைபெற்றது. அதிலே மாகாண ஆலோசகராக இருந்த அருட்சகோதரி சாந்தி சைமன் "வாழ்வையும் சாவையும் உன் முன் வைக்கின்றேன் வாழ்வைத் தெரிந்துகொள்" என்று ஒவ்வொரு இளம் சகோதரிகளையும் ஆழமாக சிந்திக்க அழைத்தார். 'யாரை நான் அனுப்புவேன் எனது பணிக்காக யார் போவார்'' என்ற இறைவார்த்தையும் கூறி காத்திரமாக சிந்திக்கத் தூண்டினார். 'இதோ நான் இருக்கின்றேன்' எனும் உள்ளார்ந்த பதிலிறுப்போடு எனது வாழ்வைப் புதுப்பித்துக் கொண்டு பாதை தடைப்பட்ட போதும் உயிரைக் கையில் பிடித்தபடி மக்களோடு மீண்டும் பாதுகாப்பற்ற வழியூடாகப் பயணம் செய்து, விஸ்வமடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னைநீராவிப் பகுதியில் எம் சகோதரிகள் இருந்த இடத்தை அடைந்து, அவர்களுடன் இணைந்து பணி புரிந்தேன். மாரி மழை ஒருபுறம், குண்டு மாரி ஒருபுறம்.

காயப்பட்டவர்களதும் உடல் அங்கங்கள் துண்டாக்கப்பட்டவர் களின் நிலையும், இறந்த உடல்கள் குவித்து வைக்கப்பட்ட கொடூரங்கள் மத்தியில் அல்லலுற்று, ஐயோ என்று அழுது புலம்பிய மக்களுக்கு ஆறுதல் கொடுத்து நம்பிக்கையூட்டும் பணிகளைச் செய்து தொடர்ந்து சுதந்திரபுரம் நோக்கி இடம் பெயர்ந்தோம். அங்கு வன்னியில் உள்ள அனைத்துக் குழுக்களின் சகோதரிகளும் ஒன்றாகச் சேர்ந்தோம். மக்கள் மிகவும் நெருக்க மாக ஒன்றாகக் குவிந்து வாழ்ந்த இடம். சாவும் இரத்த ஆறும் இதயத்தை வருடிய பயத்தோடு அதிகமான காலத்தை பங்கருக் குள் செலவழித்ததோடு செபம் ஒன்றே ஆறுதலைத் தந்த நிலையில் இறைவன் மாத்திரமே என்ற நிறைவில், வெறுமையில், தெய்வ பராமரிப்பில் வாழ்ந்த அனுபவத்தை அக்காலம் தந்தது.

இங்கு வாழ்ந்தபோது ஒரு நாள் எனக்கு காய்ச்சல் வந்தது. பாயை விரித்து நற்கருணை வைக்கப்பட்டிருந்த கொட்டகையில் நிலத்தில் படுத்திருந்தேன். தண்ணீர் தாகம் என் நாவை வரட்டி யது. எனக்குள் ஒரு உள்ளுணர்வின் குரல்,'எழுந்து போ! எழுந்து போ!' என்றது. நானும் எழுந்து தண்ணீர் குடிப்பதற்காகச் சென் றேன். ஒரு கணப்பொழுதில், ஷெல் வீச்சின் ஒரு துண்டு நான் படுத்திருந்த பாயில் விழுந்து, பாய் எரிந்தது. ஆண்டவரே என் னைக் காத்தார். இன்னுமொரு நாள் நான் குளித்துக்கொண்டிருந்த போது சண்டை அகோரமாக ஆரம்பித்து விட்டது. ஷெல் துண்டு கள் ஆங்காங்கே பறந்தன. ஒரு சின்ன ஷெல் துண்டு, நான் போட்டிருந்த செருப்பின் நுனியைப் பிய்த்துக்கொண்டு சென்றது. எனது விரல்களுக்குக் கூட எதுவும் நடைபெறவில்லை.

எனது ஐந்தாமாண்டு வாக்குறுதி புதுப்பித்தல் தினம்31 தை 2009 மிகவும் மோசமான நாளாக இருந்தது. சகோதரிகள், பிள்ளைகள், மக்கள் எல்லோரும் பதுங்கு குழிக்குள் உயிருக்காக போராடிய அச்சம் நிலவிய நாட்கள். அந்நிலையிலும் சகோதரி பெனடிக்ரா பத்திநாதர்(ஆலோசகர்) எனது வாக்குறுதியைப் புதுப்பிக்க, அந்த துன்பத்திலும் வாழ்வின் உன்னதத்துவத்தை உணர்த்தினார். அர்ப்பணத்தின் ஆழத்தை அனுபவத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்காண வழிகாட்டினார். வெளியில் இருக்க முடியாது. பதுங்கு குழிக்குள் இருந்து 'லந்தர்' விளக்கு வெளிச்சத்தில், வெளியில் போர் வெடிச் சத்தங்கள் முழங்க, உயிர்கள் பலியாகிக் கொண்டிருந்த நேரம் எனது துறவற வாக்குறுதி (Vows Formula) எழுதிக் கொண்டிருந்தேன். சரமாரியான போர் நிகழ்ந்த போதும், எனது வாக்குறுதியை புதுப்பித்துக்கொள்ள, திருப்பலி ஒப்புக்கொடுக்க ஒரு நேரம் அமைதியாகக் கிடைத்தது. வாக்குறுதி புதுப்பிக்கும் அந்தக் கணப்பொழுது வரை சண்டை ஓய்வாக, ஆயுதங்கள் ஓய்வாக இருந்தன. என் வாழ்வில் மறக்க முடியாத இந்த அனுபவம் ஆண்டவர் எனது அர்ப்பணத்தின் புனிதத் துவத்தை மேலும் ஆழமாக உணரச் செய்தார். திருப்பலி முடிந்த உடனேயே எம்மால் எடுக்கக்கூடிய பொருட்களை எடுத்துக் கொண்டு அவ்விடத்திலிருந்து மக்கள் கூட்டத்தோடு பயணித்தோம்.

அருட்சகோதரி ரீனாவும் நானுமாக 'கொலனி' நோக்கி, நெரிசலான மக்களோடு இடம்பெயர்ந்து கால்நடையாகச் சென்றபோது எமது அருகில் பெரிய ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்து பலர் இறந்தனர். பலரது சதைகள் வெடித்துப் சிதறின. இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. மரண ஓலம் காதுகளைத் துளைத் தது. தெய்வாதீனமாக நாம் இருவரும் பாதுகாக்கப்பட்டோம். சனநெரிசலில் அகப்பட்டு மிதிபட்ட முதியோர், சிறியோரின் அவலங்கள் விபரித்துக் கூறமுடியாதவை. கொலனியில் இருந்து காட்டுப்பாதையூடாக பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக ஆறுகள் கடந்து இரவோடு இரவாக இரணைப்பாலை சென்றபோது ஆற்றுச் சேற்றுக்குள் பயணித்த உழவு இயந்திரம் சரிந்து புரண்டபோது, எனது கை ரக்ரர் சில்லுக்குள் சிக்கி இழுக்கப்பட்டது. ஆனால் எவ்வித ஆபத்தும் இல்லாமல் இறைவனின் வல்லமை என்னையும் பயணித்த அனைவரையும் காத்தது. இரணைப்பாலையில் இருந்து வலைஞர்மடம் வரை மக்களோடு மக்களாக, எல்லாம் இழந்த நிலையில் இறைநம்பிக்கையோடு மாத்திரம் வாழ்வது துணிவைத் தந்தது.

ஒரு நாள் சகோதரிகள் நான்கைந்து பேர் கிணற்றில் குளித்துக்கொண்டிருந்தபோது 50 மீற்றர் தொலைவில் கொத்துக் குண்டு பலத்த சத்தத்தில் வீழ்ந்தது. ஆனால் அது இறைசக்தியின் வல்லமையால் வெடிக்கவில்லை. எல்லாவற்றையும் இழந்து மரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலத்துடனும் அழுகுரலோடும் வாழ்ந்த மக்களோடு வலைஞர்மட மருதமடு அன்னையின் பாதத்தில் செபத்தில் நிலைத்து, மக்களின் துன்பங்களில் ஒத்துணர்ந்திருந்தோம். உயிரைக் காப்பாற்றத் துடித்த இளையோரை எம் இதயத்தில் சுமந்து, ஆலயத்தில் நம்பிக்கை ஊட்டினோம். எங்கும் பிணவாடையும் மரணஓலமும் குண்டுச் சத்தங்களும் மனதை வருடினாலும், அசைக்க முடியாத இறைநம்பிக்கையும், மக்களுடன் உடனிருப்பதும் ஆழமான ஆத் மீக வாஞ்சையையும், அர்ப்பணத்தின் மேன்மையையும், அழைத்த லின் சரித்திரத்தையும் எனக்குள் உணர்த்திக்கொண்டே இருந்தது. இதுவே நித்தியத்திற்காக என்னை அர்ப்பணிக்க உந்துசக்தியாக அமைந்தது.

காயப்பட்ட மக்களோடு கப்பலில் சில சகோதரிகளோடு இராணு வக் கட்டுப்பாட்டுப் பகுதியான புல்மோட்டையை அடைந்தோம். மக்கள் பட்ட துயரம் எழுதமுடியாதவாறு இதயத்தை அடைக்கச் செய் தது. அங்கிருந்து ஓமந்தைச் சோதனைச் சாவடிப்பாதையில் ஒருநாள் இரவு கழித்தோம். பேரூந்தில் அடைக்கப்பட்டு, செட்டி குளம் அருணாச்சலம் முகாமிற்கு மக்களோடு சென்றோம். அங்கு பாய் சுற்றி வந்த பொலித்தீனை மூலைப்பக்கம் கட்டி தண்ணீர் எடுத்து மக்களோடு மக்களாக சகோதரி அமிர்தாவோடு வெளியில் குளித்த அனுபவம் மறக்க முடியாதது. உணவுக்காக இறப்பர் பீங்கானோடு வரிசையில் நின்றது, முகாம் கொட்டகையின் வெக்கை, மக்களின் உறவுகளைத் தொலைத்த, பிரிந்த, பிடித்துக் கொண்டு செல்லப்படுகின்ற அனுபவங்களோடு, பயணித்த அனுப வங்கள் இன்றும் இதயத்தை கனக்கச் செய்கின்றது.

வவுனியா மடத்தில் வந்து, நித்திய ஆயத்தம் செய்ததும் என் சகோதரிகளோடு அந்த வேளையில் மக்களைச் சந்திப்பதும், தடுத்து வைக்கப்பட்டிருந்த இளம் போராளிப் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதும், நம்பிக்கையூட்டுவதும் என்னை மேலும் உறுதிய டையச் செய்தது. போர் முடிந்து எம் மக்கள் அனைவரும் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்தபோது, 2009.12.18 அன்று எனது நித்திய வாக்குறுதியை என் சக சகோதரிகளோடு மிகவும் எளிமையான முறையில் மேற்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்னை அனுப்பும் தெய்வமே, உம் மக்களின் விடுதலைக் காய்' என்னும் ஆழமான உறுதிப்பாட்டுடன் என்னை நித்தியமாக அர்ப்பணித்தேன். அந்த ஆத்மீக வேகத்துடன் 23.12.2009 அன்று அருட்சகோதரி அன்ரனிற்றாவுடன், முதன் முதலாக, மக்களோடு கிளிநொச்சி உருத்திரபுரம் சென்றேன். போரின் எச்சங்கள், பாழடைந்த, இடிந்த, உடைந்த கட்டடத்தினுள் சகோதரி அன்ரனிற் றாவும் நானும் மக்களுக்கு நம்பிக்கையூட்ட குடியேறினோம். மனப்பயங்கள், அதிகம் இருந்தாலும், சகோதரி அன்ரனிற்றாவிடம் இருந்த துணிவு, இறைநம்பிக்கை, ஆர்வம் எனக்கும் பலமளித்தது. பல வசதியீனங்கள் இருந்தாலும் மக்கள் சிறுக சிறுக ஆரம்பிக்கின்ற அந்த வாழ்வு நிலையோடு நாமும் எமது வாழ்வை ஆரம்பித்தோம்.

பின்பு 10.01.2010 அருட்சகோதரி கிறேஸ்மேரியுடன் முழங்கா விலில் மக்களோடு மக்களாக மீள் குடியமர்ந்தேன். முழங்காவில் மடம் தங்கமுடியாது உடைக்கப்பட்டிருந்தது. திரு.கெனடி குடும்பத் தினரின் கொட்டகையில் தங்கி, சகோதரியும் நானும் மடத்தை துப்பரவு செய்து, ஒரு சிறு அறையை தற்காலிகமாக தயார்செய்து தங்கி, துப்பரவுப் பணியிலும் கல்விப் பணி, மக்களின் துன்பங் களுக்கு செவிமடுக்கும் பணியில் ஈடுபட்டோம். 10.02.2010 அங்கி ருந்து அருட்சகோதரி மரியமலருடன் வேரவில் சென்று, காடாகவும் உடைக்கப்பட்டு எஞ்சியிருந்த மடத்தில் திரு.தேவன் குடும்பத்துக் கொட்டகையில் தங்கி மடத்தை துப்பரவு செய்து, 2013 வரை அம்மக்களோடு வலைப்பாடு, வேரவிலில் மனநிறைவோடு பயணம் செய்ய ஆண்டவர் அருள்கூர்ந்தார். போரின் வலிகள், வேதனைகள் என் வாழ்விற்கு வலுச்சேர்த்தன. ஆழமான ஆத்மீக வாஞ்சையுடன் இறைநம்பிக்கையில் தொடர்ந்தும் மனஉறுதியோடு பயணிக்க வலிகள் சுமந்த வாழ்வின் அனுபவம் உடன் அனுபவமாய் பயணிக்கின்றது.

"இதோ நானிருக்கின்றேன் என்னை அனுப்பும்".

**சகோதரி றோஸ்மேரி முடியப்பன்**
பாஷையூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடரிலும் இறைவனின் உடனிருப்பு...

1992 ம் ஆண்டு வைகாசி மாதம் 31ம் திகதி இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் எனது முதல் அர்ப்பணத்தை மேற்கொண்ட பின் ஆனி மாதம் 2ம் திகதி, முதல் பணித்தளமாகிய பறப்பாங்கண்டல் மடத்திற்கு மாகாணத் தலைவி மாறி யோசப் அவர்களால் அனுப்பிவைக்கப்பட்டேன். அடர்ந்த காட்டுப் பாதை யின் ஊடாகப் பயணிக்கின்றபோது பல வெறுமையான உணர்வு கள் என்னை வாட்டின. அனைத்தையும் உள்ளத்தில் இருத் தியவளாகச் சென்ற வேளையில் அருட்சகோதரிகள் கிளமெனற், ஏட்றியன், பிலோமினா, எலிசபெத்மலர் ஆகியோர் என்னை வரவேற்றனர்.

ஏற்கெனவே போரினால் பாதிக்கப்பட்ட நிலையில் பாழடைந்த கட்டடங்கள் வெளவால் உறைந்து நடமாடும் இல்லமாக காணப் பட்டன. மனதில் ஒரு கலக்கம். எங்கும் வெளவால் எச்ச மணம், அத்துடன் பல வசதிக் குறைவுகள், என்றாலும் அனைத்தையும் ஏற்று மகிழ்வுடனும் சமாதானத்துடனும் வாழ்ந்தேன். ஆனால் பால், பழம் உணவிற்கு மட்டும் குறைவில்லை. இறைபராமரிப்பு எம்மோடு இருந்தது.

திடீர் திடீரெனப் பயங்கரமான துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் எல்லாப் பக்கங்களும் கேட்கும். தொடர்ச்சியாக எங்கும் போர் முழக்கம். நச்சுப் பாம்புகள் ஒருபக்கம். பயத்துடன் இறைபரா மரிப்பில் நம்பிக்கையுடன் வாழ்ந்தேன். தொடர்ச்சியாக கிபீர் விமானத் தாக்குதல்கள், வெடிச்சத்தங்களைத் தாங்க முடிய வில்லை. எமது விடுதிச்சாலையில் இருந்த பிள்ளைகளுடனும், சில பொருட்களுடனும், துவிச்சக்கரவண்டியிலும், நடந்தும் மடு அன்னையின் பதியில், அவரது பராமரிப்பில் அடைக்கலம் புகுந் தோம். மடுமடத்தில் அருட்சகோதரி மொறின் எம்மைப் பாசத்துடன் வரவேற்றார். அப்பொழுது என் கண்களிலிருந்து கண்ணீர் சொரிந் தது. மூன்று மாதகாலம் இடம் பெயர்ந்து துன்புற்று வாழும் மக்கள் மத்தியில் வீடு சந்திப்பு, வைத்தியசாலையில் நோயாளர் சந்திப்பு, அருட்சாதன ஆயத்தம், மறைக்கல்வி போன்ற பணிகளை இளமையின் துடிப்புடன் ஆர்வமாகவும் அமைதியாகவும் செய்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரினால் பாதிக்கப்பட்ட உடைந்த, நொறுங்குண்ட, காயப்பட்ட மக்களின் துயர் துடைத்து ஆறுதல் படுத்தினேன்.

ஒரு நாள் வைத்தியசாலையில் நோயாளரைச் சந்திக்கச் சென்ற பொழுது, இரண்டு கைகளும் காயப்பட்ட நிலையில் ஒரு இளைஞன், உணவு இருந்தும் உண்ணமுடியாத நிலை கண்டு எனது மனம் வேதனைப்பட்டது. உடனடியாக அவ் உணவை எடுத்து என் கையால் ஊட்டிவிட்டேன். நன்றி பொங்க அவ் இளைஞன் கண்ணீர் மல்கி நின்றான். பலர் என்னைப் பார்த்து அதிசயித்தனர். அந்நேரம் எனக்குள் உதயமான மனநிலை "நான் பசியாய் இருந்தேன் நீங்கள் உணவு கொடுத்தீர்கள்" (மத்.25:35) என்னும் இறைவார்த்தைப் பகுதி என் நினைவிற்கு வந்தது. எனக்குள் உறைந்திருந்த இறையன்பையும் பிறரன்பையும் நினைத்து இறைவனுக்கு நன்றி கூறினேன்.

1993 மார்கழி 31ம் திகதி மடுவில் செய்த பணிகளுக்கும், மடுஅன்னையின் அரவணைப்பிற்கும் பிரிய மனமின்றிப் பிரியா விடை கொடுத்து, கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்திற்கு அருகாமையில் இருக்கும் மடத்தில் அருட்சகோதரிகள் விக்ரறின், லூட்ஸ், கிறிஸ்ரியானா என்பவர்களுடன் இணைந்து பணி செய்தேன். கல்விப் பணி, மறைக்கல்வி, திருப்பாலத்துவ சபை, அருட்சாதன ஆயத்தம், பாடகர் குழாமை திருவழிபாட்டிற்கு ஆயத்தம் செய்தல் போன்ற பணிகளை மகிழ்வுடன் செய்தேன். அந்நாட்களில் ஊரியான் பாதையினால் பயணித்து உடலும், மனமும் களைத்துச் சோர்ந்து வரும் மக்களை அன்புடன் வரவேற்று அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதில் சகோதரிகளுடன் இணைந்து செயற்பட்டேன்.

இரண்டு ஆண்டுகள் உருண்டோடின. பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் திருவாளர். ஆனந்தசங்கரி என்பவருடைய பெருங் காணியில், பாழடைந்த வீடொன்றில் இடம் மாறிக் குடியமர்ந்தோம். அங்கு ஊரியான் பாதையால் வரும் அருட்சகோதரிகள், அவர்களின் உறவுகளை வரவேற்று எமது குழுத்தலைவியுடன் இணைந்து இரவு பன்னிரண்டு மணி, ஒரு மணி, இரண்டு மணிக்கு எழுந்து உணவு சமைத்து அனைவரையும் உபசரித்து, அவர்கள் செல்லவேண்டிய இடங்களுக்கு வழியனுப்பி வைக்கும் பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது முக்கிய பணியாக அமைந்திருந்தது. சில சமயங்களில் உறங்குவதற்குக் கூட இடமில்லாது விறாந்தையில் நடைபாதை களில் படுத்துறங்கிய நாட்களில் பாம்பின் பயம் ஒருபுறமாக பயணித்த நாட்களை எப்படி மறப்பது? பலமும் திடமும் தந்து வழி நடத்திய இறைவனுக்கு நன்றி.

ஒரு நாள் புனித திரேசா மகளீர் மகாவித்தியாலயத்தில் உயர்தர மாணவர்களுக்கு சமய பாடம் கற்பித்துவிட்டு அடுத்த வகுப்பிற்கு செல்லுகையில் திடீரென கிபீர், பொம்பர் யுத்த விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல்களை மேற்கொண்டன. அதில் ஒன்று நான் நின்ற இடத்திலிருந்து இருபது மீற்றர் தூரத்தில் விழுந்தது. இத்தாக்குதல்களிலிருந்து அற்புதமான முறையில் காப்பாற்றப்பட்டேன். இறைபராமரிப்பை நினைக்கும் போது நன்றி உணர்வு பொங்கி எழுகின்றது. அற்புதம் ஆனால் உண்மை, விழுந்த குண்டு வெடிக்கவில்லை, அது வெடித்திருந் தால், அன்றே நான் விண்ணகத்தில் ஆண்டவரில் துயில் கொண்டி ருப்பேன். இது எனது வாழ்வில் மறக்கமுடியாத இறைபராமரிப்பு அனுபவம். பலநாட்கள் கழிந்தும் இவ் அதிர்ச்சி என்னை வாட்டி யது உண்மையே.

அடுத்து ஒரு வருடகாலம் வங்காலையில் எனது பணிகளை அமைதியான முறையில் செய்தேன். 1998 ஆவணி மாதம் 8ம் திகதி எனது நித்திய அர்ப்பணத்தின் பின்னர் சகோதரி கேமன் யோசப் அவர்களுடன், எனது உடுப்புப் பெட்டியை தலையில் வைத்து, பல மைல்கள் தூரம் வயல்வெளிகளூடாக நடந்து, பின் ஒரு வாகனத்தில் ஏறி என் புதிய பணித்தளமாகிய வேரவில் மடத்திற்கு சென்றேன். எங்கும் அமைதி. நசரேத்தில் திருக்குடும்பம் வாழ்ந்த எளிமையான வாழ்வையும் பல இல்லாமைகளையும் மகிழ்வுடன் ஏற்று வாழ்ந்தேன். எதுவும் என்னைக் குழப்பவில்லை சுலபமாக ஏற்று வாழக்கூடியதாக இருந்தது.

அங்கு வாழ்ந்த மக்கள் பலர் அன்பானவர்கள். குடும்ப உணர்வுடன் பழகி பல தேவைகளில் கைகொடுத்து உதவியதை மறக்கமுடியாது. வசதிகள் ஆடம்பரங்கள் குறைவாகக் காணப் பட்டாலும், நிறைவான பணிகளை மகிழ்வுடன் செய்து வாழ்ந்த நாட்களை மறக்க முடியாது. பல மைல்கள் தூரம் முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளுக்காகச் சென்றாலும், இரவில் காட்டுப் பாதையால் காற்றுப் போன மோட்டார் வண்டியை உருட்டி வந்தாலும் இறை வன் என்னுடன் இருப்பதை உணர்ந்தேன். பாம்புகள் ஒரு புறம், ஏனைய விச சந்துக்களின் தொல்லை மறுபுறம். ஒருநாள் தலைமுடிக்குள்ளே நட்டுவக்காலி. ஆனால் தீண்டவில்லை. அதிசயமாக என்னைக் காத்த இறைவனை வாயாரப் புகழ்கின்றேன்.

எமது வலைப்பாட்டு கத்தோலிக்கக் கிராமத்திலே வாழ்ந்து, கல்விகற்று, பல பக்திச் சபைகளிலே பறந்து திரிந்த இளம் பிஞ்சுகள் விடுதலைப் புலிகள் என்ற போர்வையில் வீரச்சாவை ஏற்று வித்தாகினார்கள். இதனால் உள்ளம் உடைந்த நிலையில் வாழும் குடும்பங்களின், சோகக் கதைகளைக் கேட்டு மனவேதனை அடைந்தாலும் அவர்களுக்கு ஆறுதல் கூறி உடன் பயணித்த அனுபவங்கள் ஏராளம். நாளுக்கு நாள் துயரங்கள் இழப்புக்கள் அதிகரித்த வண்ணமே இருந்தன. குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி ஆற்றுப்படுத்தினேன். 2004இல் போரின் தாக்குதல் ஒருபக்கம் இருக்க, மறுபக்கம் சுனாமியின் அகோர தாண்டவத்தால் எனது மூத்த அக்கா உட்பட நூற்றுக் கணக்கான உறவுகளை இழந்து உருக்குலைந்து நின்றேன்.

2008ஆவணி மாதம் 8ம் திகதி பாரிய இடப்பெயர்வு. வேரலில், வலைப்பாட்டு மக்கள் எமக்குச் சொல்லாமலே இடம் பெயர்ந்து விட்டனர். அருட்சகோதரிகள் கிறேஸ்மேரி, றோஸ்மேரி முடியப்பு ஆகியோரும் நானும் வலைப்பாட்டு பங்குத்தந்தை செல்வரட்ணம் அவர்களும் மூன்று நாட்கள் அங்கு இருந்தோம். மக்கள் யாருமற்ற நிலையில் நாமும் எமது இடங்களை விட்டு அகதிகளாக பயணித்தோம். சில பொருட்களுடன் ஆனைவிழுந்தானில் ஒரு மாதமும் உருத்திரபுரத்தில் மூன்று மாதங்களும் எந்தநேரம் என்ன நடக்குமோ தெரியாது என்ற நிலையில் அச்சத்துடன் வாழ்ந்தோம். மீண்டும் இடப்பெயர்வு விசுவமடுவில் புன்னைநீராவி என்ற இடத்தில் ஒரு எளிமையான வீட்டில் ஐந்து மாதங்கள் வாழ்ந்தோம். அவ் இல்லமானது வந்தாரை வரவேற்கும் இல்லமாக வும் உணவு, உறையுள் கொடுக்கும் நல்வரவின் இல்லமாகவும் விளங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக அங்கு சென்றமையால் பல பொறுப்புக்கள் என்னிடம் தரப்பட்டன. மூன்று குழுவிலும் இருந்த சகோதரிகள் அங்கு எளிமையான வாழ்வை வாழ்ந்தோம். வேரவில், உருத்திரபுரம், கரடிப்போக்கு என எம்மைச் சூழ பலதரப்பட்ட இடம் பெயர்ந்த மக்கள் வாழ்ந்தனர். வறுமையால் உணவிற்காக வருபவர்களுக்கும் எமது சகோதரிகளின் உறவுகளுக்கும் எம்மிடம் உள்ளதைப் பொருட்களாகப் பகிர்ந்தோம். தாராளமாக கொடுத்து இறை பராமரிப்பில் தங்கி வாழ்ந்தமையால் ஒரு மடங்கு கொடுக்கும் போது பல மடங்காக எமக்கும் பகிரப்பட்டது. அந்நேரம் ஆண்டவரின் அரும் பெரும் செயல்களை நான் என்றும் பாடிப் புகழ்ந்தேன்.

இடம் பெயர்ந்து வாழும் எமது பங்குமக்களுக்கும் உதவிகள் கிடைக்கின்ற போது பங்குத் தந்தையுடன் இணைந்து பணத்தையும், பொருட்களையும் பங்கிட்டு கொடுத்தோம். மரநிழல்கள் பாடசாலைகள் ஆகின. இவ்வாறான நிலையில் எனது அக்காவின் மகன் வீரமரணம் அடைந்துவிட்டான் எனும் செய்தி கேட்டுப் பதைபதைத்தேன். ஊரோடு ஒத்தது என கண்ணீரோடு பயணித்தேன். 2009 தை மாதம் பத்தாம் திகதி இடம் பெயர்ந்த நிலையில் பாடசாலை மாற்றம் செய்யப்பட்டு உடனடியாக வரவும் என்ற அழைப்பு எனது மாகாணதலைவியிடமிருந்து கிடைத்தது.

பலவிமானக் குண்டுவீச்சுகளுக்கும் மத்தியில் மாற்றக் கடிதத்திற்கு ஒப்பம் வாங்குவதற்காக நானும் அருட்சகோதரி றோஸ் மேரியும் மோட்டார் வாகனத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.குருகுல ராஜாவிடம் சென்றோம். வாகனத்தில் இருந்தே அனுமதி பெற்றுக் கொண்டேன். பின் எனது சகோதரிகளிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு காலை எட்டுமணிக்கு புதுக்குடியிருப்பு புறப்பட்ட நான் மாலை ஐந்து மணிக்கு மடத்தை வந்தடைந்தேன். இறுதியாக செல்லும் பேருந்து வண்டியில் 2009 தை மாதம் பதினாறாம் திகதி வவுனியாவை வந்தடைந்தேன். ஈற்றில் 2009 தை மாதம் இருபத்தேழாம் திகதியன்று கப்பலில் காங்கேசந்துறை வந்து யாழ்ப்பாணத் திருக்குடும்ப கன்னியர் மடத்தை வந்தடைந்தேன். எல்லாம் அற்புதம், அதிசயம் ஆனால் உண்மை. இறைவனுக்கே மகிமை.

**அருட்சகோதரி நிர்மலா ஆபேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பத்தில் துணையிருந்த இறைவனின் வல்லமை

**"அஞ்சாதே நான் என்றும் உன்னோடு"** என்ற வார்த்தை வாழ்வானது. இறைவன் எப்பொழுதும், எந்நாளும் என்னோடு இருக்கின்றார், என்னைக் கரம் பிடித்து வழி நடத்துகின்றார். நான் செய்ய வேண்டியது என்ன என்பதை எனக்குள் இருந்து கற்றுத் தருகின்றார்.

2008ம் ஆண்டு நான் வன்னியில் உருத்திரபுரத்திலிருந்த காலப்பகுதியில் போர் முழக்கம், எறிகனை வீச்சுக்கள், கொத்து குண்டு வீச்சுக்கள் மத்தியிலும் இறைவன் எம்மில் ஆற்றிய அற்புதச் செயல், அவரது பரிவிரக்கம் என்றும் மாறாதது. என் இதயம் அனுபவித்த அதிர்ச்சிகளையும், முகம் கொடுத்த இடம் பெயர்வுகள், பதுங்குகுழி வாழ்க்கை, நேரில் கண்ட அவலச் சாவுகள், பசி, பட்டினி எனப் பல பயங்கர நிகழ்வுகளை என்றும் மறக்கவே முடியாது. ஆம், "தீயில் நடந்தாலும் சுட்டெரிக்கப்பட மாட்டாய். நெருப்பு உன் மேல் பற்றியெரியாது. உன் கடவுளாகிய ஆண்டவர் நானே, உன்னோடு இருக்கின்றேன்". (எசாயா-43:2) எனும் வார்த்தை எனக்கு உந்துசக்தியாக இருந்தது.

உருத்திரபுர மடத்திலிருந்து உயிரைக் காப்பாற்றுவதற்காக எஞ்சிய முப்பத்தைந்து விடுதி மாணவர்களும், எனது குழுச்சகோதரியும், நானுமாக உழவியந்திரத்தில் பயணித்து இராமநாதபுர ஆலயத்தை சென்றடைந்தோம். ஆலய வளாகத்தில் அவர்களைப் பாதுகாப்பாகத் தங்கவைத்து, அடிப்படை வசதி களை ஒழுங்கு செய்துவிட்டு மீண்டும் எம் இல்லம் திரும்பினோம். மக்கள் அனைவரும் தமது பொருள் பண்டங்களுடன் இடம் பெயர்ந்து கொண்டிருக்கும் இறுதி நாட்களில் நாமும் எமது அத்தியாவசியப் பொருட்களை எம் இல்லத்திலிருந்து பாரவூர்தியில் ஏற்றி புதுக்குடியிருப்பு மடத்தில் வைத்துவிட்டு பாதுகாப்பான இடம் தேடி சுதந்திரபுரத்திற்குச் சென்றோம்.

அங்கே ஒரு குருவானவரின் தந்தை உதார குணத்துடன் வழங்கிய காணியில் பிள்ளைகள் தங்குவதற்கும், படிப்பதற்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலி ஒப்புக்கொடுப்பதற்குமாக மூன்று கொட்டில்கள் அமைத்தோம். மீண்டும் பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக இராமநாதபுரத்திலிருந்து வந்து, தர்மபுரத்தில் தங்கியிருந்த கருணாநிலைய விடுதி மாண வர்களின் வளாகத்தின் ஒரு சிறிய பகுதியை போதகர் ஒருவர் உடனடியாகத் தந்துதவியபடியினால் இரண்டு வாரங்களாக அங்கு அவர்களை தங்கவைத்தோம்.

பின் சுதந்திரபுரத்தில் வேலைகள் முடிவடைந்ததும் கொட்டும் மழையிலும், போர் முழக்கத்தின் மத்தியிலும் பிள்ளைகளை அங்கு நகர்த்தி மூன்று, நான்கு மாதங்கள் அமைதியாக இருந்து க.பொ.தசாதாரண தரப்பரீட்சை எழுதும் பிள்ளைகளும், ஏனை யவர்களும் கல்வியைக் கற்கக்கூடிய முறையில் சூழலும் அமைந்திருந்தது. இந்நாட்களில் எம் இல்லத்தில் நாளாந்த திருப்பலி நிறைவேற்றி இறைவார்த்தையாலும், ஆன்மீக உணவா லும் எம்மை உறுதிப்படுத்திய அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அடிகளாரை நன்றியோடு நினைவு கூர்ந்து இறைவனில் என்றும் நிலையான மகிழ்ச்சியை சுவைக்க தொடர்ந்தும் செபிக்கின்றேன்.

அங்கும் தொடர்ந்தும் இருக்கமுடியாத 'ஷெல்' தாக்குதலினால் பிள்ளைகளும், அருட்சகோதரிகளும் அந்தோனியார் ஆலயத் திற்கு, அமலமரித்தியாகிகளின் துணையுடன் சென்று சில நாட்கள் தங்கியிருந்தோம். தொடர்ந்தும் குண்டுவீச்சுக்கள் இருக்கமுடியாத அவலநிலை, **"யாரிடம் செல்வோம் இறைவாவாழ்வுதரும் வாரத்தைகள் உம்மிடம் தானே உள்ளன"** என்ற உணர்வு களுடனும், இறைநம்பிக்கையுடனும் அனைவருடனும் சேர்ந்து இரணைப்பாலை ஆலயப் பங்குத் தந்தையர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இல்லங்களில் சிலநாட்கள் தங்கி மீண்டும் வலைஞர் மடம் நோக்கி கால் நடையாய் பயணித்தோம். களைப்பு, பசி இருந்த போதிலும் தெய்வீக சக்தி எம் அனைவருக்கும் ஆற்றலை அளித்ததை மறக்கவே முடியாது.

எங்கும் போர் முழக்கத்தின் உச்சகட்டம். நாங்களும், பிள்ளை களும், ஏனைய மக்களும் பதுங்கு குழிக்குள்ளேயே இருந்து இறைவனை நோக்கிப் புகழ்ந்துபாடிச் செபித்துக் கொண்டே அந்த இரவை கழித்தோம். மறு நாள் பல கசப்பான அனுபவங்களுடனும் காயப்பட்டும், உயிர்களை இழந்த எம் இனத்தவருடனும் அச்சத் துடன் முள்ளிவாய்க்கால் நோக்கிபுறப்பட்டோம். அவ் வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடன் ஆறு பிள்ளைகளும், அருட்சகோதரி பெனடிக்ராவும், நானும் மிகுந்த பெலவீனத்துடன் இருந்தோம். அருட்சகோதரியும் மிகவும் வலுக்குறைவாக இருந்த படியால் கப்பலினூடாக இராணு வத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்தும் உடனடியாக முகாமில் இருந்து வரமுடியாமல், அங்கு தங்கியிருக்கவேண்டிய நிலையினால் பல துன்பங்களை அனுபவித்தோம். எனினும் இறைவனே எமக்கு உறுதியையும், சக்தியையும் அளித்தார்.

முள்ளிவாய்க்காலில் தங்கியிருந்த காலம் போர் முழக்கத்தின் உச்சகட்டம். அண்மையில் இருந்த வைத்தியசாலைகள், நாம் இருந்த வீடுகள் நோக்கி சரமாரியான எறிகணை, குண்டுத் தாக்குதல்கள் இவற்றின் மத்தியிலும் வரப்பிரசாத மாதாவையும், வேதாகமத்தையும் எம்முடன் வைத்திருந்து செபமாலையை உருக்கத்துடன் செபித்து, பிள்ளைகளைத் திடப்படுத்தி உறங்கிக் கொண்டிருந்த வேளை நடுச் சாமம் போல பதுங்கு குழிக்கு மேலாக சென்ற நெருப்புக் குண்டுகள் என் தலையை வெடிக்கச் செய்வது போன்ற தீப்பிளம்பின் மத்தியிலும் பிள்ளைகளையும், என்னையும் காப்பாற்றிய இறைவனை என்றும் மறக்கமுடியாது.

இறுதியாக வைகாசி பதினேழாம் திகதி அனைவரும் புறப்படலாம் என்னும் உத்தரவு விடுதலைப் புலிகளிடமிருந்து வந்ததும், நானும் ஐந்து பிள்ளைகளுமாக வழியில் சந்தித்த செல்வி. கிறேஸ் என்பவரின் துணையோடு, பயங்கரமான காட்சிகளுடன் வட்டுவாகல் பாலத்தினூடாக சென்று இராணு வத்தின் உதவியோடு, இரவோடு இரவாக பேரூந்தில் ஓமந்தை முகாமை சென்றடைந்தோம். மீண்டும் விசாரணைகளைத் தாண்டி பேரூந்தினூடாக ஆனந்தக் குமாரசாமி நலன்புரி முகாமை சென்ற டைந்தோம். எத்தனை, எத்தனை துன்பக் கடலைக் கடந்தோம்? எல்லோருடைய செபங்களும் "அஞ்சாதே, நான் உன்னோடு இருக்கின்றேன்." என்னும் இறைவனின் உறுதிமொழி எம்மைப் பாதுகாத்து, பராமரித்து வழிநடத்தி மீண்டும் உயிர்ப்பிச்சையை பிள்ளைகளுக்கும் எம்மோடு பயணித்த ஆயிரக்கணக்கான மக்களுக்கும், எனக்கும் அளித்தமைக்காக கோடானகோடி நன்றி இறைவா

**அருட்சகோதரி. அஞ்சலின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்துவந்த பாதையில் உடனிருந்த இறை இருப்பு

நீர் வளமும், நில வளமும், நிறைந்த பூமியில் நிம்மதி ஒன்றுதான் நமக்கில்லை. எனினும்; சொந்த மண்ணில் பரதேசிகளாய் திரிந்த கணங்கள்... மறக்க முடியுமா... பெட்டி படுக்கையுடன் உயிருக்காகப் போராடி மக்கள் இடம்பெயர்ந்து சென்றார்கள். இராணுவத்தின் வேட்டுக்கள் ஒலியை விட வேகமாக காற்றைக் கிழித்துக் கொண்டு பேரிரச்சலுடன், வந்து விழுந்தன. வல்லூறுகள் போன்ற விமானங்கள் வட்டமிட்டுகொத்துக் குண்டு களை அள்ளிவீசின. இந்த விபரீதங்களினால் மக்கள் பேதிலி களாக ஓடோடி பயணித்த விதத்தினை எப்படி வர்ணிப்பேன்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இதய பூமியாக போற்றப்பட்ட புதுக்குடியிருப்பில் 2007 இல் பணிபுரிவதற்காக அனுப்பப்பட்டேன். எனக்குள் பயம் இருந்தாலும், "அஞ்சாதே நான் உன்னோடு இருக்கிறேன்" என்ற இறைவார்த்தையில் ஆண்டவரின் உடனிருப்பை உணர்ந்து மனமகிழ்வுடன் சென்றேன். எந்தநேரம் என்ன நடக்குமோ. என்ற பதட்டப்பட்ட நிலையில் வாழ்ந்த மக்கள் மத்தியில், எம் சகோதரிகளுடன் சேர்ந்து பணியாற்றினேன். போரின் தாக்கங்களினால் அங்கவீனர்களாக துடிதுடித்துக் கொண்டிருந்த எம் இளம் சந்ததியினரை வைத்தியசாலையில் சந்தித்து ஆறுதல் படுத்தி பிள்ளைகளை இழந்து அல்லலுற்றவர்களுக்கு இறை நம்பிக்கையூட்டி, எனது பணியினை ஆற்றி வந்தேன்.

வான் தாக்குதல் மூலம் வீசப்பட்ட குண்டுகளுக்கு எம் மடமும் விதிவிலக்கல்ல. ஓடி ஓடி பதுங்கு குழிக்குள் புகுந்த நாட்கள் பலஒரு நாள் என்னுடன் சகோதரிளான பிலோமினா, யசோதா, ஜேம்ஸ் இவர்களுடன் மூன்று உதவியாட்கள் எல்லோரும் பதுங்கு குழியிலிருந்து வெளியில் வந்த நேரம், அயற் கிராமத்துக்கு வீசப்பட்ட குண்டுகளில் ஒன்று, எங்கள் மடத்தின் மீது விழுந்தது. தெய்வாதீனமாக அக்குண்டு வெடிக்கவில்லை. வெடித்திருந்தால் அருட்சகோதரி யசோதா அவ்விடத்திலேயே சின்னாபின்னமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருப்பார். நாங்களெல்லோரும். உயிரோடு இருப்பதற்கு காரணம். ''இறைபராமரிப்பேயாகும். அதிசயம்! ஆனால் உண்மை. இயேசு மரி சூசை தம் அரவணைப்பில் எம்மை பாதுகாத்து பராமரித் ததை நினைத்துநன்றியுடன் புகழ்கின்றோம். எம்மைப் பார்வையிட வந்த மக்கள் பிரமிப்புடன் நடந்த அதிசயத்தைக் கண்டு இறைவனைப் புகழ்ந்து போற்றி நன்றி கூறிக்கொண்டு சென்றார்கள். இந் நிகழ்வு மாவீரர் தினத்திற்கு முன்னைய நாளில் நடந்தது.

மீண்டும் கிளிநொச்சி கரடிப்போக்கிற்கு பணியாற்ற மாற்றலாகி சென்றேன். சகோதரி பெனடிற்ரா வன்னிப் பகுதி ஊக்குவிப்பாளராக இருந்தபடியால் மடுப்பகுதிக்கு சென்று சகோதரிகளை தரிசிப்பதற் காக சென்ற வேளை அவருக்கு உதவியாக என்னையும் அழைத் துச் சென்றார். கூட்டம் முடிந்து மறுநாள் அங்கிருந்து முழங்காவில் வந்து சேர்ந்தோம். மதிய உணவு நேரம் பரிதாபமான செய்தியை கேள்வியுற்று கலங்கினோம். அருட்சகோதரி றஞ்சினி உட்பட பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் சென்ற பேரூந்து கிளைமோர் தாக்குதலில் சிக்குண்டு நடத்துநர் ஓட்டுநர், பாடசாலை அதிபர், உட்பட பதினேழு பேர் உடல் சிதறி பலியாகினர். அருட்சகோத ரிக்கு கையில் பலத்த காயம் ஏற்பட்டு, இரத்தமும் கணிசமாக வெளியேறி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதில் சிறுமி ஒருவரும் அருட்சகோதரியுமே உயிர்தப்பியவர்களாவர். மிகுதி அனைவரும் பலியான துயர சம்பவம் மறக்க முடியாதது.

பிரமிப்பும் கலக்கமும் நிறைந்த உள்ளத்துடன் மீண்டும் மடு சென்றோம். அழுகுரல் கூக்குரல் வேதனை. வார்த்தையில் வடிக்க முடியாத துயரம். இவர்கள் மத்தியில் இறை அன்பை ஆறுதலை நம்பிக்கையை கொடுத்து, அவர்களுடன் பயணித்து இரு மாதங்களாக அங்கு பணியாற்றினேன் எங்கும் குண்டுச்சத்தம், வெளியில் செல்ல முடியாத நிலை; ஆலயத்திலே தான் நாம் அனைவரும் தங்கியிருந்தோம். பயத்தின் மத்தியில் இடை யிடையே எமது மடத்திற்கு வந்து செல்வோம். என்னுடன் அருட் சகோதரி அம்புறோசினும் பணியாற்றினார். பண்டிவிரிச்சானிலிருந்து மடுக்கோவிலுக்கு மேலாக, எங்கள் மடத்தையும் தாண்டி குண்டுகள் பறக்கும் சத்தங்கள் எம்மை பீதி கொள்ள வைத்தன. அந்த வேளை நாம் மக்களோடு மாதாவின் பாதத்தடியில் இருந்து செபித்துக் கொண்டிருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் கரடிப்போக்கு வந்து சுற்றியுள்ள பகுதிகளில் எனது பணியைத் தொடங்கினேன். குண்டுத் தாக்குதல்கள் வான்தாக் குதல்கள் மத்தியிலும் பணி செய்ய இறை அருளே வழிகாட்டியது. இறைவனில் நம்பிக்கை கொண்டு கால்நடையாகச் சென்று மக்களைச் சந்தித்தேன். மரங்களின் கீழும் பற்றைகள் நடுவிலும், பதுங்கிப் பதுங்கியே செல்வேன். இந்நாட்களில் எனக்குப் பலமூட்டி பாதுகாத்த இறைவனுக்கும் திருக்குடும்பத்திற்கும் சகல புனிதர்களுக்கும் நன்றி கூறி புகழ்ந்து போற்றுகின்றேன்.

2008 ஐப்பசி மூன்றாம் திகதி புனித குழந்தை திரேசாளின் திருவிழா முடிந்தவுடன் எம் புனித பயணம் தொடங்கியது. கையில் எடுத்த பொருட்களுடன் மக்களுடன் மக்களாக இடம்பெயர்ந்தோம். முதலில் புதுக்குடியிருப்பில் தஞ்சமடைந்தோம். அங்கும் பாதுகாப்பின்மையால் பிரமந்தனாறு உடையார்கட்டில் தங்கினோம். எம் சகோதரிகள் ஒன்றாக கொட்டில் போட்டு பங்கர் அமைத்து தங்கினோம். மழை வெள்ளம் காற்று ஒருபுறம், மறுபுறம் கொத்துக் குண்டுகள் கிபீர் தாக்குதல்கள். பயங்கர கொலைக் களமாக எம் பூமி சிவந்து கொண்டிருந்தது. நாங்கள் தங்கிய இடம் சகதி நிறைந்தது. நிலத்தில் படுத்து தூங்க முடியாதிருந் தது. இதைக் கண்ட அருட்தந்தை எரிக் றொஷான் அடிகளார் தன்னிடமுள்ள கட்டில் படுக்கைகளைத் தந்து உதவினார். பல நல்ல உள்ளங்களின் பகிர்தல்களை நினைந்து நன்றி கூறுகின்றேன்.

ஒவ்வொரு நாளும் பயங்கர யுத்தகளமாக நிலைமை மாறிக்கொண்டிருந்தது. எம் சகோதரிகளின் சலிக்காத ஆன்மீக தாகம், பணி ஆர்வம் போற்றத்தக்கது. சிறார்களின் கல்வியிலும், குடும்பங்களைச் சந்தித்து ஆறுதல்படுத்துவதிலும், உடன் பயணிப்பதிலும் சோர்வின்றி பயணித்தோம். சொத்துக்களை உறவுகளை இழந்து, அலைந்து அலைந்து, ஓடிஓடி பதுங்கு குழிகளுள் ஒளிந்து நிம்மதியை இழந்தனர் எம்மக்கள். இரவும் பகலும் இடைவிடாத வெடிச்சத்தங்களால் எம் பூமித்தாய் அதிர்ந் தாள். மக்கள் பசி தாகம் மறந்தனர். விதவைகளாயினர், பிள்ளை களின் இழப்புத் துயர் கண்ணீர் காவியமானது. பெற்றோரை இழந்த பிள்ளைகள். பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள். ஒவ்வொரு நாளும் மரணச் சடங்குகளின் ஓலங்கள். இவையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் அனுபவங்களாயின. எம் மக்களின் துன்பத்தில் நாமும் இரண்டற கலந்தோம். வயோதிபர், நோயாளர்களை சந்தித்து, அவர்களின் சோகக் கதைகளுக்கு செவிமடுத்து எம்மாலான உதவிகளை வழங்கினோம். ஆறுதலை, அமைதியை அனுபவிக்க உதவினோம். இவ்வளவு துன்பங்கள் மத்தியிலும் இறைவனது அன்புப் பராமரிப்பும், உடனிருப்பும் எம்மோடு பயணிப்பதை உணர்ந்து நன்றி கூறினோம். இவ்விதமாக எனது வாழ்வில் துன்புறும் எம் சமூகத்தில் பணியாற்ற கிடைத்த சந்தர்ப்பத்திற் காகவும் இறை பராமரிப்பிற்காகவும் நன்றி கூறி இறைவனைப் புகழ்கின்றேன்.

இறைவனுக்கே மகிமை

**அருட்சகோதரி பிரான்சிஸ்கா குருஸ்**

***This word "God alone" touches you, stimulates you: have it, always if possible present in your thought, make it the rule of your conduct.***

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘உன்னை அன்று அழைத்ததும் நாமே
## உனக்குத் துணையாய் இருப்பதும் நாமே’

**மன்னாரில்**

முதல் நாள் தான் ஆசிரியர் பயிற்சி மூன்று வாரங்கள் மகரகம பயிற்சி நிலையத்தில் முடித்து களைப்புடன் வந்து நேரடியாக தியான இல்லம் சென்று சகோதரி ஸ்ரெலா அந்தோனிப்பிள்ளை யும் நானும் முதல் வாக்குத்தத்தத்திற்கான ஆயத்த தியானத்தை அருட்தந்தை விஜயரட்ணத்துடன் இணைந்து ஆரம்பித்து 24.01.1986ல் எளிய முறையில் ஆர்வமிகுதியுடன் இறைவன் பாதத்தில் இளவாலை சிற்றாலயத்தில் முதல் அர்ப்பணத்தை மகிழ்வுடன் கொடுத்தேன். நிறைவுடன் மறுநாளே எனது துறவற வாழ்விற்காகவும், கல்விப்பணிக்காகவும் மன்னார் மடம் சென்றடை ந்தேன். ஆசிரியர்பணியோடு வைத்தியசாலைப்பணியும் மேற்கொண்டேன்.

1990ம் ஆண்டுடன் எனது வாழ்வு இன்னும் ஒரு இறையழைப் பைப் பெற்றது. அதுதான் சிலுவை வழி மீட்பு என்பது. 1990ல் விடுகை அனுமதி பெறாமலே எனது உருவாக்கற் கல்வியைப்பெற அக்குவைனஸ் கல்லூரிக்குச் சென்றேன். அனுமதியற்ற விடுகை என்பதால் மீள மன்னார் வந்து, எனது பணிவாழ்வைத் தொடர்ந் தேன். கல்விச் சுற்றுலாவிற்கு பொறுப்பாக அருட்சகோதரி வீஜினி (அதிபர்) பிள்ளைகளுடன் என்னை அனுப்பினார். திரும்பி வரும் வேளை, வவுனியாவில் இனப்பிரச்சினை ஆரம்பமாகிவிட்டது.

பிள்ளைகளை ஒப்படைத்து விட்டு மறுநாள் காலை அருட் சகோதரி கிறிஸ்ரபெலிடம் (மாகாணத்தலைவி) கொழும்பு செல்ல அனுமதி பெறுவதற்காக யாழ்ப்பாணம் வந்து, நண்பகலே திரும்பிப் போனேன். ஆனால் பயணம் சங்குப்பிட்டியிலேயே தாமதமாகி பயணிகள் யாவரும் முழங்காவிலில் இரவு 8.00 மணிக்கு நின்றோம். மாங்குள முகாம் போராளிகளினால் முற்றுகையிடப் பட்டுள்ளது என பின்னர் அறிந்து கொண்டோம். தள்ளாடி இராணுவமுகாம் இருந்தமையினால் எமது பயணத்தை தொடர முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய நாள் இரவு நான் ஆசிரியர் லூட்ஸ் வீட்டில் தங்கினேன். பயணக்களைப்பு உறங்கிவிட்டேன். ஆழ்ந்த உறக்கத்தில் லூட்ஸ் என்னை எழுந்திருக்கும் படி எழுப்பினார். அப்பொழுது தள்ளாடி முகாமில் இருந்து மாந்தை சந்தியை நோக்கித் தாக்குதல் ஆரம்பித்திருந்தது. அச்ச நடுக்கத்திலும் செபமாலையைக் கையில் பற்றியபடி செபம் வரவில்லை ஆண்டவரே என்ற மனன உச்சரிப்புடன் அவர்களுடன் இரவோடு இரவாக (இரவு 1.00 மணி) எள்ளுப்பிட்டி நோக்கி சென்றோம். விடிய விடிய ஒரு வீட்டு முற்றத்திலே இருந்தோம். விடிந்ததும் உலங்கு வானூர்தி வந்து மாந்தையில் தாக்குதல் நடத்திவிட்டு தள்ளாடி முகாமிற்குச் சென்றுவிட்டது. தொடர்ந்து மன்னாரில் பணிபுரிந்த யாழ்ப்பாண மக்கள் பள்ளிமுனை கடலூடாக மாந்தை சந்தி நோக்கி வந்து யாழ்ப்பாணம் சென்றனர். எனது மன்னார் பயணம் தடைப்பட்டதால், சிறு நாவற்குளத்தினூடாக வங்காலையை சென்றடைந்தேன். அந்த மாலை வேளை சிறப்பாக நற்கருணைப் பவனி அங்கு நடைபெற்றது.

அந்த உயிருள்ள ஆண்டவனின் துணையை நம்பியபடி அந்த இரவு வங்காலை மடத்தில் தங்கினேன். காலை விடிந்ததும் அங்கு வந்து நின்ற சகோதரி வீஜினியிடம் நான் மன்னார் போக வேண்டும் என்பதை கூற அவர் கடற்கரைக்கு கூட்டிச்சென்று நிலைமையை விளக்கினார். மக்கள் படகுகள் மூலம் இந்தியாவிற்கு சென்று கொண்டிருந்தனர். திரும்பிவந்த ஒரு படகு மூலம் என்னை தாழ்வுபாட்டுக்கு அனுப்பி வைத்தார். கடலரசனின் ஆட்சியை அன்றுதான் அனுபவித்தேன். துள்ளிப் பாயும் படகில் அலைகளின் வேகத்திற்கு இறைவனின் கரத்தைப் பற்றுவதாக படகோட்டியின் கால்களையே இறுகப்பற்றிப் பிடித்தேன். இல்லையேல் படகின் வேகத்தில் வெளியே கடலில் வீசப்பட்டிருப்பேன். தாழ்வுபாட்டில் ஈர உடைகளுடன் இறங்கி நடையாக மன்னார் சென்றடைந்தேன். அங்கு மக்களற்ற சூனியப்பிரதேசமாக காட்சி யளித்தது. மக்களெல்லாரும் ஓலைத்தொடுவாயிலும், எருக்கலம் பிட்டியிலும் தஞ்சமடைந்திருந்தனர். புனித செபஸ்தியார் ஆலய பங்குத்தந்தையர்களும், டிலாசால் சகோதரர்களும், சில மக்களும் ஊரில் இருந்தோம். எனவே நாம் மடத்தில் மக்களுக்கான நிவாரணப் பொருட்களை பொதி செய்து அருட்தந்தை தேவசகாயத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு வழங்கும் பணியில் ஈடுபட்டோம். இதற்காக ஓலைத் தொடுவாய்க்குச் சென்று வருவோம்.

அன்று ஒருநாள் விடுதிச்சாலை அருட்சகோதரிக்குத் துணைக் காகச் சென்று, இரவு உறக்கத்தில் இருந்த வேளை கட்டில் ஒரு தடவை மேலெழுந்து கீழே நின்றது. மன்னார் பாலம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது என்று பின்னர் அறிந்து கொண்டோம்.

**யாழ்ப்பாணத்தில்**

1991 ஏப்ரலில் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் கிடைக்கப் பெற்றேன். தரைவழிப் பாதைகளூடாக பயணிக்க முடியாத நிலை இருந்தது. யாழ்ப்பாணம் செல்வதற்காக பூநகரி சங்குப்பிட்டிக்கு வந்தோம். மாலை, 'பாதை' மூலம் கடலைக் கடப்பதற்காக ஒரு தென்னந்தோட்டத்தில் தென்னோலையை படுக்கையாக்கி ஒரு பார்சல் உணவை நான்கு பேர் பகிர்ந்துண்டு பயணத்திற்காக காத்து நின்றோம். வானூர்தி வட்டமிட்டு 'டுமீர்' என்ற சத்தத்துடன் 'பாதை'யை தாக்கியழித்து திரும்பியது.

'மனிதன் ஒரு வழியை மூட கடவுள் இன்னொரு வழியைத் திறந்தார்'. "அஞ்சாதே நான் உன்னோடு இருக்கின்றேன்". எல்லோருமாக மண்ணித்தலை நோக்கிப் புறப்பட்டோம். இரவோடு இரவாக ஒரு படகை வாடகைக்கு அமர்த்தி அதன் மூலம் கொழும்புத்துறை கடற்கரையை அடைந்து அங்கிருந்து யாழ் திருக்குடும்ப மாகாண இல்லத்தை வந்தடைந்தேன். யாழ்ப்பாண தமிழ் கன்னியர் மடத்து பாடசாலையில் கற்பித்தல் பணியை ஆரம்பித்தேன்.

இக்காலம் மிக அச்சுறுத்தலான காலமாய் இருந்தது. மண்டை தீவில் இருந்து அடிக்கடி ஷெல் தாக்குதல், வான் தாக்குதல், ஆட்சேர்ப்பு என பல்வேறு அச்சநிலைகள் நிலவின. மின்சாரம் இல்லை, பங்கர்லாம்பு பாவனையில் தான் இரவு நேர கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்றன. இது காலப்போக்கில் எனது பார்வையை பெரிதும் பாதித்தது. மண்டைதீவு எறிகணைத் தாக்குதலுக்குப் பயந்து மாலையில் பாய் தலையணையுடன் பாடசாலை 'செலருக்கு' (நிலவறை) அருட்சகோதரிகளும் பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுமாகச் செல்வோம். இந்நாட்களில் சூழவுள்ள மக்கள் தாக்குதலுக்கு பயந்து எமது பாடசாலையில் தஞ்சமடைந்திருந்தனர்.

இக்காலப்பகுதியில் நானும் அருட்தந்தை அமலமரித்தியாகியான றெஜினோல்ட் சவிரிப்பிள்ளையும் இணைந்து வைத்தியசாலைப் பணி செய்தோம். ஆனையிறவு அடிபாட்டுக் காலத்தில் இப்பணியை நாம் செய்து முடிக்க அந்த வல்லதேவன் உடனிருந்தார். இந்நாட்களில் தான் புனித யாகப்பர் ஆலய வான் தாக்குதல் நடைபெற்றது.

**பாசையூரில்**

1995ல் எனக்கு பாஷையூருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. அங்கு நான் புனித அந்தோனியார் பெண்கள் பாடசாலையில் ஆசிரியராக பொறுப்பேற்று சில நாட்களில் சகோதரி கொஸ்கா அதிபர் பதவியில் இருந்து ஓய்வுபெற திரு. ஜெயராஜகுலேந்திரன் பாடசாலை பொறுப்பை ஏற்றார். ஏற்ற மறுநாளே இராணுவம் நீர்வேலியால் முன்னேறி வர எனது தாயாரும் பக்கவாதத்தால் பாதிக்கப்பட நான் தாயாரை பார்ப்பதற்காக சாவகச்சேரி மருத்துவ மனையில் தங்கியிருந்தேன். அன்றிரவே, யாழ் மக்கள் இடம்பெயர ஆரம்பித்திருந்தனர். இதனால் எனது தாயாரை வீட்டிற்கு கூட்டிச் சென்று மூத்த சகோதரியின் பொறுப்பில் விட்டுவிட்டு, சாவகச்சேரி வரை வாகனத்திலும் அங்கிருந்து யாழ்ப்பாணம் வரை கால்நடையாகவும் சென்றேன். பாஷையூரில் அகப்பட்ட ஒரு சிறு பையில் பொருட்களுடன் மீண்டும் நடையாக சாவகச்சேரிக்கு வந்து, அங்கிருந்து வீட்டிற்கு (கிளாலி) சென்றேன். பத்து நாட்களில் எனது தாயார் கார்த்திகை மாதம் ஏழாம் திகதி அருட்தந்தை செபஸ்ரியன் குரூஸ் நோயில்பூசுதல் வழங்கிய பின்னர் இறைபதமடைந்தார்.

**மிருசுவிலில்**

இந்நாட்களில் இடம்பெயர்ந்து அனைத்து சகோதரிகளும் மிருசுவில் மடத்தில் தங்கியிருந்தனர். அம்மாவின் மரணத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நானும் அங்கேயே தங்கினேன். இந்நாட்களில் பாடசாலை ஆவணங்களை இரவோடு இரவாக சென்று எறிகணைகள் மத்தியில் எடுத்து வந்து முகமாலை செமினறியில் பாதுகாப்பாக வைத்தேன். அவ்வேளை மாகாணத்தலைவி அருட்சகோதரி சோபியாவின் பணிப்பின் பேரில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் வாகன அனுமதி பெற்று, மிருசுவில் மடத்தில் வைத்திருந்த அத்தியாவசியப் பொருட்களை எடுத்துக் கொண்டு அல்லிப்பளைக் கடலால் பத்து தொடுவைப் படகுகள் மூலம் மறுகரையை இரவு சென்றடைந்தோம். அருட்சகோதரிகள் அருள், றஜனி, கொர்னேலியா இவர்களுடன் ஏனைய வயோதிப சகோதரிகளுமாகக் கிளிநொச்சியை சென்றடைந்தோம்.

இரு தினங்கள் கடந்து வயோதிப சகோதரிகளை அழைத்துக் கொண்டு சென்று மடுவில் சேர்ந்தோம். பின்னர் பறப்பாங்கண்டல் சென்று ஒருநாள் தங்கிய பின் மாகாணத்தலைவியின் பணிப்பின் பேரில் நாணாட்டான் மடத்திற்கு சென்றேன். அங்கிருந்து அருட்சகோதரி சகாயராணியுடன் இருட்டும் மாலைப் பொழுதில் கால்நடையாக அருவி ஆற்றைக்கடந்து அரிப்புக்குச் சென்றேன். அருட்தந்தை ஸ்ரீபனின் துணையுடன் கோயில் நேசறியில் தங்கிப்பணிபுரிந்த பின் சில நாட்களில் மீண்டும் மிருசுவில் மடத்திற்கு வந்து உசன் பாடசாலையில் கற்பித்தேன்.

**மீண்டும் யாழ்ப்பாணத்தில்**

யாழ்ப்பாண இடம்பெயர்வு ஓரளவு முடிவுபெற மீண்டும் 1997ல் யாழ்ப்பாணம் வந்து உடைந்த பாடசாலை, ஆலயம், மடம் என்பவற்றுடன் மீளவும் வாழ்வை ஆரம்பித்தேன். பாஷையூரில் அருட்சகோதரி எமிலியானாவும் நானும், பாழடைந்த மடத்தின் ஒரு அறையை துப்பரவு செய்து, எமது பணியை ஆரம்பித்தோம். பூட்ட முடியாத அறையில் நாமிருவரும் கதவுக்கு மேசையை பூட்டாக வைத்து தூங்கப் போவோம். விளக்கு எதுவும் எரிய விடுவது கிடையாது. காரணம் ஆமி எமது கட்டிட வெளிப்புறப் பக்கமாக ரோந்து போவார்கள். இக்காலங்களில் பல கஸ்டங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களூடாக பயணித்த பொழுதும் இறையருளே எம்மைத் தாங்கி வழிநடத்தியது.

1999 தை மாதம் பண்டத்தரிப்பிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றேன். தியான இல்லத்தில் தங்கியபடி கல்விப்பணியுடன் ஆறு வருடங்களாக மூடியிருந்த எமது மடத்தை, உடைவுகள், பற்றைகள் மத்தியில் மீள ஆரம்பிக்கப் பணிக்கப்பட்டேன். இயற்கையில் இறைவனின் அற்புதங்களை காண முனைந்தேன். இங்கு பாம்புகளும் ஏராளமாக இருந்தன. ஆயினும் கடவுள் என்றுமே தன் போர்வைக்குள் எம்மை வைத்துக் காத்தார்.

**பருத்தித்துறையில்**

2000ஆம் ஆண்டில் பருத்தித்துறையில் வாழவும் பணியாற்றவும் அழைப்புக் கிடைத்தது. இங்குதான் நான் புனித தோமையார் பாடசாலையில் உதவி அதிபராக பொறுப்பேற்று 2001இல் முதற்தடவை அதிபராக பொறுப்பேற்றேன். "சின்னஞ்சிறுவருக்கு செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்பது அங்கு என்வாழ் வில் செயல்வடிவம் பெறலாயிற்று. வகுப்பறைப் பற்றாக்குறையைப் போக்க இறைவன் பல நல்ல உள்ளங்களைத் தந்தார். கல்வி யுடன் ஆன்மீகமும் ஒழுக்கமும் வளர என்னால் முடிந்தவரை உழைத்தேன். இதனால் அடைவு மட்டம் பலவற்றிலும் உயர்ந்தது. பாடசாலைக்கான மாடிக்கட்டிடங்கள் இரண்டை அமைத்து, மாகாணத்தலைவி அருட்சகோதரி அன்சில்லாவின் அனுமதியுடன் புதிதாக எமது மடத்தையும் கட்டி முடிப்பதற்கு இறைவனே வல்லமை தந்தார்.

**சுனாமியில்**

2004இல் மார்கழி மாதம் 26ஆம் திகதி திருக்குடும்ப திருநாள் அன்று திருப்பலி முடிந்த பின் யாரும் எதிர்பாராத வேளையில் சுனாமி அனர்த்தம் நிகழ்ந்தது. இதில் ஒரு இளைஞன், இரண்டு சிறுவர், மூன்று வயோதிபர் என ஆறு பேர் எமது பகுதியில் உயிரிழந்தனர். சுனாமி வெள்ளம் எமது காணியை நிரப்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வதென்று தெரியாது தடுமாறினோம். ஆலய வளவில் நின்ற சிறுவர்களை, அருட்சகோதரர் மதியும், அருட்தந்தை இருதயதாசும் மதிலால் தூக்கி எடுத்துத்தர அவர்களை பாடசாலை மாடிக்கட்டிடத்தில் சேர்த்து, பாதுகாக்கும் பணி இடம்பெற்றது. பூசை முடிந்து சென்ற அருட்சகோதரி அல்போன்ஸ் மேரியை காணாது தேடினோம். அடுத்த அலைகள் வரமுன் மக்களை பாதுகாக்கவும் முனைந்தோம். அதற்குள் மடத்து வாயிலில் படகுகள் வந்து சேர்ந்துவிட்டன.

கடற்கரையில் இருந்த 'நேசறி'க்கட்டிடத்தைக் காணவில்லை. இதற்குப்பின் விபத்துக்களை அறிந்து மந்திகை வைத்திய சாலைக்கு விரைந்தோம். அங்கு அருட்சசோதரி தயாளசீலியின் அப்பாவினதும், சகோதரியினதும் உயிரற்ற உடல்கள் வைக்கப் பட்டிருந்தன. எமது பகுதியில் இறந்த மூவரினது உடல்கள் அன்றிரவே மாதா கோவில் விறாந்தையில் வைக்கப்பட்டிருந்ததால், அக்குடும்பங்களுடன் அன்றிரவு அங்கிருந்தேன். அருட்சகோதரி களை யாழ்ப்பாணம் அனுப்பிவிட்டு, இறை உடனிருப்பை உணர்ந்து நன்றி கூறினேன்.

இதனைத்தொடர்ந்து 2005, 2006இல் சூட்டுக்கலாச்சாரம் ஆரம்பமாகியது. இராணுவப் புலனாய்வாளர்களும், மாற்றுக்கட்சி யினரும் தமது கழுகுப்பார்வைக்கு உட்பட்ட, இறைவனின் அரிய உயிர்களை குருவிகளை சுட்டுப்பொசுக்குவது போல சுட்டுக்கொன் றனர். இந்தப் பட்டியலில் முதலில் சுடப்பட்டவர் அருட்சகோதரி அக்குவைனசின் உறவினர், கண்ணனும் தந்தையும் (தந்தை ஒருவாறு பின்னர் உயிர் பிழைத்தார்) சடலங்களை சுட்ட இடத் திலிருந்து மீட்டு, வைத்திய சாலையில் சேர்த்து, விசாரணை முடித்து உடலை வீட்டுக்கு கொண்டு வந்து சேர்க்கும் பணியை யும் எனதாக்கிக் கொண்டேன். இறைவனே வல்லமை தந்தார். இது எனக்கு ஓர் மறக்கமுடியாத அனுபவத்தையும், மனப் பலத்தையும், இறை நம்பிக்கையையும் ஊட்டியதாக இருந்தது.

2006இல் A9 பாதை மூடப்பட்டது. ஊரடங்குச் சட்டத்தினால் அன்றாடம் உழைத்து உண்ணும் எம்பகுதி மக்களின் நிலை கேள்விக்குறியானது. தேவையான மக்களுக்கு பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக உணவுத் திட்டத்திற்காகத் தரப்பட்ட அரிசி, சீனி, பருப்பு, சோயா போன்றவற்றை ஊரடங்கு வேளையிலும், வீடு தேடிச் சென்று பகிர்ந்தளித்தோம்.

**வன்னியில்**

2006ஆம் ஆண்டு மார்கழி மாதம் வன்னிக்கு மாற்றம் கிடைத்தது.

2007இல் தை மாதம் பாஸ் எடுத்து கப்பல் மூலம் காங்கேசந் துறை தொடக்கம் திருகோணமலை வரையும் சென்று பின்னர் பேரூந்தில் வவுனியா, ஓமந்தை ஊடாக உருத்திரபுரத்தை சென்றடைந்தேன். A9 பாதை பூட்டு, தொலைபேசி தொடர்புகள் கிடையாது. புதிய இடம், சூழல், கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போல ஆரம்ப அனுபவம் இருந்தது. எறிகணைத் தாக்குதல்கள், பதுங்கு குழி பாதுகாப்பு, ஆட்சேர்ப்பு என புதிய அனுபவங்கள் கிடைத்தன. நீண்ட காலத்தின் பின்னர் திருக்குடும்ப கன்னியர்மட விடுதி, ஆரோபணம் விடுதி, காந்தி விடுதி போன்ற வற்றில் உள்ள வறிய மாணவர்கள் பாடசாலையை நிறைத்தனர். இவர்களுடன் பழகி பணிக்குள் உள்ளிறங்க ஆரம்பிக்கும் வேளை 2008இல் ஆவணி இறுதிப்பகுதியில் தம்பன்னை, பண்டிவிரிச்சான், மடு என ஆரம்பமான இடம்பெயர்வால் மக்கள் எம் பகுதிகளை நோக்கி நகரத்தொடங்கினர். இக்காலம் ஆட்சேர்ப்பின் உச்சகட்டம்! போராளிகளுடனான தர்க்கம், பிள்ளைகளை மறைத்துப் பாதுகாத் தல், பெற்றோர் மூலம் ஒப்படைத்தல் எனப் பல்வேறு சோதனை கள். பாடசாலையில் மட்டுமல்ல விடுதிச்சாலையிலும் நடந்தன. அந்நாட்களில் எமக்கு மிகமிக உறுதுணையாய் இருந்தவர் அருட்தந்தை சறத்ஜீவன் அடிகளார். இவ் இடம்பெயர்வு முழங்கா விலை நெருங்கியபோது அருட்சகோதரி யூட்டும் நானும் அங்கு சென்று, அங்கிருந்து அவர்கள் புறப்பட சற்று உதவி செய்து திரும்பி வந்தோம். முழங்காவில், வேரவில் மடத்துப்பொருட்கள் ஆனைவிழுந்தானுக்கு மாற்றப்பட்டது. அடிக்கடி சாமான்களை ஏற்றுதல் இடம்மாற்றுதல் நடைபெற்றது. ஆனைவிழுந்தானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்குதல் பகுதியாக மாற, அனைத்தையும் சகோதரி யூட்டின் ஆலோசனையுடன் உருத்திரபுரம் மடத்திற்கு மாற்றினோம்.

"நீ எங்கு சென்றாலும் அங்கு நான் உன்னோடிருப்பேன்" உயிருள்ள இறைவார்த்தை என்னை வழிநடத்தியதை உணர்ந் தேன். அலைமோதும் மக்கள் கூட்டம் வானுயர அடுக்கப்பட்ட பொருட்களுடன் மாட்டுவண்டில், உழவு இயந்திரம், கன்ரர் என தொடர் ஊர்வலங்கள். அதன் பின்னால் எஜமானைப் பிரியமுடி யாது தொடரும் நன்றியுள்ள நாய்களின் பல மைல் தூரப் பரி தாப பயணம். இதில் நாமும் ஓர் அங்கமானோம். பண்டிவிரிச்சான் மடத்தில் தொடங்கிய பயணம் மடு, முழங்காவில், வேரவில், ஆனைவிழுந்தான் என உருத்திரபுரத்தில் வந்து நின்றது. அனைத் துச் சகோதரிகளும் துன்பங்கள் மத்தியிலும் ஒன்றாயிருந்தமை மகிழ்ச்சியைத் தந்தது. பிடிக்கத்தேடும் பிள்ளைகளில் சிலர் எம்மடத்தில் தஞ்சம் புகுந்திருந்தார்கள். அனுதினமும் இறை பராமரிப்பில் வாழ்ந்தோம்.

2008ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் ஒரு நாள் நள்ளிரவு 12.30 மணியிருக்கும் அருட்சகோதரி அஞ்சலீனின் பதட்டமான குரல், "அன்ரனிற்றா எழும்பி கெதியாக உடுத்திக்கொண்டு வாரும், எம்மைக் கடந்து வீதியின் மறுபுறம் ஷெல் விழத்தொடங்கிவிட்டது. அருட்தந்தை சறாவுடன் கதைத்து உழவு இயந்திரம் ஒழுங்கு செய்துள்ளேன். உடனடியாக பிள்ளைகளை இராமநாதபுரத்திற்கு கொண்டு போக வேண்டும்" என்றார்.

இறைவனை வேண்டி வானத்தைப் பார்த்தபடி விடுதிப்பிள்ளை களை உழவு இயந்திரத்தில் ஏற்றி, நானும் முன்பக்கமாக அமர்ந்து, பன்னங்கண்டி வயல் வெளியால் இராமநாதபுரம் சென்றடைந்தோம். பின்னர் பிள்ளைகளை கோவில் பொது மண்ட பம் ஒன்றில் அன்புக்கன்னியர் சபை அருட்சகோதரி றீற்றாவின் பொறுப்பில் ஒப்படைத்து விட்டு திரும்பி வந்தோம். அதன் பின்னர் தாக்குதல் எம்பகுதியை மிக மோசமாக அண்மித்ததுடன், தர்மபுரம் பகுதி பாதுகாப்பு வலயமாகவும் அறிவிக்கப்பட, மடத்தின் பொருட்கள், பாடசாலைப் பொருட்கள் ஆவணங்கள் ஆகியவற்றை பொதி செய்து நாமும் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு செல்வது? எப்போ செல்வது? எப்படி செல்வது? என்ற வினாக்கள் உள்ளத்தை துளைத்தன. நற்கருணை நாதரிடம் செபித்த பின்பு, அருட்சகோதரிகளுக்கும், பிள்ளைகளுக்கும் தங்குமிடம் தேடிப் புறப்பட்டோம்.

### தர்மபுரத்தில்

புரட்டாதி மாதம் 2009ஆம் ஆண்டு இறைவன் எம்கரம் பற்றிக் கூட்டிச்சென்று தர்மபுரத்திலும், சுதந்திரபுரத்திலும் நிறுத்தினார். நல்ல பல உள்ளங்கள் மூலம் சுதந்திரபுரத்தில் பிள்ளைகளும், சகோதரிகளும் தங்குவதற்கு விளையாட்டு மைதானத்தின் பின்னாலுள்ள வெற்றுக்காணி கிடைத்தது. இறைவனை நம்பியபடி பாடசாலைப் பணியைத் தொடர்வதற்காக, தர்மபுரம் இல.1 ஆரம்ப பாடசாலை அதிபர் சிட்டுவை அணுகினேன். "இதற்கேன் தயக்கம் என்னிடம் பெரிய மாடமாளிகை இல்லை ஆயினும் பின்னாலுள்ள தற்காலிக கட்டிடத்தை உங்களுக்கு தருகின்றேன் எப்ப வேண்டுமானாலும் வாருங்கள்" என்றார். அன்றைய அனுபவத்தில் ஆண்டவனே எனக்கு உதவி செய்தார்.

மடத்துப் பொருட்களை லொறிகளில் ஏற்றி அனுப்பிய பின் ஒரு சில ஆசிரியர்களின் துணையுடன் பாடசாலை ஆவணங்களையும், தளபாடங்கள் சிலவற்றையும் ஏற்றி தர்மபுரம் இல.1 ஆரம்ப பாடசாலைக்கு 06.01.2009இல் கொண்டு சென்றோம். இருப்பிடம் பிரச்சினையானதால், சற்று தொலைவில் பிரமந்தனாறில் ஒரு தென்னங்காணியில் அருட்சகோதரி றோஸ்மேரி, அருட்சகோதரி நிர்மலா குடியேறிய காணிக்கு நானும் போய்ச் சேர்ந்தேன். ஆயினும் பாடசாலை தர்மபுரத்தில் என்பதால் வாகன, சன நெரிசல் ஊடாக தினமும் பாடசாலைக்குச் சென்று வர வேண்டியிருந்தது.

படிப்படியாக மாணவர் தொகை ஆசிரியர் தொகை அதிகரிக்க வகுப்பறை பற்றாக்குறை ஏற்பட்டது. அதனை புனித தெரேசா பாடசாலை அதிபர் ஜெயந்தியுடன் கூற,அவர் தனது பாடசாலையின் தற்காலிக நூறு அடி கொட்டிலினை கழற்றும் படி கூறினார். ஷெல்லடிகள் மத்தியில் இரு ஆண் ஆசிரியர்களுடன் அக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டில்களை கழற்றி, தர்மபுரத்தில் கொட்டில் அமைத்தோம். அங்கு நிறைந்த மாணவர்களுடன் மிகச் சிறப்பாக, மகிழ்வாக, இரு பாடசாலைகளும் நல்லுறவுடன் நடாத்தி, அங்கேயே மிகச் சிறப்பாக ஒளிவிழாவையும் செய்து முடித்தோம்.

அன்றொரு நாள் பிரமந்தனாற்றில் இருந்து தர்மபுரம் நோக்கி பாடசாலைக்கு காலைச் செபம் முடித்துப் புறப்பட்டேன். மழை பெய்தபடி இருந்தது. வீதியில் இறங்கினால் மக்கள் வெள்ளம்! 24 மணி நேரமும் வாகனம் நகர்ந்த படி, ஆகவே வீதி செம்மண் கூழாக இருந்தது. அப்படியே வெள்ளத்தில் சென்று பிரமந் தனாறு பாலத்தைப் பார்த்தேன். அங்கு படகு மூலம் மக்கள் இடம் மாற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு படியாக பாடசாலை வாயிலைப் பார்த்தேன். அதனுள் நுழைய முடியாதபடி பாடசாலை வளாகமும், முன்னுள்ள கால்வாயும் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. எமது கொட்டிலில் வைக்கப்பட்டடிருந்த ஆவணங்கள் நனைந்திருந்தன. துணிவை வரவழைத்த படி இடுப்பளவு வெள்ளத்தில் இறங்கி உள்ளே சென்று பார்த்தேன். மேசை மேல் வைத்தவை தவிர ஏனையவை யாவும் நீரினால் மூழ்கி இருந்தன.

மக்களின் மரணங்களைப் பார்த்த போதெல்லாம் இதயம் ஒரு தடவை துடிக்க மறந்தது. இதயத்தின் மூலையில் பல முட்கள் குற்றியது போன்ற வேதனை பல வேளைகளில் இறை வனை நொந்தது முண்டு! மீண்டும் அவரிடமே தஞ்சமடைந்தேன். பிரமந்தனாறில் எமது கொட்டில்கள் 'யானை உண்ட விளாங்காய்' போன்றிருந்தது. உருவத்தில் கொட்டிலாயிருக்கும், உள்ளே கால் வைத்தால் புதையும். கட்டிலில் படுத்தால் விடிய அதன் கால்கள் புதையுண்டு இருக்கும். இப்படியாக பல கஸ்டங்களை அனுபவித் தோம். குறிப்பிட்ட சில காலம் புன்னை நீராவிப் பாடசாலையில் தற்காலிகமாக இணைந்து பணியாற்றினோம்.

இவ்வாறிருக்கையில் பிரமந்தனாறு நோக்கிய தாக்குதல் கல் லாறுப் பக்கமிருந்து முன்னேறியது. இதற்கு ஈடுகொடுக்க முடியாத நாம் வெள்ளத்தால் நிரம்பியிருந்த தேராவில் கரையோரமுள்ள தேக்கம்காட்டு செம்மண் சேற்றுப்பாதையூடாக, றெட்பானா விசுவமடு தாண்டி சுதந்திரபுரத்தில் கொட்டிலமைத்து தங்கினோம். முன்பே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறிய அருட்சகோதரிகள் விடுதிப்பிள்ளைகளுடன் நாமும் 16.01.2009இல் ஒன்று சேர்ந்தோம். இங்கு அருட்சகோதரி பெனடிக்ரா தலைமையில் பண்டிவிரிச்சான் தொடக்கம் முல்லைத்தீவு வரை யான எல்லா மடத்து சகோதரிகளின் பிள்ளைகளும் ஒன்றாகினோம்.

## கொடூரக் காட்சிகளின் சாட்சிகள் நாம்

அன்றொருநாள் நாம் எமது கடமைகளில் ஈடுபட்டிருந்தோம். எங்கிருந்தோ வந்த எறிகணை அங்கு தரப்பாளிட்டு, கூப்பிடு தொலைவில் குடியிருந்த ஒரு குடும்பத்தை தூள் தூளாக்கியதை சற்று நேரம் கழித்து நானும் சகோதரி ரீனாவும் சென்று பார்த் தோம். பார்த்தபொழுது அது ஒரு கசாப்புக்கடை போன்று காட்சிய ளித்தது! மேலே தலையை நிமிர்த்திய போது தலையின் பாதிப் பகுதி தலைமுடியுடன் மரத்தின் கிளையில் தொங்கிக் கொண்டிருந் தது. பயமா, கவலையா, விரக்தியா என என் உணர்வுகளுக்கு அடையாளமிட என்னால் முடியவில்லை. கனத்த இதயத்துடன் இயலாத்தனத்துடன் சூடான மூச்சொன்றை வெளிவிட்டபடி இடத்தை விட்டு நகர்ந்து, மறு ஷெல் வரும்முன் எமது இருப்பிடம் சேர்ந்தோம்.

அந்நாட்களில் பாடசாலைகள் நடைபெறுவதில்லை. வங்கிகள் எங்கு என தேடிப்பிடிக்க வேண்டிய நிலை! ஆகவே அன்றைய கல்விப் பணிப்பாளர் திரு. குருகுலராஜா அவர்களும் நிருவாகப் பணிப்பாளர் திரு. மெற்றாஸ்மயிலும் சேர்ந்தே வங்கியிலிருந்து காசைப் பெற்று சம்பளம் எமக்குத் தருவார்கள். அன்று எமது சம்பளம் பெறும் நாளாகையால், சுதந்திரபுரத்திலிருந்து உடையார் கட்டுப் பாடசாலை நோக்கி நடையாக சென்றேன். அந்நாட்களில் உடை யார்கட்டுப் பாடசாலைதான் தற்காலிக வைத்தியசாலை யாக இருந்தது. அங்கு நோயாளர் காயமுற்றோர் நிறைந்து வழிந்தனர். நான் பாடசாலை வளவினுள் நுழையும்போது வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த ஒரு காவல்துறை இளைஞன் எனக்கு வணக்கம் கூற, பதில் கூறியபடி உள்நுழைந்தேன். நோயாளி களுடன் கதைத்தபடி பாடசாலை விறாந்தையில் கால்பதிக்க கணக்காளர் நிருவாகப் பணிப்பாளர் திரு. மெற்றாஸ்மயிலும் அங்கு வந்து சேர்ந்தார். நாம் இருவரும் கல்விப்பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. குருகுலராஜா வங்கியில் பணம்பெற புதுக்குடியிருப்புக்கு போய்விட்டதைப்பற்றி கதைத்துக் கொண்டிருந்தோம்.

'படார்' என்ற ஒரு பெரிய சத்தம். கலகலவென யன்னல் கண்ணாடிகள் நொருங்கியது. துகழ்கள் எம் மேல் பறக்க, பாட சாலை மேல் மாடிப்படியின் கீழ் ஓடி ஒழிந்து கொண்டு, கையில் பட்ட ஏதோ ஒன்றை பற்றிப் பிடித்தேன். அதுவும் கடகட என நடுங்கியது. மறக்க முடியாத அனுபவம். ஷெல்களின் சத்தம் ஓய்ந்ததும், வெளியே விறாந்தைக்கு வந்தேன். அங்கே ஒரு கன்ரறில் ஏழு அல்லது எட்டு பேரின் உடல்கள் கை வேறு, கால் வேறு உடல் வேறாக இறக்கப்படுகின்ற கண்ணறாவிக் காட்சியைக் கண்டேன். அடுத்து வாசலில் எனக்கு வணக்கம் கூறிய காவல்துறை இளைஞன் வயிறு பிளந்த நிலையில், குடல் வெளியே தெரிய பாயில் வைத்து தூக்கி வரப்பட்டான். அவர் "தாகம்" என ஈனஸ்வரமாக கெஞ்சினான். இயேசுவுக்குக் கடற்காளானாவது கிடைத்தது! அவனுக்கோ அதுவுமின்றி அக்குரல் ஓய்ந்து அடங்கியது. இதை பார்த்து என் இரத்தமே உறைந்து போனது.

எப்படி வெளியே வருவது? எப்படி எனது இருப்பிடத்திற்கு போவது? என திகைத்து நின்றேன். அலைகடலில் தத்தளித்த வனுக்கு துரும்பு கிடைத்தது போல அருட்தந்தை வசந்தன் கியூடெக் பக்கம் விழுந்த ஷெல்லால் தாக்கப்பட்ட ஒரு இளைஞ னுடன் மோட்டார் சைக்கிளில் வந்தார். அவரிடம் ஓடிச்சென்று, "பாதர் போகும் போது என்னையும் கொண்டு போய் இறக்கி விடுவீர்களா?" என்று கெஞ்சினேன்! அவர், "கியூடெக் வாயிலில் விடுவேன்" என்றார். அதுவே அவ்வேளையில் எனக்கு மிகப்பெரிய உதவியாகப்பட்டது. அங்கிருந்து ஓடுவதும் ஷெல் கூவிவர வீதி யோரத்து பங்கர்களில் விழுவதுமாக எப்படியோ சுதந்திரபுரத்தில் எமது கொட்டிலுக்கு முன்னுள்ள காணியிலிருந்த கல்விப்பணிப்பா ளரின் கொட்டிலை அடைந்தேன். அங்கே பல அதிபர்கள், கல்விப் பணிப்பாளரின் தாய், சகோதரன் சகிதம் நின்று கதைத்தார்கள். அக்கூட்டத்தில் நானும் இணைந்தேன்.

நாம் கதைத்தாலும் காது ஷெல் சத்தம் வரும் பக்கத்தையே நோக்கியிருந்தது. மெது மெதுவாக ஷெல் சத்தம் அண்மித்தபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. திடீரென ஒரு ஷெல் மிக அண்மையாக வந்து விழ, இருந்த ஒரு திறந்த பங்கரில் எத்தனை பேர் பாதுகாப்பை தேட முடியும்? ஆகவே நான் முன் காணியிலுள்ள எமது பங்கரை நோக்கி ஓட முயற்சித்தேன். மறு ஷெல் கூவியபடி வந்தது. பாஸ்ரர் டானியல் கத்தினார், "சிஸ்ரர் ஓடி வாங்கோ" என்று அதற்கிடையில் ஷெல் எம்மைத் தாண்டி போய் விழுந்தது. தொடர்ந்து ஓடினேன். முன் காணியிலுள்ள எரிபொருள் களஞ்சியத் திற்கு முன்னாலுள்ள நாவல் மரத்தின் பின்னால், பல தடவைகள் எமக்கு உதவிபுரிந்த எட்மன் அண்ணன் பாதுகாப்புத்தேடி ஒழிந்து நின்றார். அவரையும் கூட்டிக்கொண்டு எமது பங்கருக்கு ஓடினேன். அங்கு உட்புக முடியாத படி பங்கர் ஆட்களால் நிறைந்து வழிந்தது.

எப்படியோ அவர்களை உள்ளே தள்ளியபடி இருவரும் எமது தேக்கங்குத்தி பங்கருக்குள் நுழைந்தோம். அந்தவேளை எமது வேலியுடன் அமைந்திருந்த நிர்வாக சேவை நிலையத் திற்குள்ளும், பல்குழல் எறிகணைத் தாக்குதல் விழுந்தது. ஷெல் அடி அதிர்வில் பங்கர் தூக்கி தூக்கி வைக்கப்பட்டது போல இருந்தது. முற்றத்தில் ஏதோ சள சள என சத்தம் கேட்டது. தலையை வெளியே நீட்டினால் தலை இருக்குமோ என்று தெரி யாத நிலை. ஒரு படியாக சத்தம் ஓய்ந்ததும் வெளியே வந்தால் பெரும் பெரும் ஷெல் துண்டுகள் முற்றத்தில் காணப்பட்டன. எமது கொட்டிலின் உள்ளே வைக்கப்பட்டிருந்த பற்றிமா அன்னை மட்டும் பாதுகாப்புடன் இருந்தார். எம்மையும் பாதுகாத்தார். எமது வேலி அருகே ஒரு முனங்கல் சத்தம் கேட்டது. அங்கு சென்று பார்த்தபொழுது நிர்வாக சேவையில் பொறுப்பாக பணியாற்றும் ஒருவர் காயமுற்றபடி சாய்ந்திருந்தார். சிறிது நேரத்தில் போராளி கள் வந்து அவரை தூக்கிச் சென்றார்கள்.

**சுதந்திரபுரத்தில்**

மாலையானதும் அருட்தந்தை கொன்பியூசியசும், அருட்தந்தை அல்பிரட்டும் வந்து, எம்மை இங்கிருந்து புறப்பட்டு சுதந்திரபுரம் கொலணிக்கு வரும்படி சகோதர பாசத்துடன் வற்புறுத்தி கேட்டார் கள். ஆகவே ஆயத்தம் செய்யும் படியாக முதலில் நான் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றேன். இங்கு தான், யாவரும் எமது மடத்துப்பாடசாலைப் பொருட்கள் அனைத்தையும் கைவிட்டு விட்டு, அவசியமான பொருட்களுடன் சென்றோம். தங்குமிடம் ஒன்று இருந்தும், தங்க அனுமதிக்கப்படாத ஒரு வேதனையுடன் ஏங்கி நின்றோம். மீண்டும் அதில் பாதி எமக்கும், பாதி செபமாலை தாசர் சகோதரிகளுக்கும் வழங்கப்பட்டது. மறுநாள் 07.02.2009இல் அனைவரும் அங்கு வந்து சேர, எமது வழமையான பங்கர் அமைக்கும் பணி ஆரம்பமா கியது. உருத்திரபுரம் மடத்தினதும் வேறு மடங்களினதும் கதவு, யன்னல் சேர்த்து பங்கர் அமைத்தோம். நானும் அருட்தந்தை அல்பிரட்டும் பலமுறை அலைந்தும் தென்னங்குற்றி கிடைக்க வில்லை. இவ்வாறு கஸ்ரப்பட்டு அமைத்தும் எத்தனை நாட்கள் அதில் இருப்போம் என்பதே கேள்விக்குறியான நிலையாக இருந்தது.

அதேபோல ஒருசில நாட்களின் பின் ஒரு மாலைப்பொழுதில் ஒரு இரகசிய மாநாடு அருட்தந்தைகள், அருட்சகோதரிகள் இடையே கூட்டப்பட்டது. 'எப்படி இருட்டுமடுவால் பாதுகாப்பை உடைத்து வெளியேறுவது' என்பதே நோக்கமாக இருந்தது. நாமோ பெரும்படை. காரணம் ஒட்டுமொத்த குருக்கள், துறவிகள், மன்னார் மக்கள் பலர் எல்லா விடுதிப்பிள்ளைகள் (அன்பகம், உருத்திரபுரம், இராமநாதபுரம்) என எல்லோருமாக ஒரே நேரத்தில் வெளியேறிச் செல்வதே அத்திட்டம். ஆயினும் சற்று நேரத்தில் அத்திட்டம் அங்கு பாதையைக் காத்து நின்ற போராளிகளுக்கு கசிந்து விட்டது. அவர்கள் தயார் நிலையில் இருப்பதை நாம் அப்போது அறியவில்லை.

போடப்பட்ட திட்டப்படி ஒரு உழவு இயந்திரம் தயார்படுத்தப் பட்டது. அதில் எமக்கென கையில் எடுத்த ஒரு பையயை தவிர மிகுதி அனைத்து பொருட்களும், பாத்திரங்களும், உணவு வகைகளும் அதில் ஏற்றப்பட்டது. மனதில் பல கனவுகள் வெளி யுலகைக் காணப்போகின்றோம் என்ற ஆவலுடன் 07.02.2009இல் அன்று எமது விடுதலைப்பயணம் ஆரம்பமானது. மெல்லிய இருட்டில் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு தொடர்ந்தோம். ஆயினும் இருட்டில் மடுவிற்கு திரும்பும் பாதை வந்ததும், தடுத்து நிறுத்தப்பட்டதுடன் கடும் சொற்களால் கண்டிக்கப்பட்டோம். முன்னே சென்ற அருட்சகோதரிகளுக்கு கண்டனமும், மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடியும் நடாத்தப்பட்டன. நாம் தேவிபுரம் திரும்பும் சந்தியுடன் தடுத்து நிறுத்தப்பட்டோம். நாம் நின்ற இடம் நோக்கி பிளாஸ்டிக் ஷெல்லடி நடாத்தப்பட்டது. கத்தி ஓலமிட்டபடி சிதறி ஓடினோம். பின்பு உடையார்கட்டு தோட்டத்தில் அமைந்திருந்த கியூடெக்கில் யாவரும் தஞ்சமடைந்தோம். எல்லோர் மனதிலும் கவலை. விரக்தியுடன் பசியும் கூடவே இருந்தது. அவ்வேளை ஒரு சிலர் திரும்ப கொலனிக்குச் சென்று பொருட்கள் ஏற்றிய உழவு இயந்திரத்தையும் பார்த்தனர். அதுவும் அங்கில்லை. இறைவனே சரணம் என்றாகிவிட்டது. மக்கள் தென்னைகளின் கீழும், நாம் கிடைத்த சிறு கொட்டிலினுள் எல்லோரும் நிறை பசியுடன் இருந்தோம்.

இவ்வேளை விடிந்ததும், எங்கிருந்தோ துப்பாக்கிச்சன்னங்கள் வந்து மக்கள் சிலரை துளைக்கத் தொடங்கின. இங்கும் பாதுகாப்பில்லை என்றாகிவிட்டது. ஆயினும் கியூடெக்கில் இருந்த அரிசியைக் கொண்டு கஞ்சிகாய்ச்சி பசியாற்றும் முயற்சி ஆரம்பமாகியது. வெளியில் நின்று அடுப்பெரிக்க முடியாத நிலை. துப்பாக்கிச் சன்னங்களுக்கு பயந்தபடி அருட்தந்தை அன்ரன் அமலதாசும், நானும் இன்னும் சிலரும் ஓடி வருவதும், அடுப்பெரிப் பதுமாக இருந்தோம். ஒரு படியாக கஞ்சிகாய்ச்சி குடித்த பின், எமது அடுத்த திட்டம் இரணப்பாலை நோக்கி செல்வதாக இருந்தது.

**இரனைப்பாலையில்**

புதுக்குடியிருப்பு வீதியால் இரணைப்பாலைக்கு போவதும் பயம், தேவிபுரம் காட்டுக்குள்ளால் போவதும் பயம். காரணம் ஷெல்லடி மிகுந்த பகுதிகள் அவை. ஆயினும் சிலர் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட மோட்டார் சைக்கிள் உள்ளோர் அதில் செல்ல முடிவாகியது. நானும் அருட்தந்தை கொன்பியூசியசும் வேறு சில குருக்களும், தேவிபுரம் காட்டுப் பகுதியால் புறப்பட்டோம். தொடர்ந்து பயணித்து ஒரு வீதியை அடைந்தோம். எப்பக்கம் திரும்புவது என தெரியாமல், இடது புறம் திரும்பிப் பயணிக்க எம்மைக் கடந்த ஷெல் தான், நீங்கள் செல்லும் திசை தவறு மறு பக்கம் செல்லுங்கள் எனக் கூறியது எமக்குப் புரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதட்டத்துடன் மறுபுறம் பயணமாகி, தேவிபுரம் காட்டை நெருங்கிய தும், விரைவாக செல்லும்படி பணிக்கப்பட்டேன். காரணம் சற்றுமுன்னர் தான், ஷெல் விழுந்து மரங்கள் முறிந்திருந்தன.

ஒரே ஓட்டமாக ஓடி இரணைப்பாலை எல்லையைத்தொட்டு வளைவில் திரும்ப "அன்ரி" என்ற அழுகைக்குரல் கேட்டுத் திரும்பினேன். எனது மூத்த சகோதரியின் மகள் குடும்பமும், மகன் குடும்பமும் மயிரிழையில் உயிர்தப்பி நான்கு, ஐந்து நிமிடங்களாயிருந்தது. எதையும் நின்றுபேச நேரம் கிடையாது. ஆகவே பாதுகாப்பாக வேறு இடம் தேடும்படி கூறிவிட்டு, கடவுள் கையில் அவர்களை விட்டுவிட்டு எம் சகோதரிகளை தேடி, இரணைப்பாலையில் அருட்தந்தை ஜோயல் (யேசுசபைக் குருவானவர்) தங்கியிருந்த இடத்தை 09.02.2009இல் அடைந்தேன். அங்குதான், நாமனைவரும் நாம் கொடுத்த வாக்குத்தத்தத்தில் ஒன்றான ஏழ்மை என்பதை அனுபவ ரீதியாக அனுபவித்தோம். தங்க இடமில்லை; உண்ண உணவில்லை; உடுக்க போதிய மாற்றுடையில்லை, பாதுகாப்பான இடமில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டோம். நாம் சென்றடைந்த இடத்தில் சிலமணி நேரங்களே தங்க முடிந்தது.

அவ்வேளை தெய்வத்தின் வடிவில் அருட்தந்தை இராஜசிங்க மும், அருட்தந்தை பிறாயனும் நாம் தங்குவதற்கான இடத்தை ஒழுங்கு செய்து எமக்கு உதவி செய்திருந்தனர். ஒரு குழுவினர் அருட் சகோதரி பெனடிக்ரா தலமையில் சகோதரி சுபாசினியின் மாமா வீட்டருகே ஒரு தரப்பாளின் கீழ் தங்கவும், சகோதரி அஞ்சலீன், பிள்ளைகளுக்கு துணையாக நானும் அருட்சகோதரி ரீனாவும், திரு.குணம் என்பவரது வீட்டின் சிறு பகுதியில் தங்கவும் ஏற்பாடாயிற்று. ஆயினும் நாமிருந்த இடத்திலிருந்து பிள்ளைகளை பிடிபடாமல் பாதுகாப்பாக கொண்டு செல்வது எப்படி என்ற சூழ்நிலையில், ஒரு சகோதரிக்கு இரண்டு பிள்ளைகள் என்றபடி, துவாயால் தலையை மூடி, ஒழுங்கையால் அழைத்துச்சென்றோம். சமையலுக்கான பாத்திரங்கள் சிலவற்றையும், சாப்பிடுவதற்கான பாத்திரங்கள் சிலவற்றையும் அருட்சகோதரி யூடிற்றின் பெற்றோர் தந்துதவினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாத்தளனில்**

15.02.2009இல் மீண்டும் அங்கிருந்து மாத்தளனூடாக வலைஞர் மடத்திற்கு செல்ல வேண்டியதாயிற்று. அருட்சகோதரிகள் சென்று விட்டனர். நாம் மூவரும் பாதுகாப்பாக பிள்ளைகளை பிடிகொடுக் காது கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பிலிருந்தோம். ஆகவே இரவானதும் ஒரு கன்ரறில் ஏற்றி தரப்பாளால் மூடி இவர்களை வலைஞர்மடத்தில் கொண்டு சேர்த்தோம். அங்கு சகோதரி அஞ்சலீனும் பிள்ளைகளும் ஒரு பகுதியாகவும், நாமனைவரும் ஒரு பகுதியாகவும் தங்கினோம். மரணத்தின் வாயிலிலும் இறைவனுடைய பராமரிப்பு எம்மோடு இருந்தது. ஒரு வீட்டில் இரண்டு சிறிய அறைகள் எமக்கு தரப்பட்டது. உணவுக்காக பல வேளைகளில் அருட்தந்தை எரிக் றொஷான் அரிசியை தந்துதவினார். சிறைச்சாலை அறைகள் இப்படித்தான் நெருக்க மாயிருக் குமோ என்னவோ? அத்துணை நெருக்கமாக நாம் படுத்துறங் கினோம்.

யுத்தத்தின் இறுதிக்கட்டம் எம்மை நெருங்கியது, என்பதை நாம் அவ்வேளை நம்பவில்லை. “ஒபாமா வென்றால் எமக்கான மீட்பு வரும்” என்றனர் சிலர். “இந்தியா கப்பலை அனுப்பி மீட்கும்” என்றனர் மற்றும் சிலர். இறைவன் தான் எம்மை மீட்பார் என தெரிந்தாலும் இதிலும் ஒரு நப்பாசை ஏற்படத்தான் செய்தது. காத்திருப்புக்கள் நீண்டன. மாத்தளனில் ஒரு வெளியில் ஒரு வைத்தியசாலை, வலைஞர்மடம் பாடசாலையில் ஒரு சிறு வைத்தியசாலை. அழுகுரல்கள், மரணங்கள், ஆட்பிடிப்புக்கள், பரப்புரைகள், பெற்றோரின் திட்டுக்கள், தாக்குதல்கள் என யாவும் மலிந்தே காணப்பட்டன. எவர் முகத்திலும் மகிழ்ச்சியின் ரேகையே தென்படவில்லை. ஒரு நாள் அதிகாலை சகோதரிகள் பெனடிக்ரா, லோறன்சியா, ரீனாவுடன் நானும் கிணற்றடியில் குளித்தோம். எமது வீட்டிற்கு சற்று முன்னாலுள்ள பாடசாலை வைத்தியசாலை முன், மருந்துகள் ஏற்றியபடி நின்ற பஸ்ஸை குறிபார்த்து ஏவிய கொத்துக்குண்டு வீழ்ந்து வெடித்துச் சிதறியது. எமது கிணற்றடியி லும் துண்டுகள் வந்து விழுந்தன. குளித்த குறையில் நாமனை வரும் கிணற்றுக் கட்டின் பின் ஒழிந்து தப்பித்தோம். அன்று எமக்கான இறைவனின் போர்வை அந்த கிணற்றுக்கட்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு நாள் நாம் கோவிலடி நோக்கி நடந்தோம். மக்கள் பதற்றமாகவே ஓடித்திரிந்தார்கள். விசாரித்த போது வீட்டுத்தலைவன் பணிக்காக அழைத்துச்செல்லப்பட்ட நிலையில், தாயும் பிள்ளைகளும் கோவிலடியில் இருந்து இருபத்தைந்து யார் தூரத்தில் தரப்பாள் கட்டி இருந்தனர். அங்கே வந்து விழுந்த ஷெல்லில் தாயும் சிறுகுழந்தையும் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட சிறு குழந்தை ஆலமரக் கொப்பிலிருந்து இறக்கியெடுக்கப்பட்டது. இவர்கள் உருத்திரபுரம் விடுதியில் உள்ள மாணவி (2010இல்) டயானாவின் அம்மாவும் தம்பியும் ஆவர். நாம் இங்கிருக்கும் போதுதான் அருட்சகோதரி லுமினா ஜோஜின் தந்தை காலமானார். ஆலய ஷெல் தாக்குதலில் அன்ரன் அண்ணாவின் ஒரே மகள் கார்மலின் கொல்லப்பட்டார்.

அன்றிரவு களைப்புடன் நித்திரைக்காக ஆயத்தமான போது அறையெல்லாம் சுற்றுவது போல தெரிய சிஸ்ரர் அமிர்தா, "என்னைப் பிடியும்" என்றதும் அவவும் என்னைப் பிடித்துப் படுக்க வைத்தார். அன்று இரவிரவாக சத்தியெடுத்தபடி இருந்தேன். விடிந்ததும் டொக்டர் விஜயனை அழைத்து வந்தபோது எனக்கு பிரஷர் மிகக் குறைந்து விட்டதாக கூறி 'சேலைன்' ஏற்றினார். ஆயினும் எனது உடல்நிலை பெலவீனமாகவே இருந்தது. பின்னர் சகோதரி பெனடிக்ரா ஒரு வகையாக பாஸ் எடுத்து அருட்சகோதரிகள் அமிர்தா, றோஸ்மேரி, திரேசா, ரீனாவுடன் என்னையும் மாத்தளன் கடலில் தரித்து நின்ற ICRC கப்பல் மூலம் 20.03.2009இல் புல்மோட்டைக்கு அனுப்பிவைத்தார்.

### ஓமந்தையில்

21.03.2009இல் புல்மோட்டைக்கரையை அடைந்தோம். அங்கு இறங்கியதும், எம்மிடமிருந்த பையும் பிடுங்கி பரிசோதிக்கப்பட்டு ஷிப் அறுக்கப்பட்டே கையில் கிடைத்தது. உடற் பரிசோதனை வேறு, ஒரு மறைப்பிடம், அதில் ஒரு துவாரம், அதற்குள் எமது உடைகள் களையும் படி உத்தரவிடப்பட்டது. ஆயினும் நான் மறுத்துவிட்டேன். ஒருபடியாக பதிந்து யாவரையும் பஸ்ஸில் ஏற்றி, வெலிஓயா பாடசாலையில் இரவு தங்கவைத்து, மறுநாள் காலை ஓமந்தைக்கு கொண்டுவந்து இறக்கினர். ஓமந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைச்சாவடியில் பிணத்தை கழுகுகள் சுற்றுவது போல சில மனிதக் கழுகுகள் எம்மைச் சுற்றி அச்சுறுத்தின. ஒருபடியாக சோதனை, விசாரணை என்ற வேதனை முடிய இரவாயிற்று. தூக்கம், களைப்பு, பசி எம்மை வாட்டின. வவுனியா கச்சேரியால் எமக்கு மென்பானமும் உணவும் வழங்கப்பட்டது.

**வவுனியாவில்**

இரவு சற்று நேரம் கடந்ததும் இராணுவப் பொறுப்பதிகாரி வந்து, அங்கேயே படுக்கும்படி கூறி சில பெண் இராணுவத்தினரை துணைக்கு அனுப்பினார். பயத்தால் தூக்கமே வரவில்லை. மறு நாள் பஸ்ஸில் ஏற்றி, அருணாச்சலம் முகாமிற்கு (22.03.2009) அனுப்பப்பட்டோம். மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களின் பரிந்துரையால், 23.03.2009 அன்று வவுனியா மடத்தை வந்தடைந்தோம். சொர்க்கத்தின் வாயிலை அடைந்தது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. இங்கு 2009இல் இறுதி வரை வவுனியா CCTM பாடசாலையில் பணியாற்ற இணைப்புக் கிடைத்தது, பெரும் வரப்பிரசாதமே. இங்கு எனக்குத் தரப்பட்ட அதிபர் இன்னொரு கடவுள். மிகவும் அமைதியான பணித்தளம். இங்கு குறிப்பிட்ட நேரம் தவிர வைத்தியசாலைக்கு சென்று பணியாற்ற அனுமதி கிடைத்தது. அவ்வாறிருக்கையில் எமது பாடசாலை தற்காலிக மருத்துவ மனையாக்கப்பட்டு, இங்கே காயமுற்ற முக்கியமான பல போராளி களும், சில சாதாரண காயமுற்றவர்களும் கொண்டுவரப்பட்டதுடன் யாரும் இவர்களை பார்வையிட அனுமதிக்கப்படவில்லை.

**இடரிலும் இறைவனின் கரம்**

இறைவனின் முன்னேற்பாடு இப்போது தான் எனக்குப் புரிந்தது. நான் அங்கு பணிபுரிபவர் என்பதைப் பயன்படுத்தி, அங்கு அனுமதிக்கப்பட்டவர்களை சந்தித்து, அவர்கள் தேவையை நிறைவு செய்ய முயற்சித்தேன். ஆயினும் பல தடவைகள் பொலிஸ், புலனாய்வாளர்கள் எனது நடமாட்டத்தை பின் தொடர்ந்து அவதானித்து வந்தனர். காலப்போக்கில் அவர்கள் என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியதாக நான் உணர்ந்தேன். ஆயினும் மேல் மாடியிலுள்ள காயமடைந்த போராளிகளுடன் பேச அனுமதிக்கப்படவில்லை. ஆனால் பொலிஸ் காவலுடன் சென்று எவ்வித பேச்சுத் தொடர்புமின்றி பொருட்கள் வழங்க அனுமதிக்கப்பட்டேன்.

இந்நாட்களில்தான் போரில் தமது இரு கண்களையும் இழந்த மூன்று போராளிகள் இங்கு கொண்டுவரப்பட்டனர். பல போராட்டங்களின் பின்னர், இவர்கள் மூவரையும் பராமரிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். இவர்களுக்கான உணவு, உடை, தேவையான பொருட்களை வாங்கிப் பராமரிப்பதற்கான உதவிகளனைத்தையும், ஆயர் இராயப்பு ஜோசப் வழங்கியதுடன், இவர்களை புனர்வாழ்வு பெறாது விடுவித்து வெளியில் எடுக்க இவரது உதவி எனக்கு பெரிதும் உதவியது. பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயவுக்கான கடிதம் முதல், நீதிபதிக்கான கடிதம் வரை அவரே தந்து உதவியதால், இறம்பைக்குளம் புனர்வாழ்வு தடைமுகாமிலிருந்து ஆறு மாதகால முயற்சியின் பின், நீதிமன்றம் மூலம்விடுவித்து நெடுங்குளம் வரோட்டில் இவர்கள் மூவரையும் அருட்தந்தை கிறிஸ்ரியிடம் (CMF) ஒப்படைத்தேன்.

## 2009இல் மீளவும் உருத்திரபுரத்தில்

ஒருசில தடவைகள் 2009ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் உருத்திரபுரத்திற்கு கச்சேரி உத்தியோகத்தரின் உதவியுடன் சென்று வந்தேன். 24.12.2009இல் அருட்சகோதரி றோஸ்மேரியுடன் சென்று மீளக்குடியமர்ந்தோம். அன்றைய அனுபவம் ஒரு மறக்கமுடியாத அனுபவம். ஏறக்குறைய பத்து குடும்பங்கள் தான் அங்கொன்றும் இங்கொன்றுமாக குடியிருந்தனர். மடத்தில் கதவு, யன்னல், பூட்டு, திறப்பு, மறைப்பு எதுவுமே இல்லை. ஒன்றரைவருட இடைவெளியில் யாவும் காடுபற்றி காணப்பட்டது. அருட்தந்தை எரிக் றொஷான் அடிகளார் ஒரு கதவை தந்தார். அதனால் அறை வாயிலை மூடி ஒரு அறையை சுத்தம் செய்து, அதில் தங்கியிருந்தோம். இறைவன் எமக்கு துணையாக இருந்தார். மடத்தின் கட்டிடத்தினுள் இரண்டு அங்குல உயரத்தில் மாட்டுச் சாணம் நிரம்பியிருந்தது. அன்று பாலன் பிறப்பல்லவா! அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு அனுபவம் எமக்கும் கிடைப்பது மகிழ்ச்சியே. கதவுகளற்ற கட்டிடத்தில் கடவுள் துணையுடன் தங்கினோம். இரவில் பாதையால் இராணுவத்தின் நடமாட்டம். பொழுது சாய்ந்தால் ஒரே பயம். கலிஸ்ரா என்ற மாணவியின் வயதான தாயார் தான் எமக்கு இரவில் துணையும், பகலில் உணவும் தந்து உதவினார்.

04.01.2010இல் பாடசாலையும் ஆரம்பமானது. முதல் கட்டமாக எரிக்கப்பட்ட எமது பாடசாலையானது அரசாங்கத்தினால் புனரமைத்துத் தரப்பட்டது. இந்நாட்களில் தான் செல்வி ஸ்ரெலா எமக்கு அறிமுகமாகி மடத்திற்கும், மாணவரின் இழந்த கல்விக்கும் பல உதவிகளைச் செய்தார். மாணவர் வரவும் படிப்படியாக அதிகரித்தது. அருட்தந்தை றெஜினோல்ட் (அமதி) நோர்வேயி லிருந்த ஒருவரை அறிமுகமாக்கி, அவர் மூலமாக மாணவர்கள் ஒன்றரை வருடமாக இழந்த கல்வியை ஈடுசெய்ய மேலதிக வகுப்புகளுக்கு உதவி புரிந்தார்.

## தொடரும் தொல்லைகளிலும்

பாடசாலை தொடங்கி பத்து மாதங்கள் சென்றிருக்கும், திடீரென ஒருநாள் பாடசாலை முடிவுறும் நேரம் பன்னிரண்டு, பதின்மூன்று இராணுவத்தினர் வாகனத்தில் வந்து குதித்து அவசர அவசரமாக அலுவலகம், வகுப்பறைகள், சுற்றுச்சூழல் எதையோ தேடினார்கள். பின் என்னைப்பார்த்து முறைத்து விட்டு ஏறிச்சென்று விட்டார்கள். என்ன பார்த்தார்கள்? எதை தேடினார்கள்? என்பது இன்றுவரை விடைதெரியாத வினாவாக இருக்கின்றது. இதுபற்றி கல்விப்பணிப்பாளருக்கு தெரியப்படுத்தியபின், எமது பகுதிக்கு பொறுப்பான கனகபுரம் முகாம் பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது தமக்கும் அது பற்றி தெரியாது. அவர்கள் அனுராதபுரம் பகுதியில் இருந்து வந்த விசேட இராணுவப்பிரிவினர் என்றார்.

மீண்டும் இரண்டு ஆண்டுகளின் பின் ஒரு நாள் காலைப் பிரார்த்தனை வேளை ஒரு கடிதம் எனது முகவரியிட்டு வந்தது. அதனை நான் உடைத்து பார்த்தேன். அது பூசா இராணுவ முகாமில் இருந்து ஒரு விசாரணைக்காக அனுப்பப்பட்ட கடிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் நான் எமது பகுதி புலனாய்வுக் கிளைக்கு விசாரணைக்கு வரும்படியாக குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையில் உள்ளூர மனம் பதட்டமடைந்திருந்தது. இதனை உடனடியாக மாகாணத் தலைவி அருட்சகோதரி கிறிஸ்ராவிற்கும், கல்விப்பணிப்பாளர் திரு.முருகவேலுக்கும் தெரியப்படுத்தினேன். பின்னர் என்னுடன் விசாரணைக்கு அழைக்கப்பட்ட அயற் பாடசாலை அதிபர் திரு.விக்னராஜாவுடன் புலனாய்வு அலுவலகத்தை கேட்டு சென்றடைந்தோம். முதலில் எனக்கான விசாரணை இது மாவீரர் தினம் பற்றியது. விசாரணையுடன் எதையோ சிங்களத்தில் ஒரு மணிநேரமாக எழுதினார்கள். இறுதியில் அதில் என்னை கைஒப்ப மிடுமாறு கூறினார்கள். நான் மறுத்துவிட்டேன். எனது மொழியிலோ ஆங்கிலத்திலோ எழுதாதவரை ஒப்பமிடமாட்டேன் எனக் கூறி விட்டேன். அதற்கு அவர்கள் அடுத்த விசாரணைக்கு நான் அழைக்கப்படும் போது அதுபற்றி பார்ப்பதாக கூறினார்கள். பின்னர் மற்ற அதிபரின் விசாரணையும் முடிந்ததும் இருவரும் வந்து விட்டோம். வந்ததும் அந்நாட்களில் எமது பகுதிக்கு பொறுப்பாக இருந்த இராணுவப் பொறுப்பதிகாரியிடம் இதுபற்றி முறையிட, அவர் அக்கடிதத்தின் பிரதியைப்பெற்று பூசா இராணுவமுகாம் பொறுப்பதிகாரியுடன் பேசினார். அதன்பின் மீண்டும் நான் விசார ணைக்கு அழைக்கப்படவில்லை.

இது போன்று மீண்டும் அடுத்த ஆண்டு நான்கு ஆண் அதிபர்களுடன் நான் ஒரு பெண் அதிபரும் அருட்தந்தை அன்ரன் ஸ்ரீபனின் "உயிர்ப்பதிவு" என்ற அவரது வன்னி வாழ்வின் இறுதி நாட்களின் அனுபவப்பகிர்வு நூல் பற்றிய விசாரணைக்காக அழைக்கப்பட்டேன். அந்த நூலில் ஆரம்பிக்கப்பட்டு பலதும் பத்துமாக விசாரிக்கப்பட்டது. அதில் ஒரு வினா "எதற்காக அருட்தந்தை பிரவீன் கைது செய்யப்பட்டார்?" என்பதாகும். நான் "தெரியாது" என்ற போது, "யார் கைது செய்தது என தெரியுமா?" எனக்கேட்டார். நான் "தெரியாது" என்றேன் கேள்வி கேட்டவர் ஒரு மிக இளவயது பையன். அப்போதுதான் கூறினார் "நான்தான் கைது செய்தேன்" நானும் ஒரு கத்தோலிக்கன், என்னால் உதவ முடியாது, எனது கடமையைத்தான் செய்தேன்" என்று. அவரது வீர வசனத்திற்கு ஒரு வாழ்த்துக்கூற முனைந்தேன்! ஆயினும் பயம் என்னைத் தடுத்துவிட்டது. இருப்பினும் கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரபுரத்தில் எனது வாழ்வும் பணியும் என் மனதில் என்றும் நிறைவைத் தந்த ஒன்றாகவேயிருந்தன. கல்விப்பணி, வீட்டுத்தரிசிப்பு, விதவைகள் செயற்றிட்டம் என என்னால் முடிந்தவரை செய்தேன். இறைவனின் துணையுடன். அவரது வழிநடத்தலும் துணையுமே நான் 2015.04.19ஆம் திகதி அங்கிருந்து புறப்படுகையில் தரம் ஐந்து, க.பொ.த சாதாரண தரம் ஆகியவற்றில் நூறுவீதம் சித்தியைப் பெறச்செய்தது.

அனைத்திற்கும் அனைத்துமாக இருந்த வல்ல இறைவனின் வழிநடத்தலால், எனது வாழ்விலே விலை மதிக்க முடியாத பெரும் விசுவாச அனுபவங்களையும், உறுதியான விசுவாசத்தையும் பெற வழிவகுத்தது. இதுவே நான் சேமித்த பெரும் செல்வமாகும். இந்த உயிரூட்டமான வாழ்க்கை அனுபவம் எனக்கு இறைவனால் கிடைத்த இலவசக் கொடையாகும். இதற்காக இறைவனுக்கு என் வாழ்நாள் பூராகவும் நன்றி கூறிநிற்கின்றேன்.

"அனைத்தும் இறைவனின் மகிமைக்கே"

**அருட்சகோதரி அன்ரனிற்ரா மார்க்**

***Let us walk in the way marked out for us; it matters little what kind of work we, do whether we are approved of or blamed by others; the one essential thing is to do the will of God.***

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாம் வாழ்வும் பணிகளும்

'சிரித்த முகங்களுக்கு தீப்பிழம்பு ஊற்றிய' இறுதிக்கட்டப்போர் பெயரளவில் முடிந்து, வருடங்கள் பல கடந்து விட்டன. தொண்ணூறு சதவீத மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டாலும், பரம்பரை, கொடிகோத்திரப் பெயரினாலும் வீடுகளற்ற நிலையில் வேற்றிடங்களில் தஞ்சம் புகுந்த மக்களும், பலர் கதிர்காமர், ஆனந்தகுமார சுவாமி நலன்புரி நிலையங்களில் வாடிக்கொண்டிருந்தார்கள். இந்த நிலையில், முகாம் வாழ்வில் ஏற்பட்ட அசௌகரியங்களைத் தாங்க முடியாத சிலதொகை மக்கள், முகாமை விட்டு வெளியேறி பெருந்தொகைப் பணம் கொடுத்து, சின்னஞ்சிறிய வாடகை வீடுகளில் வவுனியா நகரப் புறங்களில் வாழ்ந்தார்கள். இக் குடும்பங்களிலுள்ள மாணவர்களின் கல்வி வாழ்வும் சவால் நிறைந்தாகவே காணப்பட்டது. மாணவர் அவரவர் சொந்த மாவட்டங்களிலேதான் கட்டாயம் கல்வி கற்க வேண்டும், என்ற கட்டாய கட்டளையும் அமுலில் இருந்தது. சொந்த இடமும் அனுப்பப்படவில்லை: முகாம் வாழ்வில் நோய் நோக்காடுகளுடன், வீட்டு வாடகையின் உயர்ச்சி, ஈற்றில் வவுனியா காமினி சிங்களப் பாடசாலையின் முற்றத்தில் கொட்டில்கள் அமைத்து ஆரம்பிக்கப்பட்டது தான் வ/காமினி நலன்புரிப்பாடசாலை. (முல்லை வலயம்) இடம்பெயர்ந்த மாணவரும் ஆசிரியரும் "இருப்பதில் திருப்தி காண்பதே அரிய கொடையென" கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவ்வாறு உருவான நலன்புரிப்பாடசாலையிலேதான் கடந்த 2010, 2011 வருடங்களில் நானும் கற்பித்து வந்தேன். இந்த மாணவர்களின் நிலைகள் பலதரப்பட்டது. சிலர் பெற்றோரை இழந்தவர்கள், சிலர் தம் குடும்பம் எங்கே என்று தெரியாதவர்கள், மேலும் சிலர் அங்கவீனர்கள் அடிக்கடி வலிப்பு, காய்ச்சல் மயக்க நிலை காரணமாக துன்பப்படுபவர்கள்... காயப்பட்ட இடங்களில் வலி, குத்து, எரிவு காரணமாக வைத்தியசாலைக்கு அடிக்கடி செல்வார்கள், அத்துடன் பெற்றோர் தமது சொந்த காணிகளை பார்த்து வருவதற்கு வன்னிக்கும் சென்றுவர: பிள்ளைகள் உறவினர் நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்கள் வீடுகளில் தங்கியிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதால் ஏற்படும் சிக்கல்கள்,... இவ்வாறு தாமாகத் தேடிய., திணிக்கப்பட்ட, பிரச்சினைகள் என்று அடுக்கடுக்கான சிரமங்களின் பின்னணியில் இருந்துவந்த பிள்ளைகளின், ஆசிரியர்களின் அனுபவங்கள் வார்த்தையில் வடிக்க முடியாதவை. இப்படிப்பட்ட முகாம்கள் வெளிப்படுத்தும் செய்திகள் பல. வாழ்வின் - நிலையாமை பிடிப்பற்றதன்மை இவ்வாறான அனுபவ பட்டறிவால் அனைத்திலும் ஏனோ தானோ என்றிருக்கும் மாணவர் ஒருபுறம், பயமறியாமல் எதிலும் துணிகரமாக விடயங்களில் ஈடுபடுவோர் ஒருபுறம். - இனி என்ன எங்களுக்கு என்ற விரக்தி நிலை கொண்ட வர்கள் மறுபுறம். யார் எமக்குத் துணை?...., யார் எமக்காய் குரல் கொடுப்பார்?... என சோர்வுற்றோர் மறுபுறம், கலாசார நவீன உலகினுள், பயிற்சிப்படுத்தி, அனுபவித்துப்பார்க்கும் இளையோர் இன்னுமொருபுறம், எனது தொழில் எனது குடும்பம் மற்றவன் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என சுயநலத்துடன் வாழும் கூட்டம் இன்னோர் புறம். இப்படியே நகர்ந்தது இம்மக் களின் வாழ்வியல் நிகழ்வுகள்.

இவற்றினுள் உண்மையான மனிதம் மலர! ஆன்மீகமா!, அரசாங்கமா,! அரசியல் கட்சிகளா!. கட்டிக்காத்த கலாசாரப் பண்பாடுகளா! மனித நல் விழுமியங்களா!

அனைத்துமே தேவை என்பதை உணர்ந்து, உன்னிப்பாய் உழைத்தோம் இறைதுணையோடு.

**அருட்சகோதரி யசோதா**

***We must renounce everything in order to be attached only to God Alone.***

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரத்திய போரும், தேவனின் துணையிருப்பும்...

நாரந்தனைப் பங்கில் பணியாற்றிய காலம். 1990ம் ஆண்டு ஆனி மாதம் அனுபவித்த இடப்பெயர்வு. இறப்புக்கள், கொடூரக் கொலைகள் இன்றும் மறக்கமுடியாத வடுக்களாகும். ஆனால் நல்ல தேவனின் பராமரிப்பும் வழிநடத்துதலும் எவ்வித பாதிப்புமின்றி இன்றுவரை எம்மை உயிரோடு வாழவைத்துள்ளது. இறைவனுக்கு எப்படி நன்றி சொல்வோம்?

திடீரென ஒரு நாள் "ஊர்காவற்றுறையில் இராணுவம் இறங்கி கண்ணில் பட்டவர்களையெல்லாம் சுட்டுவீழ்த்திக்கொண்டு முன்னேறி வருகிறது, எல்லோரும் வெளியேற வேண்டும்" என்ற செய்தி கேட்டுத் திகைத்தோம். வயோதிபர், வியாதிக்காரர், நடக்கமுடியாதவர்களை முதலில் சாட்டிக்கு அனுப்பிவிட்டு முக்கிய சில பொருட்களைப் பொதிசெய்து கொண்டு மக்களோடு சேர்ந்து சாட்டிக் கோவிலைச் சென்றடைந்தோம். களைப்பும் பயமும் ஒன்று சேர மக்கள் எல்லோரும் கோவிலுள்ளும் மரங்களின் கீழும் படுத்துறங்கினர்.

திடீரென பாரிய சத்தத்துடன் விழுந்து வெடித்த குண்டுச் சத்தம் எல்லோரையும் கதிகலங்க வைத்தது. அந்தக் காரிருளில் யாருக்கு எங்கே என்ன நடந்தது என்று அறியமுடியாத நிலை. மக்கள் ஒருவரையொருவர் முண்டியடித்துக்கொண்டு கூக்குரலிட்டுக் குளறியழுதனர். நொடிப்பொழுதில் கோவிலினுள் இரத்த வெள்ளத்தில் உடல்கள் சிதற உறவினர்கள் ஓலமிட்டு அழுதனர். அவர்களுக்கு அண்மையில்தான் நாங்களும் படுத்திருந்தோம். கொடூரமான மரணங்களைப் பார்த்த எங்களுக்கு அங்கே தொடர்ந்திருக்க முடியாதநிலை. அந்த நள்ளிரவிலேயே மீண்டும் பாதயாத்திரை. நீண்ட பயணம், ஒடுங்கிய கடற்பாதை. ஒருவரையொருவர் நெருக்கியபடி இரவு முழுவதும் பயணம் செய்து புங்குடுதீவை அடைந்தோம். அவ்வளவு தூரத்தை ஒரு இரவில் எப்படி நடந்து முடித்தோம் என்று இப்போது எண்ணிக்கூடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கமுடியாதுள்ளது. ஏறக்குறைய நாற்பது நாட்கள் அகதி வாழ்க்கை தொடர்ந்தது. சொந்த இடங்களுக்கு திரும்பிச்செல்லப் போகும் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்த வேளை மீண்டும் ஒரு சோதனை.

'டோராப்'படகுகளில் கடற்படையினர் புங்குடுதீவு நோக்கி வந்துகொண்டிருந்தனர். அந்தவேளை தரைவழியால் யாழ்ப்பாணம் நோக்கி நடந்தோம். அராலித்துறையை அண்மித்ததும் கோட்டையிலிருந்த இராணுவத்தினரின் கண்களில் அகப்படாமல் செல்ல வேண்டும். எனவே இரவு வேளை இருட்டில் கடற்பயணம். குளிர் ஒருபுறம், நடந்த களைப்பு மறுபுறம், எதிரியின் பயம். உடல் மட்டுமல்ல உயிரும் நடுங்கியது. ஓய்வெடுக்கவேண்டு மென்று அவை கூறியபோது கூட எம்மால் செவி மடுக்க முடியாத நிலை. ஏனென்றால் இராணுவத்தின் அட்டூழியங்கள் எம்மை அச்சுறுத்தியது. உயிரைக் கையில் பிடித்தபடி கரை இறங்கி மாகாண இல்லம் அடைந்தோம். மீண்டும் மக்கள் தமது சொந்த இடம் செல்வதற்கு ஏறக்குறைய பதினாறு வருடங்கள் சென்றன.

இன்று அந்த நாட்களையும் நாங்கள் கடந்து வந்த பாதை களையும் எண்ணிப் பார்க்கும்போது, இவற்றை எல்லாம் எப்படிச் சுமந்தோம் என்றே எண்ணத்தோன்றுகின்றது. "அன்பான ஆண்டவர் தம் கரங்களில் எம்மைச் சுமந்து வந்தார்" என்பதே எமது அனுபவமாகும்.

"நன்றி இறைவா நன்றி"

**அருட்சகோதரி கேமன் யோசவ்**

***May his will always be your rule….***

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதித்திருச்சபையாய் வாழ்ந்த நினைவுகள்

இலங்கையின் ஜனாதிபதியாக ஜே.ஆர்.ஜயவர்த்தனா இருந்த காலப்பகுதியில் 1987ல் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட சில மாதங்களின் பின் இந்திய இராணுவம் இலங்கையில் குவிக்கப்பட்டது. இலங்கை யின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்திய இராணுவத்தின் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருந்தன. மக்களில் பலர் காயப்பட்டனர்; சிலர் உயிரிழந்தனர்: வேறுசிலர் உடைமைகளை இழந்தனர்; இன்னும் பலர் இடம் பெயர்ந்தனர். தேவாலயத்தை நோக்கி ஓடிவந்து வெற்றிநாயகியின் பாதத்தடியில் நற்கருணைநாதரிடம் தஞ்சம் புகுந்தனர். ஏல்லோரும் கூக்குரலிட்டு அழுதுகொண்டே இருந்தனர்.

இராணுவத்தினர் மதில்மேல் ஏறி எங்கள்மடத்திற்குள் புகுந்தனர். எல்லாப் பொருட்களையும் சல்லடைபோட்டுச் சோதனையிட்டனர். பலர் கோவிலில் பெரும் சத்தமாக அழுது செபித்தனர். யேசுவே, வெற்றி நாயகியே எம்மைக் காப்பாற்றுங்கள் என்று ஓலமிட்டனர். இராணுவம் அருட்தந்தை நோபேட் அடிகளாரின் அறையில் புகுந்து எல்லோரையும் சோதனையிட்டனர். மேல் வீட்டில் இரு அருட் சகோதரர்கள் இருந்தனர். 'புலி' என்று கூறி அவர்களை அடித்துத் துன்புறுத்தினர். கீழே இறங்கி மக்களில் சிலரையும், இரு சகோதரர்களையும் கைதுசெய்து வாகனத்தில் ஏற்றித் தள்ளாடி முகாமுக்குக் கொண்டுசென்றனர். மக்களுடன் நாமும் இருந்தோம். இவர்களுடைய சோகக் கதைகளைக் கேட்டு, ஆறுதல் கூறிசெபித்தோம். "ஆண்டவர் நம் நடுவில் இருக்க தீங்கு எதுவும் வராது ஆண்டவர் எல்லாத் தீமையிலிருந்தும் நம்மைக் காப்பாற்றுவார்." (தி.பா.10:06) என்று நம்பிக்கையூட்டினோம்.

பெருந்தொகையான மக்கள் பேசாலையிலிருந்து குடும்பம் குடும்பமாக தங்கள் படகுகளில் இந்தியாவிற்குச் சென்றனர். இடம் பெயர்ந்த மக்களின் கண்ணீர் கதைகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. மனிதர்களின் ஏக்கங்கள், அங்கலாய்ப்புக்கள், தவிப்புகள் போன்ற உணர்வுகள் முழுவதையும் வெளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதற்கு வார்த்தைகளே இல்லை என்பது எழுதும் போதுதான் புரிகிறது. இக்காலகட்டத்தில் இருபது பேர் மட்டுமே எஞ்சி எங்களுடன் கோவில் வளாகத்தில் இருந்தனர். மக்களுடன் உண்டும் குடித்தும் பகிர்ந்தும் சிறு குழுமமாக இருந்தோம். நம்பிக்கையுடன் மகிழ்வாக இருந்தோம். இந் நிலையானது ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை அனுபவத்தை எமக்கு நினைவூட்யது. இக்காலப்பகுதியில் தான் எனது தந்தையார் இறந்த செய்தியும் கிடைத்தது. இன்னொரு சகோதரியுடன் பல கஸ்டங்கள் மத்தியில் பயணம் செய்து இரண்டு நாட்களின் பின்னர்தான் இல்லத்தை அடைந்தோம்.

மீண்டும் மக்கள் இந்தியாவிலிருந்து பேசாலைக்கு வந்து சேர்ந்தனர். இறைவனின் அன்பும் இரக்கமும் பராமரிப்பும் தம்முடன் இருந்ததை எண்ணி இறைவனுக்கும் வெற்றி மாதாவிற்கும் நன்றி கூறி, மகிழ்ச்சியாகத் தம் இல்லங்களில் வாழ்க்கையைத் தொடர்ந் தார்கள்.

**அருட்சகோதரி லூயிஸ்மேரி**

ஐக்கியம் என்னும் நமது பொதுப்பணியினாலும்
நமது உலகிற்கு ஒரு வித்தியாசத்தைக்
கொண்டுவர நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடப்பெயர்வில் துயர் சுமந்த நாட்கள்

1995இல் பண்டத்தரிப்பு, சில்லாலை, இளவாலை, மயிலிட்டியைச் சேர்ந்த ஏறக்குறைய பன்னிரெண்டு சகோதரிகள் நாட்டுப் பிரச்சினை காரணமாக மானிப்பாயில் தஞ்சம் புகுந்திருந்தோம். ஒரு நாள் இரவு பிற்பகல் 6.30 மணியளவில் ஒலிபெருக்கியின் அலறல். விடயம் கேட்டு இரு சகோதரிகள் வீதிக்கு வந்து அலறலின் செய்தி என்னவென்று அறியவிழைந்தோம். "விடிவதற்குள் எல்லோரும் நாவற்குழியைக் கடந்து செல்லவேண்டும்." என்ற செய்தி மனதை உலுப்பியது. இச் செய்தியை ஏனைய சகோதரங்களுக்கும் தெரியப்படுத்தினோம். எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டு ஒரு சிறிய பயணப்பையுடன் புறப்பட்டோம்.

வீதியில் ஆயிரக் கணக்கான மக்கள் தங்கள் குழந்தைகள், வயோதிபர்கள், நோயாளர்களைத் துவிச்சக்கரவண்டிகளிலும் மாட்டுவண்டிகளிலும் ஏற்றிக்கொண்டு, ஒரு சில ஆவணங்களுடன் கால்நடையாகக் களைப்புடனும் அங்கலாய்ப்புடனும் நடந்து கொண்டிருந்தனர். சிறுவர்கள் நடக்கமுடியாது ஓலமிட்டு அழுதனர். நோயாளர்கள் உடல், உள வேதனையுடன் தள்ளாடித் தள்ளாடிச் சென்றனர். நாமும் அவர்களுடன் இணைந்து கொண்டோம். தலையில் பொதியுடன் நாம் நகர்ந்து சென்ற காட்சி யாத்திராகமத்தை நினைவுபடுத்தியது. வியர்த்துக் களைத்து மாகாண இல்லம் அடைந்தோம்.

சகோதரிகள் எம்மை அன்புடன் வரவேற்று எம் களைப்பை ஆற்றினர். ஒரு சில நாட்கள் மாகாண இல்லத்தில் தங்கியிருந்து, இடம்பெயர்ந்து யாழ்ப்பாண மடத்தில் அகதிகளாக வந்திருந்த மக்களுக்கு உணவு பரிமாறும்படி பணிக்கப்பட்டோம் அந்தப் பணியைத் தொடரமுடியவில்லை; "எல்லோரும் யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்படவேண்டும்" என்ற கட்டளை மீண்டும் பிறப்பிக்கப் பட்டது. எனவே மிருசுவில் நோக்கிக் கால் நடையாகப் புறப்பட்டோம். அங்கு அருட்சகோதரிகள் சோபியாவும், யோலண்டும் அங்குள்ள குழுச் சகோதரிகளும் எங்களை அன்போடு கவனித்தனர். ஏறக்குறைய அறுபத்துநான்கு பேர் தங்கியிருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடன் மக்கள் சிலரும் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மாணவர்களும் எமது மடத்தில் தங்கியிருந்தனர்.

இரண்டொருமாதங்களின் பின் அடுத்த அறிவித்தல். ஆசிரியப் பணிசெய்யும் சகோதரிகள் அனைவரும் வன்னிக்குச் செல்ல வேண்டும். எனவே விரும்பியோ விரும்பாமலோ வன்னிப்பயணம். எமக்கு அத்தியாவசியமான பொருட்கள், மாகாணத்திலுள்ள முக்கிய ஆவணங்களுடன் விசேட படகுகளில் வன்னி நோக்கிப் புறப்பட்டோம். கிளாலி தென்னந்தோப்பில் மணிக்கணக்காகக் காத்திருந்து இரவு பத்துமணியளவில் கடற்பயணம். படகேறி ஐந்து நிமிடங்கள் கூட ஆகவில்லை. படகு நகர மறுத்தது. எமக்கு பின்னே புறப்பட்ட படகுகள் எமக்கு முன்னே மிக விரை வாகப் பறந்துசென்றன.

பலமானகாற்று வீசியபடியால் கடல் நீரில் நனைந்தோம். குளிர் எம்மை வாட்டியதால் உடல் நடுங்கத் தொடங்கியது. ஆடைகள் முழுவதும் நனைந்துவிட்டன. உப்புநீர் எமக்கு திரு முழுக்காக அமைந்தது. எம் படகைப் பாதுகாப்பதற்காக புலிக ளின் "கடற்புறா" (பாதுகாப்பளிக்கும் ரோந்துப்படகு) எம்மைச் சுற்றி வட்டமிட்டது. அனுபவம் இல்லாத எனக்கு அது கடற்படை படகு என நினைத்து எம்மைச் சுடப்போகிறார்கள் என்று பயந்தேன். பயந்து பயந்து ஒருவாறு கடற்கரையை அடைந்தோம். அங்கிருந்து உருத்திரபுர மடத்திற்கு சென்றடைந்து அங்கு பசியை தீர்த்துப் படுத்துறங்கினோம்.

ஒருசில நாட்களின் பின் மன்னார் பயணமானோம். அதுவும் ஒரு அனுபவம் தான். தரைப்பாதை கடற்பாதையாக மாறியது. அங்கிருந்து வங்காலை, பேசாலை முதலிய இடங்களுக்குச் சென்றோம். அங்கும் ஒருசில நாட்களைச் செலவிட்டபின் மடு அன்னையின் அடைக்கலத்தில் தஞ்சம் புகுந்தோம். அங்கு அன்னையின் பரிந்துரை செபத்தின் பின்பு ஓரிரு நாட்களைச் செலவிட்ட பின் மீண்டும் உருத்திரபுரம் வந்தடைந்து எனது கல்விப்பணியைத் தொடர்ந்தேன்.

மாலை நேரப் பாடசாலையாக எனது சில்லாலைப் பாடசாலை இயங்கியது. அங்கு இடம்பெயர்ந்த மாணவர்களையும் ஒன்று சேர்த்து பாடசாலை நடைபெற்றது. இரவுவேளைகளில் மக்களுடன் சேர்ந்து செபவழிபாட்டில் ஈடுபட்டேன். அங்கிருக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்சகோதரிகள் லிகோறி, தியடோசியாவும், நீண்டகாலமாக எம்முடன் யாழ்ப்பாண திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் வாழ்ந்து வந்த எமது அன்புக்குரிய றோசாறி அக்காவும் இறைபதமடைந்த செய்தியறிந்து துயரடைந்தோம். பெரிய வெள்ளியன்று ஒரு கத்தோலிக்க இளைஞன் தற்கொலைசெய்து கொண்டான். அங்கிருந்த நாட்களில் நடைபெறுகின்ற மரணச் சடங்குகளிலும் திருப்பலியிலும் பங்குகொண்டு ஆறுதல் கூறினேன். இடையில் இடம் பெயர்ந்த மக்களைச் சந்தித்து கலந்துரையாடி அவர்களுடைய துன்பங்களையும் பகிர்ந்து கொண்டேன். உணவு பரிமாறும் வேளைகளில் மணிக்கணக்காக காத்திருந்து உணவு இல்லாமல் ஏமாற்றமடைந்த நிலையை எண்ணி மௌனத்தில் என் மனம் அழுததுமுண்டு.

செம்பாட்டுத் தண்ணீரில் நீராடினோம், ஆடைகள் கழுவுவதற்கு நீண்ட தூரம் நடந்து சென்றோம். இத்தகைய நிகழ்வுகள் எனக்குப் புது அனுபவங்களாக அமைந்தன. சிலமாதங்களின் பின் எமது சொந்த இடங்களுக்கும் போகும்படி ஒலிபெருக்கியில் அறிவிக் கப்பட்டது. மிகவும் மகிழ்ச்சியுடன் சொந்த இடங்களுக்குச் சென்று குழுவாக இடங்களைத் துப்பரவுசெய்து சந்தோசமாக வாழ்ந்தோம்.

2000ஆம் ஆண்டு வவுனியாவில் இருக்கும் போது ஒரு செய்தி "உடனடியாகப் பாடசாலை மூடப்பட்டு எல்லோரும் வெளியேற வேண்டும்." மாகாணத் தலைவியின் உத்தரவுப்படி விருப்பமான இடங்களுக்குச் செல்லும்படி கூறப்பட்டது. நானும் சகோதரி ஜேற்றூட்டும் விடுதிச்சாலை மாணவர்கள் சிலரும் மடுவுக்குச் சென்றோம். வன்னி மாணவர்கள் என்றபடியால் ஒருசில நபர்களு டன் தொடர்புகொண்டு அவர்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டு நாம் இருவரும் மடு மடத்திலுள்ள அருட்சகோதரிகளுடன் இணைந்து கொண்டோம். மடுவில் இருப்பது சந்தோசம் என்றாலும் நாட்டு நிலையை எண்ணி மிகுந்த கவலையடைந்தோம்.

மக்கள் மரங்களின் கீழும் ஆலயத்திற்குச் சொந்தமான வீடுகளி லும் தங்கியிருந்தார்கள். திடீரென்று "இராணுவம் குளக்கட்டு வழியாக மடுவுக்கு வருகிறார்கள்." என்ற பரபரப்பான செய்தி. மக்கள் பலர் கோவிலை நோக்கி ஓடினார்கள். நாங்கள் மடத்திலேயே தங்கியிருந்தோம். இராணுவம் உள்நுழைந்து அங்கி ருக்கும் சில வீடுகளில் இருந்ததனால் இரவு வேளையில் ஏதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசம்பாவிதம் நடக்கலாம் என்று மனம் சொல்லியது. அவ்வாறே நடந்தது. இரு பகுதியினரும் மாறிமாறி எறிகணைகளை ஏவினர். இதனால் மடத்திலும் எறிகணைகள் வீழ்ந்து ஓடுகளைப்பதம் பார்த்தன. மரங்களை துளைத்துச் சென்ற குண்டுகள் எம்மீது தாக்கியிருந்தால் நாம் இறந்திருப்போம். அன்னையின் பாதுகாப்பு எம்மைக் காப்பாற்றியது.

ஆனால் திரு இருதய ஆண்டவர் கோவிலின் மேல் எறிகணை கள் விழுந்து மக்கள் நாற்பத்து ஐந்து பேரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. அருட்தந்தையர்கள் பிலிப்பும், பத்திநாதரும் எம்மைத் தேடிவந்தனர். எமது நிலையை விசாரித்தபின் கோவில் பக்கம் வந்து பாருங்கள் என்றனர். அங்கு சென்றபோது திரு இருதய ஆண்டவர் கோவிலினுள் இரத்த வெள்ளத்தில் பலர் மூழ்கிக் கிடந்தனர். ஒருகணம் அதிர்ச்சியடைந்தேன். காயப்பட்ட வர்களின் காயங்களைக் கட்டுவதற்கு நானும் இணைந்து கொண் டேன். அவர்கள் மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டு போகப்பட்டார்கள்.

அந்நாட்களில் இறந்த சடலங்களைக் கூட கொண்டுவருவ தாயின் பலபதிவுகளை மேற்கொள்ளப்படவேண்டிய துர்ப்பாக்கிய நிலை. மன்னார் கொண்டு செல்லப்பட்டவர்களில் இறந்தவர்க ளின் உடல்கள் பல பதிவுகளின் பின் பிரேதப் பெட்டியில் வைத்து மீண்டும் மடுக் கோவிலுக்குள் கொண்டுவரப்பட்டன. ஒரு மைதானத்தில் வைத்து பெட்டிகள் திறக்கப்பட்டன. உறவினர்கள் மாத்திரமல்ல அனைத்து மக்களும் ஓவென்று கதறி அழுதனர். மன்னார் ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை அவர்களின் தலைமையில் அடக்கச் சடங்கு நடைபெற்றது. இறந்த அனைவரும் ஒரே குழியில் அடக்கம் செய்யப்பட்டனர். அடக்கம் முடிந்து மக்கள் விடுதிக்குச் சென்று கொண்டிருக்கும் போது இறந்தவர்களின் பிரிவைத் தாங்காது பெருமழை கொட்டியது. இந்த நிகழ்வுகளை வாழ்க்கையில் என்றுமே மறக்க முடியாது.

இடப்பெயர்வு அனுபவங்கள் இறைவனின் அளவுகடந்த பாதுகாப்பு, பராமரிப்பு, இறைநம்பிக்கை, ஒருவர் ஒருவரின் சுமையைத் தாங்குதல், உதவுதல் போன்ற பண்புகளை எம்மில் வளர்க்கவும் விசுவாசத்தில் நாம் ஆழப்படுத்தப்படவும் உதவியது.

**அருட்சகோதரி மரிய கிளாரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் காவிப் பயணித்த வன்னிப் பயணம்

வன்னிப்பகுதியில் குறிப்பாக தமிழர் தாயகத்திற்கான மூன்றாம் கட்ட ஈழப்போர் நடந்துகொண்டு இருந்த காலப்பகுதிகளில் ஏறத் தாழ பத்து ஆண்டுகள் இப்பகுதியில் பணி செய்வதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்தக்காலம் என் துறவறப் பணிவாழ்வில் ஓர் முக்கியமானதும் பல இறையனுபவங்களை பெற்றுத்தந்த காலமும் ஆகும்.

1998ஆம் ஆண்டு எனது முதல் அர்ப்பணத்தின்பின் முதல் பணித்தளமாக விடத்தல் தீவிற்கு அனுப்பப்பட்டேன். அங்கு ஒரு வருடகாலம் பணியாற்றிய நிலையில் போர் காரணமாக அங்கிருந்த மக்கள் பலர் உயிரிழந்தனர். இதனால் அதிகமானோர் அங்கிருந்து தேவன்பிட்டி, இலுப்பைக்கடவை, பேசாலை போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். அதன் பின் நான் சிறிது காலம் பேசாலை முகாமில் பணிபுரிந்தேன். தொடர்ந்து பெரிய பண்டிவிரிச் சானுக்கு பணிக்காக அனுப்பப்பட்டேன். சிறிது காலத்தின் பின் அங்கும் பல போர்களும் மோதல்களும் ஏற்பட்டதன் விளைவாக, அங்கிருந்து மடுவிற்கு செல்வதும் தங்கியிருப்பதும் மீண்டும் வருவதுமாக நாட்கள் நகர்ந்தன.

1999ஆம் ஆண்டு கார்த்திகை 24ஆம் திகதி கிறிஸ்து அரசர் விழாவிற்கு முந்திய நாள் மடுதேவாலயத்தின் நற்கருணை நாதரின் ஆலயத்தில் மக்கள் பாதுகாப்புத் தேடி தஞ்சமடைந்திருந்த போது எறிகணை வீசப்பட்டு பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. அருட்சகோதரிகள் றெஜினா மற்றும் அஞ்சலினோடு மடு திருக் குடும்ப கன்னியர் மடத்தில் நானும் இருந்தவேளை அங்கு பல எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. இருந்தும் மடு அன்னையின் பரிந்துரையால் நாம் எல்லோரும் காப்பாற்றப்பட்டோம். எனது வாழ்வில் உயிர் தப்பிய அனுபவமாக இது இருந்தது.

தொடர்ச்சியான யுத்த அசம்பாவித நிகழ்வுகள் மத்தியில் இப்பகுதியில் ஓரிரு வருடங்கள் அமைதியாக வாழக் கூடியதாக இருந்தது. பின்னர் 2000ஆம் ஆண்டு ஆவணி 13ஆம் திகதி அன்று மடுத்திருத்தலத்திற்கு வந்த யாத்திரிகர்கள் வீடுதிரும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதவாறு பாதைகள் மூடப்பட்டு போருக்கான அறிகுறிகள் தென்பட்டன.

நான் சின்னப்பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாட சாலையில் பணிபுரிந்து கொண்டிருக்கும் போது, பெரிய பண்டி விரிச்சான், சின்னப்பண்டிவிரிச்சான் மற்றும் தம்பனை பாதைகள் மூடப்பட்டு பாஸ் நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக மக்கள் மடு, தச்சனாமருதமடு மற்றும் பெரியமடுவிற்கு இடம்பெயர்ந்தனர். இதனால் எமது பாடசாலையும் தற்காலிகமாக தச்சனா மருத மடுவிற்கு மாற்றப்பட்டது. ஆகவே நானும் இப்பாடசாலைக்கு பேருந்தில் தினமும் பயணம் செய்துவரவேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு 2008 தை மாதம் 29ம் திகதியன்று என்னுடன் அதிபர் ஆசிரியர்கள், மக்கள் என ஏறக்குறைய முப்பத்தெட்டுப்பேர் பாடசாலை முடிந்துவரும் நேரம் கிளைமோர் தாக்குதலில் அகப்பட்டோம். இத்தாக்குதலில் எமது பாடசாலையின் அதிபர், ஆசிரியர், மாணவர், வெளியாட்கள் என இருபது மனித உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. நானும் உட்பட பதினெட்டுப்பேர் காய மடைந்தோம். இச் சம்பவத்தில் மாணவன் ஒருவனும் ஒரு வயது குழந்தையும் எவ்வித காயமும் இன்றி காப்பாற்றப்பட்டார்கள். எனது பணி இன்னும் தேவை எனச் சித்தம் கொண்ட இறைவன் சிறு காயங்களுடன் என் உயிரைக் காப்பாற்றினார்.

போரினால் காயப்பட்ட மக்களின் வேதனைகளில் ஒரு சிறிய அளவை அனுபவிக்கவும், எனது அர்ப்பணவாழ்வை அர்த்தமுள்ள தாக வாழவும் இவ் அனுபவம் எனக்குப் பல பாடங்களைக் கற்றுத் தந்தது. இத் தாக்குதலில் காயப்பட்டு இறந்த சிறார்களை நினைக்கும் போதெல்லாம் எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும். இச் சிறுவர்கள் பலர் மடுமாதாவின் பீடத்தை வலம் வந்த பீடப்பணியாளர்கள். ஏன் இவர்களுக்கு இவ்வாறான ஒரு இழப்பு என நான் பலநாட்கள் மனம் நொந்து போனதும் உண்டு.

இவ்வாறு நான் காயப்பட்ட பின்னர் மூன்று மாத காலங்கள் வவுனியாவில் சிகிச்சை பெற்று வந்த வேளையில் எனது பாடசாலைப் பணியின் காரணமாக மாகாணத் தலைவி அவர்கள் மீண்டும் வன்னிக்குப் போகவிருப்பமா? எனக்கேட்டார். அப்போது வன்னியின் நிலைமை மிகமோசமாக இருந்தது. மக்கள் எல் லோரும் முழங்காவில் பக்கமாக இடம் பெயர்ந்து சென்ற வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடு அன்னையும் மக்களோடு இடம் பெயர்ந்து தேவன்பிட்டி என்ற இடத்திற்கு சென்றாள். எனக்கு உடனடியாக வன்னிப் பகுதிக்குச் செல்ல விருப்பமிருக்கவில்லை. எனினும் வன்னியில் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் தானே என்ற ஒரு உள்ளுணர்வு இன்னொருபுறமாக இருந்தது.

நான் மீண்டும் முழங்காவில் மடத்திற்கு சென்று அங்கு இயங்கிய எனது பாடசாலையில் பணியினை தொடர்ந்தேன். பின்பு உருத்திரபுரம், வட்டக்கச்சி, பிரமந்தனாறு, விசுவமடு, இரணைப்பாலை, வலைஞர் மடம் எனப் பல இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று மக்களோடு மக்களாக வாழ்ந்தேன். வலைஞர் மடத்தில் ஒரு வீட்டில் திருக்குடும்ப சகோதரிகள் பதின்மூன்று பேர் ஒன்றாக வாழ்ந்து வந்தோம். அவ் வேளையில் போரின் நிலைமைகள் உச்சக் கட்டத்தை அடைந்தது. காணுமிட மெல்லாம் எறிகணை வீச்சுக்களால் இறந்த உடலங்கள் சிதறிக் கிடந்தன. இறந்த உடல்களை அடக்கம் செய்ய முடியாத நிலையில் மக்கள் அங்கும் இங்கும் பரிதவித்துத் திரிந்தார்கள்.

உக்கிரமான போரினால் தினமும் ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்ட சூழலில் பல குடும்பங்கள் வன்னிப் பெருநிலப்பரப்பை விட்டு மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு படகுகள் மூலமாகவும் கால் நடையாகவும் சென்றார்கள். நானும் அருட்சகோதரிகள் கிறேஸ்மேரி, சுபாசினியும் 2009 பங்குனி மாதம் இருபத்தைந்தாம் திகதி அன்று காயப்பட் டவர்களை ஏற்றவந்த கப்பலில் புல்மோட்டைக்குச் சென்று அங்கி ருந்து பேருந்து வழியாக தாண்டிக்குளத்தை வந்தடைந்தோம். தாண்டிக்குளம் இராணுவ முகாமில் மூவரும் ஒரு இரவு தங்கியிருந்து அடுத்த நாள் மன்னார் ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகையின் உதவியுடன் வவுனியா மடத்திற்குச் சென்றோம்.

இத்தனை துன்பகரமான, உயிராபத்துக்கள் நிறைந்த வாழ்வுப் பயணத்தின் மத்தியில் என்னோடு வழி நடந்து, என்னைப் பாதுகாத்த ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றேன்.

**அருட்சகோதரி. நிர்மல றஞ்சினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை அன்பை பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்த காலப்பொழுதுகள்

பாதங்கள் பதிந்த தடங்களில் சில வரலாற்றை அறிந்து கொள்ள உதவுகின்றன. அவ்வகையில் அர்ப்பண வாழ்வின் அர்த்தங்களை அனுபவித்த காலங்களாக என் வாழ்வின் சில பக்கங்களைப் பகிர்ந்து கொள்கின்றேன்.

உருவாக்க காலங்களில் துறவறம் புரியாத புதிராயிருந்தது. அர்ப்பணவாழ்வின் சிறப்பு என்ன? என்று தெரிந்திருக்க அப்போது வாய்ப்பிருக்கவில்லை. சவால்களூடாக, பயணித்து கற்கும் களமாக பெற்ற அனுபவங்கள் ஒவ்வொன்றும் இறை அன்பை அனுபவிக்கவும், அனுபவித்ததை பகிரவும், இறைவன் தந்த காலங்களுக்காக வாய்ப்புக்களுக்காக நன்றி நவில்கின்றேன்.

ஆசிரியராக முதல் நியமனம் பெற்று 2005.01.03இல் வன்னிப் பெருநிலப்பரப்பில் கால்பதித்தேன். நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்பு வாழ்க்கை முறைக்கு அப்பால் “என் வாழ்விற்கு நானே பொறுப்பு” என்ற உள்ளார்ந்த உணர்வும் ‘அஞ்சாதே நான் உன்னோடு இருக்கின்றேன்’ என்ற உயிருள்ள இறைவார்த்தையும் என்னை முன்னோக்கி நகர்த்தியது. கல்வி கற்பிக்கும் பாடசாலை, மக்கள், சூழமைவு அனைத்துமே புதிய அனுபவத்திற்கு இட்டுச் சென்றது.

குறிப்பாக தங்கி இருப்பதற்கு இல்லம் எமக்கிருக்கவில்லை. செய்வதறியாத நிலையிலும் “அஞ்சாதே நான் உன்னோடு இருக்கிறேன்” என்ற ஆழமான இறை நம்பிக்கையானது, எதையும் எதிர்கொள்ளும் துணிவைத் தந்தது. இறுதியில் கிளிநொச்சி திரேசம்மா கோவிலுக்கு அருகாமையிலிருந்த கைவிடப்பட்ட இடம் எமது தங்கும் இல்லமாகியது. அடிப்படை வசதிகளற்ற நிலையிலும் பற்றாக்குறைகளை சகித்துக்கொள்ள பழகிக்கொண்ட காலப் பகுதி எனலாம். பல சவால்களை மேற்கொண்டு வாழ இறை அருளே எம்மை வழிநடத்தியதை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் குப்பைகளைக்கூட்டி எரித்தபொழுது,... நிலத்திலிருந்து நீல நிறத்துடன் இரைச்சல் சத்தத்துடனான நெருப்பு சுவாலித்து எரிந்தது. வெடிபொருட்கள் புதைக்கப்பட்டதாக பின்னரே அறிந்துகொண்டோம். இரவிரவாக தண்ணீர் ஊற்றி களைத்துவிட்டோம். புகை வந்தபடியே இருந்தது. மறுநாள் வெடிபொருட்கள் ஏற்றும் வாகனம் வந்து அனைத்தையும் மண்ணுடன் எடுத்துச் சென்றது. இப்படிப் பல அனுபவங்கள்.

மக்கள் மிக அன்புடனும் ஆதரவுடனும் எம்முடன் உறவாடினார்கள். அனைவரும் இறைவனின் குழந்தைகளே எல்லோரிலும் இறைசாயலைக் கண்டு இறை அன்பைப் பகிர்ந்து வாழக்கிடைத்த வாய்ப்புக்களுக்காக நன்றி கூறுகின்றேன். ஒரு முறை புனித வியாழனன்று இரவு திருவிழிப்பில் செபித்துக்கொண்டிருந்த பொழுது அவலக்குரல் கேட்டது. வீதியைக்கடந்து ஓடோடிச்சென்று பார்த்த வேளையில் தீ பற்றி எரிந்தபடி இளம் பெண் துடித்துக் கொண்டிருந்தார்.

உடனே முன்னால் கிடந்த சாக்கினால் நெருப்பை அணைத்துவிட்டு வீதிக்கு வந்த வேளையில் வெறிச்சோடிய வீதியில் போராளிகளின் வாகனம் வந்துகொண்டிருந்தது. இரு கைகளையும் நீட்டி மறித்த வேளையில் உடனே வாகனத்தை நிறுத்தி 'என்ன பிரச்சனை சிஸ்ரர்?' என வினவினர். நிலைமையினை அவர்கள் அறிந்தவுடன் உடனடியாக வைத்தியசாலை நோக்கி வாகனம் பறந்தது. மறுநாள் காலை வைத்தியசாலை சென்று பார்த்த வேளையில் மரண இறுதி வேதனையிலும் ஆன்ம ஆறுதல் பெற விரும்பினார். இது மறக்க முடியாத அனுபவமாயிற்று.

பாடசாலை கற்றல், கற்பித்தலை முடித்து, மாலையில் வறிய மாணவர்களை எமது இருப்பிடத்திற்கு அழைத்து பாடங்கள் சொல்லிக் கொடுப்போம். கற்பித்தலின் பின்னர் சிறுவர்கள் எம்முடன் இணைந்து சிறுசிறு வேலைகள் செய்வார்கள். அவர்களுக்குப் பிடித்த உணவுப் பண்டங்களையும் பகிர்ந்து கொள்வோம். இவர்களின் புன்சிரிப்பில் நாமும் மகிழ்ந்த தருணங்களை மறக்க முடியாது.

சில வேளைகளில் மதிய வேளைக்காக சமைத்த சோற்றுடன் கறிகளையும் சேர்த்து குழையலாக்கி பிள்ளைகளுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்போம். பின்னர் ஒருமுறை செட்டிகுளம் அகதிமுகாம் (வலயம் 4) C1 பாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருந்த வேளை மாணவன் ஒருவர் ஓடிவந்து 'சிஸ்ரர் என்னைத் தெரியுதா? வடிவாகப் பாருங்கோ' என்றான். "எனக்கு உண்மையில் அடையாளம் தெரியவில்லை தம்பி" என்றேன். 'சிஸ்ரர் நீங்கள் எங்களுக்கு சோறு குழைத்து தந்தீர்கள் கிளிநொச்சியில்" 'ஓம்..ஓம்...இப்ப ஞாபகம்'. என்றேன். உள்ளத்தில் இனம்புரியாத உணர்வு எனக்கு; அவன் முகத்தில் புன்னகை, கண்களில் நீர் முத்தாக நிலத்தில் வீழ்ந்தது.

### முதல் பணித்தளம்

கிளிநொச்சி மகா வித்தியாலயம் நான் கற்பிக்கும் பாடசாலை யாகும். முற்றத்தில் நிற்கும் பலா மரம், மழலைகளின் சிரிப்பொலி யால் காய்த்துக் குலுங்கியிருந்தது. பற்றாக்குறைகளிலும் கற்றலில் மிகுந்த ஆவலுடன் கற்கும் மாணவர்கள், மனநிறைவுடன் சேவை நோக்காக கொண்ட ஆசிரியர் குடும்பம், எடுத்துக்காட்டான தலைமைத்துவம் இவை அனைத்தும் புதிதாக வந்த என்னை உற்சாகமூட்டி வரவேற்றன. அருட்சகோதரிகளை இதுவரையில் கண்டிராத மாணவர் சிலர், "இவ தாதி ஊசி போடுவா" என்றும் இன்னும் சிலர், 'குருவானவர்' என்றும் "இல்லையடா சிஸ்ரர்" என தமக்கிடையே கதைப்பது என் செவிகளில் விழுந்தது. எனக்கு சிரிப்புத்தான் வந்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டேன். முதல் நாள் பாடசாலை முடிந்து வந்து கொண்டிருந்தபொழுது "உவை யள் தான் மதம் மாற்றுகிற ஆட்கள்" என்று வீதியால் சென்று கொண்டிருந்த இருவர் சத்தமாக சொல்லிக்கொண்டு சென்றார்கள். அவர்கள் அறிந்தது அவ்வளவுதான் என எண்ணிக் கொண்டேன். என்னுடன் வந்த சக ஆசிரியர் என்னை பரிதாபமாகப் பார்த்தார்.

ஒவ்வொரு நாளும் இறைபராமரிப்பில் கண்விழிப்போம். பாட சாலைக்குள் நுழைந்ததும் வகுப்பறைக்குச் சென்று மாணவர்க ளுடன் இணைந்து சுற்றுப்புறச் சூழலை ஒழுங்குபடுத்தி, காலை வழிபாட்டிற்கு மாணவர்களை வழிப்படுத்துவேன். ஒரு சில மாணவர்கள் மிகுந்த தேர்ச்சி மிக்கவர்கள். மிகுந்த குழப்படி யினால், தமது வகுப்பறையிலிருந்து எனது வகுப்பிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பப்பட்டு புத்தக மூட்டையுடன் வந்து நிற்பார்கள். அவர்களை அன்புடன் வரவேற்றுக்கொள்வேன். இவர்களின் மனக்காயங்கள் பல…"நோயுற்றவர்களுக்கே மருத்துவர் தேவை" எனும் இறை வார்த்தை என் பணிவாழ்வுக்கு வழிகாட்டியது. அர்ப்பணம் துறவிகளுக்கு மட்டும் உரியதல்ல என்பதை இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களிடமும் சாதாரண மக்களிடமும் கண்டு கொண்டேன். ஆசிரியர் திரு.செந்தில் கணித பாட ஆசிரியர், மாணவர்களை முன்னேற்றுவதில் அக்கறையுடன் செயற்படுபவர். போரின் உச்சக்கட்ட ஷெல் தாக்குதலில் பலியாகிவிட்டார். இவருடன் மேலும் பல உறவுகளை பாடசாலை சமூகம் இழந்து தவித்தது. இவை மறக்கமுடியாத அனுபவங்கள்.

## இருப்பிட மாற்றம்

கரடிப்போக்கு எனும் இடத்தில் ZOA நிறுவனத்தின் உதவியுடன் கட்டப்பட்ட கட்டிடத்தில் 2007இல் குடியேறினோம். பற்றைக்காடாக இருந்த இடத்தினை வாழ்விடமாக செம்மைப் படுத்த பலர் உதவி செய்திருந்தார்கள். இவ்விடம் வயல்வெளிகள், வாய்க்கால்கள், ஓடைகள், பற்றைகள், விதம்விதமான மரஞ் செடி கொடிகள் என இயற்கை அன்னையின் வரப்பிரசாதங்களால் சூழப்பட்டிருந்தது. எம்முடன் இரு காவல் நண்பர்களான நாய்க் குட்டிகளும் நான்சி என்ற பூனைக்குட்டியும் குழுவில் அங்கத்துவம் வகித்தன. இவைகளின் அங்கத்துவம் எவ்வளவு முக்கியமான தெனில் ஒரு முறை விஷம் நிறைந்த பாம்பு எமக்கருகாமையில் இரு துண்டங்களாக இறந்து கிடந்தது. இறைபராமரிப்பிற்காக நன்றி கூறுகின்றேன். கடைசியில் போர்க்கால இடப்பெயர்வின் பொழுது இவர்களை இழந்துவிட்டோம். மானிட உயிர்களே மாண்டு போகும் அவல நிலையில் இவைகள் எம்மாத்திரம்? எனினும் அவையும் மதிப்புக்குரியவையாகவே எனக்கு இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க்காலம்

பொருளாதாரத்தடை, போக்குவரத்துப் பாதைகள் மூடப்பட்ட நிலை, சோதனைச் சாவடிகள், 'பாஸ்' நடைமுறைகள், வயதுக் கட்டுப்பாடு அத்தியாவசிய உணவுப்பொருட்களின் தட்டுப்பாடுகள் மருந்துத் தட்டுப்பாடுகள் இவற்றின் மத்தியில் ஆச்சரியம் என்ன வென்றால் தாங்கமுடியாத சுமைகளை தாங்கிவந்த எம்மக்க ளின் சகிப்புத்தன்மையும் கற்றலில் வளர்ச்சியும் விழுமிய மேம்பாடும் போற்றத்தக்கது. குறிப்பாக ஓமந்தை சோதனைச் சாவடி, புளியங்குள சோதனைச்சாவடி என உடற்பரிசோதனைகள் என துறவிகளுக்கே இந்நிலை எனின் சாதாரண மக்கள் எம்மாத்திரம்?

போர் உக்கிரமடைந்த காலம் (2008) பங்கர்களும் தாக்குப் பிடிக்காது அதிர்ந்தன. பாடசாலைக்குச் சென்றால் பதட்டம் வானத்தை கிழித்துக்கொண்டு 'கிபிர்''மிக்' விமானங்கள் குண்டு மழை பொழியும். சத்தம் கேட்டவுடன் பிள்ளைகள் என்னைச் சுற்றிவிடுவார்கள். 'சிஸ்ரர் உங்களுக்கு கிட்ட நின்றால் நாம் காப்பாற்றப்படுவோம்' என நடுக்கத்துடன் கூறுவார்கள். "இயேசுவே இயேசுவே" என்ற வார்த்தையை உச்சரித்தபடி கண்களை இறுக மூடிக்கொள்வேன். பெற்றோர்கள் அங்கலாய்ப்புடன் ஓடிவந்து பிள்ளைகளை அழைத்துச் செல்வார்கள். நாளாந்தம் மரணச் செய்திகள் இதயத்துடிப்பை அதிகரிக்கும். "கிளைமோர்" தாக்கு தலில் பலியான அருட்தந்தை கருணாரட்ணம் (கிளி) அருட்தந்தை நஞ்சித் இவர்களின் மரணச் செய்தி தொடர்ந்து அதிர்ச்சியைத் தந்தன. இடப்பெயர்வில் என்னுடன் கற்பித்த சக ஆசிரியர்கள் மூன்று பேர் குண்டுச் சிதறல்களுக்குட்பட்டு மரணமடைந்து விட்டார்கள். கற்பித்த குழந்தை முகங்களில் பலரை இன்றுவரை தேடுகின்றேன்.

## இடப்பெயர்வு

அகோரமான ஷெல் வீச்சு இடைவிடாத வான் தாக்குதல்கள் இனியும் தாக்குப்பிடிக்க முடியாத நிலை ஏற்படவே மக்கள் இடம்பெயரத் தொடங்கினார்கள். மக்களோடு மக்களாக நாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்தோம். புனித திரேசாள் திருநாள் முடிந்த கையோடு 2008.09.03 ஆம் திகதி பிரமந்தனாறு நோக்கி பயணித்தோம். எமது சகோதரிகள் ஏற்கனவே கொட்டில் அமைத்து தங்கியிருந்த இடத்தில் நாமும் ஒன்றுசேர்ந்தோம். சில காலம் இருந்தோம். மீண்டும் இடம்பெயர்ந்தோம் 2009.01.16 அன்று சுதந்திரபுரம் சென்றோம். பூமித்தாய் சிவந்தாள். எங்குமே மரண ஓலம்... அவசரமான அழைப்பு... இரத்ததானம் தேவை. என்பதே அது. சகோதரிகள் நாம் முன்னின்று வழங்கியிருந்தோம். பரிதாபம் என்னவென்றால் மூடப்பட்ட பெட்டிகளில் பிள்ளைகளின் உயிரற்ற உடல்களையும் காணமுடியாது கதறும் பெற்றோர்களின் அவலம் வார்த்தைகளால் வடிக்க முடியாதவை. இடப்பெயர்வு அவலம் தொடர்ந்தது. வீதிகளில் ஊர்ந்து ஊர்ந்தே செல்லவேண்டியிருந் தது. யுத்த அகோரத்தாண்டவம் குடிமனைகளை சின்னா பின்னமாக்கிக் கொண்டிருந்தது. 2009.01.29ஆம் திகதி சுதந்திரபுரம் அந்தோனியார் கோவிலடியை சென்றடைந்தோம். உழவு இயந்திர வண்டியில் ஏற்றிவிட்ட எமது உடுபுடைவை பொதிகளுடன் வாக னம் மாயமாகிவிட்டது. மீண்டும் பயணம் தொடர்ந்தது. 2009.02.07ஆம் திகதி சுதந்திரபுரத்தில் இயங்கிவந்த ‘கியுடெக்’ இல் தங்கினோம். அன்று இரவு பயங்கரமாக இருந்தது. துவக்குச் சன்னங்கள் மிக அருகில் பறந்தன. தங்கியிருந்த இடத்தை விட்டு நகர்ந்து விடும்படி உள்ளுணர்வு தூண்டியது. அவ்விடத்தை விட்டு சற்று அப்பால் சென்று வாகனம் ஒன்றின் கீழே இரவைக் கழித்தோம். தெய்வாதீனமாக நாம் உயிர்பிழைத்தோம். அருட்சகோ தரிகளான றஞ்சினி அருட்சரோதரி கிறேஸ்மேரியுடன் நானும் உயிருடன் இருந்ததே ஆச்சரியம்! அருட்தந்தை வசந்தசீலன் அவ்விடத்தை விட்டுச் செல்வதற்கு உதவிபுரிந்தார்.

2009.02.09 அதிகாலையில் இரணைப்பாலை நோக்கிச்சென்று எம் சகோதரிகளுடன் இணைந்துகொண்டோம். தங்குவதற்கு இடமில்லை. இயேசு மரி சூசை வீடின்றி அகதிகளாக அலைந்த அனுபவம் எமக்கும் ஏற்பட்டது. “இராமாவில் கூக்குரல் கேட்கிறது இராக்கேல் தன் பிள்ளைகளுக்காக மாரடித்துப் புலம்புகிறாள்’ இதுவே அநேக தாய்மாரின் நிலையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வீட்டிற்கு ஒருவர் கட்டாயமாக போராட்டத்தில் இணைய வேண்டும்' என்ற நிலை மோசமாகி வலுக்கட்டாயம் ஆக்கப் பட்டிருந்தது. ஏழைத்தாய் ஒருவர் தனது மூன்று பிள்ளைகளையும் இழந்து ஓலமிட்டு மண்ணை தலையில்வீசி அழுது புலம்பிய காட்சி மனதைவிட்டு அகலவில்லை. இந்நிலையிலிருந்து தப்புவதற்காக பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு அவசர அவசர மாகமாக திருமணம் முடித்து வைத்தார்கள். இளம்பிள்ளைகள் சிலர், பெற்றொரின் மாங்கல்யத்தை அணிந்து தம்மை திருமணம் முடித்தவர்களாக் காட்டி தப்பிக்க வழி தேடினர்.

மறுபடியும் 2009.02.15 ஆம் திகதி இரணைப்பாலையில் வலைஞர் மடம் சென்றோம். பசி பட்டினி இறப்புக்களின் புலம்பல் என எம் மக்கள் பட்ட துன்பம் அளவிட முடியாதவை. எம்மிட முள்ளதைப் பகிர்ந்தோம். மக்கள் தறப்பாள் கொட்டிலுள் 'பங்கர்' அமைத்து உயிரைப் பாதுகாக்கப் போராடினார்கள். இரணைப் பாலையில் அருட்சகோதரி யூடியின் வீட்டில் நானும் சகோதரி றோஸ்மேரியும் நின்ற வேளை கொத்துக் குண்டுகள் சரமாரியாக வெடித்துச் சிதறின. எமக்கருகாமையில் வாய்க்காலில் வீழ்ந்த தொன்று வெடிக்காமல் மண்ணைச்சிதறியபடி புதைந்து போனது. ஆண்டவனுக்கு நாம் இன்னும் கொஞ்சக்காலம் தேவை போலும்!

அருட்சகோதரி பெனடிற்ரா இக்காலத்தில் மாகாண ஆலோச கராக இருந்தவர். இறுதிவரை எம்மோடு பயணித்து மக்களின் துன்பியலில் இரண்டறக்கலந்தவர். சகோதரியின் தியாகம் இறைபார்வையில் புனிதமானது.

### மக்களோடு கப்பலில்

வலைஞர் மடத்திலிருந்து 2009.02.20. திகதி செஞ்சிலுவைக் கப்பலில் ஏறினோம். கப்பல் காயப்பட்ட மக்களால் நிரம்பியிருந்தது. சிலரின் கை கால்களைக் காணவில்லை. வைத்தியர்கள் தாதியர் கள் ஓடியோடி மருந்து கட்டினார்கள். அவர்களுடன் நானும் இணைந்து கொண்டேன். தண்ணீர் தாகத்தால் தவித்தவர்களுக்கு குவளைகளில் குளுக்கோஸ் கரைத்து பருக்கினோம். கப்பல் எங்கும் இரத்த வாடை வீசியது. கண்களில் கண்ணீர் கரைபுரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடியது. 'சிஸ்ரர் என்ர குடும்பம், பிள்ளைகள், அம்மா, அப்பா, அண்ணா' என ஏங்கியவர்களாக கவலையுடன் பயணித்தனர். இறங்கியதும் களையெடுப்பு! இராணுவத்தினரின் பரிசோதனை கள்... கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு துளைத்தெடுத்தார்கள். வன்னியில் இருந்ததால் நாம் குற்றவாளியாக கணிக்கப்பட்டோம். புலனாய்வுப்பிரினரின் கொலைவெறிக் கண்கள் தரவு தேடின. அனைவர் கைகளிலும் மட்டை ஒன்றில் இலக்கமொன்றை எழுதி அடையாளமாக கட்டினார்கள். அவ்விதமே கழுத்திலும் ஒன்றைக் கட்டி தொங்கவிட்டார்கள். ஒரு துறவிக்கே இந்நிலை என்றால் சாதாரண குடிமகனுக்கு? ஆண்டவா! அப்பாவி மக்களை காப்பாற் றும். இதுவே என் இடைவிடாத ஜெபமாக இருந்தது.

**சோதனைச்சாவடியில் உறக்கம்**

2009.02.21 திகதி காலை நிரையாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மக்களோடு எம்மையும் ஏற்றினார்கள். நாள் முழுக்க பேரூந்தில் பயணித்தோம். உலகத்தையே சுற்றி வருவது போல நீண்ட தொடர் பயணம். புல்மோட்டை பதவியா ஊடாக ஓமந்தை காவலரணுக்கு கொண்டு வந்தார்கள். வேற்றுக்கிரக வாசிகளைப் பார்ப்பது போல எம்மை பல கண்கள் அவதானித்தன. துருவித் துருவி பல கேள்விக்கணைகள். மறுபக்கம் கால்நடையாக இராணு வக் காவலரண் நோக்கி மக்கள் வந்துகொண்டேயிருந்தார்கள். இளைஞர், யுவதிகள் பலர், இராணுவம் மற்றும் தமிழ் புலனாய்வி னரால் விசாரணை என்ற பெயரில் தரம் பிரிக்கப்பட்டார்கள். 'ஆண்டவா! காப்பாற்று எம் இனத்தை!" என சொல்வதைத் தவிர வேறு ஒன்றுமே செய்ய முடியாத நிலை இரவுப்பொழுதை காவலரணில் கழித்தோம். எமக்கென இடம்ஒதுக்கி தந்திருந் தார்கள். இராணுவப் பொறுப்பாளர் எம்மட்டில் ஏதோ இரக்கம் காட்டினார். இறைபராமரிப்பிற்காக நன்றி கூறினோம்.

**2009.02.22 செட்டிகுளம் மெனிக்பாம்**

வன்னி அகதிமக்களுக்கென்றே உருவாக்கப்பட்ட இடத்தில் மக்களுடன் மக்களாக தறப்பாளுக்குள் தஞ்சமடைந்தோம். மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது பாலகனையும் கணவனையும் தவற விட்ட இளம் தாயின் பரிதவிப்பு இன்றும் என் மனக்கண்முன் வருகிறது. "இறைவா நீரே பொறுப்பெடுத்திருப்பீர்" என நம்புகின்றேன். தண்ணீர் எடுப்பதற்கு இடமிடமாக அலைந்தோம், வரிசையில் நின்றோம், பலரை சந்தித் தோம், இயலுமான உதவிகளை செய்தோம், இறையன்பை பகிர அனுபவிக்க இவை ஒவ்வொன்றும் வாய்ப்பளித்தன. எம் மக்கள் எம் முகம் கண்டு ஓடோடி வந்தார்கள். 'சிஸ்ரர் நலமுடன் வந்து சேர்ந்தீர்களா'? என, எம்மை அன்போடு கேட்டார்கள். முகாம் தறப்பாள் கொட்டிலுள் இரவு வழிபாடு செய்தோம்.

## அகதி முகாமில் ஆசிரியப்பணி

### எம் மக்களின் புலம்பல்...

'உயிர்களை அன்பு செய்,' 'எறும்பைக்கூட கொல்லாதே' என உபதேசிக்கும் பௌத்த தர்மத்திடம் தவமிருக்கும் தாய்மார்களின் கண்ணீர்க் கதைகள், "தாகமாயிருக்கின்றேன்" என தவித்திருக்கும் உறவுகள்,"எதற்காக நீ அழுகின்றாய்.. எதை இழந்துவிட்டாய்." என்ற கீதை உபதேசத்தின் நிஜங்களை ஜீரணிக்க முடியாது. ஊசலாடும் எம் வருங்கால சந்ததியைத் தொலைத்தேன், கொத் துக்குண்டில் குலைகுலையாக பிஞ்சுக்குழந்தைகளைப் பறிகொடுத் தேன், எஞ்சிய குஞ்சுகளைக் குழறக்குழறப் பறிகொடுத்தேன். எம் உடைமைகளும் நிலங்களும் மட்டும் பறிபோகவில்லை, சிஸ்ரர் எம் உறவுகளும்தான்... ஓடி ஓடி வந்து சற்றுக் குந்தியிருப் போம் என்றால், மீண்டும் வானத்தில் வல்லூறு குண்டுமழை பொழிந்தது. வேறிடம் நோக்கி ஓட்டம் பிடிக்க தேடித்துரத்தும் செல்வீச்சு, சிஸ்ரர்... பல நாட்கள் பரதேசிகளாய் அலைந்து சிறைவாழ்வினுள் சிக்குண்டோமே, என் பிள்ளைகள் தரம் பிரிக்கப்பட்டு காணாமல் போய்விட்டார்கள் என்செய்வேன்! மூன்று மாதம் கூட ஆகவில்லை, மூச்சுவிட இடமில்லை, வைத்தியசாலை யில், சிஸ்ரர் எனக்கு முன்னும் பின்னும் விழுந்த செல்வீச்சுக் களால் உச்சிமுதல் உள்ளங்கால் வரை தழும்புகள், முன்னால் மடிந்த என் உறவுகளை நினைக்கையில் அழுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவரே நீர் எங்கு இருக்கிருக்கின்றீர்? இது ஓர் இளமுள்ளத் தின் பெருமூச்சு...

பூந்தோட்டம், கதிர்காமம், அருணாச்சலம் வலயம் 4, பம்பைமடு, காமினி இவை முகாம்களின் பெயர்ப் பட்டியல். இங்கு பணிபுரி வதற்கு வசதியாக நாம் செட்டிகுளத்தில் வீடு வாடகைக்கு எடுத்து தங்கியிருந்தோம். கல்வி கற்பிக்க முகாம்களுக்குச்சென்ற வேளை யில், பள்ளிப் பாலகர்களின் பரிதாபக் கோலங்கள் ஊட்டச்சத்து இன்றித் தள்ளாடித் திரிவதைக் கண்டோம். இடையிடையே அம்புலன்ஸ் கூவும் சத்தம். ஒவ்வொரு நாளும் பத்துக்கும் குறை யாத மரணம். அநேகம் பிஞ்சுப்பாலகர், புழுதிக்காற்றும் வெப்பத் தின் அகோரமும் ஆயுளின் அரைவாசியைக் குறைத்துவிடும். பள்ளி பயிலும் மாணவர்களில் அங்கவீனர்களும் இருந்தார்கள். இரண்டு இலட்சத்தி எண்பதாயிரம் மக்கள் வாழும் திறந்த வெளி முட்கம்பி சிறையினுள் பத்துப்பேருக்குள் ஒருவர் அங்க வீனர். (தொண்டு நிறுவனங்களின் புள்ளி விபர அறிக்கை 2009).

கட்டாயத்தின் பெயரில் போராட்டத்தில் இணைக்கப்பட்ட பெண் பிள்ளைகள் பம்பைமடுவிலும் ஆண் பிள்ளைகள் காமினி தடுப்பு முகாமிலும் இருந்தார்கள். அரசாங்கம் இவர்கள் உயர்தரப்பரீட்சை எழுதுவதற்கு அனுமதி அளித்திருந்தது. பரீட்சை ஆயத்த வகுப் பெடுக்க எனக்கு அழைப்பு வந்தது. காலத்தின் தேவைக்கு ஏற்ப இறைவனே வழிநடத்தினார். அக்காலத்தில் வவுனியா கல்விப் பணிப்பாளராக இருந்த திருமதி ஒஸ்வோல்ட் அம்மையார் அவர் கள் பக்கபலமாக இருந்தார். இராணுவத்தினர் காவல்காத்திருக்க கற்றல் கற்பித்தல் இடம்பெற்றது. பிள்ளைகள் தமது மனத்துயரங் களை வெளிப்படுத்துவார்கள். கற்பித்தல் முடிந்ததும் உறவுகளின் முகவரிகளுடனும் கடித பொதிகளுடனும் அவ்விடத்தை விட்டு வெளியேறுவேன். "இயேசுவே நீரே முன் செல்லும்... இயேசுவே.. இயேசுவே"... என்று எனக்குள்ளே செபித்துக்கொண்டு செல்வேன். காவலரண்களில் சோதனையை தாண்ட வேண்டும். 'GOD BLESS YOU' என முன்னால் நின்ற இராணுவ வீரனுக்கு வாழ்த்துக்கூறி கடந்து சென்றேன். இறைவன் செய்த அற்புதங்கள் அளப்பெரியன.

இத்தோடு முடியவில்லை. மீண்டும் 2010ஆம் ஆண்டு நடுப் பகுதியில் மீள்குடியேற்றத்துடன் கற்குவியல்களாக விட்டுவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிய இடங்களுக்குச் சென்று மீண்டும் பணிப் பயணம் தொடர்ந்தது. கற்பித்த மாணவர்களின் பலரின் முகங்களைக் காணவில்லை! இவை அனைத்தும் நான் அனுபவித்த அனுபவங்கள். இறைவன் தந்த அற்புத வாய்ப்புக்கள், தருணங்கள்!

**இறைவனுக்கே மகிமை.**

**அருட்சகோதரி அமிர்தா அன்ரன் தேவதாசன்.**

***"May our motto be "God alone" this is the way of working usefully for others as well as ourselves: it is also the way to maintain peace in all situations".***

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனே என் அரண்

யுத்த மேகமும், போர் முழக்கமும், இடப்பெயர்வும், இன அழிப்பும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருந்த காலமது. 2007 தை 17ம் நாள் முல்லை மண்ணில் பணிபுரிய மாகாணத் தலைவி அவர்களால் அனுப்பப்பட்டேன். சுனாமியால் பாதிக்கப் பட்ட இளம் பெண்களுக்கு முறைசாராக் கல்வி மூலம் அவர்களு டைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், விடுதிச்சாலை மாணவிகளைப் பொறுப்பேற்று வழிநடாத்துதல் ஆகிய இரண்டு பணிகளும் தரப்பட்டன. பணிசெய்ய ஆர்வத்தோடும், ஆவலோடும் சென்ற எனக்கு ஏமாற்றமே காத்திருந்தது. இயற்கையும் போரும் முல்லை மக்களுக்கு எதிராகத் தாண்டவமாடின. விடுதிச்சாலை மாணவிகளின் இல்லத்தை இடிமின்னல் தாக்கியது. கிபிர்கள் குண்டுமழை பொழிந்தன. பிள்ளைகள் சிதறுண்டு போனார்கள். பாதுகாப்பற்ற தற்காலிக விடுதிச்சாலையைவிட்டு அருட்சகோதரி களும் பிள்ளைகளும் வெளியேறினார்கள். பிள்ளைகள் உறவினர் களுடைய இல்லங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். அருட் சகோதரிகள் செல்வபுரம் புனித யூதாததேயு ஆலயத்தில் தஞ்சம் புகுந்தனர். இச்சந்தர்ப்பத்தில்தான் நானும் என் பணிக்காக முல்லை மண்ணில் கால் பதித்தேன்.

சுனாமி அனர்த்தத்தால் பல இழப்புக்களைச் சந்தித்து நடைப் பிணமாக்கப்பட்ட இளம்பெண்கள் "போர்" என்னும் அரக்கனால் மீண்டும் நசுக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். தமிழீழம் முழுவதும் காலத்தின் தேவையால் கட்டாய அழைப்பு. "வீட்டிற்கு ஒருவர் போராட்டத்தில் இணைய வேண்டும்." இதனால் அச்சமுற்ற இளைஞர்கள், யுவதிகள் தலைமறைவாகினர். அனேகமான பெண் கள் எமது உதவியை நாடிவந்தார்கள். அனைவருக்கும் எம்மாலி யன்ற உதவிகளைச் செய்து வந்தோம். பல எதிர்ப்புகள், சவால் கள் மத்தியில் எமது பாதுகாப்பையும் பொருட்படுத்தாது, எம்மை நோக்கி பாதுகாப்பிற்காகத் தஞ்சம் புகுந்த இளம்பெண்களுக்கு அடைக்கலம் கொடுத்துப் பாதுகாப்பளிப்பது சவால் நிறைந்ததொரு விடயமாக இருந்தபோதும் புகலிடமளித்துக் காப்பாற்றினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 இறுதியில் போர் உக்கிரமடையத் தொடங்கியது. முல்லைத்தீவை விட்டு இடம்பெயரும் அவலநிலை ஏற்பட வாய்ப் புண்டு என உணர்ந்த மக்கள் சிறிது சிறிதாக தமது பொருட் களையும், உடைமைகளையும் பாதுகாப்பான வேறு இடங்களுக்கு நகர்த்த ஆரம்பித்தனர். மக்களோடு இணைந்து நாமும் எமது பொருட்களையும் நகர்த்தத் தொடங்கினோம். பொருட்களோடு எம்மிடம் தஞ்சம் கோரியிருந்த இளம்பெண்களையும் பாதுகாப் பாகக் கொண்டுசெல்ல வேண்டிய நிலை. என்னசெய்வது என்றே புரியவில்லை. சோதனைச் சாவடிகள், உயர் பாதுகாப்புக்கள் இவற்றிற்கூடாக எப்படி முடியும்? என்று ஏங்கியநாம் இறைவனின் வழிகாட்டுதல், அருட் துணையுடன் அனைவரையும் பாதுகாப்பாக புதுக்குடியிருப்பு இல்லத்திற்கு அழைத்து வந்து பிள்ளைகளின் பெற்றோர்களின் கரங்களில் ஒப்படைத்தோம்.

உறவினர்களுடன் வாழ அனுப்பப்பட்ட விடுதிச்சாலை மாணவி களுடன் நாம் எப்பொழுதும் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டே இருந்தோம். அவர்களுடைய இல்லங்களுக்கச் சென்று அவர்களின் நிலைபற்றியும், பாடசாலை அதிபருடன் தொடர்புகொண்டு அவர்க ளின் கல்வி, ஒழுக்கம் பற்றியும் அறிந்துகொண்டோம். கியூடெக் நிறுவனத்தினரின் உதவியைப் பெற்று அத்தியாவசிய தேவைக ளான அரிசி, மா, சீனி, மண்ணெண்ணெய், பாடசாலை உபகரணங் கள் போன்ற பொருட்களைப் பெற்றுக் கொடுத்தோம். மாதத்தில் இரண்டு தடவைகள் எல்லோரையும் ஒன்றுசேர்த்து கியூடெக் நிறுவனத்தினரின் உதவி, அனுசரணையுடன் உளஆற்றுப்படுத்தல் வகுப்புக்கள், நிகழ்வுகள் மூலமாக இவர்கள் வாழ்வைத் தரமுள்ள தாக்க பிள்ளைகளுடன் இணைந்து நாமும் பயணித்தோம்.

இறப்புக்கள் நிகழாத நாட்களேயில்லை, மரண ஓலம் கேட்காத வீடுகளே இல்லை. மாறிமாறி மரணச்சடங்குகளுக்குச் செல்வதும், மரண அவலங்களைச் சந்தித்த வீடுகளுக்குச் சென்று மக்களைச் சந்திப்பதுமே எமது முழுநேரப் பணியாக அமைந்தது. "இறைவன் இருக்கிறாரா?, எமது கூக்குரலும் கதறலும் இறைவனுக்குக் கேட்கவில்லையா?, ஏன் எங்களுக்கு இப்படி? என்று புலம்பிக் கதறும் மக்களுக்கு எப்படி இறை நம்பிக்கையை ஊட்டுவது?, எப்படித் தேற்றுவது? எப்படி ஆறுதல் அளிப்பது? அவர்களுடன் நாம் உடனிருப்பதே அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலைகள் காயப்பட்டோரால் நிறைந்து வழிந்தன. உடல் அங்கங்களை இழந்து வாழ்வின் எதிர்காலம் பற்றி நம்பிக் கையிழந்த இளம் சமுதாயத்தை அங்கே காணமுடிந்தது. சிஸ்டர்! சிஸ்டர்! இந்தக் கடிதத்தை எங்கட வீட்டில் கொடுங்க, இந்த விலாசத்தில எங்கட அம்மா, அப்பா, சகோதரங்கள் இருந்தால் எங்களை வந்து பார்க்கச் சொல்லுங்க, அவர்களும் உயிரோட இருக்கினமோ தெரியாது. இவ்வாறான ஏக்கம் நிறைந்த வார்த் தைகளையே எம் செவிகள் கேட்டுப் பழகிப்போயின. எம்மாலி யன்றவரை இவ் உதவிகளை அவர்களுக்கு நிறைவேற்றிக் கொடுத்தோம். இறைபராமரிப்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையில் செபமாலைகள்,செபப்புத்தகங்களைக் கொடுத்து நம்பிக்கையூட்டி ஆறுதல்படுத்தி தேற்றினோம். செல்லும் வழியில் தாயைப் பார்த்துவிட்டுச் செல்வது போல எம் இல்லத்தைக் கடந்து செல்லும் போராளிகள் எம்மோடு உரையாடி, செப உதவி கேட்டு "நாளை உங்களைக் காண்போமோ தெரியாது" என்று கூறிச் செல்லும் கணங்களில் எம் கண்கள் குளமாகும். களைத்துப், பசித்து, சோர்வடைந்து வரும் போராளிகளின் பசியாற்றி அவர்கள் ஆறுதலடைய உதவி செய்தோம். போர்க்களத்திலிருந்து தப்பி யோடிவந்து பெற்றோர்களைக் காணாது தவித்த பெண்போராளி களை பாதுகாப்பாக அவர்களின் பெற்றோர்களுடன் சேர்த்து விட்டோம்.

கிபிர் தாக்குதல்கள், பல்குழல் தாக்குதல்கள் உச்சமடைய, திரும்பும் இடமெங்கும் மனிதசடலங்கள். 2009 தை மாதம் மக்க ளின் மனங்களில் நம்பிக்கை அகன்றது. எமது மண் பறிபோகப் போகின்றது, மீண்டும் நாம் இவ்விடத்தைவிட்டும் இடம்பெயர வேண்டியநிலை வரப்போகிறது என்ற சோகத்தில் அனைவரும் நடைப்பிணங்களாக மாறிவிட்ட நிலையையே காணமுடிந்தது. 2005 தை 5ம் திகதி காலைத்திருப்பலி புனித யூதாததேயு ஆலயத்தில் இடம்பெற்றது. திருப்பலி நிறைவில் அருட்தந்தை அவர்கள் அனைவரும் இங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதே சிறந்தது எனக் கூறினார். மாலை 4.00 மணிவரை மக்கள் ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

திடீரென மக்கள் குடியிருப்புக்கள் மேல் பல்குழல் எறிகணைகள் ஏவப்பட்டன. கிபிர் போர்விமானங்கள் சரமாரியாகக் குண்டு மாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைபொழிந்தது. மக்கள் பதுங்கு குழிகளுக்குள் ஓடிச்சென்று தம் உயிரைப் பாதுகாக்கச் செல்லமுடியாத அளவிற்குத் தொடர் தாக்குதல். தாக்குதல் முடிந்ததும் வீதிகள், வீடுகள் எங்கும் இரத்தவெள்ளம், வாகனங்களின் அலறல் சத்தம், அழுகுரல்கள். அனைவரும் முல்லை மண்ணைவிட்டு இடம்பெயரத் தொடங்கினார் கள். அருட்சகோதரி லோறன்சியாவும் நானும் மோட்டார் சைக்கிளில் புதுக்குடியிருப்பு நோக்கி விரைந்தோம்.

காலத்தின் தேவைக்கேற்ப எமது பணிகள் மாற்றப்பட்டன. இறைவன் எமக்கு அரும்பெருங் காரியங்கள் புரிந்தார். இறைவா உமது கருவியாக நான் செயற்பட நீர் தந்த வாய்ப்புக்காக, நீர் எமக்குத் தந்த உயிர்ப்பிச்சைக்காக உமக்கு நன்றி. உம் மக்க ளின் வாழ்வுக்காக என்னை முழுவதும் தொடர்ந்தும் கொடுக்க என்னைக் கரம்பிடித்து வழிநடத்தும் இறைவா. ஆண்டவரின் அரும்பெரும் செயல்களை நினைந்து என் உள்ளம் நன்றிப்பண் இசைக்கின்றது.

**அருட்சகோதரி மரியமலர் ஆரோக்கியம்.**

இறைலனும் அவரது ஆட்சியுமே நமது ஏக
தேவை என்பது மிக எளிமையான வழியில்
ஒரு பிரத்தியேக தேடலாக
முன்வைக்கப்படுகின்றது.

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று தசாப்த கால யுத்தமும் இறுதிக்கால எனது அனுபவங்களும்

இரண்டாயிரத்து எட்டில் யுத்தம் கோரத்தாண்டவம் எடுத்து கொடூரமாக நடைபெற்ற போது பல உயிர் இழப்புக்களையும், அவய இழப்புக்களையும், உடைமை இழப்புக்களையும் ஏற்படுத்தி மக்களுடைய வாழ்க்கையை சின்னாபின்னமாக்கியது. மன்னார் மடுப்பகுதி மக்கள் பல இழப்புக்களை சந்தித்த வண்ணம் எஞ்சிய தம் உயிரை காக்க, கிளிநொச்சியை நோக்கி இடம் பெயர்ந்தார்கள்.

அன்னை மரியாளின் ஆறுதலுக்காகவும் பரிந்து பேசுதலுக் காகவும் பலர் பல பாகங்களில் இருந்தும் திரண்டு வருகின்ற இடமாகிய மன்னார் மடு யாத்திரை ஸ்தலத்தையும் இப்போர் விட்டுவைக்கவில்லை. பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அருளையும் ஆசீரையும் அள்ளிப்பொழிகின்ற மருதமடு அன்னை யும் மக்களோடு மக்களாக இடம் பெயர்ந்து சென்றது வரலாற்றில் பதிவாகியுள்ள நிகழ்வாகும்.

போரின் பிடியில் அகப்பட்டு முழங்காவில் இரணைமாதா மடத்தில் வாழ்ந்து வந்த எனக்கு பல சவால்களையும், அனுபவங் களையும், இறை பராமரிப்பையும் இவ் யுத்தக்கால நிலைமை ஏற்படுத்தியிருந்தது. பலவிதமான அங்கலாய்ப்புடனும், அச்சத்துட னும் எமக்கு என்ன நேருமோ என்ற நிலையிலும் நாமும் இடம் பெயர்வுக்குள் அகப்படப் போகின்றோம் என்ற உணர்வோடு இருந்த வேளையில் பண்டிவிரிச்சான் அருட்சகோதரிகள் இடம் பெயர்ந்து எம்முடன் வந்து இணைந்த வேளையில் அவர்களுக்கு இல்லிடம் கொடுத்து ஒன்றாக வாழ்ந்து வந்தோம்

சொல்லொண்ணாத் துயரங்களுடனும் பெரும் மூச்சுக்களுடனும் கல்விப்பணியை என் பொறுப்பான பணியாகக் கொண்டு நாச்சிக் குடா அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கற்பித்தல் பணியை ஆற்றிக்கொண்டிருந்த காலப்பகுதியில் ஆசிரியர்களாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடைய எதிர்பார்ப்பு, நாம் கற்பித்த மாணவர்கள் நல்ல கல்விமான்களாக, பணிவுள்ளவர்களாக உருவாக்கி ஒரு உயர் நிலையில் இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்போடு தான் ஒரு ஆசிரியரின் கற்பித்தல் தொழிலானது அமைகின்றது. அது என்னுடைய எதிர்பார்ப்பாக இருக்க, என்னுடைய அனுபவமானது என்னிடம் கற்ற மாணவர்கள் போர்க்களத்தில் நின்று போராடி மக்களைப் பாதுகாப்பதற்காக தமது உயிரைத் தியாகம் செய்த நிலையில் அவர்களின் உடல்கள் அஞ்சலிக்காக பாடசாலையில் வைக்கப்படுகின்ற போது என்னுடைய இதயத்தைப் பிளந்து சென்ற அனுபவங்களாகவே அமைந்தன. இவ்வாறான அனுபவங் கள் பாடசாலையில் மட்டுமல்ல இரணைமாதா நகர் முழங்காவில் பகுதி முழுவதுமே நான் அனுபவிக்க நேர்ந்தது. இரவு பகல் என்று இல்லாமல் மரண ஓலங்களுடன் சொல்லொண்ணா வேதனையை, இழப்பை சந்தித்த வீடுகளுக்குச் சென்று அவர்க ளது துயரங்களில் பங்கேற்று ஆறுதல் கூறிய காலமாகவே போர்க்காலம் நகர்ந்து சென்றது.

ஓய்வெடுக்கும் இரவு வேளை கூட எமக்கு மரணச்சடங்குகளில் கலந்து கொள்ளும் அனுபவமாகவே அமைந்தன. முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்திலிருந்து எழுப்பப்படும் சோக இசையும், அங்கு புதைப்பதற்கு வரும் மாவீரர் உடல்களும், அவர்களுக்கான இறுதிக்கிரியைகளும், அஞ்சலிகளும் எமது காதுகளையும் உள்ளங்களையும் வருடிச்சென்ற கணங்களாகவே அமைந்தன.

இவ்வாறான சூழ்நிலைகளில் வாழ்ந்து வந்த சோகமான காலப்பகுதிகளில் மீண்டும் இடம் பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவானது. மக்கள் அனைவரும் பங்குத்தந்தை உட்பட அவ்விடத்தை விட்டு நகர்ந்திருந்தபோதிலும் நானும் அருட் சகோதரிகள் றோஸ்மேரி டேவிட், பேக்மன்ஸ் ஆகியோர் மட்டுமே அங்கிருந்தோம். பின்னர் நாமும் ஷெல் தாக்குதல்களை எதிர் கொள்ள முடியாத நிலையில் மடத்திலிருந்து எடுக்கக்கூடிய பொருட்களை எடுத்துக்கொண்டு, ஆனைவிழுந்தானில் அருட்சகோதரி லூட்ஸ் யோசப் நடாத்திய மாற்று வலுவுள்ளோர் இல்லத்திற்குச் சென்றோம். அங்கு சென்றாலும் ஷெல் தாக்குதல்களும், வான் தாக்குதல்களும் எம்மைத் தொடர்ந்த வண்ணமே இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறங்குவதற்கே சந்தர்ப்பம் இல்லாத நிலையில் பயங்கரமான சூழ்நிலைக்குள்ளே இரு வாரங்களைக் கழித்தோம்.

மக்கள் அலையலையாக பார ஊர்திகளில் தங்களோடு தங்கள் உடைமைகளையும் நகர்த்தியவர்களாக கால்நடையாகவும், துவிச்சக்கர வண்டிகளிலும் பாதுகாப்பான இடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். இருவாரங்களின் பிற்பாடு நாமும் அவ்விடத்தை விட்டு விலக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நாம் எங்கெல்லாம் சென்றோமோ அங்கெல்லாம் வான்வழிக்கடல் தாக்குதல்கள் இடம் பெற்றுக் கொண்டே இருந்தன.

முழங்காவில் மடத்தில் இருந்து எடுக்கக் கூடிய அத்தியா வசியப் பொருட்களை எடுத்துக் கொண்டு உருத்திரபுரம் மடத்தை நோக்கி நகர்ந்தோம். அம்மடத்து சகோதரிகளோடு ஒரு மாதம் வாழ்ந்தோம். அங்கும் குண்டு மழை பொழியத் தொடங்கியதனால் இராமநாதபுரம் என்னுமிடத்தில் அப்போது அங்கு பங்குத்தந்தை யாக இருந்த அருட்பணி அன்ரன் றொக்கின் உதவியோடு முன்பள்ளி ஒன்றில் எங்களுடைய வாசஸ்தலத்தை அமைத்து ஏறக்குறைய மூன்று மாதம் அங்கு வாழ்வதற்கு ஆண்டவர் அருள் செய்தார். இடம் பெயரத் தொடங்கிய காலத்திலிருந்து தொடர்ச்சியான இடப்பெயர்வினாலும் உயிரைப் பாதுகாக்க வேண்டுமென்ற பீதி நிலையிலும் உடல், உளம் நலிந்து வாழ்ந்த எமக்கு அங்கு மூன்று மாதங்கள் வாழக்கிடைத்தது, உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆறுதலை அளித்தது என்று கூறலாம்.

2009இல் தை மாதம் வரை அங்கு இருந்தோம். மீண்டும் அவ்விடத்தில் இருந்து இடம் பெயர வேண்டிய நிலை நேரிட்டது. முழங்காவிலில் இருந்து ஏற்றிய பொருட்களை ஒவ்வொன்றாக தங்கிய இடங்களில் விட்டுவிட்டு அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றுடன் மட்டும் பிரமந்தனாறு, தர்மபுரம் எனும் இடத்தை நோக்கி நகர்ந்து அங்கு ஒரு குடிசை அமைத்து வாழ ஆரம்பித் தோம். அங்கும் இரு வாரங்கள் மட்டுமே வாழமுடிந்தது. நாடோடிப் பயணம் தொடர்ந்த வண்ணமே இருந்தன. யுத்தத்தின் அகோர நிலையினால் அங்கிருந்து இரணைப்பாலைக்குச் சென்றோம். அங்கு ஒரு குடிசையிலேயே ஒரு வாரம் கழித்தோம். பல சிரமங் களுக்கு மத்தியில் ஏனைய தேவைகளை விட, குடிநீரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதே பெரிய சவாலாக அமைந்தது. இரவிலும் தூக்கம் இல்லாமல் விழித்திருந்து எம்முடைய உயிரைக் காப்பதற்காக பதுங்கு குழிகளுள் எம்முடைய நாட்களைக் கழித்த அனுபவம் மறக்க முடியாத ஒன்று.

அங்கிருந்து ஒரு வாரத்தின் பிற்பாடு இரவோடு இரவாக வேறு இடத்தை நோக்கி நகர வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில், எங்கே செல்வது என்று தெரியாமல் பாரவூர்திகளில் பொருட்களை ஏற்றி அதன் மேல் நாம் அமர்ந்து பயணித்தோம். ஷெல், வான் தாக்குதல்களுக்கு மத்தியிலும், மக்களின் இடப்பெயர்வுகளின் நெருக்குதல்கள், வாகன நெருக்குதல்களுக்கு இடையிலும் எமது பயணம் தொடர்ந்தது. பாரவூர்திகளில் பயணிக்கும் தருணத்தில் தாக்குலின் போது பாரவூர்திகளுக்கு கீழ் பதுங்கியும் தாக்குதல் களுக்கு இடையில் தொடர்ந்து பயணித்தும் வலைஞர்மடத்தை வந்தடைந்தோம். அங்கு தங்குவதற்குரிய எந்த இடமும் இல்லாது பனை வடலிகள் உள்ள பள்ளத்தை நோக்கி பொருட்களைக் கொண்டு சென்று நாமும் அங்கு தங்கினோம். இல்லிடம், உணவு, தண்ணீர், கழிப்பறை போன்ற அடிப்படைத் தேவைகள் இல்லாது அலைந்து திரிந்தோம். ஆனாலும் இறைவன் வானத்துப் பறவை களைப் பராமரிப்பது போல் பராமரித்துக் காப்பாற்றியதை உணர்ந்தோம். அங்கு இரு நாட்களின் பின் இறைபராமரிப்பினால் ஒரு வீடு கிடைக்கப்பெற்று மடு, வேரவில், உருத்திரபுரம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் பணியாற்றிய அருட்தந்தையர்களும் அங்கிருந்த தேவாலயத்தின் அருகாமை யில் குடிசைகள் அமைத்துத் தங்கினார்கள். நிமிடத்திற்கு நிமிடம் அச்சமும் பயமும் உயிரைக் கையில் பிடித்தவாறு நகர்ந்து சென்ற நாட்களில் வீசப்பட்ட கொத்துக் குண்டுகளால் விசிறி எறியப்படுகின்ற உடலின் அவயங்களே நாம் காணுகின்ற சாட் சியங்களாக அமைந்தன. போர்வைகளாலும் சாரங்களாலும் கூட்டிச்சேர்க்கப்பட்ட உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட சாட்சிகள் இன்றும் எம் கண்முன் தோன்றி மறைகின்றன. ஒவ்வொரு நாளும் நாம் அனுபவித்த அனுபவங்கள் என்றால் இவை தவிர வேறு இல்லை என்றே கூறலாம். அனைத்து உடைமைகளையும் இழந்து இறுதியில் உயிரையும் இழக்கத் தயாராக இருந்த சூழலிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவயங்களை மட்டும் இழந்து விடக் கூடாது என்ற எண்ணம் மட்டும் என் எதிர்பார்ப்பாகவும் மன்றாட்டாகவும் இருந்தது.

எம்மைச் சூழவுள்ள மக்கள் நாளுக்கு நாள் இரவோடிரவாக நந்திக் கடலின் ஊடாக தம்முடைய உயிரைக் கையில் பிடித்தவர்களாகப் பயணித்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று கொண்டு இருந்ததையும், பலர் அவ்வழி ஊடாக செல்ல முயன்ற வேளையில் தம்முடைய உயிரை மாய்த்துக்கொண்டதையும் அறிந்தோம். ஆனாலும் மக்கள் வெளியேறக்கூடிய ஒரே ஒரு இடமாக அமைந்தது நந்திக்கடலே. எனவே உயிர் தப்பினாலும் சரி, உயிர் போனாலும் சரி என்ற எண்ணத்தில் பயணத்தைத் தொடர்ந்தார்கள். நந்திக்கடல் வரலாற்று சாதனை படைத்த இடமாக மாறியுள்ளது.

காயப்பட்டவர்கள் கப்பலின் ஊடாக முறைப்படி அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்களோடு அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் இருவர் மூவர் என்ற அடிப்படையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். நானும் அருட்சகோதரிகள் சுபாசினி, றஞ்சினி ஆகிய மூவரும் காயப்பட்டவர்களை ஏற்றும் கப்பலில் ஏற்றப்பட்டு இராணுவப் பகுதிக்குள் 2009.03.22 இல் வந்து சேர்ந்தோம். இக்காலப் பகுதியில் மாகாண ஆலோசகரான அருட்சகோதரி பெனடிக்ரா பத்திநாதர் போர்க்கால வடுக்களின் மத்தியில் நாம் அனுபவித்த எல்லாத் துன்பகரமான அனுபவங்களிலும் எம்மோடு உடனிருந்து எல்லா அனுபவங்களையும் தனதாக்கிக் கொண்டார். இவரினுடைய தியாகத்தை இப்போதும் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

அனைத்து சகோதரிகளும் இவ் யுத்த பிரதேசத்தை விட்டு வெளியேறிய பின்னும் அருட்சகோதரி அஞ்சலீனும் பன்னிரெண்டு பிள்ளைகளும் மட்டும் வலைஞர்மடத்தில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை சென்று 2009.05.18 இல் அனைத்து மக்களுடனும் சேர்ந்து வவுனியா செட்டிகுள முகாமிற்கு வந்தடைந்தது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கடந்து சென்ற யுத்தகால நாட்கள் ஒவ்வொன்றையும் அனுபவமாக பார்ப்பதை விட இழப்புக்கள் வேதனைகள் மத்தியிலும் இறைவன் எம்மையும், மக்களையும் சக்தியை தந்து பராமரித்தார். நாம் அனைவரும் தொடர்ந்து இவ் உலகத்தில் வாழ்ந்து தமது பணியை ஆற்ற வேண்டும் என்பதற்காக எந்த விதமான காயம் கூட எமது உடலில் ஏற்படாத வண்ணம் பாதுகாத்து வழிநடத்தினார் என்பதே எனது அனுபவமாகும்.

**அருட்சகோதரி. கிறேஸ்மேரி ஸ்ரனிஸ்லாஸ்.**

"இறைவன் மாத்திரமே என்னும் மனப்போக்கைப்
பெற்று, அதில் மரணம் மட்டும் நிலைத்திருப்பதை
நோக்கமாகக் கொண்டு கீழ்ப்படிதல்,
விரத்தத்துவம், ஏழ்மையைத் தங்களால்
முடிந்தளவிற்குப் பூரணமாக அனுசரிக்க எல்லா
முயற்சியும் எடுப்பார்கள்."

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்காலப் பூவாய்...

எனது துறவற வாழ்வின் அனுபவங்களை என்றுமே என் வாழ்வில் மறக்க முடியாது. எனது உருவாக்கம் மிகவும் துன்பமும் போராட்டமும் சவாலும் நிறைந்ததாகவே அமைந்திருந்த போதும், "இறைவன் தன் சிறகுகளால் என்னை அரவணைத்தார். அவர் தம் இறக்கைகளின் கீழ் நாம் புகலிடம் கண்டோம்." (தி.பா.91:4) "உம் பக்கம் ஆயிரம் பேர் வீழ்ந்தாலும் உம் வலப்புறம் பதினாயிரம் பேர் தாக்கினாலும் எதுவும் உம்மை அணுகாது." (தி.பா.91:7) என்ற உயிரளிக்கும் இறைவார்த்தை என் வாழ்வின் உந்துசக்தி யாக அமைந்தது. இதனால் என் விசுவாசமும் நம்பிக்கையும் மேலும் ஆழம் பெற்றது. எம் மக்களோடு நானும் எல்லாவிதத்தி லும் இரண்டறக்கலந்து துன்பங்கள், துயரங்கள், இல்லாமைகள், இழப்புக்கள் அனைத்தையும் அனுபவமாக ஏற்று எனது உருவாக் கத்தைப் பெற்றுக்கொண்டேன்.

1990-1991 ஆண்டு காலப்பகுதியில் இரவுமுழுவதும் கடற்பய ணங்கள். புலிப்படையினரின் தடை ஒருகரையில், இராணுவத்தின் சட்டஒழுங்குகளும் குண்டுத்தாக்குதல்களும் மறு கரையில். ஒரு முறை நான் எனது விடுமுறைக்காக மன்னார் செல்ல வேண்டியி ருந்தது. அக்காலப்பகுதியில் குறிப்பிட்ட இடத்திற்கு செல்வதற்கு உழவியந்திரம் மூலமாக ஊரியான் என்ற இடத்தை சென்றடைய வேண்டும். அதிகாலை நான்கு மணிக்குள் அவ்விடத்தை அடைந் தால் மட்டுமே படகில் பயணம் செய்யலாம். இல்லாவிடின், மாலையில் எல்லோரும் ஒன்றாக இணைந்து புலிகளின் கட்டுப் பாட்டில் அவர்கள் தரும் இலக்க ஒழுங்கில் ஆயத்தமாக இருக்க வேண்டும். மிகவும் விழிப்பாக, கவனமாக, பாதுகாப்பாக இருக்கக் கூடிய தென்னஞ்சோலைக்குள் நாள் முழுவதும் எம்மைத் தங்க வைத்து, நிலைமை சரியாகவரும் போது புலிப் போராளிகள் எம்மை அனுப்பிவைப்பார்கள்,

அன்றையநாள் நிகழ்வுகளை இன்று நினைத்தாலும் பயமாகவே இருக்கின்றது. எமது படகில் இருந்த அரிக்கன் லாம்பு வெளிச் சத்தைக் கண்ட இராணுவம் எம்மை நோக்கித் துப்பாக்கியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட ஆரம்பித்தார்கள். மீண்டும் கரையை நோக்கித் திரும்பி வந்தபொழுது எமது படகு கவிழ்ந்துவிட்டது. எல்லோரும் கடலில் விழுந்து விட்டோம். பெரிய ஆபத்திலிருந்து நாம் அனைவரும் காப்பாற்றப் பட்டோம். அன்று வயது முதிர்ந்த அருட்சகோதரிகளும், நோயாளிகளும் கஸ்டப்பட்டு இதேபாதையில்தான் பயணம் செய்தார்கள். இவ்விதமாக எமது தரைப்பயணங்கள், கடற்பயணங்கள், இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்ட நிகழ்வுகள் எல்லாம் எமக்கு பயத்தையும் கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியது.

இவ்விதமாக அலைக்கழிக்கப்பட்டு மூன்று நான்கு மாதங்களின் பின்னர்தான் எமக்கு வேறுமாகாணத்திற்கு செல்வதற்கு அனுமதி கிடைத்தது. வானூர்தி மூலம் நாம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அருட்சகோதரிகளான அனக்கிளேற், யோசப்பின் மேரி இவர்களுடன் உருவாக்கத்திலிருந்த பத்துப் பிள்ளைகளும் பல அனுபவங்களுக்கூடாக மலைநாடு சென்றடைந்தோம். நவகன்னியர் உருவாக்க இல்லமாக **'தியத்தலாவை'** என்ற இடத்தைத் தெரிவு செய்து அங்கு குடிபுகுந்தோம். அவ்விடத்தில் 'புபுதுவ' என்ற சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்து அவ்வில்லத்தைப் பணம் கொடுத்துப் பெற்றுக் கொண்டோம். உருவாக்ககாலத்தில் பணி அனுபவத்திற்காக ஏனைய பணித்தளங்களுக்கு நாம் அனுப்பப் பட்டோம். எம்மால் அவ்விடத்து அனுபவங்களை மறக்க முடியாது.

ஹப்புத்தளைப் பங்கில் பணியாற்றிய அமலமரித்தியாகிகள் சபைக் குருக்கள் பெரிதும் எம் உருவாக்கத்தில் உதவிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக அருட்தந்தை ஸ்ரனிபிலிப், அருட்தந்தை லீனஸ் இவர்கள் மூலமாக ஆன்மீக வழிகாட்டல் கிடைக்கப்பெற்று நாமும் எமது வாழ்வில் மிகவும் வித்தியாசமான அனுபவத்தை மலையகத்தில் பெற்றதோடு, இறைப்பிரசன்னத்தை அதிகமாக உணர்ந்து, இறைவனுடன் அதிகமான நேரங்களைச் செலவிட்டு, இழந்து போன மகிழ்ச்சியையும், அமைதியையும் மீண்டும் பெற்றுக்கொண்டோம். புனிதபவுல் கூறுவது போன்று "கடந்ததை மறந்துவிட்டு முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு..." (பிலிப்.3:13) என்ற இறைவார்த்தை எனக்கு உறுதுணையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப்பகுதியில் எனது சகோதரர் ஒருவரும், சகோதரி லூசில்லா, சகோதரி டெய்சி ஆகியோரின் சகோதரர்களும் நாட்டுக் காகத் தம் இன்னுயிரை ஈந்தனர். மிகவும் தாங்கமுடியாத இழப்புக் கள். எனது உறவினர்களில் பதினைந்து பேர் இறந்தனர். குடும்பத் தினர் உயிர் ஆபத்தை எதிர்கொண்டார்கள். பலர் சுட்டுக் கொல் லப்பட்டனர், இன்னும் பலர் இராணுவத்தால் கைது செய்யப்பட் டனர். சொந்த இடங்களைவிட்டு வேறு வேறு கிராமங்களில் குடியேறினர். குறிப்பாக மடுப்பகுதியிலுள்ள கிராமங்களில் தஞ்ச மடைந்திருந்தனர். மேலும் சிலர் கடல் மார்க்கமாக வெளிநாடு களுக்கும் சென்றனர்.

"ஆண்டவரிடமிருந்தே எனக்கு உதவிவரும்" (திபா.121:2) என்ற திருப்பாடல் வசனத்தை எனதாக்கி, எப்பொழுதும் இவ்வசனத் தைப்பாடிக்கொண்டு செல்வேன். எனது உறவுகளுடனான தொடர் பும் இல்லாமல் போய்விட்டது. எனக்கு மூன்று சகோதரர்கள்; இவர்கள் மூவரும் போராட்டத்தில் இணைந்து விட்டார்கள். எனது தந்தையும் இந்திய இராணுவத்தினரால் சிறையில் அடைக்கப்பட்டு அச்சுறுத்தல் காரணமாக வெளியூர் சென்றார். மீண்டும் இலங்கை வரும் போது, ஒரு சகோதரன் இறந்து விட்டார். ஒருவர் போராட் டத்தில்; மற்றவர் வெளிநாடு சென்றுவிட்டார். இத்துயர சம்பவங்கள் அனைத்தும் என்னை அடிக்கடி மிகவும் வேதனைக்குள்ளாக்கின. காலப்போக்கில் நான் உடல் நோயாளியாகிவிட்டேன். தனிமை என்னை வாட்டியது. அடிக்கடி நற்கருணைப்பிரசன்னத்தின் முன்பாகவும், மரியன்னையின் பாதத்திலும் அமர்ந்திருந்து செபித்து ஆறுதலடைந்தேன். இவ்வாறு நான் கடந்துவந்த, அனுபவித்த துன்ப அனுபவங்களால் பெற்ற ஆன்மீக பலத்தோடு எனது முதல் அர்ப்பணத்தில் மகிழ்ச்சியாக, என்னை முழுமையாக இறை வனுக்கு அர்ப்பணித்தேன். இறைசக்தி என்னை உந்தித்தள்ளிக் கொண்டேயிருந்தது.

1995 ஆம் ஆண்டு மார்கழி மாதம் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. முதல் பணித்தளத்திற்கு ஒரு நாள் முழுவ தும் வெள்ளத்தில் நடந்தே செல்ல வேண்டியிருந்தது. அருட்தந்தை லோறன்ஸ், அருட்சகோதரி எலிசபெத் அந்தோனிப்பிள்ளை இவர்களின் உதவியுடன் வேரவில் என்ற இடத்திற்கு சென்றடைந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப்பகுதியில் வேரவில்லிலிருந்து மன்னார் செல்வது என்றால் துவிச்சக்கரவண்டியின் மூலம் தான் பயணம் செல்ல வேண்டும். 1993-1995 ஆண்டு காலப்பகுதியானது மிகவும் இக்கட்டான, சவால் நிறைந்த காலப்பகுதியாகும். இக்காலப்பகுதியில் வடபகுதி யுத்தக்களமாக இருந்தது. வாகன வசதிகளின்மையாலும் குறிப் பாக பொருளாதாரத் தடையினாலும் மக்களுடன் நாமும் பல சவால்களை எதிர்கொண்டோம். பற்றாக் குறைகள் பல இருந்த போதிலும் இறைவனின் அருளினால் மகிழ்ச்சியாகப் பணிசெய் தோம். எனது குழுச்சகோதரிகள், மூத்த சகோதரிகளின் வழிகாட் டல், அன்புள்ள மக்களின் பாசமான உறவு, ஆதரவு அனைத் திற்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

நாளடைவில் இந்தியாவில் உள ஆற்றுப்படுத்தல் பயிற்சிபெற எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அங்கு நான் பெற்றுக்கொண்ட புதுப்பித்தலானது என் உளக்காயங்கள் நீங்கி நான் உளநலம் பெறவும், எனது ஆன்மீகத்தில் மேலும் ஆழம் பெறவும், எனக்கு உதவியது. தொடர்ந்து போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளஆற்றுப்படுத்தல் மூலம் பணியாற்ற அருட்சகோதரி கிறிஸ்ரபெல் எனக்கு உதவிசெய்திருந்தார்.

1999ஆம் ஆண்டு நித்திய அர்ப்பணத்தின் பின்பு எனது பணிக்காகப் பறப்பாங்கண்டலுக்குச் சென்றேன். கார்த்திகை மாதம் ஒரு நாள் காலை அருட்சகோதரி மேரிராணியின் அப்பா "எமது பகுதியைச் சுற்றி புலிகளும் பிரதான வீதியைச்சுற்றி இராணுவப்படையும் தரையிறக்கப் பட்டுள்ளார்கள், ஒருமணி நேரத்தில் நாம் இவ் விடத்தைவிட்டு வெளியேற வேண்டும்" என்னும் தகவலை எம்மிடம் தெரிவித்தார். சரியாக காலை ஏழரை மணியளவில் இரண்டு பகுதியினருக்கும் சண்டை ஆரம்பித்தது. ஷெல் தாக்குதல்கள் அதிகமானது. எமது இல்லம் நோக்கி காலை தொடங்கி இரவு வரை கிட்டத்தட்ட முப்பத்திரெண்டு ஷெல் குண்டுகள் வந்து விழுந்தன. எமது மடத்தின் சுவர், ஓடுகள் எல்லாம் சிதறின. எமக்கு ஒதுங்கிக் கொள்ள இடமில்லை.

பிற்பகல் ஒன்றரை மணியளவில் எமது பீடத்தின் பின் பகுதியில் குண்டு விழுந்தது. எமது நாய் இறந்துவிட்டது. பாடுபட்ட சிலுவைமுன் வேதாகமத்தை விரித்து நற்கருணை நாதரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது ஆத்துமத்தை ஒப்படைத்து உருக்கமாக செபித்தோம். என்ன அதிசயம்! எவ்வித ஆபத்துமின்றி நாம் புதுமையாகக் காப்பாற்றப்பட்டோம். உயிருள்ள தெய்வம் எம்மைக் காப்பாற்றி விட்டார். இவ்வாறு பல அனுபவத்தை இறைவன் எனக்குத் தந்தார்.

"உங்கள் ஓட்டத்தை தடை செய்யக்கூடியது ஒன்றுமேயில்லை... முன்னேறிச் செல்லுங்கள்' என்ற எமது நிறுவுனரின் உத்வேகம் தரும் வார்த்தையை என் மனக்கண்முன்கொண்டு 'இறைவன் மாத்திரமே' என்ற விருதுவாக்கில் நான் அதிகமாக வேரூன்றப் பெற்று வாழக்கூடியசக்தி இன்றும் எனக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றது.

"இறைவாஉமக்குப் புகழ்"

**அருட்சகோதரி றேவதி சவிரி**

"ஆன்மீகத்துக்குள் நாம் ஆழமாக போகும்போது,
நமது உலகிற்கு ஆசிக்கும் ஜக்கியம்
சாத்தியமானதென்று, நாம் வெளியே சென்று
நமது வாழ்வினால் பறைசாற்றத்
தூண்டப்படுகின்றோம். அதாவது நமது
பொதுப்பணியை உண்மையுடன் வாழ நமது
"இறைவன் மாத்திரம்" என்னும் ஆன்மீகத்தில்
தோய்ந்தவர்களாக இருக்க வேண்டும்".

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடரிலும் இறைபராமரிப்பு

‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்பார்கள். 2007 தை பிறந்தது, வழி பிறந்ததோ இல்லையோ குழுச் சகோதரிகளுக்கு இடமாற்றத்தைக் கொணர்ந்தது. பாடசாலையிலும் புதிய அதிபர் அருட்சகோதரி அமிர்தராணி பிரியாவிடை பெற்றுச்செல்ல, அருட் சகோதரி திரேசம்மா சில்வா பதவியேற்றார். காலையும் மாலையும் சேர்ந்து வெள்ளிக்கிழமை நிறைவுற்றது. சனி பிறந்தது, சனியனும் கூடவே சேர்ந்து வந்தானோ? அன்று கண்ணிவெடியில் மூவர் படுகொலை. பண்டிவிரிச்சான் மக்கள் உயிரையும், இளைய சமூகத்தையும் காப்பாற்ற மடு அன்னையின் திருத்தலம் நோக்கிப் பயணமானார்கள். மாசி மாதம் முடியும் வரை தாக்குப்பிடித்த நாமும் பங்குனியில் பயணமானோம்.

மழை ஓயப் புறப்படும் புற்றீசல் போல, நாளாந்தம் செல்லடி ஓயும் இடைவெளியில் சென்று வந்தோம் எம் குழுவுக்கு, பறித்து வந்தோம் சில மரக்கறிகளை. நாட்கள் மாதங்களாகி வைகாசியில் பெரிய மடுவில் அருட்சகோதரி. திரேசா சில்வாவும் நானும் சிறு குடில் அமைத்துக் குடிபுகுந்தோம். பாடசாலைப்பணி, பங்குப்பணி உட்பட எம்மால் முடிந்தவரை நசரேத்தூர் வாழ்க்கையை வாழ்ந் தோம். ஒரு வருடம் உருண்டோடியது. சமையலும் சரி, ஏனைய வேலைகளும் சரி, அனைத்து வேலைகளும் எம்முடன் தான். ஒரு வருடம் கால ஓட்டத்தில் ஓடி மறைந்தது. 2008 சித்திரை மாதம் முழங்காவில் குழுவுடன் இணைந்து கொண்டு ஒன்பது மைல்களுக்கு அப்பாலுள்ள கணேசபுரத்தில் தற்காலிகக் கொட் டகை அமைத்துப் பாடசாலை நடைபெற்றது. ஆடி 2ம் திகதி மீண்டும் ஆனைவிழுந்தான் மாற்று வலுவுள்ளோர் சங்கத்தில் ஒரு வாரம் தங்கினோம்.

பின் மீண்டும் கிளிநொச்சி - கரடிப்போக்கு, உருத்திரபுரம் குழுக்களுடன் வேரவில், மடு, முழங்காவில், பண்டிவிரிச்சான் சகோதரிகளும் இணைந்து கொண்டோம். எம்முடன் மாகாண ஆலோசகர் அருட்சகோதரி. யூட் மடுத்தீனும் இணைந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணி விடுமுறை கழிந்து புரட்டாதி பிறந்தது. இராமநாதபுரத்தில் அருட்சகோதரிகள் திரேசா, கிறேஸ்மேரி, நான் மூவரும் அங்கு ஓர் ஆரம்பப் பாடசாலையில் எம் பாதுகாப்புக்குழியை அமைத்துக் கொண்டோம். பாடசாலை நான்கு மைல்களுக்கு அப்பால் அமைந் ததால் துவிச்சக்கரவண்டி மூலம் பயணமானோம். பங்குப்பணி, வீட்டுத்தரிசிப்பு என நாட்கள் நகர்ந்தது.

மீண்டும் பிறந்தது ஓர் தை. 2009 இல் கட்டினோம் பெட்டிபடுக் கையை, புறப்பட்டோம் விசுவமடுவிலுள்ள பிரமந்தனாறுக்கு. ஒரு வாரம் கூடக் கழியாத நிலையில் சுதந்திரபுரம் நோக்கி இடம் பெயர்ந்தோம். வந்தவெள்ளம் இருந்த வெள்ளத்தையும் அடித்துக் கொண்டு போனதைப் போல் மூன்று மாதங்களாகக் குடியிருந்த கரடிப்போக்கு, வேரவில் குழுச்சகோதரிகளையும் இணைத்துக் கொண்டு இரவோடு இரவாகப் பயணம் செய்தோம். ஓர் தாய்மடம் போல் வன்னியிலுள்ள எட்டுக் குழுக்களும் அங்கு சங்கமமாகின. எம்முடன் விடுதிச்சாலை மாணவிகள், மாகாண ஆலோசகர் அருட்சகோதரி. பெனடிக்ரா ஆகியோர் ஒன்றாக, மகிழ்ச்சியாக வாழ்ந்தோம். ஈராறு நாட்களுடன் மீண்டும் இரவோடு இரவாக மக்கள் குடியிருப்புக்கு நகர்ந்து சென்றோம். அருட்சகோதரிகள். லோறன்சியா, றோஸ்மேரி, நான் மூவரும் குடிசை அமைப்பதற்கான பொருட்களைப் பாரவூர்தியில் ஏற்றிக்கொண்டு ஒரு சனிக்கிழமை பகல் பத்துமணிக்கு மக்கள் குடியிருப்பைச் சென்றடைந்தோம். மூன்று மைல் தொலைவை அட்டைபோல் ஊர்ந்து சென்றோம் என்றால் எவ்வளவு நெரிசல் என்பது வெள்ளிடைமலை. சுதந்திர புரத்திலும் மக்கள் குடியிருப்பிலும் பதுங்கு குழிகளைவிட்டு தலை தூக்க முடியாதளவு ஷெல்லும், துப்பாக்கிச் சூட்டு ரவையும் காற்றோடு கலந்து எம் காதுகளைப் பிளந்தது. இதில் செபமாலைத் தாசர்சபை அருட்சகோதரி ஒருவரும் காயமடைந்தார்.

அடுத்த சனிக்கிழமை இரவோடு இரவாக உழவியந்திரம் மூலம் இரணைப்பாலையைச் சென்றடைந்தோம். நாம் அனைவரும் எம் ஆன்மாக்களை ஆண்டவரிடம் ஒப்படைத்து விட்டோம். ஏனெ னில் எறிகணை வீச்சு ஓய்ந்தபாடில்லை. வீதிகள் எங்கும் பிணக் காடாகவும், இறந்த விலங்குகளிலிருந்து வீசும் துர்நாற்றமும், எரிந்து கொண்டிருக்கும் கடைகள், வீடுகளும், இறப்பவர்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயப்படுபவர்களும் மாத்திரமே எம் கண்களின் காட்சிகளாயின. ஆனால் எம் நாவுகள் இறைவனை நோக்கிக் கதற, எம்விரல்கள் செபமாலை மணிகளுடன் போராடியதால், ஓர் கீறல்கூட எம்மீது படாது பாதுகாக்கப்பட்டோம். இரணைப்பாலையில் இருப்பிடம் தேடி அலைந்தோம். ஏனைய இடநகர்வுகளில் பொருட்களுடன் நகர்ந்த நாம், இந்நகர்வில் மாற்றுடையுடன் மட்டுமே புறப்பட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டதால் அடுத்த நிமிடம் என்பது சூனியமாகியது.

ஓர் ஏழையின் மனநிலை மட்டுமல்ல, அடிப்படைத்தேவையே கேள்விக்குறியான ஒட்டாண்டி நிலை. மரியாளும், சூசையும் ஜெருசலேம் நோக்கிப் புறப்பட்டதை ஒத்திருந்தது எம்நிலை. ஒருவாரம் இரணைப்பாலை வாழ்க்கை. மீண்டும் ஓர் பெத்லகேம். ஓர் துண்டு இடம் கேட்டு ஒவ்வொரு வீடாகப் படியேறினோம். இறைவனே தூதர்கள் வடிவில் எமக்கு ஓர் இடம் தந்தார். மாசி பத்தாம் திகதி குடிபுகுந்தோம் வலைஞன்மடத்து எம் புதுமனை யில். வீதியைத் தவிர வீடுபோட இடமில்லை. கடலலை காலில் பட்டு கண்விழிக்கும் அளவுக்கு தற்காலிக கொட்டகைகள், சுடுகாற்றைச் சுற்றி மக்கள். சேமக்காலையில் பாயில் சுற்றி உடல் அடக்கம். அருகில் அன்னை மழலைக்குக் கஞ்சி ஊட்டு வாள். நாளுக்கு நூற்றுக்கணக்கான பிணங்களை பூமி வாய்திறந்து எடுத்துக் கொள்ளும்: இல்லையில்லை, கட்டாயமாகத் திணிக்கப் படும். காயப்படுவதும், கால் துண்டாடப்படுவதும் சாதாரண நிகழ்ச் சிகளாயின "Q" வரிசைகள் பலவிதம்:- மருந்துக்கு, அரிசிக்கு, பால்மாவுக்கு, சீனிக்கு, தண்ணீருக்கு... பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம்.

இது மட்டுமா மலம் கழிக்கக்கூட வரிசைதான். இப்படியான ஓர் அவலநிலை. மரங்களில் இலையுமில்லை, மக்கள் கண்களில் மரக்கறி தென்படுவதுமில்லை. பருப்பும், பச்சையரிசிச் சோறும், தேங்காயில்லா உரொட்டியும் எம் பசியைத் தீர்த்தது. 'பசி, பயம்' இவை எல்லா மாந்தர் உதடுகளிலும். இதயம் துடிக்க மறந்தாலும் மறையாது, மாறாது ஒலிக்கும் இச் சொற்கள்.

மத வேறுபாடின்றி காலை, மாலைத் திருப்பலியும், செபமாலை முதலான பக்தி முயற்சிகளும் ஓயாது தொடர்ந்து கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேயிருந்தன. காலை கண்விழிப்பவர்களில் பலர் இல்லை மாலை கண்துயில. கண்களுமில்லை கண்ணீர் சிந்த. செபமாலை தரிக் காத கழுத்துமில்லை. மக்களோடு மக்களாக வாழ சிந்தை கொண்டோம். கடவுள் சித்தமாகியது. காலம் திட்டமிட்டது. கணங்களும் வழிவிட்டன. எம்மால் முடிந்தவரை மக்களுக்கு ஆறுதலாக இருந்தோம். இறையன்பை, நம்பிக்கையை மேலும் ஊட்டினோம். துன்பங்கள் அதிகம். ஆனாலும் மனதில் நிறைவு, மகிழ்ச்சி, திருப்தி, உள்ளார்ந்த அமைதி கிடைத்தது. கடவுளுக்கு நன்றியும் கூறுகின்றேன்.

“பிள்ளை பெறாத வயிறுகளும், பாலூட்டாத கொங்கைகளும் பேறுபெற்றவை” என்பதன் அர்த்தத்தையும், உண்மைச் சாத்தியத் தையும் நான் கண்டேன், உணர்ந்தேன், மார்த்தாள் போல் பலகாரியங்களை எண்ணி கவலைகொள்ளும் மக்கள் மத்தியில் மரியாள் போல் வாழக் கிடைத்ததையிட்டு மகிழ்கின்றேன். நாளாந்தம் இறப்பவர்கள், காயப்படுபவர்களின் பட்டியல் அதிகரிக்க கண்ணை இமைகாப்பது போல தம் கரங்களுள் எம்மை இறைவன் வைத்துக் காத்தது அவரது அளவுகடந்த இரக்கமே. இறைவிசுவாச அனு பவத்தில் ஆழமாக வளர, துன்பங்களால் புடமிடப்பட்டு எம்மை உறுதிப்படுத்த, இறைவனுக்கு நான் சொந்தம் என்பதை உணர அவரது வல்லமையால், அன்பால் மட்டுமே நான் வாழ்கிறேன் என்பதில் தெளிவுபெற, அவருக்கு நன்றியாக, புகழ்ச்சியாக, பிரமாணிக்கமாக என்றும் வாழ, எதிலும் இறைவனுக்கு மட்டுமே மகிமை என்பதில் நிலைக்க இது ஓர் ஆழமான, அரிய, எல் லோருக்கும் கிடைக்காத சந்தர்ப்பமாகும்.

“எதிலும் இறைவன் மாத்திரமே”.

**அருட்சகோதரி. சுபாஜினி ஞானப்பிரகாசம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணி செய்யக் கிடைத்த போர்க்காலம்

ஆண்டவன் ஆசியுடன் கற்பித்தற் பணியை ஆரம்பித்தேனோ தெரியவில்லை, கல்விப்பணியின் வேளையிலும் பின்னும், மாகாண ஆலோசகராகப் பணிபுரிந்த காலங்களிலும் இந்த அனுபவங்களூ டாகவே பயணித்தேன். இன்று என் நினைவிலிருந்து பல மறைந்தே விட்டன. நினைப்பிலிருப்பவற்றைப் பதிவுசெய்ய முயல்கிறேன். இடங்கள், ஆட்களின் பெயர்கள், கால நேரம் பிழையின்றி அமையுமோ தெரியவில்லை. இருந்தும் எம் வருங்காலச் சொத்தை உரிய முறையில் ஆவணப்படுத்த ஆண்டவர் அருளை வேண்டி நிற்கிறேன்.

**குருநாகலில்.**

1975இல் கொழும்பிலிருந்து செல்லும் எனது யாழ்தேவிப் பயணம் குருநாகலில் தடைப்பட்டது. குருநாகல் மடத்திற்குச் சென்றேன். வழியில் **"தமிழனடா"** என்ற குரல் சிங்களத்தில் ஒலித்தது. குரல் வெளிப்பட்ட நபரை நோக்கித் தடியோடும் பொல்லோடும் கடை வீதிகளிலிருந்து ஓடிவந்து தாக்கினர். எனது கையாலாகாத நிலையிலே மடத்திற்குச் சென்று அச்செய்தியைப் பகிர்ந்தேன். அனுதாபத்தை எதிர்பார்த்த எனது தவறை உணர்ந்து அதிர்ச்சியோடு இரவைக் கழித்தேன்.

**யாழ் நகரில்.**

1977 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நின்றேன். கொழும்பிலிருந்து வவுனியா வரையாக உள்ள தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து வந்திருந்தனர். என் நினைவின் படி தற்போதைய புனித சவேரியார் குருமடத்தில்தான் அம்மக்கள் தங்கினர். உணவு, உடை, படுக்கை விரிப்புக்களுடன் அம்மக்கள் அரவணைக்கப்பட் டனர். அன்று யாழ் மறைமாவட்ட குரு முதல்வராக இருந்த மைக்கல்சாமி அவர்கள் 'தமிழ் மக்கள் வவுனியா எல்லையிலிருந் தும் விரட்டப்படுகின்றனரே!' என்று பெருமூச்சுடன் சொன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் இன்றும் என் காதில் எதிரொலிக்கின்றன. இன்றைய அவல நிலை என்றாவது ஏற்படும் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள்.

**வவுனியாவில்.**

1975லிருந்து வவுனியாப் பாடசாலையில் ஆசிரியப்பணியை ஆரம்பித்தேன். எமது சங்கீத ஆசிரியர் திரு. நடராஜா, கடமையின் பொருட்டுக் கல்வி அமைச்சிற்குச் சென்றவர் பிணமாக வந்தார். அநுராதபுரத்தில் புகையிரதம் தரிக்கையில் அதில் நுழைந்த கொலையாளிகளின் வாள் வெட்டில் சாய்ந்தவர்களில் அவரும் ஒருவர். சாந்தமே வடிவான அவரை தமக்கு இரையாக்கக் கூடா தென அந்தக் கண்ணற்ற வாள்களுக்கும் கத்திகளுக்கும் தெரிய வில்லையே. அதையறிந்து அதிபர் அருட்சகோதரி.வலன்ரைன், ஆசிரியர்கள், மாணவர்கள் கதறத் தொடங்கினர். நடந்து சென்ற வரைப் பிணமாக வரவேற்று சுடலைக்கு அனுப்பிவைத்தோம். வலியோடு பயப்பிராந்தி அனைவரையும் ஆட்கொண்டது. தொடர்ந்து அளவை புகையிரத நிலைய அத்தியட்சகர் பயஸ் அடிகளாரின் சகோதரன், அநுராதபுர இந்துக்கோவில் குருக்கள் என்று பலருக்கும் இக்கதியே என்ற செய்திகள் ஓயாது ஒன்றன் பின் ஒன்றாக வரத்தொடங்கின.

காந்தீய பிரமுகர்களான வைத்தியர்இராஜசுந்தரம்,திரு.டேவிட் போன்றோர் தலைமையில் இடம்பெற்ற இரங்கல் கூட்டத்தில் வாசிக்கப்பட்ட நீண்ட படுகொலைப்பட்டியல் பலரை ஓலமிட்டு அழவைத்தது.அது இன்றும் மறக்க முடியாது கண்முன்னே நிழலாடுகிறது.

**மன்னாரில்.**

1978 இல் மன்னார் மடத்திற்கு மாற்றலாகிச் சென்றேன். 1981இல் யாழ் நூலகம் எரிக்கப்பட்டது. தாவீதடிகளின் மரணமும் அரங்கேறியது. மக்கள் மனதில் தீ கனன்று கொண்டிருந்தது. மன்னார் விளையாட்டு அரங்கில் நிகழ்ந்த கூட்டமும் நடைபெற்ற நிகழ்வுகளும் என்னதான் நடக்கப்போகின்றதோ என்ற சொல் லொணா அச்சத்தை ஏற்படுத்தியது. இளைஞர் பலர் வீராவேசத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் தத்தமது கரங்களைக் கீறி இரத்தம் எடுத்து தமக்குத் திலகமிட்டுச் சபதம் செய்தனர். இந்த நிகழ்வுகள் துவக்கும், வாளும் இன்றியே மக்களது உயிரைக் குடிக்கத் தொடங்கின.

**வெலிக்கடைச் சிறைச்சாலையில்.**

1983இல் குட்டிமணி, தங்கத்துரை என ஐம்பத்து மூன்று தமிழ் இளைஞர்களது உயிர்கள் பறிக்கப்பட்ட விதம் நாம் விலங்குகளாக மாறிவிட்டோமோ என்ற வினாவை எழுப்பியது. 'நானில்லாவிட்டாலும் என் கண்களேனும் தமிழ் ஈழத்தைப் பார்க்கட்டும்' எனக் கண்தானம் செய்த குற்றத்திற்காய் கண்கள் பிடுங்கப்பட்டு வீதி வழியே இழுத்துச்செல்லப்பட்டார். எங்கும் கலவரம் மூண்டது. இடப்பெயர்வுகள் அதிகரித்தன. எங்கும் அவலம். எங்கும் மரண ஓலம். தள்ளாடி இராணுவ முகாமைத் தாண்டி உள்நுழையவோ வெளியேறவோ முடியாது. நாமும் மடத்துக்குள் முடங்கிக்கிடந்தோம்.

ஊரடங்குச்சட்டம் மக்களைச் சுட்டுத் தள்ளவோ? எம்மடத்து வீதிகளில் இடைவிடாது வலம்வந்து கொண்டே இருந்த இராணுவ ரோந்துகளால் மயான அமைதியும் பயப்பிராந்தியும் ஒவ்வொருவர் மனதிலும் குடிகொண்டது. சில நாட்களின் பின் கல்வி அமைச்சுக்குச் சென்று திரும்ப வேண்டிய கட்டாய நிலை. மீண்டு வந்த என் காதில் இன்றுமே ஒலித்துக்கொண்டிருக்கும் வசனம் **"நீர் போனதோடை மன்னார் சரித்திரமே மாறிப்போட்டுது"** என்று அருட்சகோதரி தியோபனின் கூற்று.பேருந்திலிருந்து இறக்கி நிரைப்படுத்தப்பட்ட முப்பத்தொரு ஆண்கள் சுட்டுக்கொல்லப் பட்டனர். எனது மாணவி ரோஹினியின் கணவரும் அதில் ஒருவர். தொடர்ந்து வட்டக்கண்டல், குமுழமுனை, செட்டிகுளம் போன்ற பல இடங்களுக்குப் படுகொலைகள் மிக வேகமாக நகர, கால்கள் நகர மறுக்கிறதே என்று மக்கள் அங்கலாய்த்தனர்.

**வங்காலையில்.**

1984 தை 6ஆம் திகதியே தமது கடைசி உறக்கம் என்பதை குருவானவர் எண்ணவில்லை. அருட்தந்தை பஸ்ரியன் அடிகளாரும் அவருடனிருந்த இளைஞர்களும் கையில் தூக்கிக்காட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபமாலையுடன் சுடப்பட்டு இழுத்துச்செல்லப்பட்டனர். இதைக் கண்டவர்களுக்கு குமுறி அழக் குரல் வரவில்லை. அடுத்தநாட் காலை இச்செய்தியைக் கூறியவர் **“அழுவதற்கும் சுதந்திரம் அற்றவராய் அடங்கி ஒடுங்கிப் பதுங்கி இருந்தோம்”** என்றார். “தெய்வமே! இந்நிலை எவருக்குமே வேண்டாம் என மடத்திலிருந்த நாம் அனைவருமே மௌனத்தில் கூக்குரலிட்டோம்” என்று வங்காலை மடத்து அருட்சகோதரிகள் அழுது கண்ணீர் வடித்தனர்.

**கொழும்பில்.**

1984இல் இடமாற்றக்கடிதத்துடன் பம்பலப்பிட்டி புனித மரியாள் பாடசாலைக்குச் சென்ற நிலை இன்னொரு வகை. பற்பல சோதனைச் சாவடிகளைக் கடக்கப் பல மணிநேரங்கள் எடுக்கும். கூட்டிற்குள் நடக்கும் சில உடற் சோதனைகள் அநாகரிகமானவை. இருப்பினும் போய்த்தான் ஆக வேண்டும். எனவே பல பொருட் களை மடத்தில் வைத்துவிட்டு அவசியமானதை மட்டும் கொண்டு சென்றேன். ‘உண்மைக்கான கல்வி’ (Education to Reality) என்ற கருத்தரங்கை சகோதரிகள் அக்குவைனஸ், பொனவெஞ்சர் உதவி யுடன் எமது மாகாணம் முழுவதற்கும் நடாத்தினோம். மலேசியா விலிருந்து கொணர்ந்த ஆவணங்கள், பதாதைகள்,நாமே தயாரித்த மிக நீண்ட படங்கள் அனைத்தையும் பத்திரப்படுத்தி வைத்துவிட்டு சென்றேன். ஆனால் அவற்றைத் திரும்பப் பார்க்கவே முடிய வில்லை.

**அருமைத் தந்தையின் இறுதிச்சடங்கு.**

1985இல் என் தந்தையின் மரணச்செய்தி எட்டியது. அருட் சகோதரி மொறின் கொலின்சுடன் பேருந்தில் சென்றேன். நடுவழியில் இந்திய அமைதிப்படை மறித்தது. துறவிகள் எம்மைக் கண்டதும் அவர்களின் கோபம் தலைக்கேறியது போலும். துவக்கு எம்மை நோக்கி நீண்டது. “You God’s people make all these”. ‘கடவுளின் மக்கள் உங்களால் தான் இதுவெல்லாம் என்று பேசி இறங்கும்படி ஆணையிட்டனர். சரித்திரம் முடிந்தது, என்ற நிலையில் ஒருவரை ஒருவர் பார்த்தோம். பேருந்து புறப்படத் தொடங்கியதும் இன்னொருவர் வந்து எம்மை ஏறச்சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அன்புத் தாயின் இறுதி அஞ்சலி.

ஆன்மீக வாழ்வின் பட்டப்பின் படிப்பை உரோம் அஞ்சலிக்கம் பல்கலைக்கழகத்தில் பயின்ற வேளை எனது 25 வருட துறவற நன்றி விழாவின் பொருட்டு முப்பது நாட்கள் ஞான ஒடுக்கம் கிடைத்தது. இலண்டன் லொயலா இல்லத்தில் (Loyala Hall) தொடர்ந்தேன். நடுப்பகுதியில் அன்னையை ஆண்டவன் அழைத்த செய்தி வந்தது. இறுதிச் சடங்கில் பங்குகொள்ள அனைத்து ஏற்பாடுகளையும் சபைத்தலைவி மேரிசிலேவன் செய்துவிட்டார். ஆனால் யாழ்ப்பாணத்திற்கோ, வீட்டிற்கோ போகமுடியாத நிலை என அறிவித்தல் வந்தது. அருமைத்தாயின் உடலைத்தானும் பார்க்கப் பாக்கியம் கிடைக்காதென்றால் செல்வதற்கு என்ன அவசரம் என்று நானாகவே பயணத்தை நிறுத்திவிட்டேன்.

### வவுனியாவில்.

1989இல் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் கொத்தணி அதிபராகக் கடமையாற்றும் படி மாற்றம் வந்துவிட்டது. பயணக்கஷ்ட நிலை. அன்று கொழும்பில் நின்ற கல்விப்பணிப்பாளர் திரு.நவரட்ணராஜாவின் வாகன உதவியுடன் ஒருவிதமாக வவுனியா வந்து சேர்ந்தேன். வந்த ஒரு மாதத்திலேயே அனர்த்தங்கள் ஆரம்பமாகி விட்டன.

கொத்தணிப்பாடசாலைகளின் ஆண், பெண் மாணவத்தலைவர்களுக்கான கருத்தரங்கு எம் மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மடத்து வீதியில் பாரிய கிளைமோர் ஒன்று வெடித்தது. அது பதின்மூன்று இராணுவத்தினரைப் பலியெடுத்தது. ஒரே பதற்றம். அனைவரும் வீழ்ந்து குப்புறப் படுத்தனர். சிறிது நேரத்தின்பின் மாணவர்கள் ஒருவாறு வீடு சென்று சேர்ந்தனர்.

### நகரம் மயானக் காடாகியது.

1990 ஆனி 13 புனித அந்தோனியார் திருச்சுரூப ஆசீர்வாத வேளை குண்டு வெடிப்புச் சத்தம் காதைத் துளைக்க நகர் அல்லோல கல்லோலப்பட்டது.வீடு வீடாய்ப் புகுந்த இராணுவத்தினர், அனைவரையும் துவக்குக்கு இரையாக்கிக் கொண்டிருந்தனர். சுகாதாரப் பரிசோதகர் திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரும் சுடப்பட்டனர். சூசைப்பிள்ளையார்குளம், சகாயமாதா புரம் வீதிகள் எங்கும் பிணங்கள். பண்டாரிகுளத்தில் கிணற்றிலே குளித்துக்கொண்டிருந்த 21 வயது இளைஞனான டேவிட் நாகநாத னின் மகன் குண்டு பாய்ந்து இறந்தார். பலர் இடம் பெயரத் தொடங்கிவிட்டனர். வேப்பங்குளம், சிதம்பரபுரம், கூமாங்குளம், ஈச்சங்குளம், கோமரசன்குளம், நெளுக்குளம், பூந்தோட்டம் போன்ற பல உட்கிராமங்களில் ஓடி மறைந்தனர் மக்கள்.

சுடப்பட்டவர்களைப்புதைக்க எவரும் முன் வரவில்லை. துணிந்த எமது அருட்சகோதரிகள் ஆமண்டீன், அமலி, பசில், லூயிஸ் உட்பட குருவானவர் சேவியர் குருஸ், சட்டத்தரணி சுவர்ணபாலா போன்ற சிலர் முன்வந்து துணிகளில் சுற்றி அண்மையிலிருந்த சேமக்காலையில் வெள்ளைக்கொடி பிடித்த நிலையில் புதைத்துவிட்டு வந்தோம். பாடசாலை, மடம்கோவில் முற்றங்கள் அனைத்தும் பாதுகாப்புத் தேடிய மக்களால் நிரம்பி வழிந்தன. இருந்த பொருட்களைக் கொண்டு கஞ்சி காய்ச்சி அங்கிருந்தவர்களுக்கு கொடுத்த நினைவும் உண்டு.

**அனர்த்தங்கள் தொடர்ந்தன.**

கடைகள் எரியூட்டப்பட்டன. கொள்ளை, சூறையாடல் என்பன கடைகளில் மட்டுமல்ல வீடுகளிலும் நிகழ்ந்தன. இரண்டு மாதங் களாக சிலர் பகலில் வீட்டுக்குச் சென்று இரவில் கோயிலுக்கு வந்துவிடுவர். இந்நிலையில் கல்விப்பணிமனை ஆவணங்கள், வேறு சில முக்கியமான பொருட்களுடன் வெள்ளைக் கொடியின் உதவியுடன், தள்ளுவண்டியில் ஆசிரியர் தெய்வேந்திரன், கந்தப்பு, செல்வராசா என்போரின் உதவிக்கரத்துடன் கொண்டு வந்து எமது பாடசாலையில் வைத்துப் பாதுகாப்பளித்தோம்.

**கல்விப்பணிமனையும் கற்கையும்.**

சில நாட்களின் பின் கல்வி அதிகாரிகள் நாகராசா, அருளானந்தம், கல்விப் பணிப்பாளர் நவரட்ணராசா ஆகியோர் வந்தனர். எமதுபாடசாலை கல்விப்பணிமனை ஆகியது. கச்சேரியிலிருந்து பணம் எடுத்து வந்து ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கினர். மக்கள் சாந்தசோலை, பூந்தோட்டம் வழியாக வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிக்குச் சென்றனர். பிரதான வீதிகள் யாவும் மூடப்பட்டு விட்டன. பதின்மூன்று நகரப்பாடசாலை இணைந்து எமது பாடசாலையில் சிறிது கல்வி பயின்றனர். இரவு வேளை பணத் தைப் பாதுகாத்துக் கொடுக்கும் வேலையை அருட்சகோதரிகள் மேற்கொண்டனர். மறுக்க முடியாத நிலை. மனச்சுமை.இறைவன் துணையுடன் உறங்கச் செல்வோம். நகரம் ஆறு மாதங்களில் ஓரளவு சுமூகமான நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. ஆனால்...

**யாழ்ப்பாண இடப்பெயர்வு**

1995இல் வரலாறு காணாத இடப்பெயர்வு ஒன்று ஏற்பட்டு மக்கள் வன்னி, மடுப்பகுதி ஊடாக வவுனியாவிற்குள் நுழையத் தொடங்கினர். வன்னிப்பகுதியில் அலைந்தலைந்து தாம் கட்டிய வீட்டை மீண்டும் பார்க்க முடியாது கண்மூடியவர் பற்பலர். இவர்களில் எனது அண்ணன் குடும்பமும் ஒன்று. பதினேழாவது தங்கு மனையாக மன்னார் கீரியை அடைந்தனர். அண்ணனுக்குத் திடீரென்று ஏற்பட்ட காய்ச்சலுக்கும் அதற்கு தவறுதலாக ஏற்றப்பட்ட மருந்துக்கும் இரையாகி பூமித்தாயுடன் சங்கமித்து விட்டார்.

**நுழைவாயில் தாண்டிக்குளம்.**

வவுனியாவிற்குள் வந்து போக, வவுனியாவிலிருந்து வேறு இடங்களுக்குச் செல்ல "பாஸ்" நடைமுறை அறிமுகமானது. இராணுவ அனுமதி அட்டை பெற மக்கள் தவம் கிடந்தனர். எங்கும் சோதனைச் சாவடிகள் முளைத்தன. இருபத்து மூன்று வகையான பாஸ் நடைமுறைக்கு வந்தது. தெரிந்தவர், தெரியாதவர் அனைவரும் எமது உதவியை நாடினர். பிணை நின்று வவுனியாவிற்குள் எடுத்து விடும்படி பலர் செய்தி அனுப்பினர். பாடசாலைகள், குட்செட் (அரச களஞ்சியம்), பிறவுண் கொம்பனி என்பன பாஸ் வழங்கும் மையங்களாகின. இவை யாவற்றிற்கும் இராணுவத்தினர்,காவல்துறை அதிகாரிகள் தெய்வங்களாக மாறினர். மரணத்தின் வாயில் நுழைந்து தப்பி வரலாம். ஆனால் சில திறமைமிக்க இராணுவத்தினரிடமிருந்து மீள்வதற்கு (பகீரதப் பிரயத்தனம்) தவம் கிடக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாணவரின் பரிதாப நிலை.

மாணவர்கள் நாள்தோறும் வந்துகொண்டே இருந்தனர். வகுப்பறைகள், தளபாடங்கள் பற்றாக்குறை என்று சொல்வதை விட அறவே அற்ற நிலை என்பதே பொருந்தும். முப்பத்தைந்து மாணவர்களுக்குரிய வகுப்பறையில் 65-70 மாணவர்கள் இணைக்கப்பட்டனர். மண்டபங்கள், ஓடைகள், சைக்கிள் தரிப்பிடங்களில் பாய்கள் விரிக்கப்பட்டு உட்கார்ந்து கற்ற நிலை. பாடசாலைக்கு வந்து பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏங்கிப்போய் விட்டனர். உடனே வெற்று நிலமாக இருந்த தனியார் நிலத்தில் ஐந்து தற்காலிக மண்டபம் 100×20 அடியில் அமைத்து உதவினர்.

**"காலத்தின் கண் செய்த நன்றி ஞாலத்தில் மாணப் பெரிது"** பெரியதொரு சுமை இறங்கிய உணர்வு. ஆனால்...

### இரண்டு பாடசாலை

மென்மேலும் மாணவர் தொகை அதிகரித்துக்கொண்டே இருந்தது. அனைத்துப் பாடசாலைகளிலும் அதே நிலை. எமது பாடசாலையில் 4000-5000ற்கு இடைப்பட்ட மாணவர் தொகையினராயினர். ஒவ்வொரு கற்றல் நிலையத்திலும் இரண்டு பாடசாலைகளை நடத்த வேண்டும் என்று கல்விப்பணிமனையிலிருந்து கட்டளை வந்தது. அதாவது காலை ஆறு மணி தொடக்கம் மாலை ஏழு மணிவரை பாடசாலை (1-9), (10-13) நடத்த வேண்டிய கட்டம் வரும் என்பதை எவரும் எண்ணியிருக்கவில்லை. எமது பாடசாலையில் நிலமே இல்லை. 4000ற்கும் மேற்பட்ட பிள்ளைகள் சுத்தமான காற்றைச் சுவாசிக்க முடியாத நிலை. இரண்டு பாடசாலை நடத்த முடியாத நிலையை அறிவித்தும் பணிப்பாளர் நடத்தவே வேண்டும் என்றார். மாகாணக் கல்விச் செயலாளர் சுந்தரம் டிவகலால் வந்தார். ஆணை பிறப்பித்தார். "நீர் இரண்டு பாடசாலை தொடங்கினால்தான் ஏனையோரும் ஆரம்பிப்பர்" என்று கட்டாயப்படுத்தப்பட்டேன்.

தொடங்கி ஒரு சில மாதங்கள் ஓடின. ஒழுக்கப்பிரச்சினைகளும், சுகவீனமுறும் மாணவர்தொகையும் அதிகரித்தது. நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பாடசாலைகட்கு சமூகமளிக்க வேண்டிய நிலை முடியாத விடயமாயிற்று. வருவது வரட்டும் என்று ஒரு பாடசாலையாக ஆக்கி விட்டேன். ஒவ்வொரு வகுப்பும் விறாந்தை பகுதிகள் உட்பட 80-70ற்கு இடைப்பட்ட மாணவர்களுடன் குழு நிலைக் கற்பித்தல் இடம்பெற்றது. மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி. பெரியதம்பி வந்து பார்வையிட்டு ஏங்கிப்போய்விட்டார். அத்துடன் தரம் ஐந்தில், 156 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் இருப்பது உண்மையா என்று தகுந்த ஆவணங்களைப் பார்வையிட்டுச் சென்றார்.

**தொண்டராசிரியர்கள் கோகுலதாஸ், யசோதரன்**

இடம் பெயர்ந்து வந்த மாணவர்களிடம் எந்த ஆவணமும் இல்லை. வாய் மூலம் நம்பிச் சேர்க்கலாம்தான். தராதரம் எதுவென அறிய வேண்டுமே! கோகுலதாஸ், யசோதரன் ஆகியோர் தொண்ட ராசிரியராக வந்து சேர்ந்தனர். இரவு பகலாகப் பணியில் ஈடுபட்டனர்.

**தொண்டராசிரியரின் அளப்பரிய பணி.**

வினாத்தாள்கள் தரமறிய தயாராகிவிடும். வருபவருக்கு பரீட்சை நடைபெறும். இரவில் தரமிடுவர். அடுத்தநாட் காலை வகுப்பிற்கு அனுப்பப்படுவர். பொறுப்புணர்வுடன் செயற்பட்ட இவர்கள் யாருக்காகப் பணி புரிந்தனர். அடிக்கடி என்னை நானே வினாவுவேன். "இறைவா! நீதான்" என்பேன்.

வந்த மாணவர்களுக்கு இடமில்லை என்றால் மயங்கிவிழும் நிலை. அத்துடன் பல நாட்களாக போசாக்கின்மை. இவர்களுக்கு இலைக்கஞ்சி சமைத்துக் கொடுக்கப் பெற்றோர் சிலர் முன் வந்தனர். வெளிநாட்டிலிருந்தும் இந்நிலையறிந்த ஒரு சில என் உறவினர், பழைய மாணவர் சங்கத்தினூடாக உதவி செய்ய முன் வந்தனர். பிள்ளைகளின் உயரம், நிறை அவதானிக்கப்பட் டது. சுகாதார முறைப்படி மருந்து கொடுக்கப்பட்ட பின் கஞ்சி வழங்கப்பட்டது. காலப்போக்கில் மாணவரின் உடல் நிலையிலும் கல்வியிலும் முன்னேற்றம் காணப்பட்டது. தெய்வம் தனது பிள்ளைகளுக்கு உதவுபவரைத் தானே கவனிக்கிறார் என்பது உறுதியாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளைமோர் தாக்குதலும் வசந்தனின் மறைவும், அனர்த்தம், குண்டுவெடிப்பு.**

எமக்கு உதவிய பாராளுமன்ற உறுப்பினர் வசந்தன் சென்ற வாகனம் வவுனியாச்சந்தி சூசையப்பர் திருச்சுரூபத்தின் முன்னால் தாக்குதலுக்கு உள்ளாகியது. பலர் உயிரிழந்தனர். வசந்தனும் ஒருவர். இந்தப்பயங்கரச் சத்தம் பாடசாலையைக் கலக்கியது. மாணவர் பயந்தடித்து ஓட ஆரம்பித்தனர். பெற்றோர் படையெடுத்து வந்தனர். அவர்களைத் தேற்றி கடைசி மாணவியைப் பெற்றாரின் கையில் ஒப்படைக்கும் வரை எனக்கு உதவிய ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர் ஆசிரியர் திருமதி.சண்முகம்.

**ஒன்றுகூடல் மண்டபமும், அதை அடுத்துள்ள வீட்டில் பாரிய குண்டு வெடிப்பும்.**

அக்காலத்தில் வவுனியாவில் இயக்கம் ஒன்றின் பிரமுகர்களில் ஒருவர் அலுவலகத் தொலைபேசியை தகாத முறையில் பாவிக்க முனைந்தார். அதற்கு நான் சம்மதிக்கவில்லை. எனவே கேட்போர் கூடத்தை இரவு வேளைகளில் இயக்க வேலைகளுக்கு ஒப்படைக்கும்படி ஆணையிட்டார். பெண் பிள்ளைகளின் இடம் தயவாக மன்னிக்கும்படி கேட்டேன். கோபத்துடன் சென்றார். இரவு வேளையில் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு அவர்களது பாவனை தொடரும். மறு நாட் காலையில் சுகாதாரத் தொழிலாளிக்கும் எனக்கும் பல மணி நேர வேலைகள் காத்திருக்கும். அதுவரை மாணவர் கற்க இடமின்றி வெளியில் நிற்பர். கல்விப் பணிமனையும் ஒன்றும் செய்ய முடியாதென கைவிரித்தது.

அரசியற் பிரச்சினை ஆக்கினால் ஆசிரியர்கள், மாணவிகள் பலரின் உயிருக்கு உலை வைக்கப்படும். கடைசியில் கடவுள்தான் எனத் தஞ்சமென்றடைந்தேன். மூன்று இரவு வேளைகளில் யேசுவின் கிட்டாத திரவியமான திருநாம செபத்துடன் பல மணித்துளிகள் செலவிட்டேன். மூன்றாவது நாட் காலை அனைவரும் கடுமையாக கற்றலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கேட்போர் கூடத்தின் மேல்மாடிகள் இரண்டிலும் பத்து வகுப்பறைகள் இயங்கிக்கொண்டிருந்தன. பக்கத்து வீடொன்றிலிருந்து வெடிச்சத்தம். வகுப்பறைகள் எங்கும் துகள்கள் வந்து விழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களும், ஆசிரியர்களும் அலறியடித்துக்கொண்டு ஓடி வந்தனர். பெற்றோரும் வந்துவிட்டனர். அயற்பாடசாலை அதிபர் குறிப்பாக அதிபர் இராசரட்ணம் வந்தார்.இறை,மனித பலம் எமக்கு வலுவூட்டியது. இராணுவமும் வந்தது. 'பயப்பட வேண்டாம், நாம் காவலாய் இருக்கின்றோம்' என்றனர். அந்த வீட்டில் கூட்டம் நடாத்திக்கொண்டிருந்த முன் குறிப்பிட்ட இயக்கத்தின் முக்கி யஸ்தர் பலரின் உயிரும் பலியாகிவிட்டன. மனதை மாற்றும் படிதான் இறைவனிடம் விண்ணப்பித்தேன். ஆனால் தெய்வமே! "உன்னைத் தொடுபவன் என் கண்மணியைத் தொடுகின்றான்"என்ற உமது திரு வார்த்தையை நினைத்துக்கொண்டேன்.

**விபுலானந்த புலமைப்பரிசில் நிதியம்.**

விபுலானந்தர் நூற்றாண்டையொட்டி இது ஆரம்பிக்கப்பட்டது. கல்விப்பணிப்பாளர் திரு.தவரட்ணராஜா அவர்கள் இந்நிதியத்தின் தலைவர். அதே இயக்கப்பிரமுகர் ஒருவர் வந்து "நீர் தானே பொருளாளர்? நிதி எவ்வளவு இருக்கிறது?" என என்னை வினவினார். "எவ்வளவு நிதி இருக்கிறது என்று சொல்ல நிதிக் குழுவுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது" என்றேன். வாதாடினார். 'யாருடன் பேசுகிறீர்' என்று விறுவிறு என எழுந்து "உன்னைப் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று கூறிச் சென்றார். உடனடியாக கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்தேன். அடுத்த நாள் கல்விப்பணிப்பாளருக்கு இடமாற்றக்கடிதம் வந்தது. உண்மை நீதியுடன் அனைத்துப் பாடசாலைகளையும் முன்னேற்றியவர் புலமைப்பரிசில் நிதியை முன்னிட்டு பழிவாங்கப்பட்டார். முடக்கம் ஏற்பட்டது. இவரைத் தொடர்ந்து தியாகராசா பொறுப்பேற்றார்.

**பொறுப்புக்கூறல்.**

அதிகாரங்களைக் கையிற்கொண்ட ஐந்து வகையானவர் களுக்கு நான் வகை கூற வேண்டிய இக்கட்டான நிலை. ஒரு நாள் வேறு இயக்கத்தைச்சேர்ந்த ஒருவராக இருக்க வேண்டும், விசாரிக்க வந்தார். மாணவர், ஆசிரியர் வெளியேறியதுடன் நானும் அலுவலகத்தைப் பூட்ட ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். அவ் வேளை எமது பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளுக்கு உதவு பவர், வேறு ஒரு கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர். வந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய ஒழுக்க விடயத்தைப்பற்றி இரகசியமாக விசாரித்து விட்டு இரகசியமாக வெளியேறினார். அடுத்தநாள் அந்த ஆசிரியரைப்பற்றிய தவறான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அவற்றை அகற்ற முனைந்தவருடன் நானும் இணைந்தேன். அந்த வீதி வழியே சென்ற பொதுமகன் ஒருவர்" அவனுடைய முதுகுத் தோலை உரியுங்கள்" எனக்கூறிச் சென்றார். இவ்வாறு பற்பல...

இன்னொருநாள் குண்டுவெடிப்பிற்கு முன்னதாக இருக்கலாம். மலசல கூடத்திற்குட் சென்ற பிள்ளைகள் ஓடி வந்து ஒருவர் கத்தியுடன் உள்ளே நிற்பதாகக் கூறினர். சென்று பார்த்தேன் உண்மையாய் இருந்தது. அதுவும் அதே இயக்க உறுப்பினர் போன்று தெரிந்தது. இறைவனிடம் பாரத்தை சுமத்திவிட்டு சுத்திகரிப்புத் தொழிலாளியுடன் அவ்விடத்தை கவனிப்பதில் ஈடுபட்டேன். ஒரு சில மணித்தியாலத்தின் பின் எதுவும் தென்படவில்லை.

இவ்வளவு தடைகளுக்கு மத்தியிலும் என்ன ஆச்சரியம்! கற்றல் சீராக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஏழைகள், கஸ்டப்பட்டவர்கள், பின் தங்கியவர்கள் யாவரும் விசேட ஆசிரியர்கள் மூலம் கவனிக்கப்பட்டனர். இரகசியம் என்னவெனில் இவர்கள் முன்னேற ஏனைய மாணவர்களும் தாமாகவே முன்னேறினர். தொகையிலும் தரத்திலும் இன்றைய காலகட்டத்தில் வடகிழக்கு மாகாணத்து கல்லூரிகளில் எங்கள் பாடசாலை முன்னிலையில் இருப்பதாகவும் தான் அதைப் பார்க்க வந்ததாகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கூறிச்சென்றார். ஆனால் உண்மை இறைவனின் இரக்கச் செயலேயன்றி வேறொன்றுமில்லை.

**லொறியில் சென்று வரல்.**

கல்விக்கோ, உட்கட்டுமானத்திற்கோ வந்த பணத்தை திருப்பிச்செல்ல விடாது அனைத்துப்பாடசாலை அதிபர்களையும் ஊக்கப்படுத்துவதில் அன்றைய கல்விப்பணிப்பாளர் திரு. நவரட்ணராஜா வல்லவர். இவரைப்பற்றி மாகாணக் கல்விப்பணிப்பாளர் செல்வி. பெரியதம்பி அவர்கள் அதிபர் கூட்டத்தில் கூறியது மறக்க முடியாது. 'நகர்ப்புறப் பாடசாலைகள்" தான் கவனிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன என்ற முறைப்பாட்டினால் வந்தேன். ஆனால் கிராமத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் கட்டிடங்கள் எழுந்துள்ளன என்றும், சுனாமியில் வந்த பணத்திலும் பல பாடசாலைகளை உயர்த்தியதையும் அவதானிக்கிறேன்" என்றும் அவரைப் பாராட்டினார். நான் எனது பாடசாலைக் கட்டட ஒப்பந்தக் காரர்களுடன் லொறியில் சென்று கொழும்பிலிருந்து பொருட்களு டன் வரவேண்டியிருந்தது. அனைத்து அதிபர்களும், இயக்கங்க ளுக்கும் இராணுவத்திற்கும் பயந்த நிலை. எல்லோருக்கும் இறைவன் கொடுத்த ஒரு வாழ்வை வாழ்ந்துவிட விருப்பம் தானே!

## இருபத்து மூன்று விதமான பாஸ் நடைமுறை.

வவுனியாவிற்கு வந்து போக, கொழும்பு, வெளிநாடு செல்ல, நிரந்தர, தற்காலிக, வதிவிடப்பாஸ் என இருபத்து மூன்று விதமான பாஸ் நடைமுறை அமுலில் இருந்தது. நிரந்தரமாக வாழ்வோரும் இராணுவ அனுமதி அட்டை பெற வேண்டும். இவர்களது அனு மதிக்கு தவம் கிடக்க வேண்டும். எங்கும் சோதனைச் சாவடிகள் முளைத்திருந்தன. உண்மையிலேயே சாகடித்ததால் தானோ என்னவோ "சோதனைச் சாவடி"என்ற பெயர் வந்தது!

## 1999இல் வெளியேறும்படி வந்த தொலைநகல்.(Fax)

இடப்பெயர்வு அனுபவம் எல்லோருக்கும் உரித்தாகி விட்டது. உடனே பாடசாலைகள் மூடப்பட்டன. காரியாலயத்தில் மாணவரின் ஆவணங்கள் அனைத்தும் உட்பகுதியில் வைத்துப் பூட்டப்பட்டது. விடுதிச்சாலை மாணவர்கள் அனுப்பப்பட்டனர். மடமும் ஒழுங்கு படுத்தப்பட்டது. மடத்துத் தலைவியாய் இருந்த அருட்சகோதரி ஸ்ரெலா 'பொறுத்திருந்து பார்க்கலாம்' என்று நின்றுவிட்டார். மாகாணக்கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு இருக்கவில்லை. கிடைத்த வாகனத்தில் திரு.ராஜ்குமார் என்பவருடைய மோட்டார் சைக்கிளில் திருகோணமலை பாலையூற்றிற்குச் சென்றேன். ஒரு நிரந்தர இடமில்லை என்ற உணர்வு மேலிட்டது. அறிமுகமானவர் களைக் கண்டதும் கண்கள் கண்ணீரை வரவழைத்தன. இடப் பெயர்வை அனுபவித்த திருக்குடும்பத்தின் நினைவு முதலாக வரவில்லை. துறவிக்கே இந்நிலை எனின் பந்த பாசங்களோடு கட்டுண்டு இருப்பவர்க்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இடப்பெயர்வின் பின்விளைவுகள்

சில தினங்களில் செய்தி இரத்துச் செய்யப்பட்டது. சிலர் உடனே திரும்பினாலும் வவுனியா வழமைக்குத் திரும்ப நாள் எடுத்தது. சகாயமாதாபுரம் போன்ற அண்மையிலிருந்த கிராமங்கள் ஒவ்வொரு குழப்பத்திலும் ஓடி வந்து, வகுப்பறைகளைப் பிடித்துக் கொள்வர். சுமூக நிலைக்குத் திரும்பினாலும் பல காரணங்களின் பொருட்டு சுய இடத்திற்குச் செல்ல மறுப்பர். வகுப்பறை சமைய லறையாகிவிடும். தளபாடங்கள் விறகுகள் ஆகிவிடும். கிணற்றில் மோட்டார் போட்டு தண்ணீர் எடுக்க முடியாவிட்டால் நீர் எடுக்கும் அனைத்தும் உடைக்கப்படும். எந்த நிலையிலும் அவர்களது கோரிக்கையை நிறைவேற்றியாக வேண்டும்.

இல்லா விட்டால் செய்யக்கூடிய அனைத்து சேதங்களையும் ஏற்படுத்துவர். திரும்பிச் செல்வதற்கு கச்சேரி பணம் கொடுக் காவிட்டால், வேறு வழி காட்டா விட்டால் அவர்கள் வெளியேற மாட்டார்கள். பாடசாலை நடத்துவது முடியாத காரியம்.

### மடுத்தேவாலய அனர்த்தம்.

1999 கார்த்திகை மாதத்தில் மடுத்தேவாலயம் யுத்தக் களம் ஆகியது. வவுனியா மடத்திற்கு ஓரிரவு அவசர செய்தி மடுவிலி ருந்து வந்தது. மடு அன்னையின் திருத்தலம் தாக்கப்பட்டது. திரு இருதய ஆண்டவர் கோவிலில் அடைக்கலம் புகுந்திருந்த மக்களின் நாற்பது உயிர்கள் உடனே பறிக்கப்பட்டன. பலர் குற்றுயிராயினர். உதவிகள், சீருடைகள், காயங்கள் கட்டும் துணிமணிகள் தேவை என்று அவசரச் செய்தி அனுப்பப்பட்டது. உடனே சகோதரிகள் கிடைத்த பொருட்களுடன் விரைந்தனர். மடுவிலிருந்த மடம் குண்டுகளால் துளைக்கப்பட்டிருந்தது. யாழ்ப் பாண இடப்பெயர்வினால் தஞ்சம் தேடி மடுப்பகுதிக்குச் சென்றவர் பலர் உயிருடன் இல்லை. எஞ்சியவர்கள் இடம் பெயரத் தொடங் கிவிட்டனர். வவுனியாவிற்கும் பலர் வந்தனர். மாணவர் தொகை மேலும் கூடியது. இவை போன்று பல அனுபவங்கள், பல விடயங்கள் இத்தனை வருட ஓட்டத்தில் மறந்து போய்விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தற்காலிக மண்டப காணிக்காரர் போர்க்கொடியுடன் வந்தனர்.**

2004 இல் எனது ஓய்வுக்காலம் இதையறிந்து போலும் வெளிநாட்டிலிருந்து காணி உரிமையாளர்கள் என்னுடன் முரண் பட்டுக்கொண்டு வந்தனர். அயலில் இருந்த அவ் இயக்கத்தின் இருப்பிடம் மூடப்பட்ட படியால் அவர்கள் என்னை நெருங்குவதும் இலகுவாகி விட்டது. கால அவ்காசம் கேட்ட போது ஏற்க முடியாதென்று கூறிவிட்டனர். உடனே காணி வேண்டும் என விடாப்பிடியாய் நின்றனர். ஏற்கனவே மூன்று மாடிக்கட்டடம், தயாராகிக் கொண்டிருந்தது. ஆனால் கால தாமதமாகும். வேலை முடிந்த பின்னும் அதைத் திறந்து வைக்க வேண்டிய பிரமுகரோ, கல்வித் திணைக்களமோ வரவில்லை. குருவானவர் வகுப்பறை களை ஆசீர்வதித்தார். வகுப்பறைகள் இயங்கத் தொடங்கின. மாபெரும் பிரச்சினைகள் மத்தியில் ஏற்பட்ட தடைகளைத் தாண்டிச் செல்ல இறைவன் ஒருவரே துணையாய் இருந்தார்.

இவ்வாறு நாளாந்தம் புதுப்புது அனுபவங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருந்தன. எந்த இயக்கமோ, அரசியல், கல்வி அதிகாரி களோ யார் வந்தாலும் உடனே என் இதயம் "யேசு, யேசு" என்றே இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கும். ஒரு நாள் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் ஒரு நற்செய்தி எனக் கூறிக் கொண்டு வந்தார். இப்பாடசாலை தேசிய பாடசாலை ஆக்கப்பட்டுள்ளது என்பதே அது. என்னைப் பொறுத்தவரை எள்ளளவும் விருப்ப மில்லை. அதற்குப் பல காரணங்கள். உதாரணமாக

இதனால் அதிகாரம் கூடியது. நேரடியாக அரசாங்கம் பணத்தை இலட்சக்கணக்கில் எனக்கு அனுப்பும். அதை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும். ஒரு முறை நூல்நிலையப் பணம் இலட்சக்கணக்கில் வந்திருந்தது. திறமைமிக்க, பற்றுள்ள ஆசிரியர்குழு திறமான, இன்றியமையாத, விலையுயர்ந்த நூல் களை தமக்குக் கிடைத்த கழிவுப்பணத்திற்கும் (discount) சேர்த்து வாங்கி வந்திருந்தார். இதனை அறிந்த கல்விப்பணிமனை அதிகாரிகள், கல்விப்பணிப்பாளர் குலேந்திரன் உட்பட பாட சாலைக்கு வந்த பலர் நூல் நிலையப்பணத்தைத் தம்மிடம் உடனடியாகத் தரவேண்டும் என்றனர். நான் கடிதத்தைக் கொடுத் தேன். நிதியுடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் எடுத்துச் சென்றுவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பழிவாங்கற்படலம் தொடர்ந்தது.**

இந்தப் பழிவாங்கற் படலம் தொடர்ந்துகொண்டேயிருந்தது. அதிபர் கூட்டங்களில் பெயர் குறிப்பிடாது அனைவரும் விளங்கும் முறையில் பாடசாலைப் பணம் களவாடப்பட்டு, இனத்தவர் பலரை வெளிநாட்டிற்கு அனுப்பப் பயன்படுகிறது என்று சாடினர். என் தூய மனதுடன் துணிந்து முன்னேற யேசு எனக்குள் இருந்து பக்கபலமாய் உதவும் உணர்வு என்னுள் வந்தது. ஆசிரியர் வரதன், மாணிக்கதாசன் ஆகியோர் என்னைப் பணிப்பாளரிடம் மன்னிப்புக் கேட்கும்படி ஆலோசனை அளித்தனர். இவர்கள் இருவரும் எமது பாடசாலைக் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர்கள். எவரிடமும் எதற்கும் செல்ல மாட்டேன். பாடசாலைத் தேவைக்கு கூட பணிப்பாளரிடம் போக மாட்டேன். சென்றால் பிழை செய்துவிட்டு மன்னிப்புக் கேட்கச் சென்றதாகக் கதை கட்ட இலகுவாகிவிடும். எனவே மறுத்தேன். மூன்று மாதங்களின் பின் எடுத்துச் சென்ற ஆவணங்கள் அனைத்தும் வந்துவிட்டன. இது ஆண்டவரின் அருட்செயலென்பேன்.

இடம் பெயர்ந்து வந்த மாணவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மண்டபங்கள் கட்டி அளித்திருந்தனர். ஆனால் நான் தன்னிச்சையாகப் பாடசாலை பெற்றோர் அபிவிருத்திச் சங்க (SDS) நிதியைப் பயன்படுத்தியதாக என்மேல் குற்றம் சுமத்தப்பட்டுப் பரிசீலனைக்காக மாகாணக் கணக்காளரை அனுப்பி வைத்தனர். அவர் குற்றப் பத்திரிகையைக் காட்டினார். பிரதிக்கல்விப் பணிப்பாளரின் பாராட்டுக்கள் அடங்கிய எல்லா ஆவணங்களையும் பார்வையிட்ட அவர் எம்மில் தவறு எதுவும் இல்லை எனக் கூறிச் சென்றார். செயலாளர் அனுப்பிய கடிதம் எமக்கு செயற்பாட்டு முன்னேற்ற அறிக்கையாக அமைந்து விட்டது. வேறு பலரும் எமது பாடசாலைக்கே தொடர்ச்சியாக உதவிகள் கிடைக்கின்றன என்று முணுமுணுத்த போது" நாம் எந்தத் தடையைப் போட்டாலும் 'Convent' பாடசாலைக்குக் கட்டடமும் பணமும் வந்துகொண்டே இருக்கின்றன" என விரக்தியுடன் பேசினார் கல்விப் பணிப்பாளர் தியாகராசா. எனக்குச் சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருதும் தங்கப்பதக்கமும் கிடைத்தது. அதன் பாராட்டு விழாவிற்குக் கூட அவர் வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்திருந்தார். இவர் என்னுடன் ஒன்றாக உள்வாரி கல்வி டிப்ளோமா பயின்ற சக ஆசிரியர் என்பது பெரும் வேதனையை எனக்களித்தது.

**60 வயது ஓய்வும் ஓய்வற்ற யுத்தமும்.**

கல்விப் பணியிலிருந்து 2004இல் ஓய்வுபெற முன்பே, மாகாண ஆலோசகராகவும் நியமித்து விட்டனர். ஓய்வு ஓய்வாகத் தெரியவில்லை. ஒருமுறை சபைத் தலைவியின் குழுவுடன் தியத்தலாவை நவ கன்னியர் இல்லத் தரிசிப்புக்குச் சென்றபோது வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. திடீரென இராணுவம் உள் நுழைந்தது. அனைத்து அறைகளும், அங்கிருந்த பொருட் களும் ஆய்வுக்குள்ளாயின. மலசல கூடம் முதலாகத் தவிர்ப்பு இல்லை. சபைத் தலைவி மாக்கிரட் முல்டூண் உட்பட அனைவரும் திகைப்புடன் அடையாள அட்டைகளுடன் முற்றத்திற்கு வந்துவிட் டோம். ஏன் வந்தனர் என்று தெரியவில்லை. இறுதியில் சென்று விட்டனர்.

**மன்னார் விலாசம் பதிந்த அடையாள அட்டை**

வேறு ஒரு முறை தனித்து ஹப்புத்தளை மடத்திலிருந்து தியத்தலாவை மடத்திற்குச் சென்றுகொண்டிருந்தேன். இடையில் மறித்து உள்நுழைந்த இராணுவத்தினர் எனது அடையாள அட்டையில் மன்னார் என்றதைக் கண்டதும் தீயில் மிதித்தவர் போல் வெகுண்டெழுந்தனர். பேருந்திலிருந்து இறங்குமாறு ஆணையிட்டனர். பலவித வினாக்கள், ஆராய்வுகளின் பின் போக அனுமதியளித்தனர். அங்கிருந்த அனைவரும் என்னைக் குற்ற வாளியாக நோக்கினர். சோதனைச் சாவடிகளை நினைத்தாலே பயணம் வெறுத்துவிடும். ஆனால் கடமை வாவென்று அழைத்துக் கொண்டேயிருக்கும். இவற்றையெல்லாம் தாண்டி இறையருள் தென்பு ஊட்டிக்கொண்டே இருக்கும்.

**கடல்வழிப் பயணங்கள்**

தொடக்கத்தில் கொம்படி. அது மூடப்பட்ட பின்பு ஊரியான். கடல்மூலம் சென்று வந்த நிலைகளை நினைக்கின்றேன். பெற்றோல் இல்லாத அக்காலம். வெளியில் தொங்கும் சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய்த்தாங்கியில் சிறிய அளவில் எண்ணெய் இருக்கும். நாம் இருவர். அருட்சகோதரி தியோபானையும் என்னையும் ஏற்றிக் கொண்டு மோட்டார் சைக்கிள் புறப்பட்டது. சிறிது தூரம் சென்றதும் பெற்றோல் அடைப்பு ஏற்படும். தரித்துத் தரித்து ஊதி அடைப்பை நீக்கிச் சென்றோம். கூலியும் அதிகம் தான். கிளாலியை அடைந்தோம். இராணுவத் தாக்குதல்களினால் இரவில்தான் பயணிக்க முடியும் என்றனர்.

அதுவரையும் அங்கு போடப்பட்டிருந்த கொட்டில்களில் இளைப் பாறினோம். போக வேண்டிய நேரம் வந்ததும் ஏறிக்கொண்டோம். உடைகள் நனைந்துவிடும். பயணம் ஆரம்பமானது. எல்லோருடைய கண்களும் மேல் நோக்கின. கிபிர் விமானம் அன்றேல் ஷெல் வருகிறதா? கடலுடன் சங்கமமாகி விடுவோமா? என்ற பயம். அடுத்த கரையை அடையும் நேரம் நாம் அணிந்திருந்தவை அனைத்தும் ஈரமாகிவிடும். இரவு நேரம் குழந்தைகள், நோயாளிகள் நடுங்கத் தொடங்கி விடுவர். உழவியந்திரத்திற்குக் காத்திருக்கையில் நனைந்த உடைகள் உடல் சூட்டிலும் காட்டுக்காற்றிலும் காய்ந்து விடும். சிலர் முறுமுறுப்பை முணுமுணுத்து வெளிப்படுத்துவர்.

சிலர் "எல்லாம் அவன் செயல்" என்று எமக்கு ஒரு நிரந்தர விடுதலையை தெய்வத்திடம் இரந்து நின்றனர். நாமும் அவர்களுடன் இணைந்து உழவு இயந்திரத்தில் பயணத்தை ஆரம்பித்தோம். எமது எலும்புகள் எல்லாம் எண்ணப்படும் பயணமது.

### வான்வழிப் பயணம் எக்ஸ்போ எயார்

இரத்மலானைக்கும் பலாலிக்குமிடையிலான 'எக்ஸ்போ எயார்' விமான சேவை இடம் பெற்றது. ஒரு முறை எமது சபைத்தலைவி மார்க்கிரட்முல்டுன் வந்திருந்தார். மோப்ப நாய்களுக்கு அடங்காதவை பொதிகளுள் இருப்பதையும் பார்த்துவிட திறந்து சோதிப்பர். கூடுகளில் உடற் சோதனை. ஆனால் சபைத்தலைவி வெளிநாட்டவராகையால் சிறிது இலகுவான முறையில் நடை பெறுவது எமக்கு ஆறுதலாய் இருந்தது. எமது புகைப்படங்களை இரத்மலானையில் எடுத்து வைத்திருப்பர். ஒருமுறை இரத்மலானை சோதனை நிலையத்தில் சோதிக்கும் இயந்திரத்தின் ஊடாகச் சென்ற எனது சூட்கேஸ் சத்தம் போட்டது. திறந்து ஒவ்வொன்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிலெடுத்துப் பார்த்தனர். பலருக்கு எடுத்துச் செல்லும் கடிதங்களும் பொதிகளும் ஏராளமாய் இருந்தன. ஒன்றுமில்லை என்றதும் என்னிடம் தள்ளி விட்டனர். மீண்டும் அவற்றை உள்ளே அடக்கினேன்.

என்னுடன் அயர்லாந்தைச் சேர்ந்த அருட்சகோதரி ஆன்மேரி கிளின் உடன் வந்தார். சோதிக்கும் நிலையத்தைக் கடந்து நான் வெளியில் வந்தேன். ஆனால் அவரை என்னுடன் செல்ல அனுமதிக்கவில்லை. அவரும் என்னைச் செல்லும் படி கூறினார். பேருந்தில் ஏற்றினர். விமான நிலையத்திலும் எல்லா சோதனை களும் முடித்து காத்திருந்தேன். அவர் வருகிறாரோ என எட்டி எட்டிப் பார்த்த வண்ணமிருந்தேன். கடைசி நேரத்தில் கொண்டு வந்தனர். ஏன் என்பது இன்னுமே அவருக்கோ, எனக்கோ புரியாத புதிர். இப்படிப்பட்ட ஒரு பயணத்தில் பயணச்சீட்டுப் பெற்று அனுமதி எடுப்பதற்கு கால் கடுக்க நடந்தோ, நின்றோ தவம் செய்தால்தான் அருமை தெரியும். செல்வர்கள் முந்தி விடுவர்.

ஒரு முறை காலநிலை விமானத்தை ஆட்டி அசைத்தது. பாதை தெரியவில்லை. இந்தியாவிற்கோ வேறு எங்கோ போகிறோமோ தெரியவில்லை என்று கதைத்தனர். என்னருகிலிருந்த பயஸ் அடிகளார் **"பெடியன்கள் நினைத்த இடத்தில் ஏறி இறங்குகின்றனர், அவர்களுக்கு எங்கிருந்து அந்தத் திறமை வந்தது"** என்று கூறியது என்காதில் விழுந்தது.

**கப்பற் பயணங்கள்**

கப்பற் பயணத்திற்கு ஆவலுடன் சென்ற எனக்கு வெறுப்புத் தட்டியது பயணம். அன்றைய நிலைகளில் நான் நூல் ஏணி மூலம் மேல் தளத்திற்குச் செல்ல வேண்டும்.அன்று சபைத்தலைவி அருட்சகோதரிமேரி சிலேவனும் உடனிருந்தார். மேல் தளத்தில் வெப்பம் அதிகம். கீழ்த்தளத்தில் காற்றோட்டமற்ற நிலை. காரணம் அது பொருட்கள் ஏற்றியிறக்கும் கப்பல். வேறு ஒரு முறை வசதியாக சமுத்திரத்தினூடாக செல்லும் கப்பல் ஒன்றிலும் பயணம் செய்தோம். வாந்தி எடுக்காதவர் எவருமிலர். எமது குடல்கள் வெளியில் வந்துவிடுமோ என்ற நிலை. எமது உடல் எம்முடன் ஒத்துழைக்க மறுத்தது. சமுத்திரத்தின் நடுப்பகுதியில் கப்பல் மலையிலேறி பள்ளத்தில் விழுவது போன்று அசைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தாலே பயமும் அருவருப்பும். திருகோணமலையை அண்மித்ததும் இயற்கையை ரசிக்க முடியாவண்ணம் அனைத்தும் மறைப்புத் துணிகளால் மறைக்கப்படும். 'ஏன்' என்பதற்குப் பதில் கிடையாது. அங்கிருந்து பேருந்துக்குத் தவமிருந்து பாலையூற்றை அடைவதற்குப் பல மணித்தியாலங்கள் எடுக்கும். வெவ்வேறு அனுபவங்களினூடாகக் காப்பாற்றி வரும் இறைவனுக்கு நன்றி. மக்கள் படும் ஒவ்வொரு வேதனையும் எமக்கும் உரித்தாகியது.

**வன்னிக்கு வாவென்று அழைத்த ஷெல், கிபிர் சத்தங்கள்**

வன்னிக்குப் பல முறை சென்று வந்திருக்கிறேன். ஆனால் வழக்கமாக கேட்டுப் பழகிய சத்தத்திற்கு மாறாக அம்முறை இருந்ததான உணர்வு என்னை உறுத்திக்கொண்டிருந்தது. 2008 வவுனியாவில் கருத்தரங்கிற்கும் அதனைத் தொடர்ந்து ஞான ஒடுக்கத்திற்கும் பல சகோதரிகள் வந்திருந்தனர். வன்னிப் பகுதியில் ஆலோசகர் எவரும் இல்லை என்று அறிந்து மாகாணத் தலைவி யோலண்ட் அவர்களிடம் கூறிவிட்டு அங்கு செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினேன். அருட்சகோதரி ஜீவமலருடன் கடைக்குச் சென்று அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்களை வாங்கிக் கொண்டு மூட்டை முடிச்சுக்களுடன் தாண்டிக்குளத்தை நோக்கிப் பயணமானேன்.

**தாண்டிக்குளச் சோதனைச்சாவடி**

பரிதாபக் காட்சிகள்: அரிசி முதலாக நிலத்தில் கொட்டப்பட்டு சோதனை நடந்துகொண்டிருந்தது. முடிவில் கவலை தோய்ந்த முகத்தினராய் சுமைகளுடன் நடக்கத் தொடங்கினர் மக்கள். பொருட்கள் மட்டுமல்ல உடற் சோதனையும் முடிந்து கலங்கிய கண்களுடன் மற்றைய பயணிகளுடன் இணைந்தேன். ஷெல் விழும் சத்தம், இருட்டு, பயம் என்பன முன்தள்ள பாரச்சுமைகள் பின் இழுக்க ஒருவருக்கு ஒருவர் உதவ முடியாத நிலையில் நடந்தும் ஓடியும் சென்றவர்களுடன் நானும் ஒன்றானேன்.

சிறுவர்கள், குழந்தைகள், வயோதிபர் ஒட்டி உலர்ந்த உடம்பினராய் நின்று நின்று பயணித்த காட்சி என்றுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையாதா! இன்னும் சில நாட்களில் விபத்தொன்றில் சிக்கித் திரும்புவேன் என்று அறியாதவளாய் ஓடியும் ஓட முடியாதவளாக மக்களுடன் அடுத்த சோதனைக் களத்தைத்தாண்டி கரடிப்போக்கு மடத்துக்கு வாகனம் பிடிக்கும் ஆவலுடன் தேடிச்சென்று மக்களுடன் சேர்ந்து விரைந்தேன்.

## கரடிப்போக்கும் இயல்பு வாழ்வும்

குண்டுகள் துளைத்துவிடுமோ என்ற எனது பயத்தை இருட்டு மேலும் அதிகரிக்கச் செய்தது. அங்கு சென்றதும் ஏற்பட்ட மகிழ்ச்சி ஆரவாரம் அப்பயத்தை விரட்டியடித்தது. அவ் ஆரவாரம் அண்மித்துக்கொண்டிருந்த பயங்கர யுத்தத்தை அறியாதவர் போல் எம்மை ஆக்கியது. இரவு உணவுவேளை உணவா? இல்லை சோகக் கதைகளின் களமா? தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. தம்மைச்சூழ நடந்த கதைகள் கொத்துக்குண்டுகளால் ஏற்பட்ட உயிரிழப்பு, அவயவங்கள் துண்டிக்கப்பட்ட அவலங்கள், வன்னியை விட்டு வெளியேறுவதற்குப் படும் பாடுகள், கருணாரட்ணம் அடிகளாரின் இழப்பு, அவரிடம் உதவி பெற்றவர்களின் பரிதவிப்பும் என்று அங்கிருந்த அருட்சகோதரிகள் மலர்விழி, டொமினிக், அமிர்தா, சவேரினா என்போர் என்னுடன் பகிர்ந்தனர்.கதையைத் திசை திருப்பினேன். இரவு நடுநிசியை அண்மித்துக் கொண்டிருந்ததை உணர்ந்து நித்திரைக்குச் செல்ல முனைந்தோம்.

அடுத்த நாட் காலை பூந்தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தனர். இன்னும் சில நாட்களில் இவ்வழகிய பூந்தோட்டம் சுடுகாடாகப் போவதை அறியாதவரா அவர்! அக்காட்சியைக்கண்டு நான் கவலைப்பட்டேனா! இல்லை. அந்நிலையிலும் கடமை தவறா அவர்களின் நிலை கண்டு, அந்தப் பற்றுணர்வு என்னையும் ஆட்கொண்டது.

## முழங்காவில்.

பதினொருமணியாகிவிட்டது. முழங்காவில் பகுதிகளில் பயங்கரமான நிலை. என்ன நடக்குமோ? என்ற அங்கலாய்ப்புடன் பயணித்தேன். அங்கு நான் கண்ட காட்சி என்னைத் தூக்கிவாரிப் போட்டது. இடைவிடாத ஷெல் பொழிவின் மத்தியில் பயண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயத்தம் நடந்தது. காலை உணவும் இல்லை. என்னைக் கண்டதும் பீறிட்டுக்கொண்டு வந்த கண்ணீரை அடக்குவதற்கு கோபம் பயன்பட்டது போலும். திறந்த வாகனம் ஒன்று நின்றது. எதை எடுப்பது எதை அநாதரவாக விடுவது, என்ற குழப்பத்தின் மத்தியில் பல அடி ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரம் பற்றிய பிரச்சினை மதியம் வரை நீண்டது. அனைவரும் காலை உணவை முதலாய் மறந்திருந்தனர். வாருங்கள் சாப்பிடுவோம் என நினைவூட்டினேன்.

**அன்பகம்**

வேரவில்லுக்குச் செல்ல மோட்டார் சைக்கிள் கிடைக்குமோ என்று தேடி ஆதரவற்ற சிறார்கள் இருந்த அன்பகத்துக்குச் சென்றேன். அவர்கள் வேறு ஒரு இடத்தில் தங்கியிருந்தனர். அமலமரித்தியாகிக் குருக்கள் லொசிங்டன், அல்பிரட், கொன்பியூசியஸ் ஆகியோரே அச்சிறார்களுடன் இருந்தவர்கள் என எண்ணுகிறேன். தற்போது இருந்த இடத்திலும் ஷெல் வந்து விழுந்தமையால் வேறு இடத்திற்குச் செல்ல தயார் செய்துகொண்டிருந்தனர். அங்கிருந்து முழங்காவில் பங்கிற்குச் சென்றேன். யஸ்ரீன் அடிகளார் அங்கிருந்தார். கோவில் முற்றத்தில் பெரிய கொட்டில் அமைக்கப்பட்டிருந்தது. மடுவிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் அங்கிருந்தனர்.

**தச்சனா மருதமடுப் பாதையில் நடந்த கிளைமோர்த் தாக்குதல்**

கொட்டிலுக்குள் சென்றதும் என் உறவினள் வாஞ்சலின் ஓடி வந்து என் காலில் விழுந்து "ஐயோ! என்ர ஜெனியும் றொனியும் போய்விட்டனர்" என்று கதறினாள். அவர்கள் இருவரும் அவளுடைய பிள்ளைகள். கொன்பியூசியஸ் அடிகளாரோ "உங்களுக்கு உங்கட உறவுகளையே தெரியாது" என்று சாடினார். எனக்கு வெட்கமாயும் கவலையாயும் இருந்தது. மேலும் அவர்கள் கூறிய விபரத்தைக் கேட்டு அதிர்ந்தேன். "உங்கட மருமகன் கமலன், மற்றும் சாந்தன் 'பஸ்சுக்கு' முன்னால் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னுக்கு வந்த பேருந்து கிளைமோருக்குள் அகப்பட்டுட்டுது. சாரதி, நடத்துநர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட இருபது பேர் பலியாகிற்றினம். காயப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்சகோதரி ரஞ்சினி உள்ளிட்ட ஆட்களை முழங்கா வில் வைத்தியசாலைக்கு கொண்டு போயிட்டினம்" என்று கூறிக் கதறி அழுதனர். முன்பு அரைகுறையாய் அறிந்திருந்தேன். விபரம் தெரியவில்லை என்று கூறி ஆறுதல் படுத்த முனைந்தேன்.

## வேரவில்

ஒரு மோட்டார் சைக்கிளை வாடகைக்கு அமர்த்தி வேரவில் மடத்திற்குச் சென்றேன். அங்கு அருட்சகோதரிகள் றோஸ்மரி, நிர்மலா ஆகியோர் நிதானமாகச் செயற்பட்டனர். பல தடவைகள் ஆனைவிழுந்தான் மடத்திற்குப் பொருட்களைக் கொண்டுபோய் வைத்துவிட்டு மேலும் பலவற்றைக் கொண்டு செல்ல தயார் செய்துகொண்டிருந்தனர். வலைப்பாட்டிலிருந்த குருவானவருக்குத் தகவலை அறிவித்துவிட்டு எப்போது குண்டுக்கு இரையாவோமோ? என்ற மரணபயத்துடன் பயணமாகிக் கொண்டிருந்தவர்களுடன் இணைந்தேன். அவர் சித்தப்படிதான் அனைத்தும் நடக்கின்றன என்ற உணர்வே தலை தூக்கி நின்றது.

## மடு பண்டி விரிச்சான் சந்தி

அருட்சகோதரிதிரேசா சில்வா ஏற்கெனவே பண்டிவிரிச்சானி லிருந்து பாடசாலை ஆவணங்கள், முக்கிய தளபாடங்களைக் கொண்டுவந்து முழங்காவில் தோட்டத்தில் பெரிய கொட்டகை அமைத்து அவற்றைப் பத்திரப்படுத்தியிருந்தார்.ஏனைய சகோதரி களையும் சந்திக்கும் நோக்குடன் அருட்சகோதரி பேக்மன்சுடன் சென்ற நினைவிருக்கிறது. ஓட்டமும் நடையுமாக குறுக்கு வழியால் சென்று ஒருசந்தியை அடைந்து பஸ்சுக்காகக் காத்திருந்தோம். அவ்விடத்தில் ஒரு மரணவீட்டுக் கதறல் கேட்டது. பஸ் ஒன்று வந்ததுதான் தாமதம். அந்த மரணவீட்டிலிருந்து இறந்த பெண் ணின் பெற்றோரும் சகோதரர்களும் கிட்டிய உறவினரும் ஓடி வந்தனர். பஸ்சிலிருந்து இறங்கிய இளைஞர் ஒருவரை அடித்துத் துவைத்தார்கள். இறந்துவிடுவான் போலிருந்தது. அந்த இளைஞன் தானாம் அப்பெண்ணைப் போராட கூட்டிச்சென்றவனாம். ஆதலால் தமக்கு அவனை அடிக்க உரிமை உள்ளதாம். ஆனால் அவன் தங்களுக்குத் திருப்பி அடிக்கவோ, தங்களை எதிர்க்கவோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் தடுக்கவோ கூடாதாம். அதுவே நியதியாம் என விளக்கம் கூறினர்.

அதன்பின் இரண்டு மடத்திலுள்ள அனைவரையும் சந்தித்து கனத்த இதயத்துடன் முழங்காவிலுக்குத் திரும்பினோம். விடயங்களை வவுனியாவுக்கு அறிவிக்க வேண்டும். ஒரே ஒரு தொலைத் தொடர்பு நிலையம் மட்டும் சந்தியிலிருந்தது. அங்கு சென்றேன். வரிசையில் பல மணிநேரங்கள் காத்திருந்து ஓரிரு வார்த்தைகளில் இடப்பெயர்வையும் ஆனைவிழுந்தானுக்குச் சகோதரிகள் செல்கிறார்கள் என்பதையும் அறிவித்துவிட்டு ஏதாவது வாகன உதவி கிடைக்குமா என சந்தியில் காத்திருந்தேன்.

**வன்னேரியை நோக்கிய மக்களின் இடப்பெயர்வுக் காட்சி**

பொருட்களுடன் நடந்துசெல்ல முடியாதோரை ஏற்றிய திறந்த வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நகர்ந்தன. அதில் ஆடுகள், நாய்களையும் காணக்கூடுமாயிருந்தது. வாகனத்தின் பின்னால் சிலர் ஓட்டமும் நடையுமாகச் சென்றனர். எங்கும் புழுதி மண்டலம். இவையாவும் எங்கெங்கு அநாதரவாக விடப்படுமோ? என்று தெரியாத குறிக்கோளற்ற பயணத்தில் ஈடுபட்டிருந்தனர்.

**சைக்கிளைத்தூக்கி உருட்டிச் சென்று ஓட்டிய நினைவு**

ஒரு காட்டுப் பாதையால் சைக்கிளில் செல்லவேண்டியிருந்தது. பயணத்தின் நடுவே காற்றுப் போய்விட்டது. எனக்கு உதவியவர் சைக்கிளை உருட்டி வந்தார். நான் பின்னால் ஓடி ஓடிச் சென்றேன். பாதையின் பக்கத்தில் இந்தியாவிலிருந்து வந்த சலேசியன் குரு சலமோனுடன் இளைஞர் பலர் பட்டறையில் வேலை பழகிக் கொண்டிருந்தனர். அவர்களின் உதவியுடன் திருத்தப்பட்ட சைக்கிளில் சென்றேன். மீண்டும் அது பழுதடைந்தது. உதவிய தம்பி அதனைத்தூக்கிச் சென்றார். எங்கோ ஒரு இடத்தில் நின்று ஓட்டிச்செல்லப் பல மணி நேரமாகிவிட்டது என்ற நினைப்பு இதனை எழுதிக்கொண்டிருக்கையில் வந்தது. எவ்வித வசதிகளுமற்ற பயணங்களை மக்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை இவை எனக்கு உணர்த்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாதிரி முழங்காவில் மடத்திற்குச் சென்று சகோதரிகளுடன் இணைந்துவிட்ட மகிழ்ச்சி. பின்னர் அருட்சகோதரிகள் கிரேஸ்மேரி, றோஸ்மேரி டேவிட், பேக்மன்ஸ் ஆகியோர் திறந்த வாகனம் ஒன்றில் பொருட்களை ஏற்றினர். அருட்சகோதரி றோஸ்மேரி மாற்றுத் திறனாளிப் பிள்ளைகளைக் கவனிக்க ஆனைவிழுந்தானுக்குச் சென்றார். நிலைமை சரிவரலாம் என்ற எண்ணத்துடன் சகோதரிகள் சிலர் அவ்விடத்தைவிட்டு நகரப் பின்வாங்கினர். இறுதியில் ஷெல் அகோரம் எம் எல்லோரையும் ஆனைவிழுந்தானில் சேர்த்து விட்டது. அங்கிருந்தும் வெளியேற வேண்டி வரலாம் என்ற நினைவின்றி பொருட்களை இறக்கி ஒழுங்கு படுத்தினோம்.

**வன்னேரியில் இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில்**

சரத்ஜீவன் அடிகளாருடன் இணைந்து சில குருவானவர்கள் கிளிநொச்சியிலிருந்து எமது மடத்திற்கு வந்தனர். இடம் பெயர்ந்து வன்னேரிக்கு வந்திருந்த மக்களுக்கு அவர்கள் உதவப்போவதாக அறிந்து நாமும் அவர்களுடன் இணைந்தோம். பாம்புகள், விலங் கினங்களின் குடியிருப்பு தற்போது மக்களுடைய இருப்பிடங்களாகி இருந்தன. அவை தமது இருப்பிடத்திற்காய் போராடி மக்களைக் காயப்படுத்தின. அதுவும் நிலத்திற்கான போராட்டமே. அழகிய சிறு சிறு கொட்டில்கள் அமைத்திருந்தனர். இன்னொரு பெரிய கொட்டகையில் சத்தியராஜ் அடிகளார் தலைமையில் கிறிஸ்தவ நிறுவனங்களின் உதவியுடன் கிடைத்த பல அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. அவ்வப் பகுதிகளுக்கானவை பிரித்தெடுக்கப்பட்டு வேறு சிறிய கொட்ட கைகளில் வைத்து வழங்கப்பட்டன.

மா, சீனி, அரிசி, பருப்புப் போன்றவை அதிகம் பகிரப்பட்டன. நீண்ட வரிசையில் மக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு உலர் உணவு வழங்கப்பட்டது. எமது சகோதரிகளின் உறவினர், பெற்றோர் தம்மை எமக்கு அறிமுகமாக்கினர். நாம் மூவர், இருவராகப்பிரிந்து மக்களைச் சந்தித்துக் கதைத்தோம். பல அவலக்கதைகள் பகிரப்பட்டன. அதே நேரம் அவர்களுக்கு எம்மைக் கண்ட மகிழ்ச் சிக்கு அளவில்லை. சில நாட்கள் இது தொடர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தகவல் பரிமாற ஒரே ஒரு வழி கிளிநொச்சி

மாகாணத்தலைவிக்கு எமது நிலையை அறிவிக்க வேண்டுமானால் கிளிநொச்சியில் இயங்கிய ஒரே ஒரு தொடர்பு நிலையத்திற்குத்தான் செல்ல வேண்டும். இந்த வேளையில் மறக்க முடியாத ஒருவர் என் கண்முன் வருகின்றார். அவர்தான் அருட்பணி.லொசிங்டன் அடிகளார். முழங்காவிலில் இருந்து கிளிநொச்சி வர தனது மோட்டார் சைக்கிளில் என்னை ஏற்றி வந்து உதவியவர். குறுக்குவழி, மணல்மேடுகள், சிற்றாறுகள், தாண்டுவதாய் பயணம் அமைந்திருந்தது. அவரும் பிள்ளைகளுடன் அக்கராயனுக்கு இடம் பெயர்ந்து விட்டார். தற்போது சரத் ஜீவன் அடிகளாரின் வாகன உதவியுடன் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்தேன்.

மாகாணத் தலைவியுடன் தொடர்பு கொண்டு மிகச்சுருக்கமாக விடயத்தைக் கூறிவிட்டு கரடிப்போக்கு மடத்திற்குச் சென்று இரவைக் கழிக்க முயன்றேன்.

## ஆனைவிழுந்தானிலும் ஷெல் அகோரம்

அன்றிரவு மூன்று மணியிருக்கும். 'சிஸ்ரர். யூட்' என அழைக்கும் குரல் கேட்டு எழுந்தேன். அருட்சகோதரி றோஸ்மேரி டேவிட் நின்றிருந்தார். "ஆனைவிழுந்தானிலையும் ஷெல் அகோரம் தாங்கேலாமல் இருக்கு. எல்லாரும் மூட்டை முடிச்சோட போயிட்டினம். பிள்ளைகளைக் கொண்டுபோக இடம் பார்க்கவேணும்." என்று கூறிவிட்டு வந்த வேகத்தில் திரும்பினர். விடிந்ததும் உருத்திர புரத்திற்குச் சென்று விடயத்தை சகோதரிகளுக்கும் குருவானவர்களுக்கும் தெரிவித்துவிட்டு உருத்திரபுரத்து ஓட்டோவைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு அருட்சகோதரி அன்ரனிற்றாவுடன் சென்றேன்.

வழியில்பல பரிதாபக் காட்சிகள். ஆற்றில் விழுந்த வாகனத்தைப் பலர் சேர்ந்து இழுத்துக்கொண்டிருந்தனர். வீதியில் நெருக்கடி. விலகிச்செல்ல மணித்தியாலக்கணக்காகியது. பழுதடைந்த வாகனத்தைப் பலர் சேர்ந்து திருத்தினர். ஏதோ ஒரு வகையாகப் போய்ச் சேர்ந்தோம். விபத்து, வறுமை, நெருக்கடி, இடர்பாடு மக்களை ஒன்று சேர்த்தது. வழியில் மாடுகளின் நிரை. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றுக்குட்டி விழுந்துவிட்டது. ஏனையவை நகரப் பின் வாங்கின. சில சுற்றி நின்றன. அவற்றிற்கு சொந்தக்காரன் அவற்றை விரட்டிக்கொண்டு நின்றான். இயற்கையின் இரக்கத்தை வியந்து நின்றேன்.

**உருத்திரபுரத்திற்கு இடப்பெயர்வு**

ஆனைவிழுந்தான் சகோதரிகள் மீண்டும் பொருட்களை ஏற்றுவதில் மும்முரமாய் இருந்தனர். அருட்சகோதரி றோஸ்மேரி பிள்ளைகளை வேலையாட்களுடன் வாகனம் ஒன்றில் ஏற்றி பிரமந்தனாறுக்குச் செல்லும் வழியில் இருந்த காட்டுப்புற கோழிப் பண்ணைக்குக் கொண்டு சென்றார். அனேக பொருட்கள் கைவிடப் பட்டன. அது, நீங்களும் ஆங்காங்கு விடப்படுவீர்கள் என்பதை உணர்த்தியது. சிலவற்றை ஏற்றிக்கொண்டு உருத்திர புரத்திற்குச் சென்றோம். சகோதரர் ஒன்று கூடியதில் மகிழ்ச்சி ஆரவாரமாயி ருந்தது. குழுத்தலைவி அருட்சகோதரி அஞ்சலின் பிள்ளைகளைப் பாதுகாப்பதுடன் சகோதரிகளைக் கவனிப்பதிலும் மும்முரமாய் ஈடுபட்டார்.

**இடம் பெயர்ந்த மக்களுடன் சில நாட்கள்**

சகோதரிகள் யாவரும் ஒன்று கூடிச் செபித்து தத்தம் துயரங் களை இறைவன் பிரசன்னத்தில் சமர்ப்பிப்பது ஒரே ஒரு ஆறுத லாய் இருந்தது. காலை வழிபாடு, திருப்பலி, உணவு முடிந்ததும் தாம் தாம் பணிபுரியும் இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த தத்தம் மக்கள் இருக்கும் இடங்களை நோக்கி தேடிச்செல்வார்கள். மாலையில் மீண்டும் மக்களின் துயரை இறைவனிடம் ஒப்படைப் பதும், செபிப்பதும், பகிர்வதும், மகிழ்வதும் தினசரி நிகழ்வானது. செல்வபுரம் என்ற இடத்தில் நடைபெற்ற மாதாவின் திருவிழா ஆயத்தநாள் வழிபாடுகளுக்குச் சென்றவேளை அருட்சகோதரி பற்றிமா ஜெயந்தியின் பெற்றோர், உறவினர் வேறு இன்னும் பலரும் அறிமுகமாயினர்.

**அழுதுகவலை தீர்க்க முடியாத மரண வீடுகள்**

போரில் இறந்து மடிந்த இளைஞன் வீட்டில் வளர்த்தப் பட்டிருந்தான். அவனும் ஒரு தளபதி. மலைபோல் ஒருவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை இழந்தவர் தமது துக்கத்தை வெளிப்படுத்தும் பொருட்டு கதறி அழுது துயர் துடைக்க முடியாத அவல நிலை. அங்கு பல கதைகள் உலாவின. அவர்களுடன் உடனிருப்பதும் செபிப்பதும் தான் நாம் அளிக்கும் ஒரே ஒரு ஆறுதல். இப்படிப்பல துக்க நிகழ்வுகளில் பங்குகொண்டோம்.

## எமது சகோதரிகளின் பெற்றோரைத் தேடும் படலம்

மாகாணத் தலைவியினால் அருட்சகோதரி பெனடிக்ரா மூலம் எமது சகோதரிகளின் பெற்றோர்களுக்கு உதவும் பொருட்டு பணம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அருட்சகோதரி வசந்தா அதனைக் கொண்டுவந்து தந்தார். அவர் மூலம் அவரது பெற்றோருக்குக் கொடுக்கும் பணி இலகுவாக்கப்பட்டது. ஏனையோரைத் தேட அருட்சகோதரி அன்ரனிற்றா தான் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளோடு உதவினார். பெற்றோல் தட்டுப்பாடு. குறுக்குவழிப் பயன்பாட்டில் மேடும் பள்ளமும். ஒருமுறை இருவரும் விழுந்துவிட்டோம். முறிவு தறிவு காயமின்றித் தப்பினோம். வேறு வழி தேட வேண்டும். ஆராய்ந்தேன்.

## புதுக்குடியிருப்பு

எனது பணி முடிந்து செல்லுமுன் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு சகோதரிகளையும் சந்திப்பது நல்லது என தோன்றியது. எனவே புதுக்குடியிருப்புக்குச் சென்றேன். அங்கிருந்து பெற்ற தகவலின் அடிப்படையில் இரணைப்பாலையில் அருட்சகோதரிகள் டோமினிக், லுமினாயோட்ஜ், பேரின்ப மலர் ஆகியோரின் பெற்றோர் இருப்பதாக அறிந்து அங்கும்சென்றோம். பாதைகளோ பயத்தை ஊட்டின. காட்டுப்பாதையாக இருந்தும் நாம் அங்கு சென்றதும் அவர்களைக் கண்டு கதைத்ததும் அவர்களுக்குப் பெரு மகிழ்வை ஏற்படுத்தியது. அருட்சகோதரிகள் தங்களைத் தேடி வந்து விட்டனர் என்ற மகிழ்ச்சியில் இடப்பெயர்வு, கஸ்ட துன்பங்களைக் கூட மறந்தனர். சகோதரிகளுக்குச் செய்தி அனுப்பினேன். அவர்கள் அடைந்த ஆறுதலால் எமது எல்லாத்துன்பங்களும் இன்பமாகவே கழிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதுங்குகுழி

அன்று இரவு புதுக்குடியிருப்பில் உணவு அருந்திக் கொண்டிருந்தோம். கிபிர் சத்தம். எல்லோரும் பதுங்கு குழிக்குள் ஓடினர். அருட்சகோதரி பெலிசியா என் கையை இழுத்துக்கொண்டு ஓடிச் சென்றார். அதனுள் அனைவரும் மரணபயத்தோடு வெகுநேரம் இருந்து வெளியில் வந்தோம். எமது தோற்றத்தைப்பற்றி விபரிக்க முடியாது. எனக்கு ஒரு இரவு வேதனை. சகோதரிகளுக்கும், வன்னி வாழ் மக்களுக்கும் தினசரி இரவு பகல் பதுங்குகுழி வாழ்க்கை. இறுதியில் பலருக்கு இதுவே மரணப் படுக்கையாக மாறிய செய்தியையும் கேள்வியுற்றுமனம் உருகிப் போனேன்.

## முல்லைத்தீவு

அடுத்தநாள் முல்லைத்தீவில் தங்கியவேளை ஒருசில நாட்களின் முன் குண்டுத்தாக்குதலால் கொல்லப்பட்டோர் வீடுகள் சிலவற்றையும் தரிசித்தோம். அருட்சகோதரிகள் சுபாஜினி, மேரிராணியின் கிட்டிய உறவினரின் வீடும் அதில் ஒன்று. ஷெல் தாக்குதலில் பலியான அகுஸ்தீன் அடிகளாரின் அக்காவின் இரண்டு பிள்ளைகளுக்கும் அன்றிரவு அடிகளாரால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. வேறு பல வீடுகளையும் தரிசித்தோம். அங்குதான் அருட்சகோதரி நிர்மலா ஆபேலினுடைய அக்காவின் சுனாமிக்கு இரையான வீட்டையும் அங்கு அன்னையை இழந்து அந்தரித்த குழந்தையையும் குடும்பத்தையும் சந்தித்தோம். எம்முடன் அவர்களது துயரச் சுமையைப் பகிர்ந்து ஆறுதல் அடைந்தனர் போலும்.

## முல்லைத்தீவின் வாகன உதவீயும் விபத்தும்

வாகனமும் கிடைத்தது. அத்துடன் இடம்பெயர்ந்துள்ள சகோதரிகளையும் மக்களின் நிலையையும் அறிய முற்பட்டேன். சகோதரிகள் லோறன்சியா, சுபாஜினி, மரியமலர், றோஸ்மேரி டேவிட் ஆகியோர் என்னுடன் வந்த நினைவு. உருத்திரபுரத்திற்கு வரும் முன்பு அக்கராயனுக்குச் சென்று சில தகவல்களைத் திரட்டலாம் என அங்கு சென்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டவர் ZOA நிறுவனத்தாரின் தரிசிப்பு

இடம் பெயர்ந்த பிள்ளைகளை, குருவானவர்களைப் பார்க்க வந்தவர்கள் எமது பணிகளைப்பற்றி அறிந்து "துன்ப வேதனைப்படும் மக்கள் எங்கேயோ, அங்கேயே துறவிகளின் பிரசன்னமும் பணியும் வேண்டும்" எனப் பாராட்டிச் சென்றது இன்றும் நினைவிலுண்டு. அங்கிருந்து பெற்ற தகவல்களுடன் கோணாவில், மூன்று முறிப்புப் போன்ற பல இடங்களில் எம் தேடுதல் வேட்டை நடந்தது.

## அக்கராயனிலிருந்து தொடர்ந்த பயணம்

கோணாவில் பாடசாலையில் தங்கியிருப்போருக்கு இடாப்பு போன்ற ஒரு ஆவணம் இருந்தது. அதிலிருந்தும் சில தகவல்கள் கிடைத்தன. சகோதரிகள் ஸ்ரெலாபிலேந்திரன், மரியமலர், வசந்தா மரியசெல்வம், யோசேப்பின் மேரி, ஒஸ்ரின் கனகசபை, வானுமதி என்போரின் பெற்றோர் சிலரின் இருப்பிடங்களை அடைந்தோம். எம்மைக்கண்டு அவர்கள் கொண்ட மகிழ்ச்சி எமக்கு உற்சாகமூட்டி யது. அவர்களிடமிருந்து பெற்ற செய்திகளின் உதவியினால் மற்றவர்களின் இருப்பிடத்தை தேடித் தேடி அலைந்தது நினை விலுண்டு.

யேசுமலரின் வீட்டாருடைய இருப்பிடம் நாடி பல இடங்களுக் குச் சென்று திரிந்தோம். அங்குள்ள குருவானவர்கள் இருவருக்கு அவர்கள் பற்றிய தகவல் தெரியும் என்றனர். சிற்றாலயம் ஒன்றில் மதிய வேளையில் இளைப்பாறிக்கொண்டிருந்த குருவானவர், யேசுமலரின் பெற்றார் கொட்டில் அமைத்துக்கொண்டு இருந்ததைக் கண்டதாகக் கூறி ஓரிடத்திற்கு வழிப்படுத்தினார்.

அந்தத் தகவலின்படி யேசுமலரின் பெற்றோர் இருந்த கொட் டிலை அடைந்தோம். அங்கு எம்மைக் கண்டதும் ஆச்சரியப்பட் டனர். சில நிமிடங்கள் தங்கி ஆறுதல் வார்த்தையல்ல அவர்களின் கஷ்ட துன்பக்கதைகளை கேட்டறிந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டி விட்டது. வட்டக்கச்சியில் அருட்சகோதரிகள் யோசேப்பின்மேரி வீட்டாரையும் சந்தித்தோம். அங்கும் அவர்கள் ஆச்சரியப்பட்டனர். ஸ்ரெலா, ஒஸ்ரின், மரியமலர் வீட்டார் போன்ற வர்களின் கதைகளை அவர்களுடன் பகிர்ந்து கொண்டோம். வானுமதி குடும்பம் விஸ்வமடுவில் இருப்பதாக அவர்களிடம் அறிந்து அவர்களைத் தேடிச்சென்றோம். அதையும் முடித்துக் கொண்டு வாகனத்தை முல்லைத்தீவிற்கு அனுப்பி வைக்க வேண் டும் என்ற நோக்குடன் விரைந்தோம். சாரதி யூட் ஒரு குறுக்குவழி கிரவல் வீதி ஊடாகச் சென்றார். வேகம் அதிகரித்தது.

ஒரு முடக்கு வந்தது. வாகனம் கட்டுப்பாட்டை இழந்தது. வேகத்தின் அளவை மதிக்காது விட்டால் அவையும் எம்மை மதித்து உதவ முடியாது தானே? நான் முன்னுக்கு அமர்ந்திருந் தேன். பின்னிருந்து இதனை அவதானித்த சகோதரிகளின் அங்கலாய்ப்பை உணர்ந்தேன். அருட்சகோதரி மரியமலர், 'யூட் அண்ணா' எனக் கத்திய சத்தம் கேட்டது. வாகனச் சாரதியின் மதியூகத்தினால் அனைவரும் காப்பாற்றப்பட்டோம். சிற்றாறொன் றில் வாகனம் விழுந்து திசை திரும்பி கரையுடன் மோதியபடி நின்றுவிட்டது. என் நெற்றி முன் கண்ணாடியுடன் மோதியது. பின்னிருந்த ஒரு சிலரும் என்மேல் விழுந்தனர்.

அவசரப்படுத்தினால் பலர் காயப்படலாம் என நான் அசையாது இருந்தேன். நல்ல வேளை, என் தெய்வத்தின் உதவி என்றும் எம் பக்கம் இருந்தது. அவருடைய மக்களின் பணியில் தேடுதல் வேட்டை மேற்கொண்ட தனது பிள்ளைகளுடன் இருந்தார் என்பதை அன்றும் இன்றும் உணர்ந்து எத்தனை தடவைகள் நன்றி கூறினாலும் தீர்க்கவே முடியாது என்று மனம் கூறுகிறது.

நான் இறந்து விட்டதாக எண்ணி வந்து என்னை இழுத்து எடுக்க முயன்றனர். ஒரு வழியாகக் கதவைத் திறந்தனர். உயிரு டன் வெளியில் வந்த என்னை அவர்கள் கண்டதும், காயங்களின்றி தப்பிய என் சகோதரிகளை நான் பார்த்ததும் திருப்தி ஏற்பட்டது. எப்பொழுதும் என் இதயத்துடிப்போடு இணைந்துவிட்ட யேசுவின் திரு நாமம் என்னை அறியாமலேயே என்னிதயத்தில் எழுந்து கொண்டிருந்தது என எண்ணுகின்றேன். எனக்கு மட்டும் அடிபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியில் சிறு தேங்காய் அளவில் பெரியதொரு வீக்கம் உடன் உருவாகிவிட்டது. உடல் முழுவதும் உள்ளும் வெளியும் தீப்பற்றி எரியும் வேதனை, றோட்டில் நிற்க முடியாது அந்தரித்துக்கொண்டு நின்றேன்.

## வாகனத்திற்கு வழி சமைத்த எம் தெய்வம்

வாகனத்தை வெளியில் எடுக்க வேண்டும், மடத்திற்குப் போய்ச் சேர வேண்டும். அவ்வழியால் எவ்வாகனமும் வரும் வழக்கம் இல்லை. இரவு வேளை பல மணி நேரத் தவத்தின் பின் 'World Vision' உடைய வாகனம் தற்செயலாக அவ்வழியால் வந்தது. திக்கற்ற எமக்குத் துணையாக இறைவன் வந்துள்ளார். எங்கோ சென்று ஒரு பெரிய சங்கிலி கொண்டுவந்து வாகனத்தை இழுத்து வீதிக்கு எடுத்தனர். என்னை அவர்கள் கூட்டிக்கொண்டு வந்து மடத்தில் சேர்த்துவிட்டு காயங்களுக்குள்ளான வாகனத்து டன் தமிழீழக் காவல்துறையில் பதிந்து மடத்திற்குத் திரும்பினர். அந்தப்பதிவின் உதவியுடன் 'சாரதி யூட்'டும் வாகனமும் சில நாட்களின் பின் வவுனியாவிற்குள் வர முடிந்தது. இதனால் போர் நடுவில் இருந்து தப்பிவிட்டது. "இறைவன் அனுப்புவ தெல்லாம் நன்மைக்கே". இதனை அருட்சகோதரி அஞ்சலின் அடுத்த நாள் மாகாணத் தலைவிக்கு அறிவித்தார். உடனடியாக வரும்படி செய்தி வந்தது. ஆனால் சென்றுவிட முடியாது. உடலில் உரசல் காயங்களும் முழங்கால், கை அடிபட்ட நோவுகளும் இருந்தன. நெற்றியிலும் வீக்கம் மறையும் வரை மருந்திட்டு ஒட்டப்பட்ட சீலைத்துண்டு தானாக விழவேண்டுமென்று நாம் நாடிய ஆயுள்வேத வைத்தியர் கூறிவிட்டார். இல்லாவிட்டால் அடிபாட்டுக்குச் சென்றதாக சோதனைச் சாவடியில் வீண்பிரச்சினை ஏற்படும்.

## வன்னிக்குப் பிரியாவிடை

சில நாட்களின் பின் நோவெண்ணெய் பெற்றுக்கொண்டு நெற்றியிலிருந்த சீலையையும் அகற்றிவிட்டு ஆயத்தமாகினேன். பாஸ் எடுக்கவேண்டிய நிலை வந்தது. காவற்றுறைப் பதிவினால் இது இலகுவாகிவிட்டது. இதுவரை காலமும் நான் பெரிதாக ஒன்றும் செய்யாவிட்டாலும் கஸ்ரப்பட்ட மக்கள் வேதனைப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்த பூமியில் எமது சகோதரங்கள், குருக்களுடன் பிரசன்னமா கியிருந்த திருப்தி. இப்போது அகன்றுவிட அருட்சகோதரி பெனடிக்ரா இருக்கிறார் என்ற மனச்சாந்தியுடன், பிரியாவிடை பெற்ற வேதனை இன்றும் பசுமரத்தாணி போன்று பதிந்துள்ளது. அகமும் புறமும் அடிமைத்தளையில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் இலக்கும் தாகமும் என்றுதான் தீருமோ? என்று சிந்தனை வயப்பட்டவளாய்..

**ஓமந்தைச் சோதனைச் சாவடி:-**

இனி ஒருவரை ஒருவர் எப்போது காணப்போகிறோமோ என்ற கவலை மேலிட அருட்சகோதரி அம்புரோசினும் வேறும் ஒருசில சகோதரிகளும் பெற்ற கடவுச் சீட்டுடன் ஓமந்தைச் சாவடியை அடைந்தோம். அருட்சகோதரி அம்புரோசின் தலை, தோள், கைக ளில் என் சுமையையும் தாங்கியவராக வந்தார். இராணுவ உள வுத் துறையினர் தமிழன் என என்னைக் கோபத்துடன் ஏசினான். சுமைகளை வாங்கும்படி வற்புறுத்தினான். அவர்கள் தர மறுத்தனர். அடுத்த வரிசையில் தீன் பண்டம் விற்பவர் சிங்கள வியாபாரி என்னைக் கண்டதும் அதிக நாட்களாகக் காணவில்லை என தீன் பண்டங்களை இலவசமாகத்தர முற்பட்டார். எல்லை கடந்த மனிதத்தை அவரில் கண்டு பூரித்து விட்டேன்.

**இறுதிப்போரும் வெற்றிக் களிப்பும்**

2009 வவுனியாவில் கருத்தரங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் எம்மால் தொடர முடியவில்லை. வெற்றி வீர முழக்கமிட்ட இராணுவ வாகனங்கள் மடத்து வீதியால் வருவதும் போவதுமாக இருந்தன. உரையாற்றிக்கொண்டிருந்த அருட்சகோதரி அன்சில்லா “எல்லாம் முடிந்தது” என்றார்.

அங்கங்கள் இழந்தவர்கள், காயப்பட்டவர்கள் வைத்தியசாலை யில் என்ற செய்தி வந்தது. எம்மில் சிலர் விரைந்து சென்று உதவ முனைந்தோம். மாற்று உடைகள், பல்வேறு நீராகாரங்கள், உணவுப் பொதிகள் என்பவற்றுடன் சென்றோம். அங்கும் கட்டுப் பாடுதான். அனுமதியின்றி நுழைய முடியாது. ஆனால் ஏற்கெனவே தொடர்ந்து செயற்பட்டு வந்த அருட்சகோதரி விஜயாவின் அனு சரணையுடன் சிலர் செயற்பட்டோம். பாடசாலைகளின் முற்றங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் அமைக்கப்பட்ட கொட்டில்கள் முகாம்களாக மாறின. எமது பாடசாலை கேட்போர் கூட மேல்மாடிகளில் போராளி கள், கைதிகள் அடைக்கப்பட்டனர். இரவு வேளைகளில் குளறிக் கதறும் சத்தம் கேட்கும். குருமார் இருவர் வவுனியா மகாவித்தி யாலய முகாமில் அடைத்து வைக்கப்பட்டனர்.

**முகாம்களில் பணி**

சிங்கள மொழி பேசும் அருட்சகோதரிகளும் வந்து சில வீடுகளில் தங்கி எம்முடன் இணைந்து செயற்பட்டனர். குழுக்களாகப் பிரிந்து முகாம்களுக்குச் சென்றோம். பிரமண்டு வித்தியாலயத்தில் சில நாட்கள் பணியாற்றிவிட்டு செட்டிகுளம் முகாமிற்குச் சென்றேன். அதற்கு அண்மித்ததாக ஒரு வீடொன்றில் எமது சகோதரிகள் சிலர் தங்கினர். நாம் முகாம்களைத் தரிசிக்க இலகுவாகிவிட்டது. விரும்பிய மாதிரி உள் நுழைய முடியாது. பாஸ் எடுத்தே போக வேண்டும். சிங்கள மொழி பேசும் சகோதரிகள் மூலம் பாஸ் எடுப்பது இலகுவாகியது. காட்டின் உட்பகுதிகளுக்குள்ளும் முகாம்கள் இருப்பதை அறிந்தோம். ஆனால் போக முடியவில்லை. மனித வளக்குறைவு. இருப்பினும் தெய்வம் யாரையாவது அனுப்பி வைக்கும் என்ற நம்பிக்கை குறையவில்லை.

**மன்னார் வைத்தியசாலை**

அங்கும் செல்ல வேண்டியிருந்தது. அக்காவின் மகன் கமலன் அங்கு காயப்பட்டு வந்திருப்பதாக அறிந்து வைத்தியசாலைக்குச் சென்றேன். அங்கு அவருக்குச் சிறு காயம் தான். கொட்டில் ஒன்றில் காயப்பட்ட ஏனையவர்களுக்கு அவர் உதவுவதைக் கண்டு கதைத்தேன். அவரின் அண்ணன் நீற்றர் செட்டிகுளம் முகாமிலிருப்பதால் அவருக்குக் கொடுக்கும்படி தாயார் அனுப்பிய பணத்தை அவரிடம் கொடுக்குமாறு என்னிடம் தந்தார்.

வவுனியா வைத்தியசாலையில் கண்ட பலர் இங்கு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தனர். ஆற்றித் தேற்றி நம்பிக்கை ஊட்டப்பட வேண்டிய பலர் இங்கு காணப்பட்டனர். இருப்பினும் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளையும், கால்களையும் இழந்து வாழத் துடிக்கும் இளைஞ னின் நம்பிக்கை எமக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

**மரணத்தின் வாசலில் அருட்சகோதரி அஞ்சலின்**

மன்னார் மடத்திற்குச் சென்ற வேளை குருவானவர் ஒருவர் செட்டிகுளம் முகாமில் அருட்சகோதரி ஒருவர் செத்துக்கொண்டிருக் கிறார் என்றார். அங்கே விரைந்து சென்றேன். ஒவ்வொரு கொட்டி லாகத் தேடிக் கேட்டு அலைந்தேன். இறுதியில் ஒரு தகவல் வந்தது. கடைசி அந்தத்திலுள்ள கொட்டிலுக்கு ஒரு அருட் சகோதரி சென்றதைக் கண்டதாக. தொங்கல் கொட்டில் உள்ளும் புறமும் ஈக்கள் மொய்த்த வண்ணமாய் இருந்தது. என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. தரையில் பாய் மீது ஒரு உருவம் இலையான்களால் மூடப்பட்ட நிலையில், பிள்ளைகள் அங்கும் இங்குமாக நின்றனர். அஞ்சலின்! என்றேன். தட்டுத்தடுமாறி எழ முயன்றார்.

அவரை உடனே மடத்திற்குக் கூட்டிச்செல்ல வழி தேடினேன். அவரின் அண்ணன் சந்தியாப்பிள்ளை தனக்குப் பழக்கமான இராணுவ அதிகாரி மூலம் முயற்சித்துக்கொண்டிருந்தார். பிள்ளைகளைப் பாதுகாப்பாகக் கொண்டுவந்துவிட வேண்டும் என்று படாத பாடுபட்டு தன்னையே இழந்து இறக்கும் நிலையில் எம் சகோதரி இருந்தார். பிள்ளைகளை ஒரு பெண்ணிடமும் தெரிந்த சிலரிடமும் ஒப்படைத்து பாதுகாப்புக்கு வழி செய்து கொண்டிருந்தார். அன்றேல் வரமாட்டார் எனத் தெரியும். தன் வாழ்வை அர்ப்பணித்து உயிரைத்துச்சமென மதித்த எம் அன்புச் சகோதரத்தின் கதை எழுதவே கண்ணீர் மல்கிறது. அவளின் இதயத்துடிப்பு இறங்கியிருந்தது. ஏதோ முடிந்த அளவிற்கு விரை வில் அண்ணர் உதவியுடன் கூட்டி வந்தோம். இல்லையேல் ஓரிரு தினங்களில் அவரின் சரித்திரமே முடிந்திருக்கும்.

**முகாம்களில் இருப்பவரைத் தரிசித்தல்:-**

அதன் பின் முகாமிற்குள் இருந்த அக்காவின் மகனுக்குக் கொடுக்கும்படி அனுப்பப்பட்ட பணத்தை கொடுக்கச் சென்றேன். அனுமதி பெற்று, பல மணி நேரம் மக்களுடன் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்து, நேரம் வந்ததும் ஒருவர் ஒருவரை முண்டியடித்துக் கொண்டு சென்றனர். அவர்களுடன் நானும் சென்றேன். தகவல் கொடுத்திருந்த படியால் காண வந்த கூட்டத்தில் எனது பெறா மகன் நீற்றரும் காணப்பட்டார். முட்கம்பி போடப்பட்டிருந்தமையால் அணுகிப் பணம் கொடுக்க முடியாத நிலை. இராணுவக் காவல், மக்கள் நெருக்கம் இருபக்கத்திலும், என் நிலையை விளக்கி தாயார் அனுப்பிய பணத்தை காவலருக்குக் காட்டினேன். துறவி என்று போலும் சிறிது கிட்டச் செல்ல அனுமதி கிடைத்தது. அவரிடம் பணம் கொடுத்த கையில் தான் போட்டிருந்த மோதிரம், சங்கிலியைத் தாயிடம் கொடுக்கும்படி தந்தார். இப்படிப்பட்ட இக்கட்டான நேரத்திலேனும் எனது குடும்பத்தவருக்கு கைங்கரியம் செய்த திருப்தியுடன் அக்காவிடம் திரும்பிச் செல்லலாம் என்ற எண்ணம் என் மனதில் எழுந்தது.

**குடும்பமும் நானும்**

என் அண்ணனும் அக்காவின் பிள்ளைகள் இருவருள் ஒன்று கமலன் ஆசிரியர். மற்றவர்களில் நீற்றர் வேரவில்லில் கடை வைத்திருந்தவர். அண்ணன் பெரும் போர் தொடங்கு முன்பே வந்துவிட்டார். அவர் வந்து விட்ட மகிழ்வில் போலும் மனைவி வைத்தியசாலையில் இருந்து சுகமென்று விடுவிக்கப்பட்டு ஓட்டோவில் ஏறுகிற நிலையில் இதயத்துடிப்பு நின்று இறைவனடி சேர்ந்ததாக மகன் யஸ்ரின் சொல்லியழுதார். மடங்களுக்குச் சென்று வருகையில் நீற்றர் மற்றும் கமலனைக் கண்ட செய்தியை அக்காவின் குடும்பத்திற்கு அனுப்பிக்கொண்டிருந்த திருப்தி இருந்தது. அத்துடன் வவுனியாவில் அதிபராக இருந்த நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்த என் தங்கையின் மகள் வனஜா, அண்ணனின் மகள் றொசானி, மடுக் கிளைமோர்த் தாக்குதலில் தப்பிய அக்காவின் மகள் நவதிரேஸ் வவுனியா மாணவர் விடுதிச்சாலையில் அனுமதிக்கப்பட்டனர். பணம் கட்டும் கஸ்ரம் அவளுக்கு இருக்கவில்லை. ஆனால் வேறு சில பிரச்சினை கள் எழுவது தவிர்க்க முடியாதிருந்தது. இதை உணர்ந்து விரை வில் வேறு வழி பார்க்க வேண்டும் என உணர்ந்தேன். என் தங்கை ஒரு வீடு வாடகைக்கு எடுத்து இருவரைத் தன்னுடன் வைத்திருந்தாள். இன்னொருவர் வேறோரு வீட்டில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்ட காலம் அக்காலம். வெளிநாடு செல்வதற்கு கொழும்பிற்குச் செல்லவேண்டி யிருந்தது. அண்ணன், அக்காவின் பிள்ளைகள் இருவரும் கொழும் பிற்குச் செல்ல நான் துணையாகச் சென்றேன். கொழும்பில் விட்டுவிட்டு திரும்பி வருவதற்கான செலவையும் தந்து என்னை அனுப்பிவைத்தனர். துறவி தானே வெட்கப்படாது வாங்கிக் கொண்டேன்.

என் மூத்த அண்ணனின் பெண்பிள்ளை என்னிடம் எவ்வித உதவியும் கேட்கவில்லை.ஆனால் என்னைத் தவறாக விளங்கிக் கொண்டார். தனது குடும்பத்தவரைக் கவனிக்காது பாரபட்சம் காட்டினேன் என்ற மனக்குறையுடன் தான் இறையடி சேர்ந்துள்ளார் என்று அவர் இறந்த பின்பு பிள்ளைகள் என்னிடம் கூறினர். மிகுந்த வேதனையுடன் என் நிலையை விளக்கினேன்.

ஆனால் அவரின் மூத்த புதல்வர் குரு அன்ரனிதாசன் நெடுந்தீ வில் பணிபுரிந்தவர். அங்கு பிரச்சினை ஏற்பட்டது. பலர் இறந்தனர். அக்காலத்தில் அல்லைப்பிட்டிக்குச் சென்ற ஜிம்பிறவுண் குருவானவருக்கு என்ன நடந்ததென்று இன்னுமே அறியப்படாத நிலை. அதுபோல் இவருக்கும் ஏதேனும் நிகழ்ந்திருக்குமோ என்ற குழப்பம். பல மாதங்களாகின. நான் அவரைப்பற்றி தகவலறிய பல முயற்சிகள் எடுத்தேன். ஆனால் இறுதியில் அங்கிருந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிச் செயலாளர் டக்ளஸ் தேவானந் தாவை நாடி ஒரு நம்பிக்கையின் சமிக்ஞை பெற்றுத் தகவல் கொடுத்தேன்.

என்னால் இயன்ற உதவியைச் செய்தேன் என்ற ஆன்ம திருப்தியிருந்தது. என் குடும்பத்தினருக்கான என் பங்கை இறைவ னையே ஆற்றும்படியே விட்டு விடுவது வழமை. அதன்படி அத் தெய்வம் அனைத்தையும் செய்து வருவதை எண்ணி நன்றி மட்டுமே கூற என்னால் முடியும். அருட்சகோதரி றெஜினா புதுக் குடியிருப்பு வைத்தியசாலைத் தாக்குதலில் பல துன்பங்களுக்கு உள்ளாகி காயப்பட்ட நிலையில் தன்தம்பியுடன் கப்பல் மூலம் பொலநறுவை முகாமிற்கு அனுப்பப்பட்டார்.அவர்களைக் கொண்டு வந்து சேர்த்த தெய்வத்திற்கு நன்றிகூற அதிகளவு கடமைப் பட்டவள். எம் அருட்சகோதரி பெனடிக்ரா திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமிற்குள் பல நாட்களாக இருந்தார். அவருடைய மிகக் கிட்டிய உறவினர் 'விக்ரா' வின் மரணச்சடங்கில் பங்குகொள்ள எடுத்த முயற்சிகள் வீண்போகவில்லை. இராணுவக் காவலுடன் வந்து சென்றார். பின் பல முயற்சிகளினால் செட்டிகுளம் முகாமிற்கு அனுப்பப்பட்ட மக்களுடன் அருட்சகோதரி பெனடிக்ரா, அருட்பணி. கொன்பியூசியஸ் என்போர் வருகின்றனர் என்றும் மதவாச்சியில் அவர்களைப் பொறுப்பெடுக்கும் படியும் அறிவித் தனர். வருவார்களா! இல்லையா! என்ற ஆதங்கத்துடன் பல மணி நேரம் காத்திருந்தோம். இறுதியில் வந்து விட்டனர். வந்துவிட்ட மகிழ்வில் களைப்பு நீங்கிவிட்டது.

**முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் திரும்புபவரின் இறுதியான வேதனைக் கட்டம்**

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கும் மூன்றுமுறிப்பிற்கும் இடையிலிருந்த பெற்றோல் நிலையத்திற்கு அண்மித்ததாக புதிய பேருந்து தரிப்பு நிலையம் முளைத்தது. முகாம்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்வோர் எதிர்ப்பக்கத்தில் முட்கம்பியால் அடைத்த வெளியில் நிற்பதைக் கண்டேன். ஆனால் அவர்களுக்கு நிழல் வசதி செய்திருந்தனர். மக்களோ மட்டுப்படுத்தப்பட்ட பேருந்துகளில் எப்படியாவது இடம் பிடித்துப் போய்விட வேண்டும் என்ற அங்கலாய்ப்பில் முண்டியடித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் வெளியேறாது அடைக்கப்பட்ட நிலை வேதனையாய் இருந்தது. துவக்குப் பிடியால் அடியும் வாங்கினர். இத்துர்ப்பாக்கிய நிலையை என் கண்கள் காண வேண்டியிருந்தது.

கண்ணால் கண்டவை இவை. காணாதவை எத்தனையோ? தெய்வமே எம்மை மன்னியும். அனைவருக்கும் அங்குதான் பேருந்து போக்குவரத்து என்ற படியால் நானும் அங்கு சென்றேன். சோதிக்கும் மறைப்பறைக்குள் புகுந்து வெளிவந்து காரணம் காட்டி ஒரு நாள், ஒரு கிழமை, இரண்டு கிழமை பாஸ் பெற வளர்த்த நாய் முகத்தைப் பார்க்கும் நிலையில் அனைவரும் இருந்தனர். பாஸ் முடியுமுன் திரும்பிவிட வேண்டும். நிரந்தரமாகப் போவோர்க்கு வேறு பாஸ் நடைமுறைகள். பசி, பட்டினி, தாகம் ஒருபுறம். அவசர தேவைப் பூர்த்திக்கு அமைக்கப்பட்ட இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைப்புக்கூடுகள் எம்மாத்திரம். என்ன கலிகாலமோ என்ற சொற்கள் காற்றில் கலந்து காதுகளில் மெல்ல நுழைந்தன.

பணம் இருந்தவர் தேவையை நிறைவு செய்ய இராணுவக் கடைகளும் காணப்பட்டன. எவருக்கும் விதிவிலக்கு என்ற சொற்கள் அங்கு தொனிக்கவே இல்லை. செட்டிகுளத்துப் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய மாணவி ஒருத்தி பரீட்சைக்குச் சென்றே ஆக வேண்டும். காலாவதியான அனுமதி அட்டையைக் காட்டி புதியதொன்றைப் பெற்றுவிட கால் கடுக்க நின்றாள். அவளுக்காக நான் பரிந்து பேசிய நினைவும் வருகிறது.

மேலே நான் பகிர்ந்த நினைவுகள் யாவும் கலப்படமற்ற என் சொந்த அனுபவங்கள். ஒரு துறவியான எனக்கே இந்நிலை எனின் ஒரு பொதுமகன் எவ்வளவு வலிகளைச் சந்தித்திருப்பான் என எண்ணுகையில் துக்கம் நெஞ்சை அடைக்கிறது.ஒவ்வொரு துன்பத்தையும் கற்கும் களமாக ஏற்கும் பக்குவத்தை இறைவன் கிருபையால் தான் பெற்றேன் என்பேன்.வன்னிச்சமரில் துன்புற்ற இறைவனின் பிள்ளைகளுக்கு சேவையாற்ற அவரே என்னை அனுப்பினார். காலத்தின் தேவையை அவர் அன்றி யார் அறிவார்.

எல்லாம் வல்ல தெய்வம் எல்லாவித அனுபவங்களையும் ஆபத்தையும் சந்திக்க அனுமதித்தார். அவற்றினூடாகச் சென்று தன்னுடைய அனைத்துப் படைப்புக்களுடனும் ஒன்றுபட வைத்தார். அவை ஒவ்வொன்றும் எமது ஆன்மாவின் சங்கீதமாகட்டும். நன்றி! தெய்வமே! நன்றி!.

**அருட்சகோதரி யூட் மடுத்தீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் பதிந்த துன்பியல் நினைவுகள்

இற்றைக்கு எட்டு வருடங்களுக்கு முன்னதான, யுத்தகால அனுபவங்களைப் பின்னோக்கிப் பார்க்கின்ற போது மறக்க முடியாத நினைவுகள் மனதில் நிழலாடுகின்றன. 2009 இல் நான் கிளிநொச்சி - கரடிப்போக்கு திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் இருந்து பணியாற்றிக் கொண்டிருந்தேன். ஒருநாள் அகோரமான எறிகணைத் தாக்குதல் ஆரம்பமானது. இரவோடு இரவாக வாகனங்களில் பொருட்களை ஏற்ற ஆரம்பித்தோம். அப்போது எறிகணைகள் எம் இடத்தில் அருகருகே விழுந்து வெடித்தன. எங்கே ஓடுவதென்று தெரியாத ஓர் அங்கலாய்ப்பான நிலை. எமக்கருகில் இருந்த குடும்பங்களும் இடம்பெயர்ந்து விட்டன. அந்நேரத்தில் எமது பங்குத்தந்தையாக இருந்த அருட்தந்தை. பெனற் அவர்களின் உதவியோடு தர்மபுரம் நோக்கிப் பயணமானோம்.

அங்கேயும் இருக்க முடியாத அவலநிலை ஏற்பட்டபோது விஸ்வமடு நோக்கி இடம்பெயர்ந்தோம். இச் சூழ்நிலைகளில் எமது மக்கள் சந்தித்த மரணங்கள், அவலங்கள், இடர்பாடுகள், இழப்புக்களோடு நாமும் ஒருவராக இணைந்து எம்பயணத்தை தொடர்ந்தோம். இவ்வனுபவங்களெல்லாம் இருப்பவற்றைக் கொண்டு பற்றற்ற மனநிலையில் இருப்பதோடு திருப்தியாக வாழவும், இருக்கின்ற இடங்களில் மக்களுடன் ஒருமித்து வாழவும் எமக்கு சக்தியளித்தது. இக்காலங்களில் மக்களின் துன்பகரமான நிகழ்வுகளில் பங்குகொள்ளவும், அவர்களின் மன வேதனைக ளுக்குச் செவிமடுத்து அவர்களுக்காகச் செபிக்கவும், தொடர்பு கொள்ள முடியாத அவர்களின் உறவுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் எம்மால் இயன்றளவு உதவ முடிந்தது. அத்துடன் இவ்வனுபவங்கள் எனது துறவறவாழ்வின் அர்த்தத்தை ஆழமாக உணர்த்தி நின்றன.

மீண்டும் மெனிக்பாமில் (Manic Farm) உள்ள ஆனந்த குமாரசுவாமி நலன்புரி முகாமில் இடம்பெயர்ந்த மக்களுக்கு எனது கற்பித்தற் பணியைத் தொடர்ந்தேன். முட்கம்பி வேலிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ சோதனைச்சாவடிகள், சில குறிப்பிட்ட இடங்களைத் தாண்டிச்செல்ல முடியாத நிலைகள், அத்தியாவசியமான செய்திக ளைப் பகிர்ந்து கொள்ள முடியாத அவலங்கள். இவ்வாறு பல நெருக்கடிகளுக்குள் பணிசெய்தமை மறக்க முடியாத அனுபவ மாக இருந்தது. இடம்பெயர்ந்த மாணவர்கள் மத்தியில் பணிபுரிந்த காலங்களில் என்னால் முடிந்தளவு அவர்களின் வாழ்வில் நம்பிக் கையையூட்டி, கடவுள் பக்தியிலும், ஒழுக்கத்திலும், கல்வியிலும் முன்னேற உதவிசெய்வதற்கு இறைவன் தந்த நல்ல வாய்ப்பை எண்ணி நன்றி கூறுகின்றேன்.

நான் கடந்துவந்த துன்பியல் அனுபவங்கள் நசரேத்தின் திருக் குடும்ப வாழ்வை, போர்ச் சூழலில் வாழக் கற்றுக் கொண்டதோடு தற்கால வாழ்விலும் கூட எளிமையான வாழ்வை வாழ்வதற்கு எனக்குத் துணைசெய்கின்றன.

**அருட்சகோதரி. மலர்விழி அல்பிரட்**


"ஆன்ம வாஞ்சையும் வீரத்துவமான
பற்றறுத்தலும் கொண்ட இறைவன் மாத்திரமே
என்னும் மனப்போக்காகும்".

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இறுதிப் போரில்
திருக்குடும்ப அருட் சகோதரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







**இறுதிப் போரில் சிதைவுற்ற**
**முல்லைத்தீவு திருக்குடும்ப கன்னியர் மடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





போரின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட புதிய பணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலைகள் நிலைசாயினும் குன்றுகள் இடம்
பெயரினும் உன்மீது நான் கொண்ட
பேரன்போ மாறாது"

(எசாயா 54:10)

அத்தியாயம் II

# இயற்கை அனர்த்தம் தந்த அழியாத நினைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலையின் அவலச்சுவடுகள்

01.05.2004ம் ஆண்டு எனது நித்திய அர்ப்பணத்தை முடித்து விட்டு இளமை துடிப்புடனும் பணி ஆர்வத்துடனும் வைகாசி மாதம் 15ம் திகதி முல்லைத்தீவு திருக்குடும்ப கன்னியர் மடத்திற்கு அனாதை பிள்ளைகளை பராமரிக்கும் பணிக்காக அனுப்பி வைக்கப்பட்டேன். பனை ஓலையினால் வேயப்பட்ட மண்டபம், போரின் தாக்கத்தினால் உடைபட்ட சுவர்களோடு இரண்டு கட்டடங்கள், அடிப்படை வசதிகள் தாராளமாக இல்லாத இடம் அது முப்பது பிள்ளைகளுடன் எளிமையான மகிழ்வான வாழ்க்கைப் பயணம் அது.

ஞாயிறு தினங்களில் பிள்ளைகளுடன் கடற்கரை சென்று செபமாலை சொல்லி பின் கச்சான் சாப்பிட்டு விளையாடி வருவது வழக்கமாக இருந்தது. இரவு வேளைகளில் முற்றத்தில் நிலா ஒளியில் தியானம் செய்து இயற்கையோடும் இறைவனோடும் ஒன்றித்த காலமும் அது.

UNHCR இன் உதவியுடன் கட்டட வேலைகள் ஆரம்பித்து சிற்றாலயமும் படுக்கையறையும் முடிவுற்று சமையல் அறையும் சாப்பாட்டறையும் லின்டர் வரை வேலைகள் செய்து கொண்டிருந்த நேரம் அது. பங்குப் பணிகளில் ஈடுபட்டு பலருடன் அப்பா, அம்மா, தம்பி, தங்கை என்று பலருடன் உறவை வளர்த்திட்ட காலம் அது.

பாடசாலையில் பகுதி நேர ஆங்கில ஆசிரியராக ஆக கற்பிக்க தொடங்கி 1- 6 வரை சிறுவர்களுடன் ஆடல் பாடல் கலைகளுடன் இணைந்து ஆங்கில கவிதைகள், பாடல் போட்டிகளில் சிறுவர் களை ஈடுபடுத்தி வென்று வந்தால், திருகோணமலைக்கு உங்களு டன் வருவேன் என்று சொல்லி அனுப்பி வைத்த வேளை, வென்று வந்த சிறுவர்கள் மடத்து வளாகத்தில் நின்ற மாமரத்தின் கீழ் நான் நின்ற போது "வென்றுவிட்டோம் எங்களுடன் திருகோணமலை வரவேண்டும்" என்று ஓடி வந்து என்னை கட்டி பிடித்த காட்சி இன்று எழுதும் போது என் கண்களில் கண்ணீர் நிறைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவித்ரா தாய்க்கு ஒரே பெண் பிள்ளை இரு ஆண் சகோதரர் கள், ஒளிவிழா நிகழ்வுக்காக, நாடகத்தில் தேவதாயாக நடித்த தன் பிள்ளைக்கு அனைத்து உடைகளும் புதிதாக தைத்து தனது குழந்தையை இரசித்த அன்னையின் முகம் கண்முன் வருகின்றது. சிறுவன் கண்ணை சிமிட்டிக் கவிதை சொன்ன விதம் இன்னும் என் முன் நின்று தலையாட்டுவதைப் போல் உள்ளது.

கிறிஸ்மஸ் இரவு 24.12.2004இல் அளம்பில் தேவாலயத்திற்கு திருப்பலிக்கு சென்றிருந்தேன். நள்ளிரவு திருப்பலி முடிந்தவுடன் அங்கு தங்கி நின்று, அன்று காலை கடற்கரை அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில் திருப்பலி முடித்து விட்டு நானும் சில சிறுவர்களும் கடற்கரையில் நின்று விளையாடினோம், பின் நான் அங்கு உணவருந்தி விட்டு, முல்லைதீவுக்கு வந்து விட்டேன். மாலை இரவு உணவு முடிந்தவுடன் இரு அருட்சகோதரிகளும் எமது ஆசிரியர் நண்பர் ஒருவரும் நானும் எமது விடுதிச்சாலை மாணவிகள் இருவரும் படம் பார்த்து விட்டு, அந்த இரு மாணவி களும் அவ்வூரை சேர்ந்தவர்கள் என்பதனால் அவ்விரவே தம் வீடு சென்றனர்.

நத்தாருக்குச் சேர்ந்த பரிசுகளை எனது அறையில் உள்ள கதிரையில் வைத்து விட்டு தூங்கி விட்டேன். அதிகாலையில் எழுந்து அவசரமாக பூசைக்கு ஆயத்தமாகிக் கொண்டு சமைக்கும் அம்மாவின் மகளை திருப்பலிக்கு செல்ல அழைத்த போது தலையிடிக்கின்றது வரவில்லை என்றா பரவாயில்லை கோவிலில் வந்து விழுந்தால் நான் தூக்குவேன் என பகிடியாக கூறி அவளை அழைத்துக்கொண்டு இன்னுமொரு பிள்ளை என்னுடன் நின்றா. அவவையும் அழைத்துக்கொண்டு சகோதரி கில்டாவையும் அவசரப்படுத்திக் கூட்டிக்கொண்டு திருப்பலிக்குச் சென்றிருந்தோம். சூசையப்பர் சுரூபம் வைத்திருந்த இடத்தில்தான் திருப்பலி நடைபெற்றது.

வானம் இருண்டு இரண்டு மூன்று நாட்களாக வெயில் இல்லாது மழைமந்தாரமாக இருந்தது. முதல் நாள் அருட்தந்தையுடன் வாகனத்தில் வந்தபோது ‘ஏன் பாதர் கடல் கலங்கி இருக்கு’ எண்டு கேட்ட போது ‘மழை காலம்’ என்றார் பாதர்.

இப்படியும் கடல் கலங்குமா என எனக்குள் ஒரு கேள்வி இருந்தும் அன்று பின்நேரம் பிள்ளைகளுடன் கடற்கரைக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று கொண்டிருந்த போது விடுதலைப்புலிகளின் பொலிஸ் அதிகாரி 'சிஸ்ரர்! பிள்ளைகளை கடலில் இறங்க விட வேண்டாம் கரையில் நின்று விட்டு வாருங்கள்' என எனக்கு அறிவுரை வழங்கினார் நானும் சென்று பார்த்து விட்டு உடனே வந்து விட்டேன்.

திருப்பலி முடிந்தவுடன் பாதர் சரத் ஜீவன் திருச்சுரூபத்தை எடுத்து ஆசீர்வதித்தார். அந்த நேரம் சல்லிக்கல் கொட்டுவது போன்ற சத்தம் கேட்டது. 'ஐயோ! கடல் வருகின்றது ஓடுங்கள்' என்ற அழு குரல்களைக் கேட்டோம்.

திருப்பலிக்கு வந்திருந்த இரு அருட்தந்தையர்களும் ஒரு அருட்சகோதரியும் மக்களுடன் ஓடத்தொடங்கிவிட்டார்கள். அருட்தந்தை சரத்தும் அருட்சகோதரி கில்டாவும் நானும் நின்ற இடத்திலேயே நின்றோம். நான், பாதர் சூசையப்பரை வெளியில் வையுங்கள் இந்த இடத்திற்கு தண்ணீர் வராது என்றேன். அவரும் கையில் இருந்த சுரூபத்தை வைத்தார். பின் மக்கள் அவலக் குரலுடன் ஆடைகள் இல்லாது ஓடி வந்தவர்களையும், இறந்தவர்களை தூக்கிக் கொண்டு வந்தவர்களையும், இரத்தக் காயங்களுடன் ஓடி கொண்டிருந்தவர்களையும் பார்த்து அதிர்ந்து போனோம்.

அப்போது அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதர், சிஸ்ரர் நீங்கள் இந்த இடத்தை விட்டு ஓட மாட்டீர்களா? என்று கேட்டார். அப்போதுதான் நாம் இங்கு நிற்பது ஆபத்ததானது என்ற உணர்வு வந்தது. எங்களுடன் நின்ற சில ஆசிரியர்களுடன் அருட்சகோதரி கில்டாவும் நானும் ஓடத் தொடங்கினோம். நந்திக் கடல் மட்டும் வேகமாக ஓடும் படி எங்களுடன் வந்தவர்கள் கூறிக்கொண்டே வந்தார்கள். நடப்பதும், ஓடுவதுமாக ஓடி ஓர் இடத்தையடைந்தோம்.

அங்கே குழந்தைகளைத் தூக்கி அழுதுகொண்டே சிலர் ஓடி வந்துகொண்டிருந்தார்கள். நாங்கள் உயிர் இருக்கின்றதா எனப் பார்த்து உடனுக்குடன் அதில் நிற்பவர்களிடம் கேட்டுக் கேட்டு வைத்தியசாலைக்கு அனுப்பிக்கொண்டே இருந்தோம். சிலர் அதிலேயே தூக்கி வந்தவர்களைப் போட்டு அழுது புலம்பி ஒப்பாரி வைத்தார்கள். ஐயோ எல்லோரும் தண்ணீரில் மிதக்கின்றார்களே, முட்கம்பியில் சிக்கித் தவிக்கின்றார்களே! என அழுது புலம்பிக் கொண்டேயிருந்தார்கள். அன்று பகல் சாப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகூட எனக்கில்லை. மாலை நான்கு மணியிருக்கும். நானும் சிஸ்ரர் கில்டாவும் எங்களுடன் சிலரும் முள்ளியவளை பாடசாலை யில் உடலங்களை வைத்திருக்கின்றார்களே என்று அங்கு பார்ப்பதற்காகச் சென்றோம். உழவு இயந்திரத்தில் இறந்தவர் களைக் கொண்டுவந்து இறக்குவதும், ஓலமிட்டு அழுவதும் எனது பிள்ளையா? உனது பிள்ளையா? என உறவுகளைத் தேடுவதுமாக இருந்தார்கள். எங்களைக் கண்டதும் ஐயோ சிஸ்ரர் கால்கோள் விழாவிற்கு உங்களுக்கு மாலை போட்ட என்ர பிள்ளையைப் பாருங்கோ. ஐயோ ஒளி விழாவிலே நடித்த என் பிள்ளையைப் பாருங்கோ என அழுதார்கள். மேசையின் கீழ் துணிகளால் சுற்றி வைக்கப்பட்டிருந்த உடலங்களைப் பார்த்து இது எமது பாடசாலை மாணவிகளா? எமது விடுதிச்சாலைப் பிள்ளைகளா? என்று தேடித்தேடிப்பார்த்தோம். உழவியந்திரத்தில் இறந்தவர்களைக் கொண்டு வந்து இறக்கும் போதேல்லாம் ஓடுவதும், வருவதுமா இருந்தோம். மாலை கிட்டத்தட்ட ஒன்பது மணி இருக்கும் எமது பாடசாலையில் கற்பித்த ஆசிரியர் தங்கள் வீட்டிற்கு எம்மை அழைத்துச் சென்றார். எம்மிடம் போட்டிருந்த உடுப்பைத் தவிர வேற எதுவுமில்லை. அவர்களின் சகோதரிகள் தங்களது உடைகளோடு உணவும் தந்தார்கள். கண்ணீரோடு சாப்பிட்டு விட்டு தூங்கச் சென்றால் தூக்கம் என்பதே வரவில்லை. மறுநாட் காலை மழை தூறிக் கொண்டேயிருந்தது. இரத்தக்கறை படிந்த அதே ஆடையுடன் மீண்டும் அப் பாடசாலைக்குச் சென்றோம். மீண்டும் உழவியந்திரத்தில் உடலங்களைக் கொண்டுவந்த படியே இருந்தார்கள். மாலை வரை நின்று விட்டு மீண்டும் அந்த ஆசிரியர் வீட்டிற்குச் சென்று தங்கினோம். மறுநாட் காலை புதுக்குடியிருப்பு மடத்திற்குப் போவதற்காக வந்த பேருந்தை மறித்து ஏறினோம். பயணச்சீட்டு என்றார்கள். நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்தோம். கையில் ஒருசதம் கூட இருக்கவில்லை. கண்களில் கண்ணீர் ஓடியது. இதைக் கண்ட ஆசிரியர் தனது கையிலிருந்த காசை நீட்டினார். உடனே வாங்கி நடத்துநரிடம் கொடுத்தோம். பின்பு புதுக் குடியிருப்பு மடத்தைச் சென்றடைந்தோம். செல்லும் வழியில் உடலங்களைப் பெக்கோவினால் கிண்டிப் புதைத்துக் கொண்டிருக்கும் காட்சி எம்மனதை நெகிழவைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்குடியிருப்பிலும் ஓ! எனும் மரண ஓலங்கள். கிட்டத்தட்ட இரண்டு, மூன்று கிலோ மீற்றர் போகின்ற போதே துர்நாற்றம் வீசியது. அப்போதுதான் அங்கும் உடலங்களைப் புதைக்கின்றார்கள் என்பது எமக்குத் தெரிய வந்தது. எமது வரவிற்காகச் சகோதரிகள் காத்துக்கொண்டிருந்தார்கள். எம்மைக் கண்டவுடன் கட்டியணைத்து அழுதார்கள். நாமும் எம் மக்களை நினைத்து அழுதோம். அன்றைக்கு எனக்குக் காய்ச்சல் வந்து விட்டது. புதுவருடத் திருப்பலிக்கு நான் செல்லவில்லை. சிஸ்ரர் கடைக்குச் சென்று நாம் மாற்றிக்கொள்ள உடைகள் வாங்கி வந்தா. வேறு மடங்களிலிருந்தும் எமக்கு உடைகள் அனுப்பப் பட்டிருந்தது. ஒரு சட்டையைத் தவிர வேறு எதுவும் பொருத்தமாக இருக்கவில்லை. மூன்று நான்கு நாட்கள் கழிந்த பின்பு எம்மைப் பார்க்க இந்த ஆசிரியர்கள் எமது அலுமாரிகளை விடுதிச்சாலை வளவிற்குள் கண்டதாகக் கூறினார்கள். எம்மையும் தங்களுடன் வரும்படி அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்றுகொண்டிருந்த போது பொருமிய உடலங்களை LTTE உறுப்பினர்களுடன் பொதுமக்களும் நின்று தேடித் தேடி ஏற்றுவதும், ஏற்ற முடியாதவற்றை அந்தந்த இடங்களிலேயே புதைப்பதுமாக இருந்தார்கள். எல்லாவற்றையும் பார்த்து ஏங்கிக் கொண்டு எமது மடத்தை அடைந்தோம். எந்தப்பக்கம் போவதென்றே தெரியவில்லை. எல்லா இடமும் ஒரே துர்நாற்றம். எல்லாக் கட்டடங்களும் இடிந்து ஒரே வெளியாக கிடந்தது. அருட்சகோதரி என்னைத் தேடி வந்து சத்தம் இட்டு அழுதா எனக்கு அழுகை வந்தது. என்றாலும் நான் உயிருடன் இருக்கிறேன் எம் மக்கள் அனேகர் இறந்து விட்டார்களே என்ற கவலை என்னை வாட்டியது. அப்போது அந்த இடத்திற்கு வந்த அருட்தந்தை றொகானும் அவரது சகோதரி அருட்சகோதரி விஜயாவும் என்னையும் அக்காவையும் கண்டு எனக்கு ஆறுதல் கூறிவிட்டு சில பொருட்களும் உணவும் தந்தார்கள். அவர்களுடன் கோயில் பக்கம் போய் சில மக்களைப் பார்த்து விட்டு புதுக்குடியிருப்பு மடத்திற்குச் சென்றோம்.

தொடர்சியாக நாங்கள் புதுக்குடியிருப்பில் இருந்து வருவதும் போவதுமாக இருந்தோம். அருட்சகோதரிகள் எம்மை வந்து சந்தித்தார்கள். பின் நாங்கள் சுவாமி தோட்டத்தில் ஒருகொட்டிலில் போயிருந்தோம். அங்கு எம்மைச்சுற்றியும் இன்னும் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களிலும் முள்ளியவளைப் பாடசாலையிலும் மக்கள் தங்கியிருந்தார்கள். பல அருட்சகோதரர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அங்கு வந்து தங்கி எம்முடன் இணைந்து மக்களுக்கு பணி செய்தார்கள். 31ம் நாள் நாங்கள் அனைவரும் அருட்தந்தையர்களுடன் இணைந்து ஓரளவு உள விடுதலை கொடுக்க அர்த்தமுள்ள திருப்பலிக்கு ஆயத்தம் செய்தோம். சவப்பெட்டி ஒன்றை வாங்கி, மக்கள் தங்கள் பிள்ளைகள், உறவினர்களின் புகைப்படங்களை அதற்குள் வைத்து, அடக்கச்சடங்கு நடாத்துவது போன்று அடையாள வழிபாடு ஒன்றை நடாத்தினோம். அந்த நேரம் உண்மையாக ஒரு இறந்த வீட்டில் நின்ற உணர்வு ஏற்பட்டது. அழுகுரல்களில் உருகிப் போகாத உள்ளங்களே இல்லை என்றே கூறலாம்.

தொடர்ச்சியாக எமது அருட்சகோதரிகள், வேறு ஆலயத்தைச் சேர்ந்தவர்கள், அருட்சகோதரர்கள் என்று பலர் எம்முடன் இணைந்து மக்களுக்கு பணியாற்றினர். திருப்பலி வழிபாடு, சிறுவர்களுக்கு விளையாட்டுக்கள், பாடசாலை வகுப்புக்கள் என பல ஊக்குவிப்புக்கள் மக்களுக்கு வழங்கப்பட்டது. எல்லாப்பக் கங்களிலும் அரச சார்பற்ற நிறுவனத்தினர் பலர் பல முன்னெடுப்புக்களை ஆரம்பித்தார்கள். நாமும் முகாம்களுக்கு தேடிச்சென்று பெற்றோரை இழந்த பிள்ளைகளை அழைத்து வந்து விடுதிச்சாலை ஒன்றையும் ஆரம்பித்தோம். கிட்டத்தட்ட முப்பது பிள்ளைகள் எம்முடன் இருந்தார்கள்.

அந்த வேளையில் எமது சபைத்தலைவியுடன் இன்னுமொரு அருட்சகோதரியும், 'லில்' என்ற சகோதரியும், அயர்லாந்து நாட்டை சேர்ந்த நான்கு பொது மக்களும் எங்களுடன் வந்து தங்கி முகாம்களுக்குச் சென்று மக்களைப் பார்வையிட்டு உதவி புரிந்தார்கள். எமது விடுதிச்சாலை மாணவிகளுக்கும் பாடசாலை சென்று வருவதற்காக வாகனம் ஒன்றை வழங்கினார்கள். அவர்கள் மிகவும் பாசமாக என்னுடன் பழகி எமக்கும் மக்களுக்கும் உதவி புரிந்தார்கள். கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் எமது வாழ்க்கை கூடார வாழ்க்கையாக அமைந்தது. மக்களோடு மக்களாக இருந்து அவர்களுக்குப் பணியாற்றிய அனுபவம் மறக்க முடியாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் எமது நாளாந்த பணிகள் திட்டமிடப்படும். மக்களுடன் சென்று எப்படி பேசுவது, அவர்கள் இந்த இழப்பை ஏற்றுக் கொள்ள எவ்வாறான வழிமுறைகளை கையாள்வது என்று பலரும் சேர்ந்து உரையாடி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செயற்றிட்டத்துடன் அனைவரும் அனுப்பப்படுவர். பின் அதைப் பற்றிய மீளாய்வு இடம் பெறும். இன்று பதின் மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் சுனாமியின் நினைவுகள் அழியாத சுவடுக ளாக நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன.

**அருட்சகோதரி றெஜினா அந்தோனிப்பிள்ளை**

***"Give yourself to God without reserve and without limits. He alone deserves our heart and can make us happy".***

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயமான அசம்பாவிதம் (சுனாமி)

2004 மார்கழி 26ஆம் திகதி மகிழ்ச்சியான கண்விழிப்பு. அன்று எமது பாதுகாவலரான பரிசுத்த திருக்குடும்பத்தின் திருவிழா. இயேசு, மரி, சூசை மூவரையும் நினைவுகூர்ந்து இறைவனைப் போற்றும் நன்நாள். எம் மனங்களில் குதூகலம். சகோதரிகள். அனஸ்ரேசியா, அன்ரனிற்றா, அல்போன்ஸ்மேரி ஆகிய நாம் காலைத்திருப்பலியில் மக்களோடு சேர்ந்து பங்கு பற்றினோம். அன்று குடும்பவிழா. பங்குத் தந்தை, மக்கள், எமது பொதுநிலை அங்கத்தவர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்கள் பரிமாறி மகிழ்ந்தோம்.

காலநிலை சீராகவே இருந்தது. சகோ. அனஸ்ரேசியா கோவி லில் பக்தியுடன் செபத்தில் ஈடுபட்டிருந்தார். சகோ. அன்ரனிற்றா ஒருவருடன் கதைத்துக் கொண்டிருந்தார். மதிய உணவு சமையலுக்குத் தேவையான உருளைக்கிழங்கு வாங்கி வருவதற்காகப் பக்கத்துக் கடைக்குச் செல்ல ஆயத்தமானேன். வழமையாக நாம் கடற்கரை வழியால்தான் செல்வது வழக்கம். அன்று எமது அப்பா ஏனோ! அவ்வழியால் செல்லவிடாது என்னைத் தடுத்தார். நான் நினைத்தது ஒழுங்கை வழியால் சென்றால் விரைவாக வந்துவிடலாம் என்று. ஆண்டவன் நினைத்தது என் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று. இறைபராமரிப்பின் முதற்கட்டம். கடற்கரைவழியைத் தடுத்தார்.

நான் கோவில் வளவைத் தாண்டி முதலாம் ஒழுங்கையையும் கடந்து மக்கள் இல்லாத ஒரு வளவின் ஊடாக பக்கத்து வளவுக்குள் போய் இரண்டாம் ஒழுங்கைக்குள் போக முற்பட்டேன். ஓவேன்ற பெரிய இரைச்சல், மக்களின் அவலக்குரல். கதவைத் திறக்க கடற்கரையில் நின்ற மக்கள் அடிச்சுப் பிடிச்சு, ஒருவரை யொருவர் இடித்துக் கொண்டு விரைவாக ஓடிவருகிறார்கள். என்னைக் கண்டதும் சிஸ்ரர் ஓடுங்க வராதேயுங்க கடல் வருகுது. என்று கத்தினார்கள். கடற்கரையில் நின்ற மக்கள் கடல் கொந் தளித்துக் கொண்டுவருவதைக் கண்டார்கள். கடல்நீர் பொங்கி மேலே எழுந்து களிமண் கரைத்த நீர் போல கடலில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30-40 அடி உயரத்தில் எழுந்து ஊர்மனையை நோக்கிவருவதை நானும் கண்டேன். நான் உடனே வளவுக்குள் ஓடினேன். அந்நேரம் இரண்டு அல்லது மூன்று நிமிடங்களுக்கிடையில் நான் என் முழங்கால் அளவு தண்ணீரில் நிற்கிறேன். பயத்துடன் அடுத்தவளவுக்குள் ஓடினேன். கடல்நீர் ஒழுங்கைகள் வழியாகப் பாய்ந்து ஓடியது. ஒழுங்கைகள் பள்ளமானவை. அத்துடன் நான் கோவில் வளவுக்குள் எப்படிப் போவது, மடத்திற்கும் போக முடியாத நிலை. அழுகிறேன். இயேசப்பா காப்பாற்றுங்க என்று கத்துகின்றேன். நான் அந்தவளவில் நின்று தடுமாறுவதைப் பக்கத்து வீட்டு அடைக்கலம் அம்மா கண்டு விட்டார். "சிஸ்ரர் எங்கே போகப் போகிறீங்க?" என்று கேட்க நான் "நான் மடத்திற்குப் போக வேண்டும்" என்றேன். "என்ன மோட்டுக்கதை ஒழுங்கையால் போகமுடியாது, எங்களோடுவாங்க" என்றார். "எப்படிவாறது?" என்னால் மதிலேற இயலாது." இயேசுவேநான் என்ன செய்ய என்று சொல்லி அழுகின்றேன். உடனே அவவும் கணவரும் பிள்ளைகளும் சேர்ந்து ஒரு பாரமான ஏணியைக் கொண்டுவந்து நான் நின்ற பக்கமாக வைத்தார்கள். அதில் ஏறி மதிலால் எங்கள் வளவுக்குள் இறங்கலாம். வேறுவழியின்றி நானும் எப்படி ஏறினேனோ தெரியாது. இயேசப்பா என்னைத் தூக்கிவிட்டார். நான் மதிலில் இருக்க பக்கத்து மதில் இடிந்து விழுந்தது. உடனே ஏணியைத் தூக்கி அவர்கள் பக்கமாக நான் இறங்கி அவர்க ளோடு சேர்ந்துவிட்டேன். மக்கள் கடற்கரைப் பகுதியைவிட்டு ஊரின் நடுப்பகுதிக்குள் ஓடுகின்றார்கள். பத்து நிமிடங்கள் ஒரே அமளிதுமளி. மக்களின் அவலக்குரல் காதைப் பிளந்தது. கீழேநிற்பது ஆபத்து என அவர்களுடைய குளியலறை, மலசலகூடப் பகுதியிலிருக்கும் சிமெந்துப் பாறையில் ஏணியை சாயவைத்து என்னையும் பிள்ளைகளையும் இன்னும் சிலபிள்ளை களையும் ஏற்றிவிட்டார்கள். என்னை மேலே சிலர் பிடிக்க கீழே சிலர் தாங்கி ஏற்றினார்கள். எப்படி ஏறினேன் என்று எனக்கே தெரியாது. இறைவனும் திருக்குடும்பமுமே என்னைத் தாங்கி ஏற்றினார்கள். ஏறியதும் மேலே என்னோடு இருந்தவர்களிடம் 'எல்லோரும் கடவுளை நோக்கி கரங்களை உயர்த்தி செபிப்போம்' என்று நான் கூற அவர்களும் அப்படியே செய்தார்கள். என்ன செபித்தேன் எப்படி செபித்தேன் எனக்குத் தெரியாது. இறைவனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொள்ளப்பட்ட உணர்வு. எம் மன்றாட்டுக்களுக்கு ஆண்டவர் செவிமடுத்தார் பத்து அல்லது பதினைந்து நிமிடங்களில் எல்லாம் ஓய்ந்து விட்டது. இனி கீழே இறங்க வேண்டும் எனது நடுங்கும் கை கால்கள் எங்கிருந்து வலிமை பெற்றனவோ நான் அறியேன். "உதவி ஆண்டவரிடமிருந்தே வரும்" என்னும் இறைவாக்கு உண்மையாயிற்று. எல்லோரும் கீழே இறங்கிவிட்டோம்.

கடல்நீர் குறையத் தொடங்கியது. ஆனால் ஒழுங்கையால் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. இனி இங்கிருக்க முடியாது. மடத்திற்குப் போகவேண்டும், அங்கு நிலைமை எப்படியோ சிஸ்ரர் மார் என்னைத் தேடுவார்களே என்ன செய்யலாம் எனப் பதற்ற மடைந்தேன். என்னைக் காப்பாற்றிய அம்மாவின் கணவரிடம் இந்த ஒழுங்கையால் என்னைக் கூட்டிக் கொண்டுபோய் விடும்படி கெஞ்சினேன்.

அவரை இறுகப் பற்றிக்கொண்டு ஒழுங்கையில் இடுப்பளவு தண்ணீரில் கோவில் வளவுக்குள் நுழைந்தேன். கண்ட காட்சியால் தலை சுற்றியது. கோவில் வளவு முழுவதும் குப்பையும் கூழமும் குவிந்து கிடந்தன. கால் வைத்து நடக்கவே முடியாதநிலை.

ஒரு அரைமணி நேரத்தில் இவ்வளவும் நடந்ததா என நினைத்துப் பாக்க முடியவில்லை. ஆண்டவர் ஏன் எனக்கு உயிர்ப் பிச்சை தந்தார் என்ற உணர்வுடன் மடத்துப் பின் வாசலுக்குப் போனேன். ஒரு பெரியவள்ளம் ஒரு சேதமுமின்றி காணப்பட்டது. முன் வாசலுக்கு வந்தேன். அருட்சகோதரி அன்ரனிற்றா மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். எமது இளைஞர்களும் மக்களை வழிநடத்திக் கொண்டிருந்தனர். சிஸ்ரர் என்னைக் கண்டதும் 'எங்கே போனீங்க? உங்களைக் காணவில்லை' என மாகாண இல்லத்திற்கு அறிவித்துவிட்டேன் என்றார்.

ஒரு சைக்கிள் தம்பியைக் கூப்பிட்டு என்னைக் குறிப்பிட்ட வீட்டில் கொண்டு போய் விடும்படி கூறினார். நானும் போனேன். அங்கே சிஸ்.அனஸ்ரேசியா இருக்கிறார். அது எமது திருக்குடும்ப பொதுநிலையினர் ஒருவரின் வீடு. நான் நனைந்த உடுப்புடன் நின்றேன். சுடச்சுடக் கோப்பி தந்தார்கள். என்னால் சிறிது நேரம் கதைக்கமுடியாமல் இருந்தது. கொஞ்சநேரத்தால் யாழ்ப்பாணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலிருந்து கார், வான், மோட்டார் சைக்கிளில் வந்தார்கள். மக்களையும் நிலைமையையும் அறிந்தார்கள். எம்மையும் அந்த வீட்டில் கண்டார்கள். அருட்தந்தை. ஜெபரட்ணம் என்னைப் பாத்ததும் இங்கிருக்கவேண்டாம் கொஞ்சநேரத்தால் வருவேன் யாழ் போக ஆயத்தமாயிருங்கள் என்றார்.

நான் அங்கிருந்து வெளிக்கிட்டு மடத்திற்குப் போக என்னைத் தடுத்தார்கள். மடத்திற்குப் போய் மருந்துகள் எடுக்கவேண்டும் எனச் சொல்லிப் போனேன். மீண்டும் கடல் கொந்தளிக்கலாம் என்றவதந்தி இருந்தது. நான் விரைவாகப் போய் ஒரு பையில் தேவையான சில உடுப்புகள், மருந்துகள் அத்தியாவசியமான பொருட்களை எடுத்துக்கொண்டு வந்து அந்த வீட்டில் இருந்தேன். அருட்தந்தை அவர்கள், எங்களை ஏற்றிக் கொண்டுவந்து மாகாண இல்லத்தில் விட்டார்.

அன்று நான் ஒழுங்கையுள் இறங்கியிருந்தால் தண்ணீரோடு அடித்துச் செல்லப்பட்டிருப்பேன். இப்போது நான் உயிரோடு இருந்திருக்கவே மாட்டேன். இறைவன் காப்பாற்றினார். இறைவனின் அற்புதமான பாதுகாப்பையும் அன்பையும் இரக்கத்தையும் அனுபவித்தேன். அதை நினைத்து நினைத்து அழுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. நன்றி நன்றி என இன்று வரை என் உள்ளம் சொல்லிக் கொண்டேயிருக்கிறது.

**அருட்சகோதரி அல்போன்ஸ் மேரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலையிலும் அபயமளித்த கரங்கள்

2004ஆம் ஆண்டு மார்கழி 26ஆம் திகதியன்று எங்கும் சோகமான காட்சி. தாளையடி கிராமத்தில், இந்து சமுத்திரத்தின் கடல் அலையானது எங்கும் பெருக்கெடுத்து மக்கள் வாழும் இல்லங்களெல்லாம் உட்புகுந்து திடீரெனப் பரவியது. மக்கள் எல்லோரும் குளறியடித்துக் கொண்டு வீடுகளைவிட்டு வெளியேறினர். உடுத்த உடையுடன் கையில் எதுவுமின்றி தண்ணீருக்குள் நனைந்து கொண்டு விரைவாகச் சென்றனர். முட்கள், பற்றைகள் கீறிக்கிழிக்க அவர்களின் உடுப்புக்கள் தலைப் பின்னல் முட்களில் சிக்கி இழுக்க புலம்பி அழுதுகொண்டு சென்றனர்.

கடல் அலைகள் கடற்கரையிலுள்ள படகுகள், வலைகளை அடித்துச் சென்று கொண்டிருப்பதும், மக்களின் இல்லங்களெல் லாம் உடைந்து தரைமட்டமாக்கப்பட்டதும் பிள்ளைகள் தண்ணீ ருக்குள் அகப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டதும் பரிதாபமான காட்சிகளாய் இருந்தன. ஆலயத்தில் மறைக்கல்விப் பிள்ளைகள் பங்குத்தந்தையுடன் ஒளிவிழாவிற்கு ஆயத்தம் செய்யும் வேளை யில் அலைகள் சடுதியாக வந்து அங்கிருந்த பிள்ளைகளை இழுத்துச் சென்றன.

குருவானவர் அந்நேரம் ஒரு மரத்தில் ஏறிக் கொண்டார். எட்டுப் பிள்ளைகள் நீரில் மூழ்கி இறந்தனர். இன்னும் சில பிள்ளைகள் மரத்தில் ஏறி உயிர் பிழைத்தனர். இன்னுமோர் குடும்பத்தில் தாய்க்கு ஒரேயொரு மகன் வயது பன்னிரண்டு. நீரினால் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார். சுனாமி அனர்த்தம் முடிந்ததும், பெற்றோர் அவரைக் கல்லறையில் அடக்கம் செய்தனர். அந்தக் கிராமத்தில் முப்பத்தெட்டுப்பேர் உயிரிழந்தனர். இன்னும் எனது சகோதரியும் மகனும் தண்ணீரால் இழுத்துச் செல்லப்பட்டு ஓரிடத்தில் இறந்து காணப்பட்டனர். இரண்டு நாட்களின் பின்பு அங்கிருந்த போராளிகள் இறந்த உடலங்களை எடுத்து ஒரு வாகனத்தில் ஏற்றி அடக்கம் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. பாரிய மரங்கள், தென்னை, பனை போன்ற மரங்கள் வேரோடு சாய்ந்தன. மக்கள் பொருட்களையெல்லாம் இழந்து வெறுமையாக்கப்பட்டனர். தண்ணீரின்றி மீட்கப்பட்ட மக்கள் யாவரும் கால் நடையாக நடந்து பளைக் கிராமத்தின் பாடசாலைகளில் கோவில்களில் தஞ்சமடைந்தனர். அவர்களுக்குத் தேவையான உணவு, உடை என்பன பகிர்ந்தளிக்கப்பட்டன. இவர்களை ஆற்றுப்படுத்தவும் உதவிகள் செய்யவும் அதிகம் தாக்கப்பட்டவர்களுக்கு உளவியல் சம்பந்தமான ஆற்றுப்படுத்தல், நோயாளருக்கு மருந்து போன்ற சிகிச்சைகள் அளிக்கவும் சகோதரிகள் அனுப்பப்பட்டனர். நானும் அவர்களுடன் சென்று எட்டு நாட்கள் பளையில் ஒரு வீட்டில் தங்கியிருந்து அங்கு அவர்களைப் பார்வையிட்டு அவர்களுடன் பேசி ஆற்றுப்படுத்தினோம். அங்குள்ள குருவானவருடன் இரு குருக்களும் சேர்ந்து அவர்களின் வழிகாட்டலின்படி மக்களைச் சந்தித்தோம். அவர்களின் கண்ணீரோடு கூடிய சோகக் கதைகளை யும் கேட்டறிந்தோம்.

அடுத்த கிராமங்களான செம்பியன்பற்று, மருதங்கேணி, கட்டைக்காடு மக்களும் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டனர். கட்டைக்காட்டில் கோவில் உடைந்தது. கப்பலேந்திமாதா சுரூபம் வேறு இடத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அங்கும் நாம் சென்று அவர்களைச் சந்தித்து தேவையான உணவுப் பொருட்கள் உடைகள், மருந்துகள், செபமாலை, புத்தகங்கள் போன்ற பொருட்களைப் பகிர்ந்தளித்தோம். இன்னும் அங்குள்ள பிள்ளைகள் கல்வி கற்பதற்கென திருக்குடும்பக் கன்னியர் மடம் மிருசுவிலில் சேர்த்துக் கொண்டோம். இன்னும் சில நிறுவனங்கள் மக்களைச் சந்தித்து அவர்களுக்குத் தேவையான உலர் உணவுகள், உடுப்பு வகைகள், கல்வி கற்பதற்கேற்ற கல்வி உபகரணங்கள் மருந்து வகைகள் போன்ற உதவிகளைச் செய்தனர். அவர்கள் அடிக்கடி சென்று அவர்களைப் பார்வையிடுவர். இன்னும் உளம் சம்பந்தமான உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளும் அவர்களால் செயற்படுத்தப்பட்டன. அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார் ஒவ்வொரு இடங்களுக்கும் சென்று குடும்பங்களைத் தரிசித்து அவர்களுக்குத் தேவையானவற்றைப் பகிர்ந்தளித்தார். இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு அழிந்திருக்கும் மக்களுக்கு வெளிநாட்டவாகளின் உதவி யுடன் வீட்டுத்திட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்ததுமன்றி அதற்குரிய தளபாடங்களையும் கொடுத்து உதவினார்.

மேலும் வருடாவருடம் சுனாமி அனர்த்தத்தின் நினைவு நாள் அன்று, அந்தந்தக் கிராமங்களிலுள்ள மக்கள் சுடரேற்றி மாலைகள் அணிவித்து, தங்கள் தங்கள் சமய முறைப்படி பிரார்த்தனை செய்வார்கள். நாங்களும் அவர்களுடன் இணைந்து செபிப்போம் உலகைப் படைத்த இறைவன் என்றும் எமது மக்களை இந்த மாதிரியான அழிவுகள் வராமல் பாதுகாப்பாராக.

**அருட்சகோதரி. அனஸ் ரேசியா**

"இறைவன் மாத்திரமேயன்றி, வேறு எந்த மனப்போக்கும் இருக்க வேண்டியதில்லை. அவரை மாத்திரமே தேடி, எல்லாவற்றிலும் இறைவனுக்கு மாத்திரமே பயப்படுவோம்"

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரோடும், இயற்கைப் பேரழிவோடும் போராடிய நினைவுகள்

மார்கழி மாதம் பிறந்தால் மகிழ்ச்சி பொங்கும். பலருக்கு இயேசு பிறப்பின் ஆனந்தம், ஆரவாரம், ஆடல் பாடல்கள், பரிசுகள் எல்லாம் சாதாரண மக்கள் முதற்கொண்டு கோடீஸ்வரர் ஈறாக கொண்டாடி மகிழும் நாட்கள். என்போன்ற சிலருக்கு 2004 மார்கழி 26ம் திகதி நடந்த பயங்கர துயர அனுபவங்கள் நினைவிற்கு வரும். அதற்குள் அகப்பட்டவர்களுக்கு நிச்சயம் மறக்கமுடியாது.

1990ஆம் ஆண்டின் இடப் பெயர்வுகளும் அழிவுகளும் சிறப்பாக முல்லை கடற்கரைப் பகுதிகளில் மறக்கமுடியாத பல நினைவு களைக் கொண்டிருந்த போது, எனக்கும் அங்கு பணிசெய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. பாதிக்கப்பட்ட பல மாணவர்கள் அங்கு தங்கியிருந்தார்கள். அவர்களுக்கு தங்கும் வசதிகள் இருக்க வில்லை. பாடசாலைகளும் இடிபாடுகளாகவே இருந்தது. குழுவில் நானும் சகோதரி கில்டாவும் றெஜினாவும் இருந்தோம். அந்நேரம் இமெல்டா சுகுமார் இருந்தா. அவவிடம் சென்று இரு பகுதியினருக் கான திருத்தவேலைக்கு உதவி செய்யும்படி கேட்டோம். 2004ஆம் ஆண்டு தை மாதத்தில் நிதி ஒதுக்கப்பட்டது. மார்கழிக்கு முன் முடிக்கவேண்டும். வேலைகாரர் குறைவு. கடவுள் கிருபையால் சிலரைக் கேட்டு இருபகுதி வேலைகளையும் செய்தோம். மாணவருக் கான கட்டிடம் ஐப்பசியில் முடிந்துவிட்டது. பாடசாலையும் கட்டப்பட்டது. எமது பிள்ளைகளுக்கு ஓலைக் கொட்டகையை விட இது அழகாக இருந்தது. சந்தோசமாக உட்புகுந்தார்கள். காலம் செய்த கோலம் சுனாமியில் கட்டிடம் தரைமட்டமானது. அன்றைய நாளில் நடந்த துரதிஸ்டம் நத்தார் திருப்பலியில் பாலன்-குடில் திடீரென்று வெடித்து அறிகுறி காட்டியது. யாரும் அதைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் சூறாவளி வரும் என்று அறிவிக்கப்பட்டது.

திருக்குடும்பத் திருநாள் திருப்பலிக்குப் போயிருந்தோம். நான் முதலில் திருக்குடும்ப சுரூபம் கொண்டுபோனேன். குருவானவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிவிப்பதற்காக மாலை கட்டிவரும்படி பிள்ளைகளிடம் கூறியிருந்தேன். கட்டக்கட்ட மாலை அறுந்ததாக பிள்ளைகள் கூறினார்கள். பூசை சற்றுப் பிந்தித் தொடங்கியது. அதுவும் நன்மைக்கே என எண்ணினோம். திருப்பலி நேரத்துடன் முடிந்திருந்தால் வீடுகளுக்குப் போயிருந்த மக்கள் வெள்ளத்தில் அமிழ்ந்தியிருப்பார்கள். புனித சூசையப்பர்தான் சற்றுத் தாமதமாக திருப்பலியை தொடங்க வைத்து எஞ்சியமக்கள் அழியாமல் காப்பாற்றினார். திருப்பலியில் கடைசிப்பாட்டுப் படிக்கும்போதே அழுகைச் சத்தத்துடன், கடல் கொந்தளித்து ஊருக்குள் வருகுது என்று மக்கள் அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தார்கள். அதற்கிடையில் இறந்த பிள்ளைகளின் உடல்களைத் தூக்கியபடியே கதறிக் கொண்டு மக்கள் வரத் தொடங்கினார்கள். எல்லோரும் செய்வதறியாது திகைத்து நின்றோம். இருந்த இடத்திற்கும் வெள்ளம் வரப் போகிறது. வீட்டில் உள்ளவர்கள் நிலை எப்படியோ என்று அலறிப்பதறி ஓடினார்கள். ஊருக்குள் போக முடியாது. மறுபக்கமாக முள்ளியவளைப் பக்கம் தம் குடும்பத்தவருடன் ஓடினார்கள். நாமும் திருப்பலிப் பொருட்களை எடுத்துக் கொண்டு மக்களுடன் கோவிலை விட்டு முள்ளியவளை நோக்கி நடந்தோம். மூன்று குருக்களும் வேதனையுடன் மோட்டார் சைக்கிளில் தமது மக்களைப் பாதுகாக்கச் சென்றார்கள். இறந்தவர்கள், காயப்பட்டவர்கள் என நூற்றுக் கணக்கானவர்கள் கொண்டு வரப்பட்டு பாடசாலையும் வைத்தியசாலையும் மக்கள் வெள்ளத்தால் நிறைந்து வழிந்தன.

இறந்தவர்கள் எமது மக்கள், பாடசாலைப்பிள்ளைகள், விடுதிச் சாலைப் பிள்ளைகள். கடவுள் ஒரு நொடிப்பொழுதில் இத்தனை அழிவுகளை எம் கண்முன் காட்டியது, எங்கு யாருக்கு யார் ஆறுதல் சொல்வது? யாரை யார் தேற்றுவது? எங்கும் மரண ஓலங்கள். நானும் அருட்சகோதரிகள் கில்டாவும் றெஜினாவும் சுற்றிச் சுற்றி மக்களைப் பார்த்தோம். காலை 5.30க்கு எழும்பிய பயணம் மதியம் 3 மணிவரை வைத்தியசாலை வளாகத்தில்தான். பசியும் வேதனையும். எமது இல்லிடம் எப்படி இருக்குமோ என ஏங்கித் தவித்தோம். மடத்துத் திறப்பு என்னிடம் இருந்தது. போய்ப்பார்க்க விரும்பினேன். திறப்புத் தேவையில்லை, எல்லாமே உடைந்து வெள்ளத்தில் பொருட்கள் யாவும் போய்விட்டன என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தோம். விதியைவெல்ல யாரால் முடியும் மடத்திற்குப் போக இயக்கத் தம்பிமார் விடவில்லை. போட்ட உடுப்பைத் தவிர வேறு எதுவும் இல்லை. தேவையானதை வாங்கும்படி அருட் தந்தை யேம்ஸ் பத்திநாதர் கொஞ்சக் காசு தந்தார். அவருக்கும் கோயில், அறைவீடு தரைமட்டமானது. வவுனியா போய் மடத்தில் அறிவிக்கிறேன் என்று சொல்லி எம்மை ஆறுதல் படுத்தினார். தேடிய சொத்துக்கள் யாவும் எம் கைவிட்டு மறைந்தன. சாதி, மதம் பாராது இறந்தவர்கள் ஒரே இடத்தில் போட்டு அடக்கம் செய்யப்பட்டனர். வாழும்போது எத்தனை ஏற்றத்தாழ்வுகள்? இப்போ எல்லாம் சமநிலை. பாடசாலையில் குடும்பம் குடும்பமாக வேதனையுடன் விம்மி விம்மி கண்ணீர் சிந்தியபடி வாழும் காட்சி. சுனாமி தந்த பரிசுகள் இவைதான். எமக்கு வவுனியா குழுச் சகோதரிகள் உடுப்புக்கள் கொடுத்து அனுப்பியிருந்தார்கள். புதுக்குடியிருப்பு சகோதர பொணவன்ரைன் வந்து எம்மை இரண்டு நாட்களுக்குத் தம்முடன் அழைத்துச் சென்றார். இருந்தாலும் எமக்கு நேர்ந்த கதியையும் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களையும் தாங்க முடியவில்லை. அவர்களைப் போய் சந்தித்து ஆறுதல் சொல்ல பல பக்கத்தாலும் உபகாரிகள் முள்ளியவளை ஆலய மனைக்கு வந்தார்கள். நான் அவர்களுக்கு உதவி செய்வதற் காகவும் முகாம்களில் வேலை செய்யவந்த சகோதரிகளுக்கு உதவி செய்வதற்காகவும் பங்குத்தந்தையுடன் இருந்தேன். இப்படியான இடரும் இக்கட்டும் நிறைந்த வாழ்க்கைச் சூழலில் எமது சபைத்தலைவி மாக்கிறேற் முல்டூன், அயர்லாந்து தேசத்து நண்பர்கள் சிலரும் வந்து முகாம்களுக்கு உதவி செய்தனர். வெளிநாட்டவர் என்றாலும் சுவாமி தோட்டத்தில் இருந்த கூடாரம் சாதாரண குளிப்பறைகள்தான் அவர்களுக்கும் இருந்தது. எந்தவித வேறுபாடுமின்றி சந்தோசமாக இருந்தார்கள். நான் அவர்களின் உணவுக்குப் பொறுப்பாக இருந்தேன். அந்த நன்றியை இப்பொழு தும் சிலர் என்னுடன் தொடர்பு கொள்வதன்மூலம் வெளிப்படுத் துகிறார்கள்.

இந்த வாழ்வு படிப்படியாக சமூக நிலைக்கு வர மீண்டும் 2006 ஆவணியில் பயங்கரப்போர் ஆரம்பமாகியது. முல்லைத்தீவில் விமானங்கள் குண்டுகள் பொழியத் தொடங்கின. உயர்தர மாணவர்கள் அறுபது பேருக்குமேல் தற்காப்புப் பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறச்சென்றனர். செஞ்சோலை முகாமில் ஆவணி 16ம் திகதி காலை ஏழு மணிபோல் மூன்று கிபிர் விமானங்கள் நாம் தங்கியிருந்த சுவாமி தோட்டத்திற்கு மேலால் போனதும், நாம் பாாத்திருக்க குண்டுகள் போட்டு அறுபது பிள்ளைகள் இறந்ததும், பலர் கண் இல்லை, கால் இல்லை, முகம் பார்க்க முடியாத நிலையில் இருந்ததும் அவலக் காட்சிகளாக இருந்தன. வைத்திய சாலைக்குச் சென்று பார்த்தபோது கண்கொண்டு பார்க்க முடியாத, காது கொடுத்துக் கேட்க முடியாத கொடூரமான துன்பங்களாக இருந்தன.

ஒருநாள் எமக்குப் பக்கத்திலிருந்த கடற்புலிகளின் வீட்டுக்கு கிபிர் குண்டுமழை பொழியத் தொடங்கியது. நாமும் பதுங்குகுழிக் குள் இருந்தோம். எமது வளவு முழுவதும் குண்டுகள் சரமாரியாகப் பொழியப்பட்டன. எமது பதுங்கு குழிக்குப் பக்கத்தில் தண்ணீரத்தாங்கியின் மீது குண்டுவிழுந்தது. எமது வாழ்வு முடியப் போகிறது என்று பயந்தோம், செபித்தோம். கிபிர் போய்விட்டால் வெளியே ஓடுவோம். மூன்று சிஸ்ரமார், பிள்ளைகள், சாரதியும் எழும்பி வீதியைக் கடந்து அடுத்தபக்கம் போனோம். ஏழுவரிக் கம்பி அடிக்கப்பட்டிருந்தது. எப்படிக் கடப்பது என யோசிக்க நேரமில்லை. ஓடிப் போய் பற்றைகளுக்குள் பதுங்கினோம். அதற்கிடையில் ஆட்கள் வந்து வெளியே வருமாறு எம்மைக் கூப்பிட்டார்கள். எப்படி மீண்டும் ஏழுவரிக் கம்பிகளைக் கடப்பது? ஒருவாறு வந்தவர்கள் உதவி செய்தார்கள். அவ்வளவுக்கு நாம் பயத்தில் செயலற்றவர்களாக இருந்தோம். எம்மை ஆறுதற் படுத்தினார்கள். இத்துடன் ஆண்டவர் எம்மை கைவிடவில்லை. மாலை ஐந்து மணியிருக்கும். இடிமுழக்கம் பலமாக இருந்தது. வெளியே பார்க்க முடியாதளவுக்கு மின்னல், மழை. பிள்ளைகள் பயத்தில் கத்தினார்கள். கடவுளைப் பார்த்து வேண்டினோம். இறுதியில் தென்னை மரத்தில் இடி விழுந்தது. அது அருகில் இருந்த கொட்டிலில் விழுந்து கொட்டில் எரிந்து உள்ளே இருந்த பொருட்கள் பல கருகிவிட்டன. அவ்வேளையில் இயக்கத் தம்பிமார் வந்து, எரிந்தவற்றை அணைத்து உதவி செய்தார்கள். இழப்புக்களைச் சந்தித்த மக்களை நான் தேடிச்சென்று ஆறுதற் படுத்தினேன். இறைவன் என் மட்டில் உயிர்ப்பிச்சை தந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துவருவதற்கு நன்றியாக நான் இறக்கும் வரை ஊழியம் செய்வேன்.

"கலங்காதே திகையாதே நான் உன்னோடு இருக்கிறேன்" என்ற இறைவார்த்தை எனக்கு உறுதுணையாக இருந்தது. இன்றும் பல சவால்கள் நேர்ந்த போதும் கடவுள் எனக்குத் தந்த அறிவு ஆற்றலால் அவரை மகிமைப்படுத்த தயங்குவதில்லை. எல்லாப் புகழும் இறைவனுக்கே.

**அருட்சகோதரி அம்புறோசின்**

***In these two virtues- complete obedience and total abandonment into the hands of divine Providence you will always find peace.***

***PBN***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இயேசு, மரி, சூசை இவ்வுலகில் இறைவனை மாத்திரமே அன்பு செய்து, தேடி ஆசித்தார்கள். இதுவே அவர்களுடைய எல்லாச் சிந்தனைகள், எல்லா ஆசைகள், எல்லாச் செயல்களின் நோக்கமாக இருந்தது. இந்த மனப்போக்குத்தான் எல்லாக் காரியங்களிலும் அவர்களை வழிநடத்தியது. திருக்குடும்பச் சகோதரிகள் அவர்களுடன் இணைந்தவர்களாக, அவர்களின் மனப்போக்கினால் ஊக்குவிக்கப்பட்டு அவர்களுடைய வாழ்வை வாழ்வார்கள். அனைத்திலும் இறைவனை மாத்திரமே அன்பு செய்து, தேடி ஆசிப்பார்கள்".

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சுனாமிப் பேரலையில் சிதைவுற்ற
முல்லைத்தீவு திருக்குடும்ப கன்னியர் மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சுனாமியின் பின்னர் மக்களின் நிலையும்
அருட்சகோதரிகளின் பணிவாழ்வும் (2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பசித்திருப்போருக்காக உன்னையே
கையளித்து வறியோரின் தேவையை நிறைவு
செய்வாயானால்,
இருள் நடுவே உன் ஒளி உதிக்கும்."

(எசாயா 58:10)

## அத்தியாயம் III

# வாழ்வின் சேவைச் சுவடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPEAKING FROM THE DEPTHS OF MY HEART

After my first Vows on 18th December 1956, I continued my studies and prepared for the training College Entrance Examination. In the meantime I was taking care of our elderly Sisters at Ilavalai. Then after my final vows , learnt music and was fully involved in teaching Western music.

My first appointment as a teacher was to a Muslim School- namely Al-Azhar M.V. in the District-Mannar. For us Religious, teaching appointment in such a school was then looked upon as something new and strange.! Yet, with genuine love and dedication for my pupils there –though of different beliefs I was able to fulfil my duties as a teacher. First here at Al-Azhar and then at St.Xavier's Girls' College Mannar, I introduced the school band and in the latter, taught Singing and Drama and this time to the majority Catholic student population. Whoever the pupils may be, I reminded myself that all are God's children and therefore they are equals – worthy of my love and concern, in spite of the differences. Though I was happy about my teaching profession, I did not want to be tied down to that ministry alone, instead I reached out to persons and families in desperate need.

Unexpectedly, the unpleasant incidents that occurred here and there owing to the ethnic conflict , reached its highest point in 1990. For fear and safety, people around Jaffna area and neighboring vicinities began to move out. A big number of them came rushing to the J/Holy Family Convent premises like a whirl wind and surging mighty flood, carrying with them their bags and baggages. Not even considering whether accommodation was possible to cater to this vast number, but trusting In the Divine Providence alone, we widely opened not only our gates and doors but especially our hearts to all those



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

who stepped in. Days and nights were awful- horrible as cannons were roaring deafening our ears, bombs thrown onto buildings, shelling aimlessly targeted causing damage to roofs, pillars and at times completely destroying entire buildings. We, expecting something unexpected would fall upon us at any time, soughtour refuge in God alone.

30th October was the day the LTTE –after the loss of many lives –captured the Jaffna Fort. By this time our students-the young ones left their homes and went into far and secure places to protect themselves from all sorts of perils and dangers. But we as Government servants had no other way except to mark time in schools, struggling between the Armed forces and the Group fighting for a cause with great determination.

In October 1995, at the command of the latter, almost all the people in Jaffna Town and surrounding areas except Ilavalai and Thenmaradchi unable to resist the order, evacuated their places. It was the 'Mass Exodus of people' that happened. Jaffna town and almost the entire Peninsula looked- as it were a 'Ghost town! Even the Priests and Nuns had to flee as there was no other choice .Moved with pity to have seen the miserable plight of our people- the old, the sick, the disabled the deserted- and feeling uneasy about the happenings , with a heavy heart I opted to remain with them-the **'New Anawim'** of our time! It was indeed asurprise but a sure support and sisterly concern when Sr.Christiana volunteered to stay with me –as a good companion!

From October 1995 till May 1996 we were shut off from the outer world as if we were imprisoned within the confines of the four convent walls. Our convent was our world; neither going out nor coming in. No Communication at all. We were ignorant of what was going on even outside our walls. Bombs blasted! Shellings followed one another, forcing us to get into he bunkers . But it was a real miracle that the terrors of these fearsome days neither did kill nor did they wound any of our



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

inmates! **"Great and wonderful are Your deeds O Lord, now and forever more"!**

Finally in December, the Sri Lankan Army took control over the Peninsula, entered our convent premises, made it a Refugee camp, and me to be the one in- charge. They provided us with food stuff enough to feed the hungry people under our care. For them it was like 'Manna' falling down from the skies! My role in that situation was somewhat like that of Joseph at Pottibar's Palace- only a steward dispensing God's blessing in the form of food to the people in their dire need and helplessness! In addition to the delivery of food, the army commanded that we should start schools for the children who remained there. We were able to function at St.Charles' MV- which was only at a few meters distance from our convent.

Eventually when the three decades of the prolonged war literally came to an end, it was really a big relief for us all, though the consequences – the trauma, the loss of lives snatched and of properties, the until now unsolved problem of disappearances, unjust grabbing of traditional lands and the frightening experiences of those days still remain like fresh wounds in our minds and hearts -incurable and unforgettable!

Though eight years have passed now, I still recall those days and able to ponder over them and take them as countless blessings from our Lord, cherish them an opportunity to have lived and **shared and endured the fatigues, the trials and dangers of the journey experienced by** our people . ( Extract from Preface 1851 ) . It was a time of grace and blessings indeed! An invitation too – to all of us –the Family of PBNoailles who are at the portals of the 200 years of our Holy Family existence in the world , to be **BLESSINGS TO ALL !** **( Gen: 12:2 )**wherever we are , in whatever we do and whomsoever we meet !

***Sr.Matilda Gnanapragasam.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Counting the blessings of my life

**"Look to the past with gratitude"** is the call from Pope Francis to the religious. **Count your blessings** is the call for all the members of PBN family in preparation for the Bicentenary year of our existence.

As I go down the memory lane of forty years of my entry into religious life, and sixty years of my life, it is very appropriate to count the blessings that God has been showering upon me continuously.

It was in 1977, I entered religious life. After eight months of Pre-Novitiate, I entered the Novitiate in the same year itself. Though there was ethnic violence, I had no personal experience, as I am from a village fully separated by the sea, where we couldn't see things such as machine guns, shooting, killing, protest marches, boycotts, refugees etc. In that same year, Tamil people who were residing off Vavuniya, were driven out of those places and were accommodated in public places like hospitals and schools.

Kaithady Aurvedic hospital too was one of those refugee camps in 1977, where we as novices worked with the refugees. Sr. Helen Fernando from Colombo Province who was a nurse stayed there to attend to the medical needs and Fr.Devaraja- our priest associate to attend to the spiritual needs. We helped in the education of the children. At that time we didn't know much about our other vocations of the Holy Family and also didn't have much connection with the Colombo Province. As we reflect now on our Family with five vocations looking outward as our General chapter calls, it was already lived as the need of that time. From our early years of formation we were trained to go to the peripheries and to live with the people and enter into their struggles. I could grow in availability and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

adaptability to adjust to the situations and to be of service to the people in need. This experience is being continued even up to now.

Another such incident occurred in 1983 when our Tamil people were killed and their belongings were looted, shops were burnt and many of them were sent to the North by sea and land. I was in Vavuniya. Still I could remember the buses with the board written on the board 'Refugees' and they were looked after by some volunteers before they could proceed to Vavuniya. It was very sad to listen to their stories. It was an 'Exodus experience' for them. I was happy to attend to their immediate needs. Apart from the ministry I was involved in, these were the special moments to deepen the meaning of my life and to experience God's love and protection in a tangible way.

It was on 13th November 1993 when I was at Passaiyoor to attend the funeral of Sr.Maria Gnanathikam, early morning at about 6.30 we heard a big bomb blast and then a cloud of smoke could be seen from afar over St.James' church. After sometime we heard the news that about twelve people were killed in the church. When we went to see the people after a few hours, we could see the remnant pieces of the bodies and still the planes were flying around above our heads.

Few times we had to lie down flat inside their houses to escape being bombed. Again in the evening when we were in the cemetery for the burial of our Sister, the helicopters were flying up, since those who were killed also had the burial at the same place. These are all incidents to say how our lives were under the protection of God. Had we got out of the house for anything, we were not sure of our safe return.

Travelling out of Jaffna was risky as the Peninsula was completely blocked and travelling was made impossible. People who had to get out of Jaffna had to travel by sea in small boats only at night. There was scarcity of fuel. One boat which had an engine, had to tie other two boats behind, due to the crowds



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

waiting to get out of Jaffna. During those days in 1994 I was once travelling to Colombo with Sr.Doreen. The sea was so turbulent. Our boat had no engine. With the strong wind our boat got disconnected. We were about to sink into the sea. The sailor at once jumped into the sea and tied the bond. This happened twice and we spent more hours in the sea, got bathed in the salty sea water. Thanks to the one who was courageous enough risking his own life to save many. With our wet clothes we proceeded with our journey to Vavuniya by motor bike, crossing all the check points.

Another important phase was my own experience of the 'Mass Exodus' in 1995 when we were driven out of Jaffna. No mode of transport, no security, no money, no food. What we had in store was already shared with the people and we had to depend on the Providence of God. Like others we too had to stand in queue for food and for other provisions. Together with Srs. Josephine Mary, Selvarani Thobias and four postulants who were about to enter the Novitiate, we moved with the people and we were accommodated in a school at Jeyapuram. We didn't have communication facilities too. Completely cut off from our administration our survival was a struggle. It was a jungle area where we could experience the dangers of the elephants, no electricity, no water, no medical facilities, in the complete darkness groaning of the people for their livelihood, no source of income to manage the basic needs. Thanks to the Providence that fed us through some priests who were attentive to our needs. It was really an experience of being fed in the desert. I remember the words of our Founder, **"In devoting yourselves to the works of the Association, you have not separated yourselves from those who live under the common law. As companions of their good angel, you follow them in the valley of tears and to bring them back or to keep them for Jesus Christ, you share with them as far as you can all the fatigue, the trials and the dangers of the journey." (1851 Preface to the Gen.Rules)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Another experience of God's countless blessings was during the period when I was engaged in Formation at Diyatalawa. I can write volumes of incidents to proclaim God's love, guidance and protection. I really felt that I was only an instrument of God and He can do wonders using weak instruments.

26th of December 2004 was an unforgettable day in my life. It was the day when Tsunami killed thousands of people. I was in Dehiwela. I was observing the happenings of Tsunami with my own eyes, receding of the sea water, changing of color and in a minute the waves proceeding fast to fill all the places, beyond its limits. I could see all the small vehicles floating, people - including ourselves running for safety. It was the 25th Jubilee year of my Religious life, to count his bountiful blessings!.

In 2005 I had a miraculous escape. I had a fall and was a wheel chair patient for three months. I took it as a God given time to cherish all the blessings received, which I had taken for granted. It was a blessing in disguise. My present ministry as a councilor too has many beautiful experiences of God's blessings to count which I am unable to express in words.

My experience of God is what Isaiah says, "**I am with you….**"Is.43:2 - 5 is and the words heard during the miraculous Benediction. "**I am who am**". These words kept me going, in spite of all the challenges I faced in life, giving meaning and purpose for my life.

With the experience of being led to the green pastures and still waters, I continue to journey in my life to live and work for God Alone. I remember with gratitude all those who have been part of my life - journey in communities and in ministries, contributed to be who I am and what I am today.

***Sr.Amaleswary Paripooranam***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Do you love me, more than.....

From 2000-2006 I was the co-coordinator of the Health Program in the EHED (Non-Governmental Organization) working in Palaiyoottu, Trincomalee.

**EHED Caritas Trincomalee**

I experienced real happiness in respecting the members of the administration and my colleagues and of loving them when I worked there. We chose men and women from about hundred and twelve villages. It was a mixed group of Tamils, Sinhalese and Muslims. They were sent to serve among the people of the lowest ranks in society and they found out all the difficulties and problems they had. I tried my best to identify them and to find out the solutions to their problems. We obtained the assistance from governmental and non-governmental organizations and advised them to be independent and to be successful in life. I taught them that self-awareness is important.

Having witnessed the victims of Tsunami and war I offered them food, medicines and other fundamental materials. At such times I felt the hand of God always with me and I was working happily with the staff. Holy Family was protecting me during the moments of bombing and shelling. I ministered to the needy people without having any racial discrimination.

Even though those people from Tamil, Sinhalese and Muslim communities were very poor, they respected each other. I felt a familial relationship when I worked with them and had the same feelings towards the authority as well. When I worked with the army and the tigers I had to be very wise and vigilant. All these tasks were successful as a result of my daily prayers,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

team+work, and the guidance of my superiors. I could express the love of Jesus, and compassion towards the poor people. I had heard people saying "sister, we see God in you."

Many times I had to encounter the difficulties, the hardships and all kinds of challenges in my ministry. I offered my help to conduct exhibitions, seminars and workshops and received encouragement and appreciation from the sisters in my team. All these were possible because of the contemplation on God during the Eucharistic hour and the motherly love of Mary and her loving care. I had always a deep sense of loving presence of God. Compared with the tragic stories of people who had lost their lives in violent war, I felt that my sorrows and difficulties were nothing and thus I felt the unfathomable love of God towards me.

Even though I had money, things and a vehicle in my possesion, my poverty, simplicity and my fidelity to God kept me from the desire to possess them.So I was able to lead a very simple and ordinary life.

When I was transferred from this ministry I did not take it as a loss. I accepted it joyfully. I clearly understood that it was the will of God that called me. I did not fail to understand that God has filled me with all the heavenly blessings and blessed me with real happiness.

***Sr. Fatima Jeyanthy.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'To serve with love'

Among the many services our sisters render successfully and with much dedication, managing hostels especially the children's home is one-worthy of mention. One such Ministry is the children's home at Ilavalai. It is one more proof of materializing our Founder's vision - that focuses on love and care for the unprivileged, abandoned little and young ones in our present society.

Our Sisters' Ministry at the Children's Home is committing themselves in service, to the orphans, providing them with basic human needs, together with educational and health needs and most importantly emotional needs – acceptance, understanding and love. We are happy to say that our R.C Home doesn't leave any stone unturned to see that our children here get all the necessities that contribute to the development of an integrated personality.

Adequate nutrition, education, sound morals, relaxation-indoor and outdoor sports activities – all these make up their daily schedule. The children who are weak in academics are given opportunities for private tuition facilities, to enable them to reach the required standards and when they come to age, we try to make them economically self-reliant by devising occupational projects such as poultry runs, cattle raising or home gardens. A few of them have gone abroad, settled down there, and doing well. We are glad, that we have helped them to overcome the situations of poverty.

Our sisters go after the deserted children and try to find their parents and relatives. They keep in touch with them – not only at present while the children are under the sisters' care but also follow them up in their endeavors, even after they have



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

settled down in life. It is just like a family bond that mutually connects us with each other. We the Sisters - as in the case of our Venerable Founder, keep trust in the Divine Providence that takes care of, even "the lilies of the field and the sparrows in the air" while remembering the words of Jesus, "whatsoever you do to the least of my brothers and sisters, you do it unto me."

What the war has left with us is, hundreds of children orphaned, broken homes with dysfunctional families, deeply wounded by emotional scars caused by rejection, insecurity, fear and poverty. It is only a homely atmosphere that could heal them, as we know very well that home is a place where acceptance, understanding and love are found, where peace and hope prevail. This is what our Sisters try to give the children under their care, thus wishing and hoping that these young ones would one day turn into fully mature and responsible citizens, leading meaningful lives in the society.

***Sr.Bridget Gabrielpillai.***

***"How happy we would be if every moment were consecrated to God, if we lived only for Him, if we loved only Him ."***

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Healed through blessings

ஒருநாள் எமது நடைபாதைக்கு விடிவு கிடைத்த செய்தி மறக்க முடியாதது. நீண்ட தூரம் நடக்கும் எம்மவர்க்கு ஆறுதலும் மன அமைதியும் கிடைத்தது. தேயிலை ஆராய்ச்சிநிலைய அதி காரியினால் எம்மால் பயணத்திற்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள் அங்கீகரிக்கப்பட்டது. பயணங்கள் செய்வதற்கு மிகவும் கஸ்டப் பட்ட நாம் தேவையான நேரங்களில் சென்று வரவும் வாய்ப்புக்கள் கிடைத்தன. நல்ல உறவும், தொடர்முயற்சியும், சந்தித்த சவால்களை இறைவனின் கரத்தில் வைத்து வாழ்ந்ததும் எமது தேடலுக்குப் பரிசானது.

இவ்விடத்தில் ஓர் சுவாரஸ்யமான சம்பவத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். மட்டக்கலை மடத்தில் நடந்த யுஸ்ரெல் தாயாரின் பிறந்தநாள் கொண்டாட்டம். தினமும் எம்முடன் வேலை செய்பவர்களுடன் தேநீர் விருந்துபசாரம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்வை தலைமைத் தாயார் விரும்பவில்லை. மாலை நேரமாகியது. மீண்டும் கடும்மழை பொழிந்தது. குடும்பங்கள் தம் பிள்ளைகளுடன் எம் இல்லம் வந்து தாயாரைத் தேடினர். விழாநாயகி அவர்கள் வெளியிலே அமைந்துள்ள பெரிய ஆலயத் துள் செபித்துக் கொண்டிருந்தார். அவர் மக்களால் அழைத் துவரப்பட, சின்னஞ் சிறார்கள் பூக்கள் தூவி அனைவரையும் வரவேற்றனர். அதன்பின் சில நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தேநீர் உபசாரத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது. தாயார் தமிழிலும் ஆங்கிலத்திலும் நன்றி கூறினார். மக்களும் தமது நன்றியுணர்வையும் மகிழ்வையும் பலவிதமான இராகங்களில் இசைத்துக் கொண்டு வீடு சென்றனர். இவ்விதமாக ஏராளமான இறைவனது ஆசீர்வாதங்களையும், அனுபவங்களையும் பெற்றுக் கொண்டோம்.

**அருட்சகோதரி பொஸ்கோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணித்த பாதையின் பதிவுகள்

1960-1962 வரை மலைப்பகுதியான தலவாக்கலையில் பணிசெய்ய இறைவன் தந்த காலங்களுக்காக நன்றி கூறுகின்றேன். கல்விப் பணியில் ஈடுபட்ட அருட்சகோதரிகளான பிளசிடா (குழுத்தலைவி) யூஸ்ரீனா (அதிபர்), அனன்சியாற்றா, அடலா, டெல்வின் இவர்களோடு நானும் மக்களின் ஆன்மீக, சமூகப் பணிகளில் ஈடுபட்டோம். பாடசாலையில் சமய பாடத்திற்கு ஆசிரியர் தேவையாக இருந்ததினால் மாணவர்களுக்கு கற்பிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. நண்பகலுக்குப் பின்னர் தலவாக்கலையில் சென்.கிளேயா தோட்டத்திலுள்ள பிள்ளைகளுக்கு தையல் பயிற்சி வழங்கச் செல்வோம். மாலை நேரங்களில் மக்களைச் சந்தித்து சுத்தம், கல்வி, சிக்கனம், மற்றும் ஆன்மீக காரியங்களைப் பற்றி உரையாடுவோம். அதேவேளை ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் மட்டக்கலைக்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்து, திருப்பலிக்கு வரும்படி அழைப்போம்.

தேவாலயத்தில் மறைக்கல்வி கற்பித்து, திருப்பலிப் பாடல்களைப் பயிற்றுவித்து, செபங்களை மனனம் செய்யவைத்து செபிக்க உதவிசெய்தோம் “திருச்செபமாலை இராக்கினியே” என்ற இராகத்தில் “குருக்களும் நேச கன்னியரும் எங்கள் பங்கில் பணிபுரிய மன்றாடுவீர், எங்கள் தாயே செல்வ தாயே மன்றாடுவீர்” என்னும் பாடலைத் திருப்பலி நிறைவில் மக்கள் பாடிச் செபிக்க ஊக்குவிப்போம். மக்களின் மன்றாட்டை இறைவன் கேட்டதன் அடையாளமாக 1965 இல் மட்டக்கலையில் திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆரம்பமானது. அங்கு நான் 1970 - 1973 வரை பணிபுரிந்தேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தோட்டத்திற்கு அருட்தந்தை கொடிபுலியுடன் வாகனத்தில் சென்று மறைக்கல்வி கற்பிப்போம்.மக்களின் இருப்பிடங்களில் அவர்களைச்சந்தித்து, அவர்களோடு உரையாடி இறையன்பைப் பகிர்ந்து கொள்வோம்.

மக்கள்தமது வேலைகளை முடித்த பின் மாலைவேளை ஆலயத்திற்குச் சென்று மக்களுடன் திருப்பலியில் ஒன்றாகக் கலந்து கொள்வோம். திருப்பலி முடிந்ததும் மக்களின் சுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கங்களுக்கு செவிமடுத்து, ஆறுதல் கூறி, இரவு பத்து மணிக்குப் பின்னர்தான் வீடு செல்வோம். ஆலயத் திருவிழாக் காலங்களில் காலை எட்டு மணிக்கு தோட்டப் பாரவூர்தியில் சென்று இளம் பெண்களுடன் மக்களை சந்திப்போம். அந்நாட்களில் மக்கள் வேலைக்குச் செல்லமாட்டார்கள். எல்லா மக்களையும் சந்திக்கும் சந்தர்ப்பமாக இது அமைந்தது.

மட்டக்கலையில் தையல் தைத்தும், காய்கறித் தோட்டம் செய்தும், பழப்பாகு போன்ற உணவுகளை தயாரித்து சந்தை வைத்துப் பொருட்களை விற்பனை செய்தும் சேர்த்த சிறு தொகை பணத்தோடு,மட்டக்கலை மக்களிடம் வீடு வீடாக சென்று பண உதவி பெற்றும் மட்டக்கலை இல்லத்தைக் கட்டி முடித்தோம். இவ்விடத்தில் யுஸ்ரெல் தாயாரின் முயற்சியும், கடின உழைப்பும் குறிப்பிடத்தக்கது. குளிர், மழை, பனி இருந்தாலும் இரவில் ஆலயங்களில் தங்கி, அவர்கள் பரிமாறும் உணவினை உண்டு, இறையரசைப் பரப்ப, மக்களை சமுதாயத்துக்கு உகந்தவர்களாக வாழ வைக்க முயற்சிகளை எடுத்தோம். கஸ்டங்களைப் பொருட்படுத்தாது இறை மகிமைக்காகப் பணிபுரிய முடிந்தது. 2004 - 2005 வரை அப்புத்தளையில் பணியாற்றினேன். பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த பிள்ளைகளுக்கும், இளம் தாய்மாருக்கும் தையல், ஆடைகளுக்கு வர்ணம் பதித்தல் போன்றவற்றைப் பயிற்றுவித்தோம். பயிற்சி நிறைவில் கண்காட்சி வைத்து சான்றிதழ்களை வழங்கினோம். மறைக்கல்வி, வீட்டுத் தரிசிப்பு, அன்பியம் இவற்றோடு மக்களின் அனுபவங்களுடனும் ஒன்றித்து இறைமகிமைக்காக வாழ்ந்த சந்தர்ப்பங்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்

**அருட்சகோதரி. கிறிஸ்ரியானா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத மனப்பதிவுகள் (1990 - 2004)

1989 மார்கழி 18ம் திகதி எனது நித்திய அர்ப்பணத்தின் பின் 1990 தைத்திங்கள் 2ம் நாள் மாகாணத்தலைவி கிறிஸ்ர பெல்லின் பணிப்புரையின் படி இரணைதீவுக் கிராமம் நோக்கி பயணமானேன். பூநகரி வலைப்பாட்டைக்கடந்து பயணத்தில் சகோதரி தாசில்லா என்னை அழைத்துச் சென்றார். வலைப்பாட்டில் தங்கி நின்று அடுத்த நாள் காலையில் நான் இரணைதீவு போக வேண்டும். நாம் அங்கு சென்ற போது பங்குத்தந்தையாக அருட்பணியாளராக கொண்சால்வேயும். உதவிப் பங்குத்தந்தையாக அருட்பணி ஜேக்கப் அடிகளாரும் பணியாற்றினார்கள். குழுவில் சகோதரி அமிர்தராணி இருந்தார்கள். நான் சென்ற ஒரு வராத்தில் சகோதரி தாசில்லா இடமாற்றம் பெற்றுச் செல்ல அருட்பணி கொண்சால்வே நோய்வாய்ப்பட்டு யாழ்ப்பாணம் சென்றார். பின் அவர் திரும்ப வரவில்லை நானும் சகோதரி அமிர்தராணியும் குழுவில் இருந்தோம். இரணைத்தீவுக் குழுமத்தில் பெரும்பாலும் இரண்டு சகோதரிகள் இருப்பார்கள்.

## இரணைதீவுக் கிராமத்தின் பௌதீக, சமூக வாழ்க்கை முறை

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு மூன்று மைல் விஸ்தீரண முள்ள பூமி. இங்கு வாழ்ந்த மக்கள் அனைவருமே கத்தோலிக்கர் மீன்பிடி இவர்களின் முக்கியதொழிலாக இருந்தது. உப்புநீர் தான் கிணற்றில் உண்டு செம்படி என்ற இடமுண்டு அங்கு சென்று மக்கள் நல்ல தண்ணீர் எடுப்பார்கள். வசதியானவர்கள் ஒரு குடம் தண்ணீருக்கு ஒரு ரூபாய் கொடுத்து பெற்றுக் கொள்வார்கள். கடல் நடந்தால் மட்டும் அயல்கிராமத்திற்குச் செல்லலாம். மீன்தான் முக்கிய உணவு. மரக்கறி, பழங்கள் எடுக்க முடியாது. பாலைப்பழம், வீரப்பழம் அயல்கிராமத்தில் சென்று எடுப்பார்கள். பாலைப்பழ காலத்தில் பாணிகாய்ச்சி எமக் குத் தருவார்கள். மிகவும் அன்பாக பழகுவார்கள். ஒவ்வொரு நாளும் மீன் இலவசமாக கிடைக்கும் மீன்பிடி அதிகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும், மீனை விற்க கொண்டுசெல்ல முடியாத நிலை. அதனால் பெரும்பலான மக்கள் பொருளாதாரத்தில் கஸ்டநிலையை அனுபவித்தார்கள்.

**விசுவாச வாழ்வு :-**

வலைப்பாட்டுப் பங்குத்தந்தையே இரணைதீவுக்கும் பொறுப்பாக இருந்தார். சனிக்கிழமை வந்து சனி, ஞாயிறு திருப்பலி வைத்து விட்டுச் செல்வார். இங்கு மின்சாரவசதி இருக்கவில்லை பங்குத் தந்தை வரும் போது பெரிய ஜெனறேற்றர் போட்டால் மடத்திற்கும் கோயிலைச் சுற்றியும் வெளிச்சம் கிடைக்கும். இறைவன் மீது ஆழமான நம்பிக்கை கொண்டவர்கள். இவர்களின் வாழ்வின் மையமாக கோவில் இருந்தது. தேவதாயின் மீது ஆழமான நம் பிக்கை கொண்ட இவர்கள், இன்பதுன்பங்கள் எல்லாம் இயேசுவும் மாதாவுமாகத்தான் இருந்தது. அருட்சகோதரி தாசில்லா பத்து வருடங்கள் பணியாற்றிய காலத்தில் குழந்தைகளை சகோதரியின் உதவியுடன் வீட்டில் பெற்றெடுத்தார்கள். இயற்கை மருந்துகள் மூலம் நோயில் இருந்து குணமடைந்தார்கள். குருக்கள் துறவிகளுடன் அன்பும் மரியாதையுடனும் நடந்து கொள்வார்கள்.

**பணிவாழ்வு**

நான்கு மாதங்களின் பின் சகோதரி அமிர்தராணி இடமாற்றம் பெற்றுச்செல்ல சகோதரி ஈவோன் ஒருசில மாதங்கள் என்னோடு வாழ்ந்தார். இங்கு பாடசாலைப்பணி முக்கியபணியாக இருந்தது. குருக்கள் இல்லாத படியால் மக்களின் ஆன்மீகத்தேவைகளை நிறைவேற்றுவது எமக்குப் பெரும் பணியாக இருந்தது. காலையில் நாம் கோவிலில் செபிப்போம் அப்பொழுது மக்களும் வந்து எம்முடன் செபிப்பார்கள். 1990ல் யாழில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து இந்தியா செல்வதற்காக இரணைதீவு நோக்கி திங்கள், புதன், வெள்ளிகளில் வரும் இந்திய றோளர்களில் பயணிப்பதற்காக வருவார்கள். மக்களை ஆதரிப்பது, உணவு வழங்குவது எங்களோடு இயேசு சபையைச் சார்ந்த மேரியோசப் என்பவரும் இணைந்து தனது சேவையை மக்களுக்கு வழங்கினார். சகோதரி ஈவோன் அங்கிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம்பிள்ளைகளை இணைத்து உணவு தயாரித்து மக்களுக்கு மிக குறைந்த விலையில் வழங்கினார். மக்கள் நோய்வாய்படும் போது, சிறிய வைத்தியசாலை இருந்தாலும் கூட வைத்திய உதவிக்கு மக்கள் எம்மிடம் வருவார்கள். என்னைப் பொறுத்த வரையில் எனக்கு எந்த அறிவு இல்லாத நிலையில், வைத்தியரிடம் கேட்டு மருந்துகளை எழுதி நோயாளிகளுக்கு வழங்குவேன். அற்புதமாக அனைவரும் குணமடைவதைக் கண்டு இறைவனுக்கு நன்றி கூறியது மட்டுமல்ல அவரின் பராமரிப்பையும் உணர்ந்து கொண்டோம்.

வாரத்தில் ஒரு முறை சனிக்கிழமை பங்குத்தந்தை வரும் போது மரக்கறி, பழங்கள் கொண்டுவருவார். மீன் தாராளமாக மக்கள் தருவார்கள். மக்கள் மிகவும் அன்புடன் பழகுவார்கள். பழமைப் போக்கும், இறைவிசுவாசமும் கொண்டவர்கள். திருச் சபைச் சட்டங்களை ஒழுங்காக கடைப்பிடிப்பவர்கள். நீண்ட காலமாக அமலமரித் தியாகிகளின் வழிநடத்தலில் இருந்தபடியால் வழிபாட்டு ஒழுங்குகள், திருச்சபையின் படிப்பினைகளை நன்கு அறிந்திருந்தனர்.

இந்த காலங்களில் நாம் யாழ்ப்பாணம் செல்லமுடியாது இருந்தோம். பின்பு அருட்சகோதரி யோசப்பின் மேரி இடமாற்றம் பெற்று வந்தார். அக்காலத்தில் போக்குவரத்துகள் தடைப்பட்டு வள்ளம் ஓடாத படியால் எமக்கு மரக்கறி, பழங்கள் கிடைப்பது குறைவு இரு வாரங்கள் எமக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை பூவரசமிலை, இப்பீல், கொவ்வங்காய் உணவாக அமைந்தன. நாம் இருவரும் மிகவும் சந்தோசமாக இருந்தோம். இங்கு மின்சாரவசதி இல்லை உடுப்பு அயன் பண்ணுவது கிடையாது. சாதாரண, எளிமை வாழ்க்கையில் ஆண்டவரின் கரம் எம்மோடு இருந்ததை உணர்ந்தோம்.

யாழ்ப்பணத்தில் பிரச்சனை காலத்தில் உணவுக்கப்பல் வந்துநின்று உணவுகளை இறக்கியது. கப்பலில் வேலைசெய்ய கடைகள் வைத்துப் பிழைப்பதற்காக இரணைதீவு மக்கள் வலைப்பாட்டில் தங்கிநின்று தொழில் புரிந்தார்கள். தங்கள் தொழில் முடிந்துவருகின்ற பொழுது வலைப்பாட்டுக் கடலில் வைத்து நோயினால் அறுபதற்கு மேற்பட்டவர்கள் கைது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டார்கள். கைது செய்யப்படும் பொழுது தேசியத்தலைவர் பிரபாகரனின் படமுள்ள துண்டுப்பிரசுரம் வைத்திருந்தார்கள். படகிற்குள் எல்லோரினதும் கைகள் கட்டப்பட்டது. ஒருவரின் கைமட்டும் கட்டப்படவில்லை. படகிற்குள் வரும் தண்ணீரை எடுத்து ஊற்றுவதற்காக, அப்படி அவர் ஊற்றும் போது இந்த துண்டு பிரசுரங்களையும் வாளிக்குள் போட்டு ஊற்றி, ஆபத்தில் இருந்து காப்பாற்றப்பட்டார்கள். பின் எல்லோரும் காரைநகருக்கு அழைத் துச் செல்லப்பட்டார்கள்.

அப்பொழுது நாம் தீவில் இருந்தோம். எமக்கு எதுவும் தெரியாது. இராமவில் ஒலித்த கூக்குரலை அன்று கேட்டோம். வீடுகளில் யாருமில்லை எல்லோரும் குடும்பம் குடும்பமாக மாதாவிடம் தஞ்சம் அடைந்து அழுதார்கள். எமக்கு துணையாக அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அனுப்பப்பட்டார். அவர் மக்களை ஆறுதல்படுத்தி நாமும் மக்களோடு இணைந்து கடற்கரையை பார்த்தவண்ணம் நின்றோம். அக்காலத்தில் பொறுப்பில் இருந்த அருட்பணி MX கருணாரட்ணம் கிளி அடிகளார் காரைநகர் சென்று அந்த மக்களை நேவியோடு போராடி மீட்டார். அருட்பணியாளர் சற்று பிந்தியிருந்தால் எல்லா மக்களும் இறந்திருப்பார்கள்.

நாம் எல்லோரும் கடற்கரையை நோக்கி நின்றபொழுது, இரண்டு பெரிய படகுகள் ஒன்றையொன்று தொடுத்தபடி வருவதைக் கண்டோம். பின்னால் நேவியின் படகு வந்தது. மக்களின் அழுகையும், மகிழ்ச்சியும் இரட்டிப்பாக மாறியது. படகில் இருந்து அவர்கள் இறங்கிய காட்சியும், உறவுகளின் சந்திப்பும் இன்றும் என்னால் மறக்கமுடியாது. மாலை ஐந்துமணி இருக்கும், அருட்பணி கருணாரட்ணம் இரணைதீவு வந்து சேர்ந்தார். இந்நிகழ்வு பங்குனி 19ஆம் திகதி தான் நடந்தது. தவக்காலம் அன்று, இறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மக்கள் உயிர்ப்புவிழாவைக் கொண்டாடினார்கள். சிறைக்கூடங்களை தகர்க்கும் அளவிற்கு மக்கள் விசுவாசம் உள்ளவர்களாக இருந்தார்கள்.

இரணைதீவு குழுமத்தில் பெரும்பாலும் இரு சகோதரிகள் இருந்தார்கள். ஒருவர் தேவையாக யாழ்ப்பாணம் சென்றால் நாம் தனியே இருப்போம். கபிரியேல் என்னும் பெயருடைய ஆச்சி எம்முடன் வந்து உதவிக்கு இருப்பார். இதை எம்மால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்கமுடியாது. மீன் பிடிப்பதற்காக இந்திய றோளர்களின் வருகையால் ஒரு நாள் ஹெலி தீவில் தாக்குதலை மேற்கொண்டது. ஆனால் யாருக்கும் சேதமில்லை. பின்பு ஓரிருவாரங்கள் செல்ல கடலில் கரும்புலித் தாக்குதல் ஆயத்தம். நடந்ததை மக்கள் அறிந்தபடியால் இரவோடிரவாக மக்கள் வெளியேறினர். நாங்கள் இருவரும் இயேசுசபைக்குரு அருட்பணி யோசப் மேரியும் ஒரு குடும்பமும் இறுதியாக பயணத்தை ஆரம்பித்தோம்.

வள்ளம் உடைந்திருந்ததால் தண்ணீர் நிரம்பிக் கொண்டிருந்தது. ஒருவர் அள்ளி ஊற்றிக் கொண்டிருந்தார். அந்தநேரத்தில் வள்ளத்தில் இருந்த பாய் கிழிந்துவிட்டது. வள்ளத்தை ஓட்டுபவர் அதைத் தைத்து இரண்டு மணித்தியாலம் கரைசேர முடியாது தத்தளித்தோம். பின் வள்ளம் நகரத் தொடங்கியது வலைப்பாட்டை நோக்கிய எமது பயணம் குமுளமுனைக் கரையை அடைந்தது. தேவிப்படகு கடலில் நின்று இப்பொழுதுதான் புறப்பட்டது என்று எம்மிடம் கூறினார்கள். வள்ளத்தின் பாய் கிழிந்தபடியால் நாம் காப்பற்றப்பட்டோம். நான் ‘ஆழ்கடலுக்கு சென்றாலும் அங்கேயும் நீர் இருக்கின்றீர்’ என்ற அனுபவத்தை என்னால் மறக்கமுடியாது.

பின்பு நானும் சகோதரி ஈவோனும் இரவு ஒரு உழவுயந்திரத்தில் பூநகரி சென்றோம். அங்கு ஒருநாள் நின்ற பின்பு கௌதாரி முனையால் பெரியவள்ளத்தில் யாழ்ப்பாணம் செல்வதற்கு ஆயத்தமானோம். எங்களோடு காலம் சென்ற அமலமரித்தியாகி மைக்கல் சாமியும் வந்தார். பூநகரியில் இருந்து துவிச்சக்கரவண்டியில் அருட்சகோதரர் எம்மை ஏற்றிக்கொண்டுபோய் கௌதாரிமுனையில் விட்டார்கள். அங்கிருந்து வள்ளம் மெதுவாக ஒரு இரவு முழுவதும் நகர்ந்து அதிகாலை நான்கு மணிக்கு யாழ்ப்பாணம் சென்றது. நாமிருவரும் மகிழ்ச்சியுடன் எமது மாகாண இல்லத்திற்குச் சென்றோம். மாகாண இல்லத்திற்கு சகோதரிகள் பாதுகாப்புக் கருதி வேறு இடங்களுக்குச் சென்று விட்டார்கள். அக்காலத்தில் மாகாணத் தலைவியாக இருந்த சகோதரி கிறிஸ்ரபெல் இன்னும் இரண்டு சகோதரிகளும் நின்றார்கள். எம்மைக் கண்டதும் யாழ்ப்பாண மடத்திற்கு அனுப்பிவிட்டார். பகல் முழுவதும் ஷெல் மழை பொழிந்தது. நில அறையில் அருட்சகோதரிகளோடும் மக்களோடும் நாமும் இருந்தோம். அன்று இரவு கோட்டை அடிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு எமக்கு தூக்க மில்லை, அன்றிரவு கோட்டை கைப் பற்றப்பட்டது.

அந்த மகிழ்ச்சியில் நாம் நின்றபோது அன்றுதான் சகோதரி ஜான்மேரிக்கு நாய் கடித்தது. அவரின் இறுதிப் பயணத்திற்கு அது ஒரு இறுதிப் பயணமாக இருந்தது. பின்பு நாம் ஒரு ஞாயிறுப் பூசைக்கு இரணைதீவு சென்றோம். அங்கு யாருமில்லை. எனவே நாம் வந்து வலைப்பாட்டில் நின்று, திரும்பவும் யாழ்ப்பாணம் வந்தோம். இங்கு வந்த பின் அக்காலத்தில் ஆயராக இருந்த அதிவணக் கத்திற்குரிய தியோகுப்பிள்ளை ஆண்டகையை சந்தித்தபோது ‘வலைப்பாட்டிற்குப் போய் பணிசெய்யுங்கள்’ என்று எம்மை அனுப்பி வைத்தார். இரணைதீவு மக்கள் நாச்சிக்குடா, முழங்காவிலில் தங்கிவிட்டார்கள். இந்த இடப் பெயர்வு, புதிய பணிகளையும், புதிய இல்லங்களையும் தோற்று வித்ததையும் அதற்கான அடித்தளம் கஸ்டத்திலும், சவால்களுக்கு மத்தியிலும் இடப்பட்டது என்பதையும் யாராலும் மறக்கமுடியாது.

**அருட்சகோதரி எலிசபெத் அந்தோனிப்பிள்ளை**

***“Have God alone in view as the beginning and end of all your works”.***

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கர யுத்தத்தில் இறைபராமரிப்பின் வல்லமை

எனது முதல் பணித்தளம் பறப்பாங்கண்டல். இந்திய அமைதிப் படையினரால் வடக்குக் கிழக்கு நிரப்பப்பட்டகாலம் அதைதொடர்ந்து 1990இல் யுத்தம் மீண்டும் வெடித்தது. 21.07.1990 எம்மால் மறக்கமுடியாத நாள். ஆறு அருட்சகோதரிகள் எட்டுப்பிள்ளைகளும் மடத்தில் சிக்குண்டோம். இவ்வாறு நிகழும் என்று எதிர்பார்க்கவில்லை. பகல் பன்னிரெண்டு மணிக்குத் தொடங்கிய குண்டுமழை அதிகாலை நான்கு மணிவரை நீடித்தது. சகோதரிகளின் குளிக்கும் அறைதான் எமக்கு தஞ்சம் அளித்தது. எமது மடத்துக் கூரையின் மேல் விடுதலைப் புலிகள். எமது வயலில் இராணுவம். இருதரப்பும் தமது கைவன்மையைக் காட்டத் தொடங்கிவிட்டார்கள். இராணுவத்தினருக்கு உதவியாக மூன்று முறையாக வான் கிபிர்தாக்குதல் இடம்பெற்றது. நாம் உயிர் பிழைப்போம் என்று நினைக்கவில்லை. அழுகையோடு கூடிய செபம் ஆனால் செபிக்கமுடியவில்லை. எமது மடத்தின் ஓட்டைக் கற்கள் வழியாக போராளிகள் மேலே ஏறுவதைக் கண்களால் நேரடியாகப் பார்த்தோம் அவர்கள் பேசியதைக் காதுகளால் கேட்டோம். சகோதரி பிலோமினா “மலர்! நாம் இன்று செத்தோம்” என்று கூறி எனது மடியில் விழுந்து அழத்தொடங்கினார். குழுத் தலைவியாக இருந்த சகோதரி கிளமென்ற் தனது இருகைகளையும் தலையில் அடித் தபடி சத்தமிட்டு அழுதார். சகோதரிகள் எல்லோரின் சாவுக்கும் நான்தான் காரணம் என்று தனது தலையை அடித்தார். சகோதரி ஏட்றியன் கல்லறை ஆண்டவரின் செபப் புத்தகத்தை சகோதரி கிளமென்ரின் தலையில் வைத்துப் பிடித்தவாறு செபித்தார். சகோதரிகள் மேரிஆன், ஒஸ்ரின் இருவரும், பிள்ளைகளும் ஓல மிட்டு அழுததையும் ஒருகணம் நினைத்துப்பார்க்கின்றேன். பிற்பகல் நான்கு மணியளவில் அருட்சகோதரி மேரி ராணியின் அப்பா நீங்கள் உயிரோடு இருக்கிறீர்களா? என்று அழுதபடிவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு தரப்பினரும் சண்டைமுடிந்து திரும்பிவிட்டார்கள். நாமும் எமக்கு அடைக்கலம் தந்த குளியல் அறையை விட்டு வெளியே வந்தோம். எமது மடத்தின் நிலையைப் பார்த்தபோது, நாம் எதுவித காயமுமில்லாது உயிரோடு இருப்பதையிட்டு இறைவனுக்கு நன்றி கூறினோம்.

நான்கு அறைகளில் ஓடுகள் முழுமையாக விழுந்துவிட்டது. இரண்டு ஷெல்கள் வெடிக்காது இருப்பதைக்கண்டு பயத்துடன் செய்திசொல்லி அனுப்பினோம். உடனே மகிழ்வோடு வந்து தமக்கு இலவசமாக ஷெல் கிடைத்துவிட்டது என்று புலிகள் எடுத்துக் கொண்டு போனார்கள். நாம் தேவையான உடுப்புக்களையும் உணவுப் பொருட்களையும் எடுத்துக்கொண்டு பறப்பாங்கண்டல் பெரிய கோயிலுக்கு சென்றோம். ஒரு வாரத்தின் பின் மன்னார் ஆயர் தோமஸ் ஆண்டகை வந்து எங்களைச் சந்தித்தார். என்னை யும் சகோ.பிலோமினாவையும் மடுவுக்கு அழைத்துக்கொண்டு சென்றார். சகோதரிகள் மேரி ஆன், ஒஸ்ரின் ஏற்கெனவே வங் காலை கடல் வழியாக பள்ளிமுனை மடத்திற்குப் போய்விட்டார் கள். மூன்று பிள்ளைகளை விட மற்றவர்கள் பெற்றோருடன் போய்விட்டார்கள். இரண்டு மாதம் முடிய மீண்டும் ஓடுகள் போடப் பட்டு பாவனைக்குரிய முறையில் மடம் திருத்திய பின்னர் ஆயர் எம்மை அங்கு செல்லும்படி கூறினார். அங்கு பயத்துடன் எமது நாட்கள் சென்றன. எம்மைச் சுற்றியிருந்த மக்களில் பெரும்பாலா னோர் இந்தியாவுக்குச் சென்றுவிட்டார்கள். வெடிச்சத்தம் கேட்டவு டன் எமது உடுப்புக்களையும் தேவையான பொருட்களையும் எடுத்துக்கொண்டு பெரிய கோவிலுக்கு ஓடுவது வழமையாக மாறிவிட்டது. சிலவேளைகளில் கால் நடையாக மடுவுக்குப் போன நேரங்களும் உண்டு. இவ்வாறு யுத்த ஆரம்பகாலத்தில் பெற்ற பயங்கர அனுபவத்தையும் இறைபராமரிப்பையும் நன்றி யோடு நினைக்கின்றேன்.

கொழும்பில் அக்குவானஸ் கல்லூரியில் உருவாக்கப் பயிற்சிக் காக ஒரு வருடம் சென்றிருந்தேன். பின்பு மட்டக்கலைக் குழுவிற்கு மாற்றலாகி இரண்டரை வருடங்களாகப் பணிபுரிந்தேன். அதன்பின் எனது பணிவாழ்வை பண்டிவிரிச்சானில் தொடர்ந்தேன். அக்காலத் தில் தாதிப்பயிற்சியினை மடுவைத்தியசாலையில் மேற்கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேன். இதை அடுத்து எனது பணி மடுவில் ஆரம்பமானது. அந்தவேளை மருந்து, போக்குவரத்து என்பவற்றிற்கு அரசினால் தடைவிதிக்கப்பட்டிருந்தது. மக்களுக்காக உயிரையும் பணயம்வைத்து பணிசெய்தேன். இராணுவத்தினுடைய சோதனைச்சாவடி மாலை ஐந்து மணி தொடக்கம் மறுநாள் காலை எட்டுமணிவரை மூடப்பட்டிருக்கும். ஒருநாள் இரவு ஒன்பது மணியளவில் பாம்புக்கடியினால் தாக்கப்பட்ட ஒரு தாயை சிகிச்சை அளிக்க மடுவைத்தியசாலைக்கு கொண்டு வந்தார்கள். சிகிச்சை ஆரம்பமானது. ஆனால் அவவின் உடல்நிலையில் முன்னேற்றம் இல்லை. பாம்புக்கடிக்குரிய ஊசியும் ஐந்து மருந்துப் போத்தல்களும் முடியும் தறுவாயில் இருந்தது. அவவுக்கு சுவாசிப்பதற்குக் கொடுத்த ஒட்சிசன் முடிந்துவிட்டது. வாயில் அம்பி பை வைத்து கையினால் மாறிமாறிக் கொடுக்க வேண்டிய நிலையில் என்னை வந்து கூட்டிக்கொண்டு போனார்கள். மறுநாள் நோயாளியை வவுனியா அனுப்பும் வரைசுவாசிப்பதற்கு அம்பிபை மாறிமாறி அழுத்தியபடியே இருந்தோம்.

காலை ஏழு மணியானதும் நோயாளியுடன் வைத்தியர் (MSF)தாதி ஒருவரும், நானுமாக மூவரும் சோதனைச் சாவடிக்கு அருகில் சென்றோம். எட்டுமணியாகியும் I.C.R.C வாகனம் வரவில்லை. நாம் சோதனைச் சாவடிக்குள் போகமுடியாமல் தவித்தோம். அவர்கள் எட்டு பதினைந்து மணியளவில்தான் வந்தார்கள்.

ஆனால் அவர்களது கொடியை ஏற்ற இராணுவம் மறுத்தார்கள். இன்னும் தமக்குக் கட்டளைவரவில்லை என்று கூறிவிட்டார்கள். வைத்தியரும் நானுமாக கைகளை உயர்த்தியபடி இராணுவச் சாவடியை நோக்கிச் சென்றோம். "தயவு செய்து உதவி செய்யுங் கள்" என்று உரக்கக் கத்தியவாறு அடி எடுத்துவைத் தோம். அவர்களோ 'வந்தால் சுடுவோம்' என்று சத்தம் போட்டார்கள். அப்படியே நூறு நூறு மீற்றர் தூரத்தில் நின்றபடியே உதவி செய்யுங்கள் என்ற உரக்கக்கத்தினோம். வவுனியாவிலிருந்து MSF அதிகாரிகள் மூலம் இராணுவத்திற்குச் செய்தி வழங்கப் பட்டது. நோயாளியைக் கொண்டுவரும்படி கூறினார்கள். உடனே வாகனத்திற்குச் சைகைகாட்டி அழைத்தோம். ஆபத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்மதியோடு நடந்துகொண்டோம். நோயாளியோடு சேர்த்து வெறுமையான ஒட்சிசன் சிலிண்டர்களை மாற்றிவிட்டு புதிய ஒட்சிசன் சிலிண்டர் மாற்றி எடுத்துக் கொண்டு மடுவுக்குச் சென்றுவிட்டோம். இவ்வாறு உயிராபத்தையும் பாராது துணிவுடன் செயற்பட்டதருணங்கள் பல உண்டு.

இன்னொரு நாள் மகப் பேற்றுக்காக ஒரு இளம் தாய் (முதற் பிள்ளை) இரவு எட்டுமணியளவில் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டார். ஒருமுறையாவது அத்தாய் கிளினிக் வரவில்லை எமக்கு. குழந்தையின் நிலைமைபற்றி எதுவும் தெரியாது. மருத்துவமாது சோதனை செய்துவிட்டு உடனே வைத்தியரை அழைத்தார். வைத்தியர் உடனே நிலைமையைப் பரிசோதித்து விட்டு செய்வதறியாது திகைத்தார். இரட்டைக் குழந்தைகள் குறுக்காகஅமைந்திருந்தது. மூன்று உயிர்களை எப்படிக் காப்பாற் றுவது என்று கவலைப்பட்டார். தனக்காக மன்றாடும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார். அவரின் கட்டளைப்படி தேவையான ஊசிமருந் துகளை எடுத்துக் கொண்டு மகப்பேற்று அறைக்குச் சென்றோம். மருத்துவமாது பிள்ளைப் பேற்றுக்குத் தேவையான சகல உபக ரணங்களுடன் தாயையும் தயார்நிலையில் வைத்தபடிநின்றார். வைத்தியர் நோயாளியின் முன் அமைதியாக நின்றார். நான் மருத்துவமாதுவிடம் செபிப்போம் என்று கூறினேன். உடனே முழங்காலிலிருந்து செபிக்க ஆரம்பித்தோம். நான் வைத்தியரின் தோளின் மேல் கையைவைத்து ஆண்டவரே இவரைப் பலப்படுத் தும் திடப்படுத்தும், உமது ஆவியினால் இவரை ஆட்கொள்ளும் என்று அமைதியாக செபித்தேன். பின்பு பரலோகமந்திரத்தை ஆங்கிலத்தில் சத்தமாக சொல்லி முடித்தேன். தாயின் வயிற்றில் சிலுவை அடையாளம் இட்டேன். உடனே வைத்தியர் தனதுகை களுக்குக் கையுறைகளை அணிந்து கொண்டு நோயாளியின் வயிற்றில் ஊசிபோட்டார். பின் வயிற்றை வெட்டி குழந்தையை எடுப்பதற்கான ஆயத்தம் செய்தார். நானும் மருத்துவமாதும் ஏனையவற்றை வைத்தியரின் கட்டளைப்படி செய்யத் தொடங்கி னோம். இரண்டு ஆண் குழந்தைகளை வைத்தியர் தூக்கினார். மருத்துவமாதும் உதவிதாதியர்களும் குழந்தைகளை வாங்கி செய்யவேண்டியவற்றைச் செய்தார்கள். வைத்தியரும் நானும் தாய்க்குத் தையல் உள், வெளி என்று ஆறுபத்திரெண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையலிட்டு, பின் இரத்தவெள்ளத்திலிருந்த தாயை துடைத்து மருந்துகட்டி, இருகைகளிலும் சேலைன் ஏற்றி அவவைப் பராமரித் தோம். வசதியான பெரிய வைத்தியசாலையில் சத்திரசிச்சை என்றால் மூன்று அல்லது நான்குவைத்தியர்களும் ஐந்து ஆறு பணியாளர்களும் பணிசெய்வார்கள். ஆனால் நாம் சாதாரண ஒரு மகப்பேற்று அறையில் சத்திரசிகிச்சையை செய்து முடித்து தாயையும் இரு குழந்தைகளையும் உயிருடன் காப்பாற்றினோம் என்றால், அது இறைவனின் வல்லமையே அன்றிவேறு எதுவும் இல்லை. இந் நிகழ்வு நடந்த நாளை எண்ணிப்பார்த்து கண்ணீரு டன் இறைவனுக்கே நன்றி கூறுகின்றேன்.

**அருட்சகோதரி எலிசபெத் மலர்**

***"It is this spirit of God alone that I want to see reigning in you, my child. Love seek only him that is the way of living in peace with God and with yourself".***

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளிம்பு நிலை மக்களோடு, மக்களாக...

"விழிப்பாயிருங்கள் நம்பிக்கையில் நிலைத்திருங்கள் துணிவுடன் நடந்து கொள்ளுங்கள் வலிமையுடன் செயற்படுங்கள் அனைத்தையும் அன்போடு செய்யுங்கள்".

எனது துறவற அழைத்தலுக்கு செவிசாய்த்து "இதோ வருகிறேன்" என அர்ப்பணவாழ்வில் அர்ப்பணித்தது முதல் மேற்கூறிய வேதாகம வார்த்தைகளை எனது பணியின் தாரக மந்திரமாக்கிக் கொண்டேன். 1958 - 1994 வரையிலான காலப்பகுதியில் ஆசிரியப்பணியிலும், சமூகப்பணியிலும் இறைவன் என்னை தனது கருவியாகப் பயன்படுத்தினார் என்பதை எனது வாழ்வின் சிக்கலான, சங்கடமான சந்தர்ப்பங்களில் நன்கு உணர்ந்து கொண்டேன். நான் கல்விப்பணியாற்றிய முப்பத்தியாறு வருடகாலப்பகுதிகள் கற்களையும், முட்களையும் கடந்து வந்த இக்கட்டான காலப்பகுதியாய் அமைந்தன. பெரும்பாலும் கல்விப்பணியுடன் பங்குப்பணியையும், சரிசமனாக செய்யும் வாய்ப்பு கிடைத்தது. இக்காலகட்டத்தில் தான் முகம் கொடுக்க வேண்டியிருந்த சிக்கல்கள் பல

1983 - 1990 வரை நெடுந்தீவு மகளிர் வித்தியாலயத்தில் ஆசிரியராக பணியாற்றினேன். அக்காலம் வடபகுதி முழுவதும் யுத்த மேகம் சூழ்ந்திருந்த காலம். அடிக்கடி இடம்பெறும் இராணுவ சுற்றிவளைப்புக்களும், காரணமற்ற கைதுகளும் எல்லோரையும் கதிகலங்கச் செய்யும் கணப்பொழுதுகள். மக் களோடு மக்களாக நாமும் இத்துன்பங்களை அனுபவித்தோம். இறைநம்பிக்கையை மனதில் நிலைபெறச் செய்து விழித்திருந்து செபம் செய்தோம். இறைவன் தன் போர்வைக்குள் எம்மை அணைத்துக் கொண்டார்.

1985 வைகாசி மாதம் 13ஆம் திகதி அன்று நெடுந்தீவுக் கிராமம் பதறித்துடித்தது. நெடுந்தீவு மட்டுமல்ல ஒட்டு மொத்த தமிழர்களும் குமுறியெழுந்தனர். குமுதினிப்படகில் பயணம் செய்த பூவும், பிஞ்சும், காயும் கனியுமென அறுபத்திரெண்டு பேர் சிங்கள கடற்படையினரால் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். இதில் படகோட்டிகள், பாடசாலை ஆசிரியர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள், வயோதிபர் என கொலையுண்டதைக் கண்டு உறவுகள் துடித்துப் போயினர். இந்த துயர சம்பவத்தில் உயிர் இழந்தவர்களின் உடல்களை நேரில் பார்த்து நொந்த போதிலும் வலிமையுடனும், துணிவுடனும் செயற்படவேண்டும் எனும் எண்ணத்துடன் பணியில் இறங்கினோம்.

இழப்புக்களை சந்தித்தவர்களின் இல்லங்களைத் தரிசித்து பாதிக்கப்பட்டோருக்கு துன்பத்தில் ஆறுதல் அளித்து, இறைவிசு வாசத்தையும், நம்பிக்கையையும் ஊட்டி அவர்களைத் திடப்படுத் தினோம். ஆனாலும் அந்தச் சந்தர்ப்பத்தை நினைக்கும் போது இதயம் நடுங்குகின்றது.

1987 பின்னர் இந்திய அமைதிப்படையின் வருகையையும் அவர்களுடன் ஏற்பட்ட மோதல்களும் மீண்டும் பல அசௌகரியங் களை ஏற்படுத்தியது. நெடுந்தீவு-யாழ் சேவைகள் முற்றாக தடைசெயப்பட்டனர். இதனால் பெரும் உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டது. பசி, பட்டினியால் மக்கள் வாடினர். இலைக்கஞ்சிக்காக மக்கள் தீவு முழுவதும் அலைந்து திரிந்தனர். எமது நிலையும் அதே கதிதான். அவ்வேளை பங்குத்தந்தையாக இருந்த அருட் தந்தை ஜெறோம் லெம்பேட் அடிகளார் அவர்கள் அதிகாரிகளிடம் சென்று மக்களின் நிலைமையை விளக்கி, உணவு பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு பெரும் முயற்ச்சி செய்தார். பின்னர் தானே யாழ்ப்பாணம் சென்று உணவுப்பொருட்களைப் பெற்று தனிப்படகில் ஏற்றிக்கொண்டுவந்து சேர்த்தார். நாம் அப்பொருட்களை மக்களுடன் பகிர்ந்து கொண்டோம்.

"வாழ்க்கையின் விளிம்பில் வாழும் மக்களைத் தேடிச் சென்று பணி செய்யுங்கள்." என்னும் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் அழைப்பானது நெடுந்தீவு போன்ற கிராமங்களுக்கு மிகவும் பொருத்தமானது. பாடசாலை முடிந்தவுடன் வீட்டுத்தரிசிப்பு, ஆன்மீகத் தேவைகளுக்கு ஊக்கமளித்தல், திருவருட்சாதன ஆயத்தங்கள், மறைக்கல்விப் பணி, ஆலயப்பணிகள், என்பவற்றை ஆழமான அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதற்கு இறைவன் சக்தியை யும், ஆசிர்வாதங்களையும் நிறைவாக தந்தார். ஆன்மீகத் தாகத்தோடு மக்களைத் தேடிச் செல்லவும், பணி புரியவும் வல்லதேவன் எனக்களித்த வாய்ப்புக்காக காலமெல்லாம் நன்றியுடன் வாழ்கின்றேன்.

**அருட்சகோதரி மேரி லொறன்ரீனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தில் அனுபவித்த ஆண்டவனின் அடைக்கலம்

1994ஆம் ஆண்டு ஆனி மாதம் 10ம் திகதி அன்று நாள் முழுவதும் யுத்த விமானத்தின் பயங்கர இரைச்சல். எங்கே என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. பயத்துடன் அவதானித்துக் கொண்டிருந்தோம். குழுத்தலைவி வருடாந்த தியானத்திற்குச் சென்றபடியால் அருட்சகோதரி அடலா என்னுடன் இருந்தார். நண்பகல் தாக்குதல் சத்தம் சிறிது குறைந்தது. சாப்பிட்டபின் தலையிடியுடன் சற்று இளைப்பாறச் சென்றேன்.

திடீரென விமானத்தின் இரைச்சல் காதைப் பிளந்தது. குண்டுத்தாக்குதல் தொடர்ந்தது. என்ன செய்வதென்று தெரிய வில்லை. பயமும் திகிலும் ஆட்கொள்ள அருட்சகோதரி அடலா, உதவி செய்யும் பிள்ளை, அவவுடைய நான்கு வயது சகோதரன் இன்னும் நான்காம், இரண்டாம் வகுப்புகளில் கற்கும் அக்காவும் தம்பியும் அழ ஆரம்பித்தார்கள். எல்லோரையும் சமையல் அறை யுள் இருந்த சுவர் அலுமாரியின் அருகே பாதுகாப்பாக இருக் கவைத்து நான் சாப்பாட்டறை அலுமாரியின் அருகே பதுங்கினேன். மடத்தின் மேல் விமானம் வட்டமிட்டது. வெடிச்சத்தமும் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது. நாமிருந்த அறைமுழுவதும் புகை மண்டலமாக மாறியது.

எவ்வளவு சத்தமாக செபிக்க முடியுமோ, அவ்வளவு சத்தமாக "இயேசுவே, மரியாயே சூசையப்பரே, பரிசுத்த திருக்குடும்பமே எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று வேண்டிக்கொண்டோம். அப்போது எனது கால்விரலில் ஒரு சன்னம் பட்டு தெறித்ததை உணர்ந்தேன். நீண்ட நேரத்தின்பின் சிறிது அமைதி ஏற்பட்டது. மெதுமெதுவாக வெளியே வந்தோம். பக்கத்தில் இருந்த அருட்பணியாளரின் பங்குப்பணிமனை ஓடுகளும், உடைந்த சுவர் துண்டுகளும், சன்னங்களும் காணப்பட்டன. புனித அந்தோனியார் திருவிழா நாட்கள் ஆனதால் குருவானவர் ஆலயம் சென்றுவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதகல் மடத்தில் தொடர்ந்து இருக்கமுடியாத காரணத்தினால் நாங்கள் சில்லாலை மடத்திற்குச் சென்றோம்.

பின்னர் சில்லாலை மடத்தில் இரவைக் கழித்து, விடிந்ததும் உதவிசெய்யும் பிள்ளையும் நானும் மடத்திற்கு வந்தோம். உடைந்த ஓடுகளும் வெடிக்காத சன்னங்களும் படுக்கையறையுள் காணப்பட்டன. முக்கியமான சில பொருட்களை அடுக்கி துவிச்சக்கரவண்டி மூலம் பண்டத்தரிப்பு தியான இல்லத்திற்கு அனுப்பிவிட்டு ஒருசில நாட்கள் சில்லாலையில் தங்கினோம்.

எங்கள் மடத்திற்கு அருகில் வாழ்ந்த அடுத்தவீட்டுச் சிறுவன், நான்காம் வகுப்பில் கற்றவர், குண்டுத்தாக்குதலால் இறந்ததாக வும், இரவோடிரவாக அழுதுகுளறி அருட்பணியாளரை அழைத்து அடக்கம் செய்ததாகவும் நாம் அறிந்த துயரச்செய்தி எம்மைக் கதிகலங்கவைத்தது. மறுநாள் மீண்டும் எம் இல்லத்திற்கு வந்து, அனைத்தையும் ஒழுங்காக்கி இயல்பு வாழ்வுக்குத் திரும்பினோம்.

மீண்டும் ஆவணி மாதத்தில் ஒருநாள் காலை ஐந்து மணியளவில் கடலிலிருந்து பீரங்கித் தாக்குதல், ஆகாயத்தி லிருந்து விமானத்தாக்குதல், அண்மையிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் ஆரம்பித்தன. திருப்பலிக்கென்று ஆயத்தமான நாம் வெறுங்கையராய் மடத்தை விட்டு வெளியேறினோம். ஊர் மக்கள் எல்லோருமே மூட்டை முடிச்சுக்களுடன் நடக்கமுடியாத தங்கள் முதியோர், நோயாளர், சிறுவர்களையும் சுமந்துசென்ற காட்சி யாத்திரையாகமத்தை எமக்கு நினைவூட்டியது. பதுங்கியும், ஓடியும், நடந்தும் பண்டத்தரிப்பு தியான இல்லத்தை அடைந்தோம்.

சிலநாட்களின் பின் பாடசாலை ஆரம்பிக்க வேண்டியிருந்ததால் இளவாலை, மயிலிட்டி, பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல் அருட்சகோதரிகள் எல்லோரும் இணைந்து பல வசதியீனங்கள் மத்தியில் மானிப்பாய் மடத்தில் இருந்து எவ்வித ஆவணங்களோ, உபகரணங்களோ, இடவசதியோ இன்றி பாடசாலையை ஆரம்பித்தோம். இவ்வாறாக பலவித உயிராபத்துக்கள், இன்னல் கள் மத்தியிலும் நாங்கள் பாதுகாக்கப் பட்டதையும், இறைவனின் வல்லகரம் எம்மைத் தாங்கி வழிநடத்தியதையும் எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

**அருட்சகோதரி எட்விஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்த மக்களுடன் பணிவாழ்வு

1977இல் இலங்கையின் தென்பகுதி இனக்கலவரத்தால் சின்னா பின்னமாக்கப்பட்டது. வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் குண்டுகளால் தாக்கப்பட்டு, கொல்லப்பட்ட நிலையில் குற்றுயிரும், குறையுயிருமாக தப்பி மக்கள் வெற்றுக்கையுடன் வடபகுதிக்கு இடம் பெயர்ந்தனர். இம் மக்களிடையே பணியாற்றும் வாய்ப்பு எனக்கு 1978 -1981 காலப்பகுதியில் கிடைத்தது.

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மலையக மக்கள் வடபகுதியிலுள்ள கன்னாட்டி, பெரியகட்டு, செட்டிகுளம், நெடுங்கேணி, கீரிசுட்டான், பூமலர்ந்தான் ஆகிய இடங்களில் தஞ்சமடைந்தனர். அனைத்தையும் இழந்து, நம்பிக்கை இழந்து நெஞ்சில் துன்பச் சுமையுடன் வந்த மக்களுக்கு மன்னார், யாழ்ப்பாணத் திருச்சபை உதவிக்கரம் நீட்டியது. இவர்கள் மத்தியில் பணியாற்றுவதற்காக திருக்குடும்பசபை, திருச்சிலுவைசபை, நல்லாயன்சபைக்கன்னியர்கள் முன்வந்தனர். இவர்களுடன் தென் இலங்கையைச் சேர்ந்த அருட்சகோதரிகளுள் சிலர் இணைந்து கொண்டனர். இவர்களுடன் ஒன்று சேர்ந்து பணியாற்றிய அந்த நினைவுகளை இப்பொழுது மீட்டிப்பார்க்கின்றேன்.

நான் முதலில் கன்னாட்டியில் இடம்பெயர்நது வாழ்ந்த மக்களுக்கு பணியாற்ற, புனித சூசையப்பர் ஆலயத்தில் தங்கியிருந்த அருட்சகோதரிகளுடன் இணைந்து கொண்டேன். துன்புற்று, காயமுற்று வந்த மக்களின் காயங்களுக்கு மருந்து கட்டுவதும், அவர்களின் மனக்காயங்களுக்கு ஒத்தடம் கொடுப்பதும், எமது பணியாக இருந்தது. என்னுடன் அருட்பணியாளர்கள் தேவராஜா, மைக்கல்சாமி அமதி, ஜேம்ஸ் பத்திநாதர் ஆகியோரும் இணைந்து செயற்பட்டனர். இவர்கள் மூவரும் இணைந்து பலரின் துணையுடன் உலர் உணவுகளை சேகரித்தல், உணவுப் பொருட்கள், உடைகள் சேகரித்தல், காடுகளை அழித்து கொட்டில்களை அமைத்தல் போன்ற பணிகளில் துரிதமாக ஈடுபட்டனர். இவர்களுடன் இணைந்து பொருட்களைப் பகிர்தளித்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு ஆன்மீக வழிகாட்டல்களை வழங்கி பயணித்த நாட்கள் ஆசீர்வாதம் நிறைந்த நாட்களாக தற்போது உணருகின்றேன்.

இதன் பின்னர் இரண்டு வருடங்கள் நெடுங்கேணியில் தங்கியிருந்து பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அருட்சகோதரி ரூத் நல்லாயன்சபை, அருட்சகோதரி றீற்றா திருச்சிலுவைக் கன்னியர் ஆகியோருடன் நானும் இணைந்து சிறிய குடிசை ஒன்றில் தங்கியிருந்து, எமது உணவை நாமே சமைத்து பற்றாக்குறையிலும் மிகவும் மகிழ்வோடு வாழ்ந்தோம். இளைஞர்கள் T.RR.O (தொண்டு நிறுவனம்) இவர்களுடன் நாமும் இணைந்து மக்களுக்கான குடிசைகளை அமைத்தல், பாடசாலைக்கான கொட்டகைகளை அமைத்தல் ஆகிய பணிகளுக்கு எமது பங்களிப்பை வழங்கினோம். அருட்தந்தையர்களுடன் நாமும் இணைந்து பணிகளை மீளாய்வு செய்து உத்வேகத்துடன் பணியினை முன்னெடுத்தோம்.

பற்றாக்குறைகள் பலவற்றுடன் வாழ்ந்த மக்களிடையே போட்டி, பொறாமை, களவு போன்றவை ஏற்ப்படத் தொடங்கியது. இவ்வேளை அவர்களை ஒன்றிணைத்து நல்லொழுக்கத்துடன் வாழ அறிவுரையூட்டி வழிப்படுத்தினோம். நாட்டு நிலைமை சீரற்று காணப்பட்டதை அடுத்து திருக்குடும்ப கன்னியர் தவிர ஏனைய அருட்சகோதரிகள் தங்கள் மடங்களுக்குத் திரும்பினர்.

தொடர்ந்து கீரிசுட்டானில் அருட்சகோதரிகள் பற்றிக், மரிஸ்ரெலா ஆகியோரும், பூமலர்ந்தானில் சகோதரி பத்மசேகரியும் நானும் இணைந்து பணியைத் தொடர்ந்தோம். அவ்வேளையில் மடுக்குழுவுக்கு சென்று, எமது வாழ்வையும், பணியையும் அவர்களுடன் பகிர்ந்து கொண்டோம்.

தனிமை, கஸ்டங்கள் நிறைந்த நாட்களில் செபம், தியானம், நல்லுறவு பேணல் இவற்றுடன் பொறுப்புடன் வாழ பழகிக் கொண்டோம். அக்காலத்தில் மாகாணத் தலைவியாக கடமையாற்றிய அருட்சகோதரி புஸ்பம் எம்மை மடு மடத்தில் தங்கியிருந்து கீரிசுட்டான், பூமலர்ந்தான் பகுதிகளில் வாழும் மக்களுக்கு பணிசெய்யும்படி பணித்ததற்கு அமைய மீண்டும் மடுக் குழுவாழ்வில் இணைந்து பணிசெய்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏழை எளியவர்க்கு நீ செய்ததெல்லாம் எனக்கே செய்தாய்" எனும் கிறீஸ்துவின் வாக்கினால் நான்கு வருடங்கள் இடம் பெயர்ந்த மக்களுடன் பணி செய்யக்கிடைத்த வாய்ப்பினால் நிறைவு கண்டேன். இப் பணிவாழ்வைத் தந்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

**அருட்சகோதரி மேசி**

"சிதறி வாழ்ந்த கடவுளின் பிள்ளைகளை
ஒன்றாய்ச் சேர்க்கும் நோக்குடன்" நமது
ஆன்மீகத்தில் நாம் எந்தளவுக்கு அதிகமாக
தோய்ந்திருக்கின்றோமோ, அந்தளவுக்கு நமது
இதயத்தின் ஆழத்திலிருந்து, வாஞ்சையோடு
இறைமகிமைக்காக நமது பொதுப்பணியை
வாழ்வோம்"

***P.B.N***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை மாற்றிய அந்த நாள்

1980ஆம் ஆண்டு மாசி மாதம் 23ஆம் திகதி அன்று, யாழ்ப் பாணம் இருந்து மடு இல்லத்தை நோக்கி மன்னார் பேரூந்தில் பயணித்தேன். கண்மூடி முழிக்கும் முன் நடந்தது அந்தக் கோர விபத்து. மறுநாள் நான் சுய நினைவு பெற்று நான் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதைக் கண்டேன். இறைவா! எனக்கா இப்படி? ஏன்? நான் எப்படிவாழ்வேன்? என்ற பல கேள்விகள்.

"உன்னால் வாழமுடியும்" என்ற நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகள் என் உள்ளத்தில் தோன்றி மறைந்தன.

அதுதான் அன்று பேரூந்தில் விபத்தில் என் வலக் காலை இழந்த நாள். சற்றேனும் எதிர்பாராத நிகழ்வு. இந்த நிகழ்வுக்கு முன், அகதிகள் முகாமில் இரண்டு வருடங்களாக பணியாற்றி னேன். அங்கு பல விதங்களில் தம் கை, கால்களை இழந்தவர் களுக்குப் பணிசெய்தேன். ஏனோ இந்த அனுபவம் என்னுடைய கால் இழப்பை நான் ஏற்றுக் கொள்ள எனக்குத் தைரியம் தந்தது.

எனது பீ.பி.நோஆய் குடும்பம் எனக்கு வாழ்வு வேண்டும் என்று மாற்றுக் கால் போட என்னை வெளிநாடு அழைத்தார்கள். அப்போது எனக்கு வயது முப்பத்தைந்து.

ஆம், வாழ்வு பெற்றேன். பணியைத் தொடர்ந்து செய்ய படிப்படியாக என் ஆற்றல் குறைந்து போவதை உணர்ந்தேன். பழைய நிலைக்கு திரும்ப முடியாவிட்டாலும், இன்னும் ஒரு சில பணிகளைச் செய்கின்றேன் இறைவன் செயற்பாட்டைக் காண்கின்றேன். இன்று எனது எழுபத்திரெண்டாவது வயதிலும் இன்றும் பிள்ளைகளுக்குத் தையல் சொல்லிக் கொடுக்கின்றேன். சகோதரிகள் கேட்கும் சிறிய உதவிகளைச் செய்கின்றேன்.

இந்தப் பாரிய விபத்திலிருந்து மீண்டு இன்று முப்பத்யேழு வருடங்கள். ஒவ்வொரு நிமிடமும் இறைவனுக்கு உள்ளத்தில் நன்றி சொல்கின்றேன்

**அருட்சகோதரி கா. பற்றிக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவக மக்களின் தீராத துயரில் கலந்து...

1990ஆம் ஆண்டு ஆனி மாதம் ஊர்காவற்றுறைப் பங்கில் எனது பணியை ஆரம்பித்தேன். நான் அங்கு சென்று ஒரு மாதம் நிறைவடைந்த நிலையில், ஒருநாள் தீடிரென. கடலில் இருந்தும் ஆகாயத்தில் இருந்தும் பயங்கரப் பேரிரைச்சலும், வெடிச்சத்தமும் கேட்டது. ஒருவர், இரு குழந்தைகளைத் தோளில் சுமந்தபடி, ஓட்டமும் நடையுமாக சென்று கொண்டிருந்தார். இராணுவம் கடலில் இறங்கி விட்டதாகவும், மக்கள் யாவரும் அகப்பட்ட பொருட்களுடன் சென்று கொண்டு இருக்கின்றார்கள். நீங்களும் உடனடியாக புறப்பட்டுச் செல்லுங்கள் என்ற செய்தியை எமக்கு தெரிவித்தார். எமக்கு யோசிக்கவும் நேரமில்லை பதட்டத்துடன் கைக்கு எட்டிய பொருட்களுடன் கரம்பொன் மடத்தை நோக்கி வேகமாக் சென்றோம். ஏற்கனவே கரம்பொன் மக்களுடன் அருட்சகோதரி கில்டா சென்றுவிட்டார். அருட்சகோதரி பாஸ்கல் மாத்திரமே கரம்பொன் மடத்தில் தனித்து நின்றார். நானும் பாஸ்கலும் அங்கு நின்றவேளை வெடிச்சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தது. கிராமம் முழுவதும் வெறிச் சோடிக்காணப் பட்டது. எமக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பதுங்குகுழிக்குள் பதுங்குவதும், வெளியில் வருவதுமாய் மூன்று நாட்கள் ஊண் உறக்கமின்றி பயத்தால் காலத்தைக் கழித்தோம்.

மூன்றாம் நாள் வெளியில் சென்று பார்த்தபொழுது கண்ணுக் கெட்டிய தூரத்தில் மாடொன்று வெடிபட்டு உடல் சிதறி இறந்து கிடந்ததைக் கண்டு, இனிமேலும் இங்கேயிருப்பது ஆபத்து எனக் கண்டு, பதுங்கிப் பதுங்கி, சுருவில் பாதையூடாக வழி நடந்து சுருவில் மாதா ஆலயத்தைச் சென்றடைந்தோம். அங்கே தங்கியி ருந்த மக்களுக்காக உணவுசமைத்துக் கொண்டிருந்தார்கள். நாமும் அந்த பொதுவாகச் சமைத்த உணவை உண்டு, மக்க ளோடு துணையாக மூன்று நாட்கள் தங்கியிருந்தோம்.

ஊர்காவற்துறையில் இராணுவம் முன்னேறும் போது, நடக்கமுடியாமல வீடுகளுக்குள்ளும், பங்கர்களுக்குள்ளும் இருந்த வர்களையும், கண்ணில் பட்டவர்களையும் ஏறக்குறைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுபத்தைந்து பேரை சுட்டுக் கொண்டார்கள். என்ற செய்தி எம் காதிற்கெட்டியது. தாக்குதல் தொடர்ந்து கொண்டிருந்ததால் எறிகணைகள் எம்மை நோக்கிவந்தன. எனவே நாம் புங்குடுதீவை நோக்கிப் பயணித்தோம். புங்குடுதீவில் நாம் நாற்பது நாட்களுக்கு மேல் அகதி வாழ்க்கை வாழ்ந்தோம். இந்த இடத்தில் நத்தார் விழா, வருடப்பிறப்பு திருக்குடும்ப திருவிழா யாவற்றையும் எளிமையான முறையிலே அர்த்தமுள்ளதாக அனுசரித்தோம்.

சொந்த இடங்களுக்கு நாம் எப்போது திரும்புவோம் என்ற ஏக்கத்துடன் வாழ்ந்த எங்களுக்கு மீண்டுமொரு சோதனை ஏற்பட்டது. புங்குடுதீவுக் கடலில் இருந்து கடற்படையினர் டோறாப் படகில் வருவதைக்கண்டு, மக்களும் நாமும் முண்டி யடித்து கொண்டு வந்த வழியே யாழ்ப்பாணத்தை நோக்கி பயணித் தோம். அராலிக் கடற்கரையை அடைந்த நாம், கோட்டையிலிருந்த இராணுவத்தின் கண்ணில் படாது கடற்பயணத்தை மேற்கோண் டோம். இருள் சூழ்ந்த வேளையில் பல தடைகளைத் தாண்டி படகு மூலம் யாழ்ப்பாணக் கரையில் வந்து இறங்கி மாகாண இல்லத்தை அடைந்தோம்.

இயேசுவோடு சீடர்கள் கடலில் பயணித்தபோது. திடீரெனக் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. அந்தவேளை சீடர்கள் யேசுவிடம் "ஆண்டவரே காப்பாற்றும் சாகப்போகிறோம்" என்று சொல்லி அவரை எழுப்பினார்கள். நாமும் சீடர்களைப் போன்று எமது இயலாமையில் அவரிடம் தஞ்சம் புகுந்து ஆண்டவரே! எங்களைக் காப்பாற்றும் என்று வேண்டினோம். இறைவன் எங்கள் குரலுக்கு செவிசாய்த்து எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் எங்களை விடுவித்து, காத்து வழி நடத்தினார். எனக்கு செய்த அரும் பெரும் செயல்களுக்காக உயிருள்ளவரை இறைவா உமக்கு நன்றி.

**அருட்சகோதரி விற்றுவா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வுப்பயணத்தில் உயிர்காத்ததெய்வம்.

1992ஆம் ஆண்டு ஆவணி மாதம் 22ஆம் திகதி எமது வாழ்வில் மறக்க முடியாத துன்பியல் நாள். இரவுவேளை நாற்றிசையெங்கும் வேட்டுச்சத்தங்கள் காதைப் பிளந்தன. விடிந்து ஏது நடக்குமோ, என்ன நேரிடுமோ என்ற அச்சத்தால் எனது மனம் பதறியது. காலையில் கண் விழித்து மடத்தின் வாயிற் கதவைத் திறந்து பார்த் தேன். சில்லாலை கிராம மக்களுள் சிலர் கதிரைமாதா ஆலயத்தில் ஒன்று கூடி ஒருவர் ஒருவருடன் பரபரப்பாக உரையாடிக்கொண்டி ருந்தனர். நானும் அந்த இடத்திற்கு விரைந்து சென்றேன். அங்கே சென்ற பொழுதான் மக்கள் யாவரும் இரவோடு இரவாக இடம் பெயர்ந்து சென்று கொண்டிருக்கின்ற செய்தி எனது காதிற்கு எட்டியது. எஞ்சியிருக்கின்ற மக்களும் உடனடியாக புறப்பட்டு செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். அப்போது பங்குத் தந்தையாக இருந்த அருட்தந்தை அமிர்தகுமாரை நாடினோம். அப்பொழுது தானும் இடம்பெயர்ந்து செல்வதற்காக தயாராகிக் கொண்டிருப்பதாக தெரிவித்தார். நீங்களும் பாதுகாப்பான இடத்தை தேடிச் செல்லுங்கள் என்றார்.

துவக்குச் சூட்டுச்சத்தம் தொடர்ந்து கேட்ட வண்ணமிருந்தன. வானத்திலே வட்டமிடும் யுத்த விமானங்கள் ஓய்வின்றி குண்டு மழையைப் பொழிந்து கொண்டிருந்தது. மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து செல்வதால் நாமும் அவர்களுடன் இணைந்து, தேவையான ஒரு சில பொருட்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு தியான இல்லத்தை நோக்கி நடந்து சென்றோம். இராணுவம் பண்டத்தரிப்பு ஊடாக படையெடுத்து வந்த செய்தி அறிந்ததால், சில்லாலையிலிருந்து பண்டத்தரிப்பு நோக்கிச் செல்கின்ற பிரதான பாதையைத் தவிர்த்து, பிரான்பற்று, சங்கானை உட்பாதை வழியாக தியான இல்லத்தை நோக்கி நடந்தோம்.

என்னுடன் வீட்டுத்தரிசிப்புக்காக வந்திருந்த அருட்சகோதரி பெனடிற்றா, அவரின் சகோதரியும், அருட்சகோதரி அக்னேசியா, அருட்சகோதரி கிளாறா, எங்களோடு இருந்தபிள்ளை ஆகியோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணித்தோம். நடந்துசெல்லும் வழியில் கெலிக்கொப்டர் எங்களை நோக்கி சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தன. நாம் செய்வதறி யாது தரையில் விழுந்து கிடந்தோம். விமானம் சென்றதும் மீண்டும் எழுந்து நடக்கத் தொடங்கினோம். இவ்வாறு நாம் நடந்து சென்று தியான இல்லத்தையடைய பல மணித்தியாலங்கள் எடுத்தன.

அங்கு சென்ற பொழுது பண்டத்தரிப்பு தியான இல்லத்திலே பல மக்கள் இடம்பெயர்ந்து உயிரைக் காப்பாற்றும் பொருட்டு பாதுகாப்புத் தேடி தஞ்சம் புகுந்திருந்ததைக் கண்டோம். இவர்கள் தங்குவதற்குரிய வசதிகள், உணவுபகிர்தலில் அக்குழுவில் வாழ்ந்த அருட்சகோதரிகள் நோபேட், இனசென்சியா ஆகியோர் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ஏறக்குறைய பத்துக் குடும்பங்களுக்கு மேல் அங்கு தங்கியிருந்தனர். இவர்களுள் சிறுவர்களும் முதியோரும் அடங்குவர்.

நான் கற்பித்த பாடசாலை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இடம்பெயர்ந்து சங்கானையில் உள்ள ஒரு இல்லத்திலே இயங் கிக் கொண்டிருந்தது. நான் தினமும் தியான இல்லத்திலே இருந்து பாடசாலைக்கு சென்று வருவேன். அருட்சகோதரி பொணவெஞ்சர், அருட்தந்தை யஸ்ரின் பேணாட் ஞானப்பிராகசம் அடிகளார் தற்போதைய ஆயர் அவர்களும், இளவாலை இராணுவக் கட்டுப்பட் டுக்குள் இருந்தபடியினாலும், மக்கள் இடம்பெயர்ந்ததினாலும், அவர்களுடைய பாடசாலையும் தற்காலிகமாக மானிப்பாயில் இயங்கியது. இவர்களும் தியான இல்லத்திலே தங்கியிருந்து பாடசாலை சென்று வந்தனர்.

தினமும் திருப்பலி, மாலைவேளையில் நற்கருணைவழிபாடு என்பன இடம்பெற்றது. இதனால் துன்பம் மறந்து இறைவனில் ஆறுதலையும், சக்தியையும் பெற்று அவ் இல்லத்திலே மகிழ்வுடன் வாழ்ந்து வந்தோம். மக்களும் இறைவனின் ஆசீரால் நிரம்பி, விட்டுவந்த யாவற்றையும் மறந்து வாழ்ந்து வந்தனர். ஒருநாள் தீடிரென காலை உணவுவேளையில் பண்டத்தரிப்பு பற்றிமா ஆலயத்தடியில் இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கு மிடையே கடுமையான சண்டை ஏற்ப்பட்டது. ஆலயத்துக்கு வழிபட சென்ற ஒருவரை இராணுவத்தினர் சுட்டு கொன்றனர் என்ற செய்த எம் காதிற்கு எட்டியது. அப்பொழுது அருட்தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யஸ்ரின் அடிகளாரும், தியான இல்லத்திலே தங்கியிருந்த திரு.சிங்கராயர், இன்னும் சில ஆண்களும் சேர்ந்து, அந்த இடத்திற்குச் சென்று பார்த்தார்கள். இராணுவம் அந்த இடத்தில் இருந்து விலகிச் சென்றுவிட்டது. இவர்கள் இறந்தவரை பாய் ஒன்றில் சுற்றி அருகில் இருந்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்தனர். இறைவன் அற்புதமாக எங்கள் அனைவரையும் அந்த தீமைகளில் இருந்து காப்பாற்றினார் என்பதை என் வாழ்வில் மறக்கமுடியாது.

இராணுவத்தின் கெடுபிடிகளும், தேடல்களும், அதிகரித்த காலம். யுத்த விமானங்கள் குண்டுகளை தொடர்ந்து பொழிந்து கொண்டிருந்தது. கார்த்திகை மாதம் மாவீரர் தினத்தன்று பாட சாலையில் நிகழ்வுகள் நடந்துகொண்டிருந்தது. தீடிரென வானிலே இரைச்சல் ஒன்று கேட்டது. இடம்பெயர்ந்து தற்காலிகமாக பாட சாலை நடந்து கொண்டிருந்த இல்லத்தின் மீது 'சகடை' என்ற போர் விமானம் மிக பதிவாக வட்டமிட்டு பாரிய குண்டைப் போட்டுவிட்டு மேல் எழுந்து பறந்து சென்றது..

இந்த பேரிரைச்சலைக் கேட்ட மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர், அனைவரும், செய்வதறியாது குப்பற கீழே விழுந்து கிடந்தோம். அந்தவேளை இந்துசமயப் பிள்ளைகள் 'முருகா முருகா' என்று ஓலமிட, கத்தோலிக்க பிள்ளைகள் 'யேசு யேசு' என இறைவனை நோக்கி அபயமிட்டனர். விமானம் சென்ற பின் எழுந்து பார்த்த பொழுது அதிபரையும், என்னையும், மலர்விழி ஆசிரியையும் தவிர்த்து, அனைவரும் பயத்தினால் அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டனர். நாம் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, குண்டு விழுந்த இடத்தை பார்ப்பதற்காக வீட்டின் பின்புறமாகச் சென்றோம்.

பாடசாலைக்கு மிக அருகாக கிணறு போன்ற பாரிய குழி ஒன்று குண்டு விழுந்த இடத்தில் காணப்பட்டது. இறைவன் எம் எல்லோரையும் தெய்வாதீனமாக பெரிய அழிவில் நின்று காப்பாற்றினார். உயிர்காத்த எல்லாம் வல்ல இறைவனுக்கு கோடான கோடி நன்றிகள்.

**அருட்சகோதரி தயாநாயகி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைக்கலம் தந்த ஆண்டவன்
# (1985 - 2000 )

1978 - 1985ஆம் ஆண்டு வரை இரணைதீவு எனது பணித்தளம். வாழ்க்கை வசதிகள் குறைவு. போக்குவரத்துத் தொடர்புகள் குறைவு அமைதியான வாழ்க்கை நிலவியது. 1985ல் மாற்றலாகி உருத்திரபுரம் சென்ற போது அருட்தந்தை கொன் சாலஸ் தனது வாகனத்தில் ஏற்றிச் சென்றார். கிளிநொச்சியை அண்மித்ததும் மயான அமைதி. வீதிகளிலோ, வீடுகளிலோ மக்கள் நடமாட்டம் இல்லை. எமக்கு ஒன்றுமே புரியவில்லை. பய உணர்வு. நடந்ததை விசாரித்த போது இராணுவம் பிரதான வீதியில் சந்தித்தவர்களை சுட்டு வீழ்த்தியதையும் உடல்கள் எடுத்து வரப்படுவதையும் அறிந்தோம். சில நிமிடங்களுக்கு முன்பாக வந்திருந்தால் எமது முடிவும் அதுவாகத்தான் இருந்திருக்கும், திருக்குடும்பத்தின் பாதுகாப்பு எம்மை வழிநடத்தியதை நினைந்து நன்றி கூறினோம். 1985 - 1990 வரை உருத்திரபுரம் பயங்கர யுத்த சூழலாக இருந்தது. பாதுகாப்புத் தேடி மக்கள் எம் இல்லத்தை நோக்கி வந்தார்கள். எல்லோரையும் அரவணைத்து, பாதுகாத்து உதவினோம். எமது கிராமத்தைச் சுற்றிப் பயங்கரப் போர். ஷெல்கள் வெடிதது்ச் சிதறின. அடுத்து ஒரு சந்தர்ப்பத்தில் பாடசாலை நேரத்தில் பத்திரிசியார் பாடசாலைக்கு சமீபமாக இருபகுதியினருக்கும் இடையில் மோதல் தொடங்கியது. குண்டுகள் சரமாரியாகப் பறந்தன. மாணவர்கள், ஆசிரியர்கள் எல்லோரும் திருப்பாடல் (91ஐ) செபித்துக் கொண்டு இருந்தோம். அதிசயிக்கத்தக்க விதமாக எவ்வித காயங்களும் இன்றி காப் பாற்றப்பட்டோம். யுத்தம் ஓய்ந்ததும் பெற்றோர் அங்கலாய்ப்புடன் பாடசாலை நோக்கி ஓடி வந்தனர். பாடசாலைச் சமூகம் பாதுகாக் கப்பட்டதைக் கண்டு ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைந்தனர். அடுத்த நாள் பங்கில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்து இறை பராமரிப்புக்கு நன்றி கூறினோம். **"கர்த்தர் நகரைக் காக்கா விட்டால் கண்விழித்துக் காப்பது வீண். ஆண்டவருக்குப் புகழ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும் போரிலும் தெய்வீக பராமரிப்பு எம்மோடு இருந்தது. 1990 - 1995 இல் பாஷையூரில் இருந்த போது கோட்டை அடிபாடு தொடர்ந்தது. திடீர் திடீரென விமானத் தாக்குதல். பாடசாலை ஆரம்பிக்கும் போது பாடசாலைச் சமூகமாக இணைந்து திருப் பாடல் 91ஐ உருக்கமாகச் செபித்து இறை பாதுகாப்பை வேண்டி னோம். சுற்றிவர எத்தனையோ உயிரிழப்புக்கள், இடிபாடுகள், அடிபாடுகள் மத்தியிலும் எவ்வித ஆபத்துக்களுமின்றி அற்புதமாக ஆண்டவர் எம்மைக் காத்தார். இவற்றை நினைத்து தினமும் மாலைச் செபத்தில் நன்றி கூறினோம். 1997 - 2000 வரை புதுக்குடியிருப்பில் வாழ்ந்த போது பயங்கரமான யுத்த காலம். வடக்கு, கிழக்கிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தனர். இரவு, பகல் பாராது யுத்த விமானங்கள் குண்டுமழை பொழிந்த வண்ணமிருந்தன. பாதுகாப்புத் தேடி மரங்கள், கட்டடங்கள், பதுங்கு குழிகள் என்று பயத்தினால் நடுங்கி பயந்து பயந்து மடிந்தும் மடியாமலும் வாழ்ந்த காலம். தினமும் உயிரிழப்புக்களும், பொருட்சேதங்களும் அழுகைக் குரலும் தொடர்ந்தது. உடைந்த உள்ளங்களுடன் சேர்ந்து அழுவதும் ஆறுதல் கூறுவதும், சோகக் கதைகளுக்கு செவி மடுப்பதும் எமது பணியாக அமைந்தது. துன்புறும் மக்களுடன் மக்களாக வாழ்ந்தது எமக்கு மன நிறைவைக் கொடுத்தது. **''சின்னஞ் சிறியோருக்கு செய்ததெல்லாம் எனக்கே செய்தாய்'** என்ற இறைவார்த்தை எமக்கு உற்சாகம் அளித்தது. எத்தனை இடர்கள் வந்தாலும் இறைவனின் கரம் எம்மை அரவணைத்து ஆசீர்வதித் ததை அன்றும் இன்றும் நன்றியுடன் நினைக்கின்றேன்.

**அருட்சகோதரி. சு. கொஸ்கா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் அற்புதமான வழிகள்

காலங்களின் ஊடாக தம் இறைபிரசன்னத்தை வெளிப்படுத்தி, என்னை வழிநடத்திவரும் இறைவனின் அன்புப் பராமரிப்பிற்காக நன்றி கூறுகின்றேன். கடந்த காலங்களில் எம் நாட்டில் இடம்பெற்ற துன்பியல் போராட்டமானது, அனைத்து மக்களிலும் ஏதோ ஒரு வகையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. என் வாழ்விலும் மறக்கமுடியாத பல அனுபவத்தை தந்திருந்தாலும், அவற்றினூடாக இறைகரம் தாங்கி வழிநடத்தியதை நினைந்து நன்றி கூறுகின்றேன்.

1987ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாண மாகாண இல்லத்தில் வாழ்ந்த காலத்தில், பல பணிகளை செய்வதற்கு வாய்ப்புக்கிடைத்தது. ‘எந்தவேளையில் என்ன நடக்கும்’ என்பது யாருக்கும் தெரியாத, அரசியல் குழப்பம். ஊரடங்குச்சட்டம், பயங்கரவாதச் சட்டம், பொருளாதார தடைச்சட்டம் என பலசட்டங்களால் மக்கள் முடக்கப்பட்டிருந்தார்கள். வெளியில் சென்றவர் திரும்பிவரும் வரையில், ஏக்கத்துடன் காத்திருக்கும் நிலைதான்: ஒருநாள் வைத்தியசாலைப் பணிக்காக நடந்து சென்று கொண்டிருந்த வேளை, எனது தலைக்கு மேலாக பல்லாயிரக்கணக்காண துவக் குச்சன்னங்கள் பறந்தன. வழியில் இராணுவத்தினரின் குறுக்கீடுக ளும், தேவையற்ற வினாக்களும் என்னை பயங்கொள்ளவைத்தன. இறைவனின் அருட்கரமே என்னைப் பாதுகாத்தது. இறைவா! உமக்குநன்றி.

இந்திய இராணுவத்தின் கெடுபிடிகள் யாழ்ப்பாணத்தில் கொடூரமாக இருந்தன. ‘குறிப்பிட்ட நேரத்தில் மட்டும்தான் வெளி யில் செல்லமுடியும்’ என்ற நிலை காணப்பட்டது. அன்றொருநாள் எமது மாகாண இல்லத்தில் தங்கியிருந்த மார்க்கண்டின் மனைவி ஷெல் தாக்குதலில் சிக்குண்டு உடல் பார்க்கமுடியாதபடி உருக்குலைந்திருந்த நிலையும், மக்கள் அழுது புலம்பிய காட்சி யும் வாாத்தையில் விபரிக்கமுடியாதவை. வைத்தியசாலை சென்றவேளை, இந்திய இராணுவத்தின் அகோரத்தாண்டவத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சம் அரங்கேறி இருந்தது. வைத்தியர்கள், நோயாளிகள் உட்பட முப்பது உயிர்களை ஈவு இரக்கமின்றி சுட்டுத் தள்ளியிருந் தார்கள். இறைதிருவுளம், அன்றைய தினம் நான் சிறிது தாமதமாகி சென்றேன். இல்லையேல் அன்றையதினம் எனக்கும் அவ்வாறே நிகழ்ந்திருக்கும். இன்று நான் நினைக்கும் பொழுது, கடவுளின் வழிகள் அற்புதமானவை என உணர்கின்றேன்.

**அருட்சகோதரி செ. அழகேஸ்வரி**

